# ஐங்கரன் அமிர்தம்





இணுவில்

ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார்

## மணிமண்டபத் திறப்பு விழா
## சிறப்பு மலர் - 9.5.2004

255. ௨௨
ஐங்க
SL/PR



உ

# ஐங்கரன் அமிர்தம்




இணுவில்

## ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார்

## மணிமண்டபத் திறப்பு விழா

## சிறப்பு மலர்

வெளியீடு - 09.05.2004



உ



எங்கள் குலதெய்வம்
பரராஜசேகர விநாயகர்
பாதக் கமலங்களில் இம்மலரை
அர்ப்பணம் செய்கிறோம்.

மலர்க்குழு
ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் மணிமண்டபம்
இணுவில்

உ
குருபாதம் துணை



இணுவில் அருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார்
திருக்கோவில் மூத்த பிரதம குரு
சிவஸ்ரீ வை. சோமாஸ்கந்தக் குருக்கள்
அவர்களின்

# ஆசியுரை

அருள் நிறைந்த ஆனைமுகன் குடிகொண்ட எங்கள் திருக்கோயிலின் சிறப்பினை அறியாதார் இல்லை. புதுமையும் பேரற்புதமும் நிறைந்த எங்கள் திருக்கோவில் மேற்கு வீதியில் சகல வசதிகளுடன் கூடிய ஸ்ரீ பரராஜ சேகரப்பிள்ளையார் மணி மண்டபம் அமைக்கப் பெற்று இன்று திறப்பு விழாப் பொலிவு காண்பது நாம் பெற்ற பேறு எனலாம். மூன்று மாடிகளுடன் பிரமாண்டமாக அமைந்துள்ள மணிமண்டபத்தின் பிரதான நோக்கம் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கலாகும். இப்பணி எம்பெருமான் திருவருளால் என்றும் நிறைவாக நடைபெற பிரார்த்திக்கின்றோம். விநாயகப் பெருமான் எமது கிராமத்தின் சீர் நிறைவை என்றும் காத்து அருள்பாலித்தவண்ணமுள்ளார். அடியார்கள் தம் குலதெய்வம் தந்த நல்வாழ்வுக்கு நன்றியாக பல்வேறு திருப்பணிகளை காலத்துக்குக் காலம் நிறைவேற்றி வருகின்றனர். எங்கள் ஆலயத்தில் சின்னவயது முதல் தொண்டு செய்து நாளும் தொழுது போற்றி பேறு பெற்ற அன்பர்கள் திரு. இ. குகவரதன், திரு. கு. கருணாமூர்த்தி ஆகியோரின் அரும்பணியால் இப்புதிய மணிமண்டபம் அழகாக அமைக்கப் பெற்று இருப்பது மெச்சத்தக்க விடயமாகும். இவ்விரு அடியார்களின் நற்பணியை வாழ்த்துகிறேன். இப்பணியில் மேலும் பங்குகொண்ட அன்பர்கள், கட்டிட நிர்மானக் கலைஞர்கள் அனைவரையும் வாழ்த்துவதோடு எல்லாம் வல்ல பரராஜசேகரன் திருவருளால் அன்பர்கள் அனைவரும் எல்லா நலன்களும் பெற்று வாழ நல்லாசி கூறி அமைகிறேன்.

ஓம் சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!
சுபம்

உ
சிவமயம்



இணுவில் அருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோவில் இளைய சிவாச்சாரியார்

## சிவஸ்ரீ சோ. அரவிந்தக் குருக்கள்

அவர்களின்

# ஆசியுரை

ஓங்கார ஸ்வரூபியாக விளங்கும் விநாயகப் பெருமான் பேரருள் பாலிக்கும் திருக்கோவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோவிலாகும். பழம் பெரும் வரலாறு கொண்ட எம் திருக்கோவிலில் புதிய மணி மண்டபம் அமைக்கப் பெற்றிருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். அவன் அருளாலே அவன் தாழ் வணங்கி என்று மணிவாசகப் பெருமான் குறிப்பிட்டது போல் ஆனைமுகன் அருளாலே அரிய காரியம் இன்று நிறைவேறியுள்ளது. பல ஆன்மிகப் பணிகளை சீரிய முறையில் நிறைவேற்றக்கூடிய வகையில் மூன்று மாடிகளைக் கொண்ட பிரமாண்டமான மண்டபமாக இம்மண்டபம் இன்று அமைக்கப் பெற்றுள்ளது. தன்னை நாடிவரும் அடியவர்கள் வாழ்வை ஓங்கி மிளிரச் செய்பவர் எங்கள் பரராஜசேகர விநாயகர். அதனால் அவரது அடியவர்கள் தம் வாழ்வின் நன்றியை நாளுக்கு நாள் திருப்பணிகளால் நிறைவேற்றியவண்ணமுள்ளனர். தேசம் கடந்து வாழும் எங்கள் ஆலய அடியவர்கள் தம் குல தெய்வத்தை என்றும் மறப்பதில்லை. அவ்வகையில் மணிமண்டபத்திருப்பணியை நிறைவேற்றிய அன்பர்களை வாழ்த்துகிறேன். எல்லாம் வல்ல பரராஜசேகரப்பிள்ளையார் சகலருக்கும் சௌபாக்கியமும் அனைத்து நலமும் வழங்க வேண்டி நல்லாசி கூறி அமைகிறேன்.

சுபம்

உ
குருபாதம் துணை



நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
அவர்களின்

# ஆசியுரை

விநாயக அடியார்களே!

இணுவில் அருள்மிகு பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் வீதியில், அறப்பணிகளை நிறைவேற்றுவதற்காக மூன்று மாடிகளைக் கொண்ட மணிமண்டபம் அமைக்கப்பெற்றமை அறிந்து ஆனந்தம் அடைகிறோம். சைவமும் தமிழும் தம் உயிரென உணர்வுபூர்வமாக மதிக்கும் மக்கள் வாழும் புண்ணிய பூமி இணுவில். கலைஞானச் செல்வர்கள், தர்ம உபகாரிகள், பண்டிதர்கள், பாவலர்கள் நிறைந்த இணுவைப்பதியின் ஞான முதல்வனாக அருள்மழை பொழிந்த வண்ணம் வாரிவழங்குபவர் பரராஜசேகர விநாயகர் ஆலயத்தில் நடைபெறும் நித்திய நைமித்திய விழாச் சிறப்பைக் கண்டு வியக்காதவர்கள் இல்லை. ஆலயத்தின் உட்சுற்றுப் பிரகாரம் முதல் ஆலயச் சூழல் என்றும் தெய்வீக ஒளி வீசிய வண்ணம் காட்சி தருகிறது. இத்தனைக்கும் காரணம் பக்தர்களின் தூய வழிபாடும் திருத்தொண்டும் எனலாம். ஆலயங்கள் தம் வழிபாட்டுப் பணியோடு நல்லறப் பணிகளை நிறைவேற்ற வேண்டியது பெருங்கடனாகும். அவ்வகையில் அறப்பணிகளைக் குறிப்பாக அன்னதானம் அறிவுத்தானம் போன்ற கைங்கரியங்களை நிறைவேற்ற புதிய மணிமண்டபம் அமைக்கப்பெற்றமை பெரும் வரப்பிரசாதமாகும். இப்பணியை நிறைவேற்றிய அன்பர்களை வாழ்த்துகிறோம். மணிமண்டபத் திறப்பு விழாவை முன்னிட்டு "ஐங்கரன் அமிர்தம்" என்ற நூல்வெளியிடுவது குறித்து மகிழ்ச்சியடைகிறோம். மேலும் பல அருட்பணிகள் தொடர வாழ்த்தி நல்லாசிகூறி பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

உ
சிவமயம்



தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின்
மதிப்பார்ந்த தலைவரும் ஆன்மிக அன்னையுமாகிய
சிவத்தமிழ்ச் செல்வி
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J.P.
அவர்களின்

# ஆசியுரை

கணபதி தாளைக் கருத்திடை வைப்போம்
குணம் அதிற்பலவாம்; கூறக் கேளீர்;
உட்செவி திறக்கும்; அகக்கண் ஒளிதரும்
அக்கினி தோன்றும்; ஆண்மை வலியுறும்;
திக்கெலாம் வென்று ஜெயக்கொடி நாட்டலாம்;

என்ற மகாகவி பாரதியாரின் பாவரிகள் மகத்தானவை. பரராஜ சேகரப் பிள்ளையார் அடியார்களின் அகக் கண்களைத் திறந்து அருள் ஒளிபாலிப்பவர். அற்புதம் நிறைந்த விநாயகர் உறைந்திருக்கும் இப்புனித திருக்கோவிலோடு மிக நீண்ட தொடர்பு எமது வாழ்வில் கிடைத்ததை பெரும் பேறாகக் கருதுகிறேன். அழகும், அருட் பொலிவும், புனிதமும் நிறைந்த இத்திருக்கோயில் சிறப்புப் பற்றி பலரும் வியந்து பாராட்டுவார்கள். இப்புண்ணிய தலத்தில் பல திருப்பணிகள் காலந்தோறும் அன்பர்களால் நேர்த்தியாக நிறைவேற்றப் பெற்று வருகிறது. ஆலயச் சூழலில் அறப்பணிகளை நிறைவேற்றுவதற்கு இங்கிலாந்தில் வாழும் இரு அன்பர்கள் இணைந்து பெருந்தொகைச் செலவில் புதிய மணிமண்டபத்தை உருவாக்கியிருப்பது பாராட்டுக்குரியதாகும். இப்பணியை நிறைவேற்றிய அன்பர்களை வணங்குகிறேன். வாழ்த்துகிறேன். இவர்களின் தர்ம உபகாரத்தை முன்மாதிரியாகக் கொண்டு ஏனையவர்களும் நல்லறப் பணிகளில் ஈடுபடவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன். எல்லாம் வல்ல ஞான முதல்வன் பரராஜசேகரப் பிள்ளையாரின் நல்லருளால் அனைவரும் சீரோடும் சிறப்போடும் வாழ வாழ்த்தி வணங்கி நல்லாசிகூறி அமைகிறேன்.




செஞ்சொற் செல்வர் நல்லாசிரியர்

திரு. ஆறு. திருமுருகன்

(உப அதிபர் - ஸ்கந்தவரோதயக் கல்லூரி கன்னாகம்)

அவர்களின்


# பிரார்த்தனையுரை

சீரும் திருவும் பொலியுந் தெய்வீகத் திருப்பதி இணுவையம்பதி. இத்திருப்பதியின் முதல்வனாக விளங்குபவர் பரராஜசேகர விநாயகர். தமிழ்வேந்தர் காலத்து வரலாற்றுப் பெருமைமிக்க இத்திருக்கோவிலின் இன்றைய வளர்ச்சியைக் கண்டு வாழ்த்தாதவர்கள் இல்லை. அன்னியர் ஆட்சியில் கீலமுற்றுப் போன இத்திருக்கோயிலை எம் முன்னோர்கள் பிடியரிசி எடுத்தும் மண் சுமந்தும் மீண்டும் பெருங்கோவில் உருவாக்கும் பணியை ஆரம்பித்தனர். எம்மூர் முதாதையரின் அரிய பணியால் நாளும் பொழுதும் எம் திருக்கோவில் பெருவளர்ச்சி கண்டுள்ளது. கேட்பார் பிணி தீர்க்கும் பிள்ளையாரின் பேரருளால் சகல அடியவர்களின் குடும்பமும் நல்வாழ்வு பெற்றது. அல்லும் பகலும் மீளா அடியவர்களாகத் தொண்டு செய்தவர்களின் சந்ததி சகல வளமும் பெற்றதனை யான் நன்கு அறிவேன். சிறுவர்கள் முதல் முதியோர் வரை பக்திபூர்வமாக வழிபாடு செய்யும் உயர்பண்பாட்டை இக்கோயில் விழாக்களில் காணலாம். புராணப்படிப்பு, பிரசங்க மரபு, கலைமரபு, அடியவர் வாயிலாக அன்னதானம் வழங்கும்மரபு இவ்வாலயத்தில் நீண்ட காலமாக நிலவிவருகிறது. ஆலய சிவாச்சாரியார்களின் பக்திபூர்வமான கடமைகள் திருக்கோவில் உன்னதநிலை பெற முதன்மைக் காரணங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. யான் எனது என்ற எவ்வித அகங்காரமும் இன்றி ஒவ்வொரு பணிகளையும் விநாயகப் பெருமானின் மீளா அடியவர்கள் நிறைவேற்றி வருகின்றனர்.

ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் மணிமண்டபம் என்ற பெரு மாடம் அமைக்கும் பணி ஓராண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டது. ஆசிரியபிரான் அமரர் வை. கதிர்காமநாதன் உபாத்தியாரின் குடும்பத்தவர்கள்

பெருமனதோடு மண்டபம் அமைவதற்கான நிலத்தை வழங்க முன்வந்தனர். மூன்று மாடிகளைக் கொண்ட சகல வசதிகளோடு கூடிய மண்டபத்தை நிறுவுவதற்கு முன்வந்தவர்கள் எங்களூர் இனிய மைந்தர்கள் திரு. இ. குகவரதன் அவர்களும் திரு. கு. கருணாமூர்த்தி அவர்களும். இப்பெருந்தகைகளின் பெரும் பணியால் இப்புனித கைங்கரியம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இத்திருப்பணியை நேரடியாக நின்று கவனித்து நிறைவேற்ற உதவியவர் அன்பர் திரு. து. சிவராசா அவர்கள். கொழும்பில் இருந்து இப்பணி சிறக்க துணை நின்றவர்கள் திரு. இ. மயூரநாதன், திரு. இ. சற்குருநாதன் சகோதரர்கள். அனைவரையும் வாழ்த்துகிறேன். இப்புண்ணிய கைங்கரியம் இறையருளாலும் பெரியோர்களின் ஆசியாலும் ஓராண்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இப்புனிதமான திருத்தொண்டை நிறைவேற்றிய பரோபகாரிகளான குகனும், கருணாவும் என்றும் எம்சமூகத்தால் நன்றியோடு போற்றப்படுகின்ற தகுதியைப் பெற்றுள்ளனர். அவர்களின் மனவளத்தை மீண்டும் நன்றியோடு வாழ்த்துகிறேன். இங்கிலாந்தில் நடைபெறும் சமய விழாக்கள், தமிழ் விழாக்கள், கருணைத்தொண்டுகள் அனைத்திற்கும் பெரும்பங்கு வழங்கும் இவர்களின் பெருந்தன்மையை யான் நன்கு அறிவேன். எல்லாம் வல்ல எங்கள் குல தெய்வம் பரராஜசேகரப் பிள்ளையாரை பணிந்து வணங்கி அனைவரும் நலம் பெற்று வாழ பிரார்த்திக்கிறேன். எங்கள் நாட்டில் நிரந்தர நிம்மதியும் அமைதியும் நிலவ பார்போற்றும் பரராஜசேகரன் பாதம் பணிந்து எனது பிரார்த்தனையுரையை நிறைவு செய்கிறேன்.

"யாவர்க்குமாம் இன்னுரைதானே"

உ
சிவமயம்





# நன்றியுரை

அன்புடையீர்! வணக்கம்

பரராஜசேகரப் பிள்ளையார் திருவருளை முன்னிட்டு, எங்களை ஆளாக்கி தோள்மீது சுமந்து கோயில் கும்பிடவைத்து நிறை வழிகாட்டிய எம்பெற்றோரை நினைந்து வணங்குகிறோம். சிறுபராயம் முதல் பிள்ளையாரின் திருத்தொண்டில் இணைந்து ஆலயச் சூழலே எம்வாழ்வென மலர அனைத்து நல்வருளையும் வழங்கிய எம் மூதாதையர்கள் உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் நீள நினைந்து வணங்குகிறோம். பிள்ளையாரின் பேரருளால் இங்கிலாந்தில் வாழும் நாம் உண்ணும் போது உறங்கும் போது, விழிக்கும் போது அழைப்பது எங்கள் அப்பன் பரராஜசேகரனையே! அப்பனது அருளுக்கு என்றும் நாம் மீளா அடியவர்களே. கருணைத் தெய்வத்துக்கு காணிக்கை செய்ய வேண்டியது எமது கடமை. அக்கடமையை நிறைவேற்றக் கிடைத்த வாய்ப்புக்கு பிள்ளையாருக்கு முதற்கண் நன்றி கூறிப் பிரார்த்திக்கிறோம். பரராஜசேகரன் மணி மண்டபம் நிறைவேற உழைத்த அன்புக்குரிய பெரியவர்கள் திரு. து. சிவராசா, திரு. இ. மயூரநாதன், திரு. இ. சற்குருநாதன் ஆகியோருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். கட்டிட நிர்மாணப்பணிகளை பொறுப்பேற்று சிறப்பாக நிறைவேற்றிய திரு. கெங்காதரன் அவர்களுக்கு மிகுந்த நன்றி கூறுகிறோம். இப்பணிக்கு நல் ஆலோசனை வழங்கிய சகோதரன் திரு. ஆறு. திருமுருகன் அவர்களுக்கும் மலர் வெளியிடத் துணைபுரிந்த திரு. வை. அநவரத விநாயகமூர்த்தி, திரு. பாலசுப்பிரமணியம் ஆகியோருக்கும் நன்றிகூறுகிறோம். எம்பணி சிறக்க பல வழிகளிலும் உதவியவர்கள், ஆலயத்தொண்டர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறோம். எல்லாவற்றுக்கும் மேலாக எங்கள்ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ வை. சோமாஸ்கந்தக் குருக்கள் ஐயாவுக்கு எமது மனப்பூர்வமான நன்றிகளைச் சமர்ப்பித்து நன்றியுரையினை நிறைவு செய்கிறோம்.

நன்றி!

இ. குகவரதன் குடும்பம்
கு. கருணாமூர்த்தி குடும்பம்






ஆலய முகப்புத் தோற்றம்




பால கணபதி




தெட்சணாமூர்த்தி




துர்க்கை அம்மன்



நடராஜப் பெருமான்
சந்நிதானம்



கஜலட்சுமி




சமய குரவர் - நால்வர்




கஜ லட்சுமி




சந்தான கோபாலர்




பாலகணபதி




பால முருகன் சந்நிதி




சமய குரவர் - நால்வர்




இராஜ கோபுர வாசலில் உற்சவ மூர்த்திகள்
எழுந்தருளி வரும் காட்சி



கொடியேற்ற உற்சவம்




கொடியேற்ற விழா விஞ்ஞாபனம்



மகா கும்பாபிஷேகம் - 1997




கொடியேற்றுவிழா






1997ம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்தன்று
பிரதம குருக்கள் அவர்கள் கும்பபூசை செய்யும் காட்சி



விநாயகப் பெருமான், முருகன் வீதி உலா வருதல்




தேர் மீது உலா வரும் காட்சி



பட்டுக்குடைத் திருவிழா




பிள்ளையார், முருகன்
வீதி உலா வரும்காட்சி



திருவிளக்குப் பூசை




கைலாச வாகனத்தில்
பிள்ளையார், முருகன்
எழுந்தருளி வரும் காட்சி



விநாயகரும் முருகனும்
வீதி உலாக் காட்சி



திருமஞ்சத்தில்
பரராஜசேகர விநாயகர் வீதியுலா




சப்பறத் திருவிழா

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்


தேர்த்திருவிழா








தீர்த்தம்




திருக்கல்யாணம்











மணி மண்டபத்தின் எழில்மிகு தோற்றம்

# மணி மண்டபத் திறப்பு விழா நிகழ்வுகள்




தொழில் அதிபர் திரு. து. சிவராசா அவர்கள்
மங்கள விளக்கேற்றுகிறார்.



ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோயில் மணிமண்டபத் திறப்பு விழாவை முன்னிட்டு
நடைபெற்ற ஆயிரத் தெட்டு கலசாபிஷேகக் காட்சி.



விநாயகப் பெருமானது திருவுருவப் படம் மேளவாத்திய சகிதம் ஊர்வலமாக எடுத்து வரும் காட்சி.



மணி மண்டபத்திற்கு அணிவிப்பதற்கு கலசங்கள் எடுத்துச் செல்லும் காட்சி.



"செஞ்சொற் செல்வர்" ஆறு திருமுருகன் அவர்கள் நாடாவை வெட்டி மணிமண்டபத்தை திறந்து வைக்கிறார்.



நல்லை ஆதீன முதல்வர், இணுவில் அருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் மணிமண்டபப் பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து வைக்கிறார்.







மணிமண்டபத்தில் நல்லை ஆதீன முதல்வர் ஆசி வழங்குகிறார்.



மணிமண்டபத் திறப்பு விழாவின் போது "செஞ்சொற் செல்வர்" ஆறு திருமுருகன் உரையாற்றுகிறார்.




அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி ஜே. பி. அவர்கள் ஆசியுரை வழங்குகிறார்.



"அருட்கவி" சி. விநாசித்தம்பிப் புலவர் ஆசியுரை வழங்குகிறார்.



"செஞ்சொற் செல்வர்" ஆறு. திருமுருகன் அவர்கள் தலைமைப் பேருரை நிகழ்த்துகிறார்.



மணி மண்டபத்தின்
இரவுத் தோற்றம்.



மணி மண்டபத்தின் வழிபாட்டுக்கூடம்



மணி மண்டபத்தின் முகப்புத் தோற்றம்



(இடமிருந்து வலமாக) கலாநிதி சி. சிவலிங்கராசா, உபவேந்தர் பேராசிரியர் த. மோகனதாஸ், கலாநிதி தி. கமலநாதன் (யாழ் கல்வியியற் கல்லூரி, பீடாதிபதி) ஆகியோர் மேடையில் அமர்ந்திருக்கிறார்கள்.



ஓய்வு பெற்ற நீதியரசர் திருநாவுக்கரசு, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் மேடையில் அமர்ந்திருக்கிறார்கள்.



ஓய்வு பெற்ற நீதியரசர் திருநாவுக்கரசு
அவர்கள் வாழ்த்துரை வழங்குகிறார்



யாழ் பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவர்
க. தேவராசா அவர்கள் வாழ்த்துரை
வழங்குகிறார்.



யாழ் பல்கலைக்கழகம், கலாநிதி சி. சிவலிங்கராசா அவர்கள் ''ஐங்கரன் அமிர்தம்''
நூல் மதிப்பீட்டுரை செய்கிறார்.


# மணி மண்டபத் திறப்பு விழா நிகழ்வுகள்






மணி மண்டபத் திறப்பு விழாவில், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் ''ஐங்கரன்'' அமிர்தம் சிறப்பு மலரை வெளியிட்டு உரை நிகழ்த்துவதையும், மலரின் பிரதிகளை நல்லை ஆதீன முதல்வருக்கும், யுனி ஆர்ட்ஸ் நிறுவன அதிபர் பொன். விமலேந்திரன் அவர்களுக்கும் வழங்குவதையும், 'செஞ்சொற் செல்வர்' ஆறு திருமுருகன் அவதானிப்பதையும் படங்களில் காணலாம்.







ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் மணிமண்டப முகப்பில் பிரமுகர்கள், அடியார்கள் சூழ்ந்திருக்கும் காட்சி.






யாழ் பல்கலைக்கழக உபவேந்தர்
பேராசிரியர் சு. மோகனதாஸ்
அவர்கள் லண்டன்
'ஐங்கரன் சர்வதேச நிறுவன'
அதிபர்
திரு. கு. கருணாமூர்த்தி
அவர்களுக்கு மலர்மாலை
அணிவித்துக் கௌரவிக்கிறார்.



லண்டன் தொழில் அதிபர்கள்
திருவாளர்கள் இ. குகவரதன்,
கு. கருணாமூர்த்தி ஆகியோர்
கட்டடக் கலைஞர் கங்காதரன்
அவர்களுக்குத் தங்கப் பதக்கம்
அணிவிக்கிறார்கள்.



லண்டன் பிரபல தொழில் அதிபர்
திரு. இ. குகவரதன் அவர்கள்
நன்றியுரை நிகழ்த்துகிறார்.





தொழில் அதிபர்
திரு . இ. மயூரநாதன்
அவர்கள் மணிமண்டபக்
கட்டடக் கலைஞர்
திரு. கங்காதரன்
அவர்களுக்குப்
பொன்னாடை போர்த்திக்
கௌரவிக்கிறார்.



திரு. கங்காதரன்
அவர்களுக்கு
தொழில் அதிபர்
திரு. து. சிவராசா
அவர்கள்
மாலை அணிவிக்கிறார்.




லண்டன் தொழில் அதிபர்
திரு. இ. குகவரதன் அவர்களை
நல்லை ஆதீன முதல்வர்
பொன்னாடை போர்த்தி
மலர் மாலை அணிவித்து
கௌரவிக்கிறார்.





லண்டன், ஐங்கரன் சர்வதேச
நிறுவன அதிபர்
திரு. கு. கருணாமூர்த்தி
அவர்களுக்கு
நல்லை ஆதீன முதல்வர்
பொன்னாடை போர்த்திக்
கௌரவிக்கிறார்.



லண்டன் தொழில் அதிபர்
திரு. கு. மனோகரன்
அவர்களுக்கு நல்லை
ஆதீன முதல்வர் பொன்னாடை
போர்த்திக் கௌரவிக்கிறார்.









நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
புனி ஆர்ட்ஸ் நிறுவன அதிபர் திரு. பொன் விமலேந்திரன் அவர்களுக்கு மாலை அணிவித்து, ஆசீர்வதித்து
அவருடன் உரையாடுவதையும், தொழில் அதிபர் திரு. இ. சற்குருநாதன் அவர்கள் தங்கப்பதக்கம் அணிவிப்பதையும்
மேலே உள்ள படங்களில் காணலாம்.



யாழ். பல்கலைக்கழக
உபவேந்தர் பேராசிரியர்
சு. மோகனதாஸ்
திரு. பொன். விமலேந்திரன்
அவர்களுக்கு
"கலைப் பரிதி"
என்னும் பட்டம்
வழங்கிக் கௌரவிக்கிறார்.

உ



# விநாயகர் தத்துவம்

- 卐 பிள்ளையார் சுழி
- 卐 மகா கணபதி மூலமந்திரம்
- 卐 பிரணவ சொரூபி
- 卐 ஓங்காரத் திருவுரு
- 卐 விநாயகர் தத்துவம்
- 卐 பிள்ளையாரின் தொல்வடிவங்கள்
- 卐 காணாபத்தியம்



# பிள்ளையார் சுழி

தமிழண்ணல்

“பிள்ளையார் சுழி போட்டாயிற்றா?” என்பது ஒரு பழமொழி. ஒரு நற்காரியம் தொடங்கியாயிற்றா, ஒரு தொழில் அல்லது வணிகம் தொடங்கிவிட்டதா என்பதை இவ்வாறு கேட்பர்.

நம்பெரியவர்கள் “பிள்ளையார் சுழி” போட்டே எதனையும் தொடங்குவர். கடிதமானாலும் கட்டுரையானாலும் ஒரு நூலானாலும் முதலில் உ எனப் பிள்ளையார் சுழி போட்டுவிட்டே தொடங்குவர்.

பிள்ளையார் என்று ஏன் பெயர் வந்தது? அவர் சிவபெருமானின் மூத்த பிள்ளை; இளையபிள்ளை முருகன் 'ஆர்' இறுதி மதிப்புக் க்ருதிச் சேர்ப்பது. பிள்ளை என்பது வீரன், மைந்தன் என்றும் பொருள்படும். பிள்ளையார் அரச மரத்தின் அடியிலும் இருப்பார்; ஆலயங்களிலும் 'முதல்வராக' முதலிடத்தில் இருப்பார். பிள்ளையார் மிகமிக எளியவர். “பிடித்துவைத்தால் பிள்ளையார்” என்பது ஒரு பழமொழி மஞ்சளை அல்லது குழைத்த மண்ணைப் பிடித்து வைத்து 'பிள்ளையார்' எனக் கும்பிடுவர்.

## பிள்ளைகளின் பிள்ளையார்

இளம்பிள்ளைகளுக்கு பிள்ளையாரின் வடிவத் தோற்றத்தில் ஒரு கவர்ச்சி உண்டு. யானை மணி ஓசை கேட்டதும், அப்பெரிய உருவத்தை, இவர்கள் வியப்போடு விழித்துப் பார்ப்பர். யானைமுகக் கடவுளும், தும்பிக்கையுடன் இருப்பதால், அக்காட்சி பிஞ்சு மனங்களில் பதியமாகும். அதனால் தான் ஔவையார் கடவுள் வணக்க பாடல்களைக் குழந்தைகளுக்கு ஏற்ப பாடியுள்ளார்.

நாட்டுப்புற மக்கள் குழந்தையைப் பாடவைக்கும் முதற்பாட்டு எது தெரியுமா?

குள்ளக் குள்ளரே
குண்டு வயிறரே
வெள்ளிப்பிள்ளையாரே
விநாயக[1] மூர்த்தியே!

என்று சிரிப்புக் கலந்து பாடும் இப்பாடல் தான் அது. இதைப் பிள்ளைகள், மழலைச் சொற்களில் திரும்பப் பாடும்! இப்படிப்பட்ட நாட்டுப்புற இலக்கியப் பாடல்கள் மிகப் பல உள. ஏற்றப்பாட்டிலும் பிள்ளையார் தான் முதலில் வருவார். ஆழமான வயல் கிணறுகளில், ஏற்றல் இறைப்பவன்,

பிள்ளையாரே வாரும்
பிழைவராமல் காரும்

என ஒரு வாளி தண்ணீரை இறைத்து ஊற்றுவான், பாட்டிமார்கள் தம் பேரன் பேத்திகளுக்கு இவ்வாறு இரண்டடிப் பாடல்களை பலவற்றைப் பாடி, அப்பிள்ளைகள் நெஞ்சில் பக்தியையும் பண்பாட்டையும் பதியம் போடுவர்.

*குள்ளக் குள்ளனைக் குண்டு*
*வயிறனை*
*வெள்ளைக் கொம்பனை*
*விநாயகனைத் தொழு!*
*வெள்ளைக் கொம்பன்*
*விநாயகனைத் தொழ*
*துள்ளியோடும் தொடரும்*
*வினைகளே!*

அதுமட்டுமா?

முப்பழம் வெல்லம் மோதகம் தின்னும்

தொப்பை அப்பனைத் தொழ வினை இல்லையே என்று பாடிப் பிள்ளைகளை மகிழ்விப்பர். இது "கைத்தல நிறைகனி, அப்பமொடு அவல் பொரி கப்பிய கரிமுகன்" என்ற அருணகிரிநாதரின் திருப்புகழ் போல் உள்ளது.

பள்ளியில் 'வேழமுகம்' என்று ஒரு பாடலை முன்பு கற்பிப்பார்கள். அதுவும் நாட்டுப்புற இலக்கிய வழக்கேயாகும்.

வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்!
வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழ
துள்ளியோடும் தொடர்ந்த வினைகளே!
அப்பம் முப்பழம் அமுதுசெய் தருளிய
தொப்பை யப்பனை தொழ வினை அறுமே!

நாடோடிப் பாடல்கள் இவ்வாறு இடத்திற்குத் தகவும் பாடுபவர்க்கு தகவும் சிறுசிறு வேறுபாடுகளுடன் பாடப்படுவது அவற்றின் இயல்பு. ஏட்டில் எழுதாமல் நினைத்ததும் பாடுபவை அவை.

வேழமுகப் பாட்டு என்பது போற்றிப் பாட்டு பிள்ளையாரைத் தொழப் பிள்ளைகள் முதல் பெரியவர்வரை அது பயன்படும்.


சிந்தித்தவர்க்கு அருள் கணபதி சயசய
சீரிய ஆனைக் கன்றே சயசய

அன்புடை அமரர்கள் காப்பாய் சயசய
ஆவித்துணையே கணபதி சயசய
இண்டைச் சடைமுடி இறைவா சயசய
ஈசன் தந்தருள் மகனே சயசய
உன்னிய[2] கருமம் முடிப்பாய் சயசய
ஊர் நவசந்தி[3] உகந்தாய் சயசய
எம்பெருமானே இறைவா சயசய
ஏழ் உலகும் தொழநின்றாய் சயசய
ஐயா கணபதி நம்பியே சயசய
ஒற்றை மருப்புடை வித்தகா சயசய
ஓங்கிய ஆனைக் கன்றே சயசய
ஔவியம் இல்லா அருளே சயசய

அக்கரப்[4] பொருள் ஆனவா சயசய
கணபதி என்வினை கரைவாய் சயசய
ஙப்போல் மழு[5] ஒன்று ஏந்தியே சயசய
சங்கரன் மகனே சதுரா சயசய
ஞயன்[6] நம்பினர் பால் ஆடில் சயசய
இடம் பட[7] விக்கின விநாயகா சயசய
இணங்கிய பிள்ளைகள் தலைவா சயசய
தத்துவ மறைதரு வித்தகா சயசய
நன்னெறி விக்கின விநாயகா சயசய
பள்ளியில் உறைதரும் பிள்ளாய் சயசய
மன்றுள் ஆடும் மணியே சயசய
இயங்கிய[8] ஞானக் குன்றே சயசய
அரவக்[9] கிண்கிணி ஆர்ப்பாய் சயசய
இலவக்[10] கொன்பு ஒன்று நந்தியே சயசய
வஞ்சனை பலவும் தீர்ப்பாய் சயசய
அழகிய ஆனைக் கன்றே சயசய
இளமத யானை முகத்தாய் சயசய
இறகு[11] பதி விக்கின விநாயகா சயசய
அனந்தலோடு[12] ஆதியில் அடி தொழ சயசய

இதனை வேழமுகம் என்றும் "பிள்ளையார் சிந்தனை என்றும் கூறுவர். ஜயம் = வெற்றி. பேச்சில் 'சயம்' என்பர். இதைப் போற்றி என்றும் சரணம் என்றும் முடிப்பதுண்டு.

தமிழ் எழுத்துக்கள் முப்பது மட்டுமே. உயிர் 12; மெய் 18 இப்பாடலில் உயிர் 12 வரிசையாய் வருகிறது. அக்கரம் என்பதில், மெய்க்கு அடையாளமாகப் புள்ளியுள்ள எழுத்து உளது.



பிறகு க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ழ ள ற ன எனும் பதினெட்டு மெய்யும் வரிசை மாறாமல் இடம் பெறுகின்றன. பாட்டுக்குப் பாட்டும் ஆயிற்று. படிப்புக்கு படிப்பும் ஆயிற்று. ஒருவாறு தமிழ் நெடுங்கணக்கு அகரவரிசை அரிச்சுவடி மழலைகள் நெஞ்சிலும் நாவிலும் பதிந்து விடுகின்றன அல்லவா.

உயிரும் மெய்யுமே தமிழ் முதலெழுத்துக்கள். ஆங்கிலம் 26 என்றால் தமிழ் 30 மட்டுமே.



சார்பெழுத்துக்கள் என்பன மொழியிடையே வரும்போது, பொருள் வேறுபாடு தருவன. அவை தனி எழுத்துக்கள் அல்ல. அவ்வாறு பார்த்தால் பிறமொழிகளில் "சொல்லிடையே" வரும் சார் பெழுத்துக்கள் மிகப் பலவாகும். உயிர்மெய் எழுத்துக்கள் தமிழுக்கு கிடைத்த கொடை. ·க் இ என்று எழுதவேண்டியதை (Ki) போல கி என ஒரே வடிவமாக்கினர்; க் உ என்பதை (Ku) என்பதை இரண்டெழுத்து ஆகாமல் கு என ஒரே எழுத்தில் அடக்கினர். அவை தனி எழுத்துக்கள் அல்ல. இடச் சுருக்கம், காலச் சுருக்கம், முயற்சிச் சுருக்கம் மற்றும் சிக்கனம் கருதிப் படைக்கப்பட்ட 'வடிவங்கள்'. இது தெரியாதார் உயிர்மெய் 216 என்று (12 X 18) கொண்டு, தமிழ் எழுத்துக்கள் ஆயுதத்துடன் 247 என்பர். இத்தனை எழுத்துக்களா என மயங்குவர். இவ் 'வேழமுகம்' தமிழ் முதலெழுத்துக்களை அறிமுகப் படுத்துவது சிறப்பு. ஆத்திசூடி தமிழ் நெடுங்கணக்கை கற்றுத் தருவது போன்றதே இதுவும். முற்காலத்தில் இது திண்ணைப் பள்ளியில் பாடமாக இருந்தது என்பதற்கு, 'பிள்ளைகள் தலைவன்', 'நன்னெறி', 'பள்ளியில் உறைதரும் பிள்ளை' போன்ற தொடர்கள் சான்றாக உள்ளன.

## கடவுள் வணக்கப் பிள்ளையார்

எதனையும் பிள்ளையார் சுழி போட்டு எழுதத் தொடங்குவது திருக்கோயில்களில் முதலில் பிள்ளையாரை வணங்கிவிட்டு பிறகு தந்தையும் தாயுமாகிய அம்மை அப்பரைக் கும்பிடுவது; எந்தவொரு நூலையும் பிள்ளையார் வணக்கத்துடன் தொடங்குவது என்பன கடந்த ஆயிரம் ஆண்டுகளாக உள்ள நடைமுறைகளாகும்.

கூட்டம் தொடங்கும் போது, பதினொராம் திருமுறைப்பாடல் ஒன்றைப் பாடுவர்.

திருவாக்கும், செய்கருமம்
கைகூட்டும், செஞ்சொற்
பெருவாக்கும், பீடும்பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும்
ஆனைமுகத்தானைக் காதலால்
கூப்புவர் தம்கை.

நிகழ்ச்சி தடங்களின்றி இனிதே முடிதற் பொருட்டு, பிள்ளையார் வணங்கப் பெறுகிறார். அதுபோலவே நூல்களை எழுதத் தொடங்குபவர்கள், முற்காலத்தில் சிவனையோ திருமாலையோ வணங்கிப் பாடி பிறகு நூலை எழுதுவர். இடைக்காலம் முதல் நூற்கடவுள் வணக்கமாகப் பிள்ளையாரைப் பாடுவது பெருவழக்காயிற்று. பிள்ளையார் கடவுள் வணக்கப்பாடல்கள் ஆயிரக் கணக்கில் உள்ளன. அவற்றுள் நீதி நூல்களைச் சிறிய வயதினருக்காக பாடிய ஔவையார், புதுமை தோன்றப் பாடியவற்றை மட்டும் பார்க்கலாம்.

ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே.

ஆத்தி மாலையைச் சூடிக்கொண்டு ஆல மரத்தடியில் அமர்ந்து உலகோர்க்குப் போதித்த சிவனே "ஆத்திசூடி" எனப்பட்டனன். ஆலமர் செல்வன் தென்முகக் கடவுள். இன்று 'தட்சிணாமூர்த்தி' என்பர். அவ்விறைவன் உலகோர்க்கு ஞானத்தைப் போதித்தவன். முனிவர்களுக்கு என்பது, அவர்வழியாக நமக்கேயாகும். அந்த "ஆத்திசூடி"யாம் சிவபெருமானால் விரும்பப்பட்ட தேவன் பிள்ளையார் (அமர்ந்த– விரும்பிய). அப்பிள்ளையாரை "ஏத்தி ஏத்தி" தொழுவோம். ஏத்தி ஏத்தி தொழுவது புகழ்வது. அதுதான் "அருச்சனை" எனப்படுவது. இதில் சிவனையும் கூறி அவருடைய பிள்ளையாரை வணங்கும் சாதுரியம் காணப்படுகிறது.


கொன்றை வேந்தன் செல்வன் அடியினை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே.

ஆத்திமாலைபோலக் கொன்றை மாலையும் சிவனுக்குரியது. அதனை அணிந்த தலைவன் சிவபெருமான். அவனது செல்வன் பிள்ளையார். அப்பிள்ளையாரது அடியினை என்றும் புகழ்ந்து பாடி வணங்குவோமாக.

ஆத்திசூடி இரண்டு சீர்களாலானது; கொன்றை வேந்தன் ஒவ்வோர் அடியாலானது. திருவள்ளுவர் ஒன்றே கால் அடியிற் சொன்னதை விட சுருக்கமாகப் பாடிப்பார்த்த ஔவையார் திறம் வியக்கத்தக்கது. அவற்றிலுள்ள கடவுள் வணக்கங்களோ, ஈரடியால் உலகளந்த மாயவனின் தோற்றம் போல், பொருள் பொதிந்து விரிந்து செல்கின்றன.

ஔவையார் மூதுரைக்குப் பாடியுள்ள வாழ்த்து பள்ளிப் பிள்ளைகளுக்காகப் பாடியதுபோல் உளது. நல்வழிப் பாடலும் அதுபோன்றதே.

வாக்கு உண்டாம் நல்ல
மனம் உண்டாம் மாமலராள்
நோக்கு உண்டாம் மேனி
நுடங்காது – பூக்கொண்டு
துப்புஆர்த் திருமேனித்
தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு



வாக்கு, நல்லமனம், செல்வம் தரும் திருமகளின் நோக்கு (பார்வை) யாவும் கிடைக்குமாம். உடம்பு சோம்பற்படாது, பூக்கொண்டு பிள்ளையாரை வணங்குபவர்களுக்கு (துப்பு – பவளம்) எல்லா நலமும் கிடைக்கும் என்பது கருத்து. நல்வழிப்பாடல் மேலும் சிறப்புடன் உளது.

பாலும் தெளிதேனும்
பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்து உனக்கு
நான்தருவேன்– கோலம் செய்
துங்கக் கரிமுகத்துத்
தூமணியே! நீ எனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா!


பிள்ளைகள் இப் பிள்ளையார் வணக்கத்தைப் படித்தால் தமிழறிவு தானாக வரும். இப் பாடலில் உள்ள நயங்கள் பல.

ஒருவரிடம் ஓர் உதவியை வேண்டும் போது, அவரைப் பாராட்டி ஓரிரு வார்த்தை சொல்லிவிட்டுத் தொடங்கினால் காரிய வெற்றி நிச்சயமாகும். "ஊரார் உங்கள் பெருந்தன்மையை மெச்சுகிறார்கள்" என்று பலப்பல கூறிவிட்டு, நன்கொடைச் சீட்டை நீட்டினால், பெருந்தொகை எழுதப்படக்கூடும். "துங்கக் கரிமுகத்துத் தூமணியே!" (சிறந்த அழகிய யானை முகமுடைய தூய மாணிக்கமே) என்றால், பிள்ளையார் திரும்பிப் பார்க்காமல் இருப்பாரா? தும்பிக்கை முகத்தை யார் இவ்வளவு பாராட்டப் போகிறார்கள்?

"நான் தருவேன்" ஏதோ மிகப் பெரிய பரிசு தரப் போவதுபோல் அல்லவா இது தொனிக்கிறது?

என்னென்ன அவை? பால், தெளிதேன், வெல்லப் பாகு பருப்பு எல்லாம் இனிப்பு. ஔவையார் 'பேரம்' பேசுவதில் வல்லவராகத் தோன்றுகிறார். நாம் கூடுதலாக விலைகொடுத்து வாங்கியதை சிலர் சாதுரியமாகப்பேசிக் குறைந்த விலைக்கு வாங்கிவிடுவார்கள்.

ஔவையார் "நான் நான்கு பொருள் தருகிறேன் நீ மூன்று பொருள் தந்தால் போதும்" என்று கூறுகிறார். எண்ணிக்கையைப் பார்த்தால், ஔவையார் கொடுப்பது தான் கூடுதல். ஆனால், கேட்பது, "சங்கத் தமிழ் மூன்றும்



தா'' என்பது இயல்தமிழ் (இலக்கியம்), இசைத் தமிழ், நாடகத் தமிழ் எவ்வளவு சிறந்த பெரிய அரியபொருள்கள் "அப்பமொடு அவல் பொரி கப்பிய கரி முகனிடம்'' "பால் தேன்'' போன்றவற்றைச் சொல்லி தமக்கு தமிழைக்கேட்ட ஔவையாரின் இப்பாடலைப் படிக்கும் ஒவ்வொருவரும், அக்கடவுளிடம் தமிழைப் பெற்றுக் கற்றுத் தெளிவர் என்பது உறுதி. ஒருவருக்கு பிடித்தமானதைக் கொடுத்து நமக்கு வேண்டியதை பெறுவது போன்றது இது. பிள்ளையார்க்கு மிகப் பிடித்தமானவை. அப்பம், அவல், பொரி, மோதகம், பால், தேன், போன்ற எளிய பொருள்களே. எளியவையாயினும் அவர் விரும்புவன, அதனால் நாம் கேட்பது கிடைப்பது உறுதி.

## மக்கள் போற்றும் பிள்ளையார்

எங்கு நோக்கினும் ஊர்த் தெரு, நெடுஞ்சாலைகள், சந்து, மன்றம், மரத்தடி தோறும் பிள்ளையார் இருப்பதால் ஏழைகளும் எளியோரும் தொட்டு வணங்கும் கடவுளாக இவர் உள்ளார். அவரை எளிதில் நெருங்க முடிகிறது.

மக்கள் இவர் மீது வைத்திருக்கும் அன்பை, அவருக்கு சூட்டியிருக்கும் ஆயிரக்கணக்கான பெயர்களைக் கொண்டு அறியலாம்.

வழிவிடும் பிள்ளையார், வெயிலுகந்த பிள்ளையார், வரசித்தி விநாயகர், கற்பகப் பிள்ளையார், துணைவந்த விநாயகர், உச்சிப் பிள்ளையார் (திருச்சி) பணக்காரப் பிள்ளையார் (காரைக்குடி) கடுக்காய் விநாயகர், கூப்பிடு பிள்ளையார், முக்குறுணிப் பிள்ளையார், பொல்லாப் பிள்ளையார், வலம்புரி விநாயகர், மாற்றுரைத்த விநாயகர், சாலக்கிராம விநாயகர், சித்தி விநாயகர், மாணிக்க விநாயகர், பால கணபதி இவ்வாறு ஒரு கலைக்களஞ்சியம் தொகுக்குமளவு சண்பக[1] விநாயகர் விளங்குகிறார். இவை தனியே தொகுத்து ஆராயத்தக்கன. மக்களுடன் நெருங்கிய உறவுடைய கடவுளர்கள் முருகனாம் தண்டாயுதபாணியும் பிள்ளையாருமே எனலாம்.

### குறிப்புக்கள்

1. முனைவர் தமிழண்ணல் விநாயகரை விநாயகர் என்றும் செண்பகத்தை சண்பகம் என்றும் பழைய முறையில் எழுதுவதே சிறப்பு என கருதுபவர். "னா'' வைப் பயன்படுத்தினால் தான் "வினை'' என்ற வேர்ச் சொல்லோடு தொடர்புபடுத்தி நினைக்க ஏதுவாகு மென்று சொல்கிறார்.

   சண்பகத்தில் 'ச'வை 'செ' ஆக எழுதுவதில் பொருள் மாறாததால் தவறேதும் இல்லை எனினும் அகரத்தை எகரமாக மாற்றி எழுதும் பழக்கம் தண்டாயுதபாணியை தெண்டாயுத பாணி என்று விபரிதமாகப் பொருள் மாறும்படி எழுத வைத்துவிடும் என்பதால் அதைத் தவிர்க்க வேண்டும் என்கிறார்.
2. உன்னிய – நினைந்த
3. நவ – புதுமையான; சந்தி – தெருக்கள் சந்திக்குமிடம்
4. அக்கரப் பொருள் – அகரத்தின் பொருள், முதல்வனாவது
5. மழு – மழு ஆயுதம், சூலம்
6. ஞயம் – நயம், நன்மை
7. விக்கினம் இடம்பட –துன்பம் விலக
8. இயங்கிய – அசைகின்ற
9. அரவ – ஓசை இடுகின்ற
10. இளவம் – மரக்கொம்பு
11. இறகு – மயிற்பீலி
12. அனந்தல் – முடிவு. முதலிலிருந்து முடிவுவரை உனைத் தொழ அருள் செய்.



# மகா கணபதி மூலமந்திரம்

மு. சுந்தரலிங்க தேசிகர்
"ஜோதிட சைவ சித்தாந்த சாகரம் சுந்த கணித ஜோதிடம்

ஓம், ச்ரீம், ஹ்ரீம், க்லெளம், கம், கணபதயே வரவரத, ஸர்வ ஜனமே வசமானயஸ் ஸ்வாஹா.

**ஓம்** என்பது மனித உடலைச் சுற்றியுள்ள அகண்ட கோச அ, உ, ம ஆகிய சிருஷ்டி திதிலயம் ஆகிய விந்து நாதத்தைக் குறிக்கும்.

**ச்ரீம்,** இது ஸ் + ர் + ஈ + ம் என்ற எழுத்துக்களைக் கொண்டது ஸ் – இது மூலாதாரத்திலுள்ள பீஜம் ர் – இது சிவாதிஷ்டானத்திலுள்ள பீஜம் ஈ – இது சோமசூரிய அக்கினி ஆகிய சிரசிலுள்ள ஒளி நிலைகளைக் குறிக்கும்.

**ஹ்ரீம்** - "ஹ – சிவம்," "ஏ – பிரகிருதி" "ஐ – மகாமாயை," "நாதம் – சக்தி" இது மகாமாயை பீஜம் என்று கூறுவர் சகல புவனத்தலைவி அகிலாண்டேஸ்வரியை இந்த ஏகாக்ஷரத்தால் வழிபடுகின்றனர்.

**க்லெளம்** - "க – கணேசர்," "ல – பிருதுவி," "ஔ – தேயஸ்," "பிந்து துர்க்க நிவர்த்தி," "ல – சுவாதிஷ்டானத்தில் உள்ளது," "கம் – இது தொண்டையில் தொழிற்படும் எழுத்து," தொண்டையில் இருந்து மேல் போகும் போது எழுத்து குண்டலினி மேல்நிலையில் விளங்குவதாகும்.

**கணபதி** - தும்பிக்கையுடைய விநாயகரைக் குறிக்கும். "க – ஞான நெறியில் போதல்," "ண – மோட்சம்," "தி – பரம்பொருள்"

வரவரத – விரும்பியவற்றை அளிப்பவர்.

**சர்வஜனமே வசமாயஸ் ஸ்வாகா** - விநாயகரை காணாபத்தியத்தில் பிரஜாபதி என்று ஐதரேயத்தில் கூறப்பட்டுள்ளது பற்றி அவர் ஆட்சியிலுள்ள ஆன்மாக்களது தேக தத்துவத்தைக் குறிக்கும்.

**வசமானாயஸ் ஸ்வாகா** - தேக தத்துவங்கள் எல்லாம் ஒரு நிலைப்படுத்தி ஆத்மாவில் கணபதி திருவுரு நிலைபெற்று. ஆத்மா சிறப்புற்று விளங்கவேண்டும் என்பதே இம் மந்திரத்தின் பொருளாகும்.



# பிரணவ சொரூபி

திரு. வை. அநவரதவிநாயக மூர்த்தி

பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரண அற்புத மலர் தலைக் கணிவோமே

விநாயகப் பெருமான் பிரணவ சொரூபியாக விளங்குகிறார். பிரணவம் "ஓம்" என்னும் மூலமந்திரத்தை ஆதாரமாகக் கொண்டு விளங்குகிறது. ஆதியும் அந்தமும் இல்லாத பரம்பொருளிடமிருந்து முதலாவது உண்டாகிய படைப்பு "ஓம்" என்னும் பிரணவ நாதமேயாகும். பிரபஞ்ச உற்பத்திக்கு முதற் காரணமாக விளங்குவதும் அதுவே. எந்த வகையான மந்திரங்களை ஓதப்புகினும் முதலாவதாக ஓதப்படுவது பிரணவ மந்திரமே. இந்தப் பிரணவ மந்திரத்துள் பல தத்துவப் பொருள்கள் அடங்கியுள்ளன.

"ஓம்" என்னும் மந்திரத்தில் அ, உ, ம், என்ற மூன்று எழுத்துக்களின் உச்சரிப்பு சேர்ந்திருப்பதை அவதானிக்கலாம். அதில் "அ" என்ற எழுத்து நம்முடைய வயிற்றுப் பகுதியிலிருந்து சக்தியுடன் எழுந்து வருகிறது. "உ" என்பது நமது கண்டத்திலிருந்து புறப்படுகிறது. நாம் முடிக்கும் "ம்" என்ற எழுத்து இந்த உச்சரிப்பை உதடுகளை மூடி முடித்து வைக்கிறது. நமது ரிஷிகள் இந்த மூன்றையும் இணைத்தே பிரணவ மந்திரமாக அமைத்திருக்கிறார்கள். அந்த "ஓம்" என்னும் ஒலியின் வரி வடிவமே விநாயகப் பெருமானின் திருவுருவமாகும். அதனால் "ஓங்காரரூபன்" என்று எம் பெருமான் அழைக்கப்படுகிறார். ஓங்காரத்தின் இடப்புறம் மட்டுமே ஒரு கோடு இருக்கிறது. வலப்புறம் கோடு இல்லை விநாயகப் பெருமானுக்கு இடப்புறம் மட்டும் ஒரு கொம்பு உண்டு. வலப்புறம் கொம்பு இல்லை.

ஓங்காரம் ஒலிகளுக்கெல்லாம் மூலமாக விளங்குவது. விநாயகப் பெருமானின் யானை முகம் ஓங்காரமாகிய பிரணவ மந்திரத்தை குறிப்பது. அவரது திருமேனி ஞான மயமானது எனவே எம்பெருமானை "ஞான முதல்வன்" ஞானக் கொழுந்து என்று சமய நூல்கள் புகழ்ந்து போற்றுகின்றன. அவரின் திருப்பாதங்கள் ஞான சக்தியும் கிரியா சக்தியுமாகும். முக்கண்கள் முச்சுடரையும் உணர்த்துகின்றன.

விநாயகப் பெருமான் மந்திர சொரூபமாக விளங்குகின்றார். சமஷ்டிப் பிரணவம், வியஷ்டிப் பிரணவம் ஆகிய இரண்டு பிரணவ மந்திரங்களின் மீது பார்வதி பரமேஸ்வரர் தங்கள் திருக்கண் சாத்த அம் மந்திரங்கள் யானை உருவம் கொண்டு மருவ அதனின்றும் அவதாரம் செய்தவர் விநாயகப் பெருமான். எனவே சதை இரத்தம் ஆகிய கலப்பு இல்லாமல் முழுவதும் மந்திர சொரூபமானவர் விநாயகப் பெருமான்.



விநாயகருக்கு கணபதி, விக்னேஸ்வரன், ஏகதந்தன், பிள்ளையார் முதலிய பல திருநாமங்கள் உள்ளன. சிவ கணங்களுக்கெல்லாம் தலைவராக இருப்பதனால் கணபதி என்று போற்றித் துதிக்கப்படுகின்றார். கணபதி என்னும் சொல்லில் "க" என்னும் எழுத்து ஞானத்தைக் குறிக்கிறது. "ண"என்னும் எழுத்து ஜீவன்களின் மோட்சத்தைக் குறிக்கிறது. "பதி" என்பது தலைவன்

எனப் பொருள்படுகிறது. எனவே ஞானத்திற்கும் மோட்சத்திற்கும் தலைவனாய் பரப்பிரம்ம சொரூபியாயிருப்பவரே "கணபதி" என்றும் பொருள் கொள்ளலாம். மெய்யன்போடு தன்னை வழிபட்டு இயற்றும் கருமங்களை இடையூறின்றி இனிது நிறைவேற செய்வதனால் (விக்ன + ஈஸ்வரன்) விக்னேஸ்வரன் என்றும் ஒற்றைக் கொம்பை உடையவரான தன்மையினால் "ஏகதந்தன்" என்றும் தனக்கு மேலான ஒரு தலைவன் இல்லாமல் தானே அனைவருக்கும் நாயகனாக விளங்குகின்றமையால் விநாயகன் என்றும் போற்றப்படுகின்றார். பார்வதி பரமேஸ்வரனின் மூத்த பிள்ளையாக உலக வழக்கில் கருதப்படுவதால் "பிள்ளையார்" என்றும் அடியார்களால் அன்புடன் அழைக்கப்படுகிறார்.

விநாயகப் பெருமானை வழிபடாது தொடங்கிய எக் காரியமும் நலமே நிறைவேறாது.

"என்னரே யாயினும் யாவதொன் றெண்ணுதல்
முன்னரே உனது தாள் முடியுறப் பணிவரேல்
அன்னர் தம் சிந்தை போல் ஆக்குதி – அல்துனை
உன்னலார் செய்கையை ஊறு செய்திடு நீ"

என்று சிவபெருமானே ஸ்ரீவிநாயகப் பெருமானிடம் அவரது அவதாரத்தின் போது கூறியுள்ளார். என்று பழந்தமிழ்ப் பாடல் ஒன்று எடுத்து இயம்புகிறது.

எனவே, எந்தக் கருமங்களையும் செய்யத்தொடங்கு முன்னர் விக்கினங்களைப் போக்கும் வேழமுகத்து விநாயகப் பெருமானை சிந்தையில் இருத்திக், காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி வேண்டுதல் செய்ய வேண்டும். அப்போது எல்லாக் காரியங்களும் தடையின்றி இனிது நிறைவேறும். இது அனுபவ வாயிலாகக் கண்ட உண்மை.

விநாயகர் எல்லா நன்மைகளையும் நமக்கு அருளுபவர். எந்த நல்ல காரியமும் புதிதாக ஆரம்பிக்கும் போது முதலில் விக்னேஸ்வரர் பூசையைச் செய்ய வேண்டும். அதற்கு விநாயகர் படம் அல்லது சிலை அதுவும் கிடைக்காவிட்டால் பசுவின் சாணத்தில் அல்லது மஞ்சள் மாவில் அவரை உருவாக்கி விடலாம். விநாயகப் பெருமானுக்கு மிக உயர்ந்த நிவேதனங்களைப் படைப்பதற்கு வேண்டிய அவசியமுமில்லை. அறுகம்புல் அநேகமாக எங்கும் கிடைக்கும். இந்த அறுகம்புல்லினால் மனதார அர்ச்சனை செய்தால் போதும் உள்ளன்போடு செய்யும் எந்தப் பூசையையும் அவர் ஏற்றுக் கொள்வார். மலர்களை விட கணபதிக்கு மிகவும் உகந்தது அறுகம்புல். இவ்வாறு எம் பெருமான் தனது வழிபாட்டை எல்லோருக்கும் எளிமையாக ஆக்கியிருக்கிறார்.

பிரணவ சொரூபியாக விளங்கும் விநாயகப் பெருமான் தம்மை உள்ளன்புடன் வழிபடும் அடியார்களுக்கு எளிதில் இன்னருள் புரியும் கருணைக் கடல். அவர்களது துன்பங்களை நீக்குவதில் வல்லவர், அத்துடன் கல்வி, செல்வம், ஞானம், சகல கலைகள் ஆகியவற்றையும் வாரி வழங்குவார். மெய்யன்போடு வணங்கி வழிபட்டு வருபவர்களுக்கு வாக்கு வல்லமையும் கொடுப்பார்.

"நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலை ஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்"

என்ற உமாபதி சிவாச்சாரியாரது அருள் வாக்கும் இங்கு சிந்திக்கத் தக்கது.

விநாயகப் பெருமானை உள்ளன்புடன் வழிபட்டு நற்கதி அடைந்தவர்கள் வியாசர், நம்பியாண்டார் நம்பிகள், கபிலர், மெய்கண்டார், ஒளவையார். கச்சியப்ப முனிவர் முதலானோர். பக்தியோடு அவரை வழிபடுவோருக்கு விக்கினங்களைப் போக்கி வீடுபேறு அருள்வதும் அவரின் பெருங்கருணையை எடுத்துக் காட்டும்.

எமது வெவ்வினையை வேரறுக்க வல்லவர். பிரணவ சொரூபியான விநாயகப் பெருமானே; வேட்கை தணிவிப்பவரும் அவரே! விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனும் அவரே! எனவே எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை நாமும் நாள்தோறும் போற்றித் துதிப்போமாக.

"விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து."

–கபிலதேவ நாயனார்.



# ஓங்காரத் திருவுரு

சைவப் புலவர் திருமதி தங்கேஸ்வரியம்மா தங்கராசா

*ஓங்கார வடிவான உன்பாத தாமரையும்*
*உபய பரிபுர மறைகளும்*
*உதிக்கின்ற செங்கதிர்க ளொருகோடி*
*நிகரொளியும்*
*உத்தூள நீற்றி னொளியும்*
*பாங்கார் கஜாந நமும் உபயகரமும் வளர்புயப்*
*பவளாச லங்க ணான்கும*
*பாசமுடனங்குசங் கொம்பேரிலட் டுகம்*
*பட்சமொடு வைத்த கரமும்*
*நீங்காத அருண்மாரி பொழியுந் ரியம்பகமும்*
*நிறையுமும் மத மாரியும்*
*நீள் சடாடவியும் வெண்பிறையுமொரு தொந்தியும்*
*நெஞ்சி லொரு காலும் மறவேன்*
*காங்கேயன் மகிழ் தமையனே கங்கை நதி பெருத*
*காசி வா துண்டிராக்*
*கணபதியெனும் பெரிய குணமே நவே லருட்*
*கருணாநிதிக் கடவுளே !*

ஓம் என்பது பிரணவம். இப்பிரணவமே வேதத்தின் மூலம், பிள்ளையார் விக்கினந் தீர்க்கும் விக்கினேசு வரராகி, ஆன்மாக்களுக்கு அருள் புரியத் தாங்கிய வடிவம் ஓம் என்ற பிரணவமே. ஓம் என்ற ஓங்கார ஒலியே பிள்ளையார். ஓங்கார ஒலி அகரம் உகரமாகப் பிரிந்து ஆண்யானை, பெண் யானை வடிவங்கள் எடுத்துப் பிள்ளையாரைத் தோற்றுவித்ததாகப் புராணங்கள் பகருகின்றன. இதனைத் திருஞான சம்பந்தர் தமது பதிகத்தில்,

*"பிடியதன் உருஉமை கொளமிகு கரியது*
*வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்*
*கடிகணபதிவர அருளினன் மிகுகொடை*
*வடிவினர் பயில்வலி வலமுறை இறையே"*

என்று பாடியுள்ளார்.

பிள்ளையார் சுழி போட்டாயிற்றா என்றால் கருமத்தைத் தொடங்கியாயிற்றா என்பதே பொருள். பிள்ளையார் சுழி போட்டு எழுதுவது மரபு. பிள்ளையார் சுழி மௌனக் குறி. அகரமும் உகரமும் சேர்ந்து ஓங்கார ஒலியாவது போலப் புள்ளியும் கோடும் சேர்ந்து பிள்ளையார் சுழி ஆகின்றது. இதுவே எழுத்துக்களுக்கு அடிப்படை ஆகும். எனவே வினைதீர்க்கும் விநாயகன் எழுத்துக்ககளுக்கெல்லாம் முதல்வனாக விளங்குகின்றான்.

*"ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை*
*இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை*
*நந்திமகன்தனை ஞானக் கொழுந்தினைப்*
*புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே"*

என்பது திருமந்திரம்.

பிள்ளையாரின் தோற்றம் எத்தகையது? விலங்கை, மனிதரை, தேவரை தமது உருவத்தில் அமைத்துக் கொண்டு வணங்கினர். யானைத்தலை, சுளகுச் செவி, தும்பிக்கை என்பன விலங்கு வடிவத்தை விளக்குவன. கண்கள் புருவ வடிவம் என்பன மனித வடிவுக்குச் சான்று கூறுவன. பேழை வயிறு, குறுகிய கால்கள் பூத வடிவைப் பிரதிபலிப்பன. நான்கு கைகள் தேவர்கள் உருவை உறுதிப்படுத்துவன.

உயிர்களுக்கு அபயமளிப்பன பிள்ளையாரின் திருவடிகள், ஞானம் என்றாலென்ன? உண்மையான அறிவு. ஆணவம், கன்மம், மாயை என்ற மலபந்தங்களினால் அல்லலுறும் ஆன்மாவை இறைவன் பால்

வழிப்படுத்துவதே ஞானம். ஊழ்வழிவரும் வினைகள் நீங்க வேண்டும். வருவினையும் செய்வினையும் ஒழிய வேண்டும். இதற்கு வழி என்ன? ஞானம் ஆன்மாக்களில் பொருந்த வினைகள் பகலவனைக் கண்ட பனிபோலத் தாமாகவே அகலும். அஞ்ஞானம் நீக்கும் மெய்ஞ்ஞானமே பிள்ளையார் திருவடிகள். அத்திருவடிகள் துன்பம் போக்கி இன்பம் நல்கும் என்பது சித்தாந்தத் தெளிவு. பிள்ளையாரின் வயிறு பெருவயிறு, பேழை வயிறு இதனையே அருணகிரிநாதரும் "மத்தள வயிறனை உத்தமி புதல்வனை மட்டவிழ்மலர்கொடு பணிவேனே" எனப் பாடியிருக்கின்றார். அண்டசராசரங்கள் அனைத்தையும் தம் வயிற்றுள் அடக்கி அங்கிங் கெனாதபடி எங்கும் வியாபித்து நிற்கின்ற வினை தீர்வள்ளல் விநாயகரே. நம்பிக்கை ஒளிவீசி ஆன்ம கோடிகளை உய்விக்கத் தும்பிக்கையுடன் ஐந்து கரங்களைத் தாங்கி ஐந்தொழில் ஆற்றுகின்றார். பாசம் பற்றுக்குப் பிறப்பிடம். ஒரு கையில் பாசங் கொண்டு படைத்தலைச் செய்கின்றார். படைக்கப்பட்ட ஆன்மாவை வினைகள் சூழுகின்றன. சகட சக்கரம் போன்றது இன்பதுன்பம். பிறவியில் அவதியுண்டு விடுபடத் துடிக்கும் ஆன்மாக்களுக்கு அஞ்சேல் எனப் பாதுகாப்பளிப்பது அபயகரம். அங்குசம் ஏந்திய கை அழித்தலைச் செய்ய அருளலை மோதகமேந்திய கை செய்து ஆன்மீக வெற்றிக்கு வழிகோலுகின்றது. மோதகமேந்திய கை கீழ் நோக்கி இருக்கின்றதே ஏன்? பிறவிப் பெருங்கடலில் மூழ்கி எழுந்து விடுபட இருக்கும் ஆன்மாக்கள் ஓடோடி வந்து இளைப்பாற இனிமையுடன் மோதகமேந்தி நின்று முத்திக்கு வழிகாட்டவே அவ்வாறு கீழ் நோக்கி இருக்கின்றது. மறைத்தல் (திரோதானம்) தொழிலைத் தும்பிக்கை செய்யா நிற்கின்றது.

இந்தின் இளம்பிறை போலும் எயிறு இரண்டிலும் இடதுபக்க எயிறு முழுமையாக அழகுடன் ஒளிர வலது பக்க எயிறோ ஒடிந்து காணப்படுகின்றது. காரணம் என்ன? வியாசபகவான் விளம்ப பாரதக் கதை எழுதிய பெருமைக்குரிய விநாயகப் பெருமான் வலது கொம்பை (எயிறு) ஒடித்து எழுத்தாணியாகப் பயன்படுத்தி பாரதக்கதையை எழுதிப் பூரணப்படுத்தினார். இந்தத் தியாகப் பண்பு பெரிதும் போற்றப்பாலதே. அழகான இடது கொம்பு பதி ஞானம். ஒடிந்த வலது கொம்பு பாச ஞானம். இனி விக்கினேசுவரப் பெருமானின் காதுகளை நோக்கினால் அவை விரிந்து காணப்படுவதை நோக்கலாம். ஏன் அப்படி அமைந்துள்ளன. அடியார்களின் அவலங்களைக் கேட்டு அருள்புரியவே அப்படி அமைந்துள்ளன என்று கூறும்போது தெய்வீகப் பண்பு வியக்கத்தக்கதல்லவா?

நெற்றிக்கண் உட்பட முக்கண்ணராக மிளிர்வதால் சிவனும் பிள்ளையாரும் வேறல்லர் என்பது சித்தாந்தக் கருத்து. விநாயகப் பெருமான் முடியைப் பிறைச்சந்திரன் அணிசெய்கின்றது. இது ஞானம் பெற்ற உயிர்கள் உயர்வடையும் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

பிள்ளையாரை அழகு செய்யும் பாம்பு ஆபரணம் மூலாதாரமாகிய குண்டலினி சக்தி. அது ஆன்மாக்களைச் சிவ நெறிப்படுத்துகின்றது. அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம் என வையத்துள் வாழ்வாங்கு வாழும் நெறிகாட்டிய பிள்ளையார் திருவுருவங்கள் முப்பத்திரண்டு ஆகும். ஒவ்வொரு ஆன்மாவுக்கும் ஒவ்வொரு திருவுருவத்தில் ஈடுபாடு உண்டு. எந்தத் திருவுருவத்தில் ஈடுபாடும் தியானமும் உண்டோ அத்திருவுருவம் ஈடேற்றம் அளிக்கும் என்பது தெளிவு. எனவே நம்பியாண்டார் நம்பிக்காக அமுதுண்ட அண்ணலை ஔவைக்குக் கயிலை காட்டிய கருணாநிதியை உள்ளார்ந்த பக்தியுடன் பணிந்து பேறுகள் பல கண்டு இம்மையின்பமும் மறுமை மலர்வும் அடைவோம்.

*"முன்னவனே யானைமுகத்தவனே முத்திநலம்*
*சொன்னவனேதூய மெய்ச்சுகத்தவனே – மன்னவனே*
*சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையோன் சேகரனே*
*தற்பரனே நின்தான் சரண்"*


## முதல் வணக்கம்

*ஓமெனும் பொருளாய் உள்ளோய் போற்றி!*
*பூமனும் பொருள்தொறும் பொலிவாய் போற்றி*
*அகரம் முதலென ஆனாய் போற்றி!*
*அகர உகர ஆதி போற்றி!*



கோவிலின் முழுத் தோற்றம்

## உள்சுற்றுப் பிரகாரச் சுவரில் காணப்படும் ஓவியங்கள்



1. கஜமுகாசுர வதம்.
2. சிந்தூரா சுர வதம்.
3. ஜனகனின் கர்வ பங்கம்.
4. நம்பியாண்டார் நம்பியை சோழ மகாராஜா வரவேற்றல்.
5. காவிரி தந்த கணபதி.
6. அறுகின் மஹிமை.

உற்சவ மூர்த்திகள் உலா வரும் ஊர்திகள்











உற்சவ மூர்த்திகள் உலா வரும் ஊர்திகள்















## உற்சவ மூர்த்திகள் உலா வரும் ஊர்திகள்










பரராஜசேகரப் பிள்ளையார்

இராஜகோபுர கும்பாபிஷேக நாளில் யானை மீது பவனிவரும் காட்சிகள்





கண்டியிலிருந்து வரவழைக்கப்பட்ட ''ராஜா'' என்ற யானையில் விநாயகப் பெருமான் வீதிவலம் வரும் காட்சி. (1973)





கண்டி பெரஹராவில் கலந்து கொள்ளும் மகாராஜா யானையில் விநாயகப் பெருமான். (1974)

கொழும்பு தமிழ்ச் சங்கம்



நூலகம்

1973ல் பரராஜசேகரப் பிள்ளையாரின்
யானைத் திருவிழாவில்
சிறப்புச் சொற்பொழிவு ஆற்ற வந்த
அன்னை சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்....



அமரர் ஆ. வ. இராசையா



அமரர் சி. குமாரசாமி தம்பதிகள்

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோயில் மணி மண்டபம்,
சைவ வேளாளர் மரபில் உதித்து சைவ சீலர்களாகவும்,
ஒழுக்க சீலர்களாகவும் வாழ்ந்து மக்கள் வாழ்விற்கு வழிகாட்டிகளாகத்
திகழ்ந்த அமரர்கள் ஆ. வ. இராசையா, சி. குமாரசாமி தம்பதிகள்
ஆகியோரின் ஞாபகார்த்தமாக
அப்பெருந்தகைகளின் புத்திரர்களான
திருவாளர்கள் இ. குகவரதன், கு. கருணாமூர்த்தி
ஆகியோரால் அமைக்கப்பட்டது.



# விநாயகர் தத்துவம்

(பாபாவின் விளக்கம்)

கணேசரின் யானைத் தலையின் தத்துவம் யாதெனில் யானை சிறந்த அறிவு படைத்தது. யானைக்கு மேதா சக்தி அதிகம் மேலும் யானையின் காதுகள் பெரியதாக இருப்பதால் நுண்ணிய சப்தத்தைக் கூட அதனால் கிரகிக்க முடிகின்றது. இறைவன் புகழைக் கேட்பது என்ற ஆன்மீக சாதனையின் முதற்படிக்கு காதுகள் கூர்மையாய் இருப்பது அவசியம். யானை புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் ஒரே மாதிரி எடுத்துக் கொள்கின்றது. தேவையற்றவையை உதறி விடுகிறது. நல்ல விஷயங்களை மௌனமாக ஏற்றுக் கொள்கின்றது. இவ்வாறு மனிதகுலத்திற்கு அத்தியாவசியமான பாடங்களை விநாயகர் நமக்கு கற்றுத் தருகிறார்.

## வாகனம் மூஞ்சூறு தத்துவம்

அவரது வாகனம் மூஞ்சூறு. மூஞ்சூறு இருளில்தான் சஞ்சரிக்கும். அத்துடன் மூஷிகத்திற்கு வாசனை பிடிக்கும். வாசனை பிடித்துக்கொண்டே எந்தெந்த உணவுப்பொருள் எங்கிருக்கிறது எனக் கண்டு கொள்ளும். ஆன்மீகத்தில் இருள் என்பது அஞ்ஞானத்தையும், வாசனை என்பது ஆசைகளையும் குறிக்கிறது. எனவே தான் அஞ்ஞானத்தையும், ஆசைகளையும் கட்டுப்பாட்டில் வைப்பவர் என்பதை விளக்கவே அவற்றின் உருவமாக விளங்கும் மூஷிகத்தை வாகனமாகக் கொண்டு உள்ளனர்.

விநாயகர் சதுர்த்தியில் விசேடமான உணவுப் பண்டங்கள் கடவுளுக்கு நிவேதனமாக அளிக்கப்படுகின்றன. அப்பண்டங்கள் நீராவியில் தயாரித்தவை அல்லது எள் அறுவடையாகும். எள்ளானது சுவாச சம்பந்தமான நோய்களையும் கண் நோய்களையும் தீர்க்க வல்லது. நீராவியில் வெந்த பண்டங்கள் சீரணிக்க கூடியவை ஆகும். இவ்வாறு முன்னோர்கள் ஆரோக்கியமும் ஆனந்தமும் கூடிய வகையில் இறைவனை வழிப்பட்டார்கள்.


## விநாயகர் பூஜைக்கு

விநாயகர் பூஜைக்கு அறுகம்புல் பயன் படுத்தப்படுகிறது. அதற்குரிய காரணத்தை விளக்க புராணங்களிலே ஒரு நிகழ்ச்சி கூறப்படுகிறது. ஒரு முறை சிவபெருமானும் பார்வதியும் கைலாயத்தில் தாயம் ஆடிக்கொண்டிருந்தார்கள். இதில் யார் வென்றது என தீர்ப்புக் கூறும் பொறுப்பு நந்தியுடையதாக ஒப்படைக்கப்பட்டிருந்தது. நந்திக்கு ஈஸ்வரன் மீது அபிமானம் அதிகம். அதனால் தோற்ற போது கூட ஈஸ்வரனை வென்றதாக அறிவித்தார். பார்வதி கோபத்தால் நந்தியை சபித்தார். நந்தி பார்வதியின் பாதம் பணிந்து பாவ விமோசனம் கோர, பார்வதி மனமிரங்கி, ஆவணிச் சதுர்த்தியில் என் மகன் கணபதியின் பிறந்த தினத்தில் உனக்குப் பிரியமான அறுகம் புல்லினால் அர்ச்சனை செய்தால் உன் சாபம் நீங்கும் என அருளினார்.

இதிலிருந்து யாருக்கு என்ன பிடிக்குமோ அதை இறைவனுக்குப் படைத்தால் பாவம் விலகும் என்பது தெளிவாகச் சொல்லப்படுகிறது. இந்தச் சத்தியத்தை ஸ்தாபிப்பது தான் விநாயக தத்துவம்.

உயிர் வாழ்க்கைக்கே தலைவர் விநாயகர். சுயநலம், சுயலாப நோக்கம் அவற்றை வைத்துக் கொண்டு வாழக்கூடாது என்று உணர்த்துபவர். சுயநலத்தை தியாகம் செய்ய வேண்டும். பிறர் நலன் நாடி ஆன்மீக வாழ்க்கை நடாத்த வேண்டும். அதன் மூலம் தெய்வீகத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். இதுவே நிஜமான விநாயக தத்துவம்.

*–நன்றி இறைதூதன்–*



# பிள்ளையாரின் தொல்வடிவங்கள்

முு. நளினி – இரா. கலைக்கோவன்

தமிழ்நாட்டில் இன்று பார்வைக்குக் கிடைக்கும் தொன்மையான பிள்ளையார் சிற்பங்கள் அனைத்தும் குடைவரைக் கோயில்களிலேயே காணப்படுகின்றன. இக்குடைவரைக் கோயில்கள் பாண்டியர்களாலும் பல்லவர்களாலும் முத்தரையர்களாலும் உருவாக்கப் பட்டவை. பல்லவர் குடைவரைகள் செங்கற்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில் மிகுதியாகவும், பிற வட தமிழ்நாட்டு மாவட்டங்களில் ஆங்காங்கேயும் அமைந்துள்ளன. இக்குடைவரைக் கோயில்களில், சிராப் பள்ளி கீழ்க்குடைவரை தவிர வேறெங்கும் பிள்ளையாரின் வடிவம் தெய்வமெனும் தகுதியில் இடம்பெறவில்லை.


மாமல்லபுரத்திலுள்ள இராமாநுஜர் குடைவரையின் முகப்புப் பூதவரியில் காணப்படும் யானை முகக் கணத்தைப் பிள்ளையாராகக் கொள்ளலாமெனில், பல்லவர் கலை வரலாற்றில் பிள்ளையார் அறிமுகமாகும் முதலிடம் இதுவெனக் கூறலாம். இதேபோன்ற யானை முகக் கணங்கள் மாமல்லபுரத்திலுள்ள ஒற்றைக்கல் தளிகளுள் ஒன்றான தர்மராஜ ரதத்தின் இரண்டாம் தளப் பூதவரியிலும் வீணையேந்திய நிலையில் காணப்படுகின்றன[1].

இராமாநுஜர் குடைவரையும், தர்மராஜ ரதமும் இராஜசிம்மப் பல்லவரின் (கி. பி 700–728) தொடக்க காலப் பணிகளாகக் கருதப்படுகின்றன. இவற்றைத் தொடர்ந்து இராஜசிம்மரின் மாமல்லபுரத்துக் கடற்கரை கோயில்களின் கபோதக் கூடுகளிலும் ஆரச் சாலைகளின் நாசிகைக் கூடுகளிலும் பிள்ளையாரைக் காணமுடிகிறது. மாமல்ல புரத்திலுள்ள முகுந்த நாயனார் கோயில், புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள சிறு விமானம் ஆகியவற்றிலும் பிள்ளையார் கூடுறை வடிவமாய் இடம் பெற்றுள்ளார். பல்லவர் பகுதியில் கோட்டத் தெய்வமாய் பிள்ளையார் உயரும் இடம் காஞ்சிபுரம் இராஜசிம்மேசுவரம்தான்[2].

தமிழ் நாட்டிலுள்ள பிள்ளையாரின் தொல் வடிவங்களுள் எழிலார்ந்ததும் குறிப்பிடத்தக்கதுமான இவ்வடிவம், சின்னக் குழந்தைகள் அமருமாறு கால்களை மடக்கி அமர்ந்துள்ள நிலையில் செதுக்கப் பட்டுள்ளது. வல முன் கை கடகத்திலிருக்க, இட முன் கை முழங்காலுக்குச் சற்று மேலுள்ளது. பின்கைகளில் வலப்புறம் அங்குசம், இடப்புறம் நீலோத்பல மலர். தலையில் அலங்கார மகுடம். உபவீதமாய் முப்புரி நூலும், உதர பந்தமும், தோள், கை வளைகளும் அணிந்துள்ள இவரது துதிக்கை இடம்புரியாக உள்ளது. வலத்தந்தம் முழுமையாக இருக்க இடத்தந்தம் உடைந்துள்ளது. செவிகள் இயல்பான அழகில். சிறிய மணிக்கண்கள். பிள்ளையாரின் முன் விருந்துப் படையலுடன் பெருந்தட்டு. மேற்புறத்தே இருபக்கமும் பக்கத்திற் கொருவராய் மலரேந்திய கையர்களாய்ப் போற்றும் கந்தருவர். இறைவனின் தலைக்கு மேல் விரிந்த பெருங்குடை. பழம் பிள்ளையார்களுள் அமர்ந்த நிலைக் குடை நாயகர் இவர் ஒருவரே. பாண்டிய, முத்தரையர் பகுதிக் குடைவரைப் பிள்ளையார்கள் யாருக்கும் இப்பேறு வாய்க்கவில்லை.



சிராப்பள்ளிக் கீழ்குடை வரை இராஜசிம்மர் காலத்தின் இறுதிப் பகுதியிலோ அவருக்குச் சற்றுப் பிற்பட்டோ உருவாக்கப்பட்டதாகும்[3]. இங்கு பிள்ளையார், கோட்டத் தெய்வமாக, நின்ற நிலையில், இடம்புரியாக இடம் பெற்றுள்ளார். தலையின் இருபுறத்தும் கந்தர்வர்கள் போற்ற, கீழே பக்கத்திற்கொரு கணம் அடியவர் நிலையில். சமபாதராய்



உபவீத முப்புரிநூலுடன் நிற்கும் பிள்ளையாரின் கழுத்தில் முத்துச்சரங்களால் அணைக்கப்பட்ட பூப்பதக்கங்களோடு கூடிய சரப்பளி. தந்தங்களுள் இடத் தந்தம் உடைந்துள்ளது. அகல விரிந்து தோள்களில் தவழும் செவிகள். முகப்பணிகளோடு கூடிய நெற்றிப்பட்டம் சூழ்ந்த கரண்டமகுடம். முன்னிரு கைகளும் கீழே தாழ்ந்து, பக்கத்திற்கொருவராக இருபுறத்தும் நிற்கும் கணங்களின் தலைகளைத் தொட்டவாறுள்ளன. கடகப் பின் கைகளில் வலப்புறம் தந்தம். இடப்புறப் பொருள் பாசமாகலாம். கைகளின் மேற்பகுதியில் தோள் வளைகள். மணிக்கட்டுகளில் பட்டை வளைகள். பாண்டிய, முத்தரையர் குடைவரைப் பிள்ளையார்களில், இந்த கந்தர்வப் பேறு, பரங்குன்றம் தவிர வேறெங்கும் இல்லையென்பது குறிப்பிடத் தக்கது. இது பல்லவர் பாங்கு.


பல்லவர் பூமியில் கிடைக்கும் காலத்தால் முற்பட்ட பிள்ளையார் சிற்பங்களுள் மிக அழகியதும் கம்பீரமானதுமான வடிவம் செங்கற்பட்டு மாமல்லபுரம் சாலையிலுள்ள வல்லம் முதற் குடைவரையின் புறச்சுவரிலுள்ளது.[4] திண்டொன்றின் மீது இட முன் கையை அமர்த்தி, உடலை இடப்புறத்தும் தலையைச் சற்றே வலச்சாய்வாகவும் ஒருக்களித்து, எளிதானதொரு லலிதாசனத்தில் காட்சியளிக்கும் இவ்வல்லத்தார், கரண்டமகுடமும், தோள், கை வளைகளும் அணிந்தவர். இவரது வல முன் கை தொடைமீது இருத்தப்பட்டுள்ளது. பின் கைகளில் இடப்புறம் தந்தம். வலக்கை கடகமாக உள்ளது. செவிகள், பாண்டியர் பகுதிப் பிள்ளையார் சிற்பங்கள் போல் விறைப்பாக இல்லாமல் இயல்பான யானைச் செவிகளொத்து அழகிய மடிப்புத் தொங்கல்களுடன் எழிலார்ந்து விளங்குகின்றன. தந்தங்களுள் இடத் தந்தம் உடைந்துள்ளது. முப்புரி நூல் நிவீதமாய் அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் நிவீத முறையில் முப்புரி நூல் கொண்ட காலத்தால் முற்பட்ட பிள்ளையார் வடிவங்கள் இரண்டே. அவற்றுள் இதுவொன்று. கி. பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த தொல்வடிவமாக இவரைக் கொள்ள முடியும். பல்லவச் சிற்பிகளின் கைத்திறம் பேசும் இந்த வடிவம், சிதைக்கப்பட்டிருந்த போதும், சிந்தனைகள் வளர்க்கும் கோலத்தில் அடியவர்களைத் தேடி ஆயிரத்திருநூறு ஆண்டுகளாகக் காத்திருக்கிறது. பிள்ளையார்பட்டித் தேசியாருக்கு அடித்த யோகம் இந்த அழகருக்கு என்று வரும்?

லலிதாசனத்தில் அமர்ந்திருக்கும் திருத்தணி வீரட்டானேசுவரத்துப் பிள்ளையாரும் தக்கோலம் ஜலநாதீசுவரத்துப் பிள்ளையாரும் பல்லவர்களின் கடைசிக் கொழுந்துகள்.[5] வீரட்டத்தாரின் இடம்புரியாக உள்ள துதிக்கையிலும் வல முழங்காலில் இருத்தப்பட்டுள்ள வலக்கையிலும் மோதகங்கள். இட முன் கை முழங்கால் மீது இருத்தப்பட்டுள்ளது.[6] பின் கைகளில் வலப்புறம் தந்தம். இடப்புறம் பாசம்.[7] வலத் தந்தம் உடைந்துள்ளது. அலங்காரப் பிரியரான இவரது அணிகளனைத்தும் சிறப்பாக வடிக்கப்பட்டுள்ளன. உதரபந்தமும் உபவீதமாய் முப்புரி நூலும் அணிந்துள்ள இவரது செவிகளைத் தழுவியபடி கரண்டமகுடத்தை ஒட்டி அழகுக் குஞ்சலங்கள்.

தக்கோலப் பிள்ளையார் இடம்புரியார். தாமரையிருக்கையின் மேல் அமர்ந்துள்ள இவரது முன் கைகளுள் இடக்கை தொடைமீது அமர, வலக்கையில் மோதகம். பின் கைகளுள் வலப்புறம் ஏடு. இடப்புறம் கரும்புத் தோகை. கரண்மகுடமும் செவிப் பூக்களும் உதர பந்தமும் முப்புரி நூலும் கண்டிகையும் சரப்பளியும் தோள், கை வளைகளும் அணிந்துள்ள இவரது துதிக்கையிலும் மோதகம். வலத்தந்தம் உடைந்துள்ளது.

பல்லவர் பூமியில் அருகிக் காணப்படும் பிள்ளையார் தென்தமிழ் நாட்டில் பாண்டியர், முத்தரையர் சீராட்டைப் பெற்றுச் செழித்தமை, அவர்தம் குடைவரைகளில் பரவலாகக் காணப்படும் சிற்பங்களால் அறியப்படும் உண்மையாகும். தமிழ் நாட்டுக் கலைவரலாற்றின் முதற் பிள்ளையார் எனும் புகழைப் பெறுபவர் பிள்ளையார் பட்டியில் சிவபெருமான் குடைவரைக்குக் கோட்டத் தெய்வமாய் உருவாக்கப்பட்டு, இன்று 'அப்பனை' மீறிய புகழுடன் முதன்மைத் தெய்வமாகியுள்ள தேசி விநாயகப் பிள்ளையார்தான். இக்குடைவரையிலுள்ள கல்வெட் டொன்று கொண்டு எழுத்தியல் அறிஞர்கள் இதன் காலத்தைக் கி.பி. ஆறாம் நூற்றாண்டாகக் கொள்கின்றனர்.

குடைவரையின் கிழக்குப் பகுதியில் சம்மணமிட்ட நிலையில் வடமுகமாக வெட்டப்பட்டுள்ள இக்கணபதி வடிவம், தோள் வளைகளும் கை வளைகளும் பூண்டுள்ள இரு கைகளைக் கொண்டுள்ளது. வலக்கையில் மிகவும் பொரிந்துபோன நிலையில் மோதகம்.[9] இடக்கை உதர பந்தத்தைத் தொட்டபடி வயிற்றருகே உள்ளது. மார்பில் முப்புரிநூலில்லாத இப்பிள்ளையாரின் வலத் தந்தம் முழுமையாகவும் இடத்தந்தம் உடைந்தும் காணப்படுகின்றன. இன்னவகையினதென அடையாளப்படுத்த முடியாத சிறு மகுடமும் வலம்புரியாய்த் துதிக்கையும் கொண்டுள்ள இத்தேசிக விநாயகப் பிள்ளையார் இன்று கற்பகக் கணபதியாய் பேரும் புகழும் பெற்றுள்ளார்.




தேசியாரைப் போலவே இரு கைகளுடன் படைக்கப்பட்டுள்ள பிள்ளையாரின் தொல் வடிவங்கள் குன்றக்குடியிலொன்றும் செவல்பட்டியிலொன்றுமாய்க் காணக் கிடைக்கின்றன.[10] அர்த்த பத்மாசனத்தில் வீற்றிருக்கும் குன்றக்குடிப் பிள்ளையார் இங்குள்ள கிழக்குக் குடைவரையில் மேற்குப் பார்த்த நிலையில் காட்சி தருகிறார். வலக்கையில் மோதகம் கொண்டுள்ள இவரது இடக்கை தொடைமீதுள்ளது. வலம்புரியாய்த் துதிக்கை கொண்டுள்ள இவரது இரண்டு தந்தங்களுமே உடைந்துள்ளன. கரண்டமகுடமும் முப்புரிநூலும் உதரபந்தமும் அணிந்துள்ள இவரது கழுத்தில் பெரிய அளவிலான ருத்திராக்க மாலை.[11]

செவல்பட்டிக் குடைவரைப் பிள்ளையார் சிறு குழந்தைகள் அமர்வது போல வரையறைக் குட்படாததொரு அமர்வில் காணப்படுகிறார்.[12] இவ்வலம்புரியாரின் இருகைகளுள் வலக்கையில் உள்ள பொருள் மோதகமா, பழமா என்றறியக் கூடவில்லை. இடக்கையில் உடைந்த தந்தம். வலம்புரியாக உள்ள துதிக்கையிலும் மோதகம். கரண்டமகுடமும் முப்புரி நூலும் அலங்கரிக்கப்பட்ட உதரபந்தமும் தோள் வளைகளும் முத்து வளையல்களும் அணிந்துள்ள இவரது அரைப்பட்டிகை முடிச்சுகள் இருபாதங்களுக்குமிடையில் காட்டப்பட்டுள்ளன.[13]

கல்வெட்டுகளின் வழிகாட்டல்கள் ஏதுமற்ற நிலையில் குன்றக்குடி, செவல்பட்டிக் குடைவரைகளை அவற்றின் கட்டமைப்புக் கொண்டு கி. பி. ஏழாம் நூற்றாண்டினவாகக் கொள்ளலாம். திருக்கோகர்ணம், தேவர்மலை, திருக் கோளக்குடி, திருமலைப்புரம், அரிட்டாபட்டி, குன்னத்தூர், திருப்பரங்குன்றம்[14] ஆகிய ஊர்களில் அமைந்துள்ள குடைவரைகளிலும் பிள்ளையாரின் தொல்வடிவங்கள் இடம் பெற்றுள்ளன. இவை அனைத்துமே கி. பி. ஏழு அல்லது எட்டாம் நூற்றாண்டில் எனலாம்.

புதுக்கோட்டை மாவட்டம் திருக்கோகர்ணம் குடைவரையில் தேசியாரைப் போலவே வடபார்வையாகச் செதுக்கப்பட்டுள்ள பிள்ளையார் சம்மணமிட்டுள்ளார். இடம் புரியாகத் துதிக்கை பெற்றுள்ள இவரது முன் கைகளில் வலப்புறம் மோதகம். இடமுன் கை தொடைமேல் கடகத்தில் இருத்தப்பட்டுள்ளது. பின் கைகளில் வலப்புறம் கரும்பு. இடப்புறம் தந்தம். கரண்டமகுடமும் தோள், கை



வளைகளும் முப்புரி நூலும் அணிந்துள்ள இவரது இடத்தந்தம் உடைந்துள்ளது. வலப்புறம் தந்தமில்லை.[15]


தேவர்மலைக் குடைவரைப் பிள்ளையார் கிழக்குப் பார்வை யாகச் செதுக்கப்பட்டுள்ளார். திருமேனி சிதிலமாகியுள்ள இவரது துதிக்கை வலப்புறம் வளைந்து திரும்பியுள்ளது. உதரபந்தமும் தோள், கை வளைகளும் அணிந்துள்ள இவரது தலையில் சிறுமகுடம். முன் கைகளில் வலக்கை மணிக் கட்டளவில் சிதைந்துள்ளது. இடக்கை வயிற்றருகே பறக்கும் ஆடையைப் பற்றியவாறுள்ளது. பின்கைகளில் வலப்புறம் மலர். இடப்புறமுள்ளது கரும்புத் தோகையாகலாம்.[16]

திருக்கோளக்குடிப் பிள்ளையார் கிழக்குப் பார்வையினர். மலைமூர்த்தி விநாயகர் என்றழைக்கப்படும் இவர் சம்மணமிட்டமர்ந்துள்ளார். முன் கைகளில் வலப்புறம் மோதகமும் இடப்புறம் தந்தமும் உள்ளன. பின் கைகளில் வலப்புறம் பிரம்பும் இடப்புறம் கரும்புத் தோகையும் கொண்டுள்ளார். கரண்டமகுடமும் முப்புரிநூலும் சரப்பளியும் கைவளைகளும் அணிந்துள்ள இவரது இடையாடை கணுக்கால்வரை காட்டப்பட்டுள்ளது. வலத் தந்தம் முழுமையாக உள்ள இவருக்குத் இடத்தந்தம் இல்லை. பிள்ளையாரின் முன்னால் காட்டப்பட்டுள்ள பெரிய கல் உருண்டையைப் பலாப்பழம் என்கிறார்கள். இதன் வலப்புறம் வாழைப்பழச் சீப்பும் இடப்புறம் மாங்கனிகளும் கல்லிலேயே காட்டப்பட்டுள்ளன.[17]

திருநெல்வேலி மாவட்டம் கல்லிடைக்குறிச்சிச் சேந்தமரம் சாலையில் கல்லிடைக்குறிச்சியிலிருந்து ஏறத்தாழ ஐந்து கிலோமீட்டர் தொலைவிலுள்ள திருமலைப்புரம் குன்றில் அமைந்துள்ள குடைவரையில் காணப்படும் பிள்ளையார் லலிதாசனத்தில் உள்ளார். இவரது இடமுன் கை வயிற்றருகே உதரபந்தம் தொட்டபடி இருக்க, வலமுன் கை வல முழங்கால் மீது மோதகத்துடன் இருத்தப்பட்டுள்ளது. இடம்புரியாக உள்ள துதிக்கையிலும் மோதகம். பின் கைகளில் வலப்புறம் பாசம். இடப்புறம் உடைந்த தந்தம். தோள்வளையும் பட்டையான கைவளைகளும் கொண்டுள்ள கரண்டமகுடரான இவருக்கு, வலத்தந்தம் மட்டுமே உள்ளது. இடப்புறம் தந்தம் இல்லை. இடையாடை, அமர்விற்கு எளிதாய் முழங்காலுக்குக் கீழ் நன்கு இழுத்துச் சுருட்டப்பட்ட நிலையில் உள்ளது.18

சிராப்பள்ளி மதுரைச் சாலையில், மதுரைக்கு அருகிலுள்ள அரிட்டாபட்டிக் குடைவரையில், குடைவரையின் புறச்சுவரில் தென்கோட்டத் தெய்வமாகச் சம்மணமிட்ட நிலையில் பிள்ளையாரைக் காட்டியுள்ளார்கள். அழகிய முகப்புகளோடமைந்த மகுடமும் உதரபந்தமும் முப்புரிநூலும் தோள்வளைகளும் பட்டையான கைவளைகளும் அணிந்துள்ள இவரது பின் கைகளிலுள்ள பொருள்களை அடையாளம் காணக்கூடவில்லை. முன் கைகளுள் வலப்புறம் மோதகம். இடப்புறம் தந்தம். வலம்புரியாக உள்ள இவர் துதிக்கையிலும் மோதகம். இவரது இடத் தந்தம் முழுமையாக இருக்க, வலத் தந்தம் உடைந்துள்ளது.[19]

மதுரை சிவகங்கைச் சாலையிலுள்ள வரிச்சியூருக்கு அருகிலுள்ள குன்னத்தூரில் மூன்று குடைவரைகள் உள்ளன. முதற் குடைவரையில் உள்ள பிள்ளையாரின் கீழ்ப்பகுதி சிதைந்துள்ளமையால் அமர்நிலை இன்னதென அறியக்கூடவில்லை. கரண்டமகுடமும் தோள் வளைகளும் அணிந்துள்ள இவரது வலக்கை அபயத்திலிருக்க, இடக்கை இடுப்பிலுள்ளது. இங்குள்ள மூன்றாம் குடைவரையில் உள்ள பிள்ளையார் உதரபந்தம், முப்புரிநூல், ருத்திராக்க மாலை, கரண்டமகுடம், தோள்வளை, கைவளை




அணிந்து வலம்புரியாராய் அர்த்த பத்மாசனமாய்க் கொள்ளத் தக்கதொரு அமர்வில் காட்டப்பட்டுள்ளார். இவரது முன் கைகளுள் வலக் கை வயிற்றருகே மோதகம் ஏந்தியிருக்க இடக்கை வயிற்றின் மீதமர்ந்துள்ளது. பின் கைகளுள் வலப்புறம் பிரம்பும் இடப்புறம் கரும்புத் தோகையும் காட்டப்பட்டுள்ளன. இவரது வலத் தந்தம் உடைந்துள்ளது. வலம்புரித் துதிக்கையில் மோதகம்.[20]

பரங்குன்றத்துப் பிள்ளையார் குடைவரைக் காலத்தவரா அல்லது குடைவரை திருத்தப்பட்ட காலத்தவரா அல்லது அதற்கும் சற்றுப் பிற்பட்டவரா என்பதை அறியச் சான்றுகளில்லை. பிள்ளையார் சிற்பத்தின் மீதும் சிற்பத்திற்கு மேலும் கீழும் உள்ள பகுதிகளிலும் விரிவான அளவில் சுதைப்பூச்சுகள் நிகழ்ந்திருப்பதால், எது உண்மையான பகுதி, எது பூசப்பெற்ற பகுதியென அடையாளம் காண வாய்ப்பில்லை. தாமரைமலர் மேல் பத்மாசனத்தில் வட பார்வையாக அமர்ந்துள்ள இவர், எங்குமில்லா அதிசயமாகத் தம் பின் கைகளால் ஒரு முழுக் கரும்பைப் பிடித்துள்ளார். வலமுன் கை மோதகம் கொள்ள, இட முன் கை தொடைமீது உள்ளது. துதிக்கை இடம்புரியாக அமைய உதரபந்தம், உபவீத முப்புரி நூல், கரண்டமகுடம், ருத்திராக்கமாலையுட்பட மூன்று கழுத்தணிகள், தோள், கைவளைகள் அணிந்துள்ள இவருக்கு மேலும் கீழும் சுதைப் பூச்சாய்ப் பல வடிவங்கள் காட்டப்பட்டுள்ளன. சில இசைக் கருவிகளுடன் காட்சிதர, சில பழம் போன்ற பொருட்களைக் கொண்டுள்ளன. கந்தர்வரின் கவரி வீச்சும் உள்ளது.[21]

எட்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் அமைக்கப்பட்டதாகக் கொள்ளத்தக்கக் குன்றாண்டார் கோயில், மலையடிப்பட்டி, மகிபாலன்பட்டி, குடுமியான்மலை ஆகிய ஊர்களிலுள்ள குடைவரைக் கோயில்களிலும் தொன்மையான பிள்ளையார் சிற்பங்கள் காணப் படுகின்றன. புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர்க் கிள்ளுக்கோட்டைச் சாலையிலுள்ள குன்றாண்டார் கோயில் குடைவரையின் முக மண்டபத்து வடகோட்டத்தில் சம்மணமிட்ட பிள்ளையார் காணப்படுகிறார். வலம்புரியாய்ச் சுருண்ட துதிக்கை, சுருள் வளைவில் மோதகம் பிடித்துள்ளது. பொதுவாகத் துதிக்கையின் வாயில்தான் மோதகம் காட்டப்பட்டிருக்கும். இங்கு வழக்கத்திற்கு மாறாகத் துதிக்கையின் வளைவில் மோதகம்.

இவரது மடக்கிய வல முன் கையில் மோதகம். இடமுன் கை இடுப்பாடையின் முடிச்சைப் பிடித்தபடி தொடையையொட்டி இருத்தப்பட்டுள்ளது. பின் கைகளுள் வலப்புறம் தந்தம். இடப்புறமுள்ள பொருள் வாழைப் பழமாகலாம். தலையில் உயரமான கரண்டமகுடம். மகுடத்தில் தாமரையிதழ்கள் காட்டப்பட்டுள்ளன. கைகளின் மேற்புறத்தே தோள்வளைகள்; மணிக்கட்டுகளில் பட்டை வளைகள். உதரபந்தமணிந்துள்ள இவரது முப்புரிநூல் வலத் தோளிலிருந்து இறங்கி இடப்புறமாய் வயிற்றருகே சென்று பின்னேறுகிறது. தமிழ்நாட்டின் வேறெந்தக் குடைவரையிலும் பிள்ளையாரின் முப்புரிநூல் இதுபோல் காட்டப்படவில்லை. அந்த வகையிலும் குன்றாண்டார் கோயில் பிள்ளையார் மாறுபடுகிறார். இவரது வலத் தந்தம் முழுமையாக இருக்க, இடத்தந்தம் உடைந்துள்ளது.[22]

கி. பி. 812இல் வெட்டப்பட்டுள்ள மலையடிப்பட்டி சிவன் கோயில் பிள்ளையார் அன்னையர் எழுவரின் காவலராகக் காணப்படுகிறார். சாமுண்டியையடுத்து லலிதாசனத்தில் உள்ள இவ்வலம்புரியாரின் இடக்கைகளுள் முன் கை தொடையின் மீது இருத்தப்பட்டுள்ளது. பின் கையில் கரும்புத் தோகை. வலக் கைகளுள் முன் கை மோதகம் கொண்டுள்ளது. பின் கையில் ஒன்றுமில்லை. தோள், கை வளைகளும்



கழுத்தணிகளும் கரண்டமகுடமும் முப்புரி நூலும் அணிந்துள்ள இவருக்கு இடப்புறத் தந்தம் மட்டுமே உள்ளது.[23]

முகமும் மார்பும் வல முன் கையும் சிதைந்துள்ள மூவரைவென்றான் குடைவரைப் பிள்ளையார் கரண்டமகுடம், உதரபந்தம், உபவீதமாய் முப்புரிநூல், தோள்வளைகள், வளையல்கள் அணிந்து, கிழக்குப் பார்வையாகச் சம்மணத்தில் உள்ளார். பின் கைப் பொருட்களைச் சரியாக அடையாளம் காணமுடியவில்லையெனினும் இடப் பின்கையில் இருப்பதைத் தந்தமாக ஊகிக்கலாம். இடமுன் கை வயிற்றருகே தொடைமேல் இருத்தப்பட்டுள்ளது.[24]


மகிபாலன்பட்டிக் குடைவரைப் பிள்ளையார் ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியினராகலாம். தர்ம கணபதி என்றழைக்கப்படும் இவரது பின் கைகளில் வலப்புறம் பிரம்பு. இடப்புறம் கரும்புத்தோகை. வலம்புரித் துதிக்கையில் மோதகம். சம்மணமிட்டுள்ள இவரது இடமுன் கை தொடைமீதுள்ளது. வல முன் கை உடைந்துள்ளது. வலத் தந்தம் முழுமையாக இருக்க, இடத் தந்தம் உடைந்துள்ளது. தலையில் சிறு மகுடமும் கழுத்தில் கண்டிகையும் கைகளில் தோள்வளைகளும் வளையல்களும் அணிந்துள்ள இவரது மார்பை முப்புரிநூலும் மார்பிற்கும் வயிற்றுக்கும் இடைப்பட்ட பகுதியை உதரபந்தமும் அணிசெய்கின்றன.[25]

குடுமியான் மலைக் குடைவரையின் கருவறைப் புறச் சுவரில் வெட்டப்பட்டிருக்கும் பிள்ளையார் சோழர் காலத்திற்கு முற்பட்டவர் என்பது உறுதியென்றாலும் குடைவரைக் காலத்தவரா என்பதை அறுதியிட்டுக் கூறக்கூடவில்லை. உடைந்த வலத் தந்தமும் வலம்புரியாய் மோதக மேந்தியிருக்கும் துதிக்கையும் கொண்டு லலிதாசனத்தில் எழுந்தருளியிருக்கும் இவரது முன் கைகளுள் வலக்கை மோதகமேந்தியுள்ளது. இடக்கை தொடைமீது இருத்தப்பட்டுள்ளது. பின் கைகளுள் வலப்புறம் தந்தம். இடப்புறம் மலர்[26] வஸ்திர முப்புரிநூலும்[27] அலங்கரிக்கப்பட்ட உதரபந்தமும் தோள் வளைகளும் வளையல்களும் அணிந்துள்ள இவரது தலையில் அழகிய சிறு கரண்டமகுடம்.[28]

பல்லவர், பாண்டியர், முத்தரையர் குடைவரைகளில் காணப்பெறும் காலத்தால் முற்பட்ட இப்பிள்ளையார் வடிவங்களை ஒப்பிட்டு ஆராய்கையில், தமிழ் நாட்டில் பிள்ளையார் வழிபாடு தொடங்கிய இடம் தென்தமிழ் நாடே என்று உறுதியாகக் கூறலாம். தொடக்கத்தில் இரண்டு கைகளுடன் காட்சி தருபவர் (பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, செவல்பட்டி), தொடரும் தோற்றங்களில் நான்கு கைகள் பெற்றுவிடுவதைக் காணமுடிகிறது.

ஆய்விற்கு எடுத்துக் கொண்ட இருபத்தொரு தொல்வடிவங்களுள், பதின்மூன்று, வல முன் கையில் மோதகம் கொண்டுள்ளன. மூன்று வடிவங்களில் இவ்வல முன் கை சிதைந்துள்ளது. செவல்பட்டியாரின் கையிலிருப்பது மோதகமா, பழமா என அறியக்கூடவில்லை. சிராப்பள்ளிக் கீழ்க் குடைவரைப் பிள்ளையாரின் வல முன்கை அருகில் நிற்கும் கணத்தின் தலையைத் தொட்டவாறுள்ளது. காஞ்சிபுரம் ராஜசிம்மேசுவரப் பிள்ளையார் கடகக் கையினராய் இருக்க, வல்லத்துப் பிள்ளையார் வல முன் கையைத் தொடைமீது வைத்துள்ளார். இந்த இருபத்தொரு தொல் வடிவங்களுள், குன்னத்தூர் முதற் குடைவரை சிற்பம் மட்டுமே வல முன்கையை அபயத்தில் நிறுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பிள்ளையாரின் இடக்கை அல்லது இடமுன் கை பெரும்பாலும் வயிற்றருகே (5) அல்லது தொடையில் (10) இருக்குமாறு அமைக்கப்பட்டுள்ளது. திருக்கோளக்குடியாரும் அரிட்டாபட்டியாரும் இக்கையில் தந்தம் பிடித்துள்ளனர். வல்லத்தார் திண்டின் மீது ஊன்றியுள்ளார். கோகர்ணத்தார் இக்கையைக் கடகத்திலிருத்த, காஞ்சிபுரத்தார் முழங்கால் மீது இருத்தியுள்ளார். சிராப்பள்ளியார் வலக்கை போல இடக்கையையும் கணத்தின் தலை தொட்டவாறு அமைத்துள்ளார்.



பின் கைகளில் வலப்புறம் நான்கு வடிவங்கள் தந்தமும், மூன்று வடிவங்கள் பிரம்பும் கொள்ள இரண்டில் கரும்பு உள்ளது. மலர், பாசம், ஏடு ஆகியன மூன்று வடிவங்களில் உள்ளன. வல்லத்தார் வலப்பின் கையைக் கடகத்தில் காட்டக் காஞ்சிபுரத்தார் மட்டுமே பின்னாளில் பிள்ளையார் கைப்பொருளென வரையறுக்கப்பட்டுவிட்ட அங்குசம் கொண்டுள்ளார். அரிட்டாபட்டி, மூவரைவென்றான் பிள்ளையார்களின் வலப்பின் கைப் பொருளை அடையாளம் காணக்கூடவில்லை. மலையடிப்பட்டியிலும் குன்னத்தூர் முதற் குடைவரையிலும் இக் கைகளில் பிள்ளையார் ஏதும் ஏந்தவில்லை.

இடப் பின் கைகளில் ஆறு வடிவங்கள் கரும்புத்தோகை கொள்ள, நான்கு வடிவங்கள் தந்தம் கொண்டுள்ளன. இரண்டின் கைகளில் பாசம், பழம், மலர்மொட்டு, நீலோத்பலம், கரும்பு ஆகிய நான்கும் நான்கு வடிவங்களால் கொள்ளப்பட்டுள்ளன. அரிட்டாபட்டி பிள்ளையாரின் இடப்பின் கைப் பொருளை அடையாளம் காணமுடியவில்லை. குன்னத்தூர் முதற் குடைவரைப் பிள்ளையார் இக்கையில் ஏதும் ஏந்தவில்லை.

இந்த இருபத்தொரு தொல் வடிவங்களுள் சம்மணத்திலிருப்பவை எட்டு. சிறு குழந்தை போல் கால் பரத்தி அமர்ந்திருப்பவை இரண்டு. அர்த்த பத்மாசனத்தில் இருப்பவை இரண்டு. லலிதாசனத்தில் ஆறும், பத்மாசனத்தில் ஒன்றுமிருக்கச் சிராப்பள்ளியார் ஒருவர் மட்டுமே நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். குன்னத்தூர் முதற் குடைவரைச் சிற்பம் இடுப்பிற்குக் கீழ் சிதைவுற்றிருப்பதால் அமர்வு நிலை அறியக்கூடவில்லை.

துதிக்கையை வலம்புரியாகக் கொண்டுள்ள பிள்ளையார்களே இந்த இருபத்தொருவரில் அதிகமாக உள்ளனர்(12). இவர்களுள் குன்றக்குடியார், குன்றாண்டார் கோயிலார் தவிர ஏனைய பதின்மரும் துதிக்கை வாயில் மோதகம் பிடித்துள்ளனர். குன்றாண்டார் கோயிலார் துதிக்கை வலம்புரியாகச் சுருளும் வளைவில் மோதகம் கொண்டுள்ளார். குன்றக்குடியார் துதிக்கையில் மோதகமில்லை. இடம்புரி துதிக்கையர் எழுவர். இவர்களுள் பரங்குன்றத்தார், சிராப்பள்ளியார் தவிர ஏனைய ஐவரும் துதிக்கை வாயில் மோதகம் கொண்டுள்ளனர். மூவரை வென்றான், குன்னத்தூர் முதற் குடைவரைப் பிள்ளையார்கள் சிதைவுற்றிருப்பதால், இவர்தம் துதிக்கை நிலை அறியக்கூடவில்லை. இவ்விருபத்தொருவரில் பதினெட்டுப் பேர் கரண்டமகுடம் பெற, சிறுமகுடம் சூட்டப்பெற்றிருப்பவர். மூவர். கரண்டமகுடத்தார்களுள் செவல்பட்டியாரின் மகுடம் உயரமானது. காஞ்சிப்புரத்தாரின் மகுடம் அலங்காரமானது. மகுடத்தையொட்டிச் சரியும் முடிக்கற்றை குன்னத்தூர் மூன்றாம் குடைவரைப் பிள்ளையாருக்கு காட்டப்பட்டுள்ளது.

முப்புரிநூல் அறுவர் தவிர ஏனைய அனைவர்க்கும் உபவீதமாகவே[29] அமைந்துள்ளது. திருக்கோளக் குடியாரும் வல்லத்தாரும் இதை நிவீதமாக[30] அணிந்துள்ளனர். பிள்ளையார் பட்டியார் மட்டுமே முப்புரிநூலில்லாமல் காட்சிதருகிறார். சிதைவின் காரணமாகக் குன்னத்தூர் முதற் குடைவரைப் பிள்ளையாரும் தேவர்மலைப் பிள்ளையாரும் அணிந்துள்ள முப்புரிநூலின் அமைப்பை அறியக்கூடவில்லை. குன்றாண்டார் கோயில் பிள்ளையாரின் முப்புரிநூல் எங்குமில்லா அதிசயமாக வலத்தோளிலிருந்து இறங்கி இடுப்பின் இடப்புறமாகச் சென்று மறைகிறது.[31] உடலின் மார்புப் பகுதியை வயிற்றுப் பகுதியிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் உதரப்பந்தம் எனும் கச்சை பதினெழுவர்க்குக் காட்டப்பட்டுள்ளது. இவர்களுள் செவல்பட்டி, குடுமியான்மலைப் பிள்ளையார்களின் உதரபந்தங்கள்

நன்கு அலங்கரிக்கப்பட்டுள்ளன. கோகர்ணத்தாரும் வல்லத்தாரும் சிராப்பிள்ளை யாரும் உதரபந்தம் கொள்ளவில்லை. குன்னத்தூர் முதற் குடைவரைப்பிள்ளையார் சிதைவுற்றிருப்பதால் அவர் உதர பந்தம் அணிந்துள்ளாரா என்பதை அறியக்கூடவில்லை.

இப்பிள்ளையார் வடிவங்கள் அனைத்துமே கைகளின் மேற்பகுதியில் தோள்வளைகளும் மணிக்கட்டுப் பகுதியில் வளைகளும் அணிந்துள்ளன. சில வடிவங்களில் இவ்வளைகள் பட்டை வளைக ளாகவும் முத்து வளையல்களாகவும் அமைந்துள்ளன. கழுத்தணிகள் அணிந்திருப்பவை சில வடிவங்களே. அவற்றுள் குறிப்பிடத்தக்கது குன்றக்குடி பிள்ளையார். பெரிய அளவிலான ருத்திராக்கங்களைக் கோர்த்த மாலை இவர் கழுத்தை அணிசெய்கிறது. பரங்குன்றத்தார் மூன்று விதமான கழுத்தணிகளை அணிந்துள்ளார். அவற்றுள் ருத்திராக்க மாலையும் ஒன்று. குன்னத்தூர் மூன்றாம் குடைவரைப் பிள்ளையாரும் ருத்திராக்க மாலை அணிந்துள்ளார். ஜலநாதீசுவரம், சிராப்பள்ளிக் கீழ் குடைவரை, திருக்கோளக்குடிப் பிள்ளையார்கள் சரப்பளி அணிந்துள்ளனர். கண்டிகை எனப்படும் சிறிய அளவிலான ருத்திராக்க மாலைகளை மகிபாலன்பட்டிப் பிள்ளையாரும் ஜலநாதீசுவரும் அணிந்துள்ளனர்.

இவ்விருபத்தொரு பிள்ளையார்களுள் எண்மர் வடக்கு நோக்கியும் அறுவர் கிழக்கு நோக்கியும் நால்வர் மேற்கு நோக்கியும் மூவர் தெற்கு நோக்கியும் எழுந்தருளியுள்ளனர், இப்படித் தொடக்க காலத்தில் நாற்றிசைப் பார்வையும் பெற்றபிள்ளையார், சோழர் காலத்தில் தென்பார்வையும் கிழக்குப்பார்வையும் மட்டுமே பெற்றவராய் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தம்முடைய இரண்டு தந்தங்களுள் ஒன்றைப் பறித்தே பிள்ளையார் பாரதம் எழுதியதாக ஒரு கதையுண்டு. இதை நிறுவுமாறு போலவே அவருடைய தொல்வடிவங்கள் அமைந்துள்ளன. சில சிற்பங்களில் ஒரு தந்தம் முழுமையாகவும் மற்றொரு தந்தம் அறவே இல்லாமலும் உள்ளன. சில சிற்பங்களில் ஒரு தந்தம் முழுமையாகவும் மற்றொரு தந்தம் உடைந்தும் காணப்படுகின்றன.குன்றக்குடி பிள்ளையாருக்கு மட்டுமே இரண்டு தந்தங்களுமே உடைந்துள்ளன. இது சிதைவின் காரணமாக நேர்ந்த அமைவாகலாம். தேவர்மலை, குன்னத்தூர் முதற் குடைவரை, மூவரை வென்றான். ஆகிய இடங்களில் உள்ள பிள்ளையார்கள் சிதைவுற்றிருப்பதால் தந்த நிலை அறியக்கூடவில்லை.

இந்த இருபத்தொரு தொல்வடிவங்களுள் விருந்துத் தட்டும் குடையும் கந்தர்வர் போற்றலுமாய்ப் பெருமையுற அமர்ந்திருப்பவர் காஞ்சிபுரம் ராஜசிம்மேசுவரத்தார் மட்டுமே. திருக்கோளக்குடியாரின் முன் முக்கனிகள். செவல் பட்டியாருக்கு மோதகம் மட்டும். சிராப்பள்ளியாருக்குக் கந்தர்வர் போற்றலும் அடியவர் துணையும் கிடைத்துள்ளன. பரங்குன்றத்தாரின் மேற்புறத்தும் கீழ்புறத்துமுள்ள அலங்கரிப்புகள் குடைவரைக் காலத்தனவாக இல்லாமையின் அவற்றைச் சிறப்புக்குரிய சூழலமைவாகக் கொள்ளக் கூடவில்லை.

பல்லவ பாண்டிய, முத்தரையர் கால இவ்வடிவங்கள் இரண்டரை நூற்றாண்டு கால எல்லையில் [32] பிள்ளையார் தோற்றம் பெற்ற அமைப்பு மாறுதல்களைத் தெளிவாய்ப் படம் பிடிக்கின்றன. இதுபோலவே முற்சோழர் காலப் பிள்ளையார் வடிவங்களையும் ஒப்பிட்டு ஆராயின், பிள்ளையார் வடிவக் கோட்பாடுகள், தீர்மானிக்கப்பட்ட வரையறைகளுக்குள் சிறைப்பட்ட கால ஒழுங்கைச் சரியாகக் கணிப்பது எளிதாகும்.

## குறிப்புகள்


1. இரா. கலைக்கோவன், அத்யந்தகாமம், டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மைய வெளியீடு, ப. 12.
2. இரா. கலைக்கோவன், இராஜசிம்மேசவரம், அச்சிடப் படாத கருத்தரங்கக் கட்டுரை.
3. மு.நளினி, இரா. கலைக்கோவன், ''சிராப்பள்ளிக் கீழ்க்குடை வரை'' வரலாறு 9–10. டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், சிராப்பள்ளி. 1999–2000, பக். 131–179.
4. இரா.கலைக்கோவன், ''வல்லம் குடைவரைகளும் புதிய கல்வெட்டுகளும்'', அமுதசுரபி தீபாவளி மலர் 1994, பக். 169–172.
5. மு.நளினி, இரா. கலைக்கோவன், ''அபராஜித பல்லவரின் கோயில்கள்'', அச்சிடப்படாத கருத்தரங்கக் கட்டுரை.
6. இடக் கரம் தொடை மீது அமைந்துள்ளதென்பார் ஆர். வசந்த கல்யாணி. தமிழகக் கோயில் கல்வெட்டு காசு, ஆர்த்தி பதிப்பகம், சென்னை, 1994.பக். 16.

7. செடியென்று பிழையாகக் குறித்துள்ளார் ஆர். வசந்த கல்யாணி, மேற்படி. பக். 16

8. இரா. கலைக்கோவன், "பிள்ளையார்பட்டிக் குடை வரை" அமுதசுரபி தீபாவளி மலர் 2002, பக்.82–86.

9. இதை லிங்கமென்று பிழையாகக் கூறுவார் மா. சந்திர மூர்த்தி. பிள்ளையார் பட்டி, மணிவாசகர் பதிப்பகம், 1992, பக். 14.

10. "இரண்டு திருக் கைகளுடன் அமைந்த விநாயகர் சிற்பம் இது ஒன்றேயாகும்" என்று தவறாக எழுதியுள்ளார் மா. சந்திரமூர்த்தி. மேற்படி. பக்.15.

11. அர. அகிலா, மு. நளினி, 'குன்றக்குடிக் குடை வரைகளும் கல்வெட்டுக்களும்', வரலாறு –2, பக். 56–106.

12. காஞ்சிபுரத்து இராஜசிம்மேசுவரப் பிள்ளையாரும் ஏறத்தாழ இதே அமர்வில் உள்ளமை இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

13. சீ. கீதா, இரா. கலைக்கோவன், 'செவல்பட்டிக் குடை வரை', வரலாறு – 4, பக். 25–51.

14. மலையக் கோயில் பெரிய குடை வரையையும் இக் காலத்தைச் சேர்ந்ததாகக் கொள்ளமுடியும். இங்கும் பிள்ளையாரின் தொல்வடிவமுள்ளது. இக்குடைவரையை முழுமையான ஆய்வுக்கு உட்படுத்தவில்லையென்பதால் அவ்வடிவம் இவ்வாய்வுக் கட்டுரையில் இடம்பெறவில்லை.

15. மு. நளினி, இரா. கலைக்கோவன், 'கோகர்ணக் குடைவரை', அச்சிடப்படாத கருத்தரங்கக் கட்டுரை.

16. இரா. கலைக்கோவன், 'தேவர்மலைக் குடைவரை', அமுதசுரபி தீபாவளி மலர் 1996, பக். 109–112.

17. மு. நளினி, இரா. கலைக்கோவன், 'திருக்கோளக் குடி குடைவரையும் கற்றளிகளும்' வரலாறு – 6, பக். 134–168.

18. அர. அகிலா, இரா. கலைக்கோவன், 'திருமலைப்புரம் குடைவரை', வரலாறு – 7, பக்., 118–134.

19. இரா. கலைக்கோவன், 'அரிட்டாபட்டி', அச்சிடப்படாத கருத்தரங்கக் கட்டுரை.

20. கோ. வேணிதேவி, இரா. கலைக்கோவன், 'குன்னத்தூர்க் குடைவரைகள்', வரலாறு – 6, பக். 55–72.

21. இக்குடைவரை ஆய்வு 3, 4, 9 1994ல் மேற் கொள்ளப்பட்டது. மதுரை ஆய்வாளர் திருமதி வாணி செங்குட்டுவன் 18.11.2002ல் நேரிடையாகப் பரங்குன்றம் சென்று ஆய்வு மேற்கொண்டு சில ஐயங்களைத் தெளிவாக்கிக் கொள்ள உதவினார்.

22. மு. நளினி, இரா. கலைக்கோவன், 'குன்றாண்டார் கோயில் குடைவரையும் கல்வெட்டுகளும்', அச்சிடப்படாத கருத்தரங்கக் கட்டுரை.

23. மு. நளினி, இரா. கலைக்கோவன், 'மலையடிப்பட்டிக் குடைவரைகளும் கல்வெட்டுகளும்', வரலாறு – 4, பக். 64–115.

24. அர. அகிலா, 'மூவரைவென்றான் குடைவரையும் கல்வெட்டுகளும்', வரலாறு – 4, பக், 43–51.

25. தி. சுமிதா, இரா. கலைக்கோவன், 'மகிபாலன்பட்டிக் குடைவரை', வரலாறு – 6, பக். 82–88.

26. உழுபடை கருவியென்பார் சொ. சாந்தலிங்கம். குடுமியான்மலை, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை, 1981, பக். 23.

27. நன்கு மடிக்கப்பட்ட துணியை முப்புரிநூல்போல் அணிந்திருப்பின் அதை வஸ்திர முப்புரியென்பர்.

28. மு. நளினி, இரா. கலைக்கோவன், 'குடுமியான் மலைக் குடைவரையும் கல்வெட்டுகளும்', அச்சிடப்படாத கருத்தரங்கக் கட்டுரை.

29. உபவீத அணிவில் முப்புரிநூல் இடத்தோளிலிருந்து இறங்கி வலப்புறமாக வயிற்றருகே பின் செல்லும்.

30. நிவீத அணிவில் முப்புரிநூல் இடத்தோளிலிருந்து இறங்கி வலமேற்கை வழியாகப் பின் செல்லும்.

31. சிராப்பள்ளிக் கீழ்க்குடைவரையில் இதுபோல் முப்புரி நூல் அணிந்துள்ள வித்யாதரரையும் பூதகணத்தையும் பார்க்க முடிகிறது. மு. நளினி, இரா. கலைக்கோவன், 'சிராப்பள்ளிக் கீழ்க்குடைவரை', வரலாறு – 9, பக். 156–165. இதையே நிவீத முறை அணிதலாக இன்றைய அந்தணர்கள் கூறுகின்றனர்.

32. செவ்வலூருக்கு அருகிலுள்ள அரளிப்பட்டியில் சிறிய அளவிலான குடைவரையொன்றுள்ளது. இதன் வடசுவர்க் கோட்டத்திலுள்ள லிங்கபாணத்தில் பிள்ளையார் வடிவம் வெட்டப்பட்டுள்ளது. தமிழ் நாட்டுக் குடைவரைகளில் இதுபோன்ற அமைப்பு வேறெங்குமில்லை. இடம்புரியாகச் சம்மணத்தில் உள்ள இப்பிள்ளையாரின் இடமுன் கை வயிற்றிலுள்ளது. உதரபந்தம் அணிந்துள்ளார். வலமுன் கையிலும் பின் கைகளிலுமுள்ள பொருட்களை அடையாளம் காணக்கூடவில்லை. முகம் சிதைந்துள்ளது.

வையாபுரியிலிருந்து ஒன்றரைக் கிலோமீட்டர் தொலைவிலுள்ள பூவாலைக்குடிக் குடைவரைக்கு அருகிலுள்ள பாறைச் சுவரில் தென்பார்வையாய்ப் பிள்ளையார் வடிவம் ஒன்று செதுக்கப்பட்டுள்ளது. கால்கள் பூமியில் புதைந்துள்ளதால் அமர்வுநிலை அறியக்கூடவில்லை. வலம்புரியாக உள்ள துதிக்கையும், முன் கைகளில் வலப்புறம் மோதகமும் இடப்புறம் பாசமும் கொண்டுள்ள இவரது பின் கைகளில் மோதகமும் தந்தமும். வலத்தந்தம் உடைந்துள்ளது.

அரளிப்பட்டி, பூவாலைக்குடிப் பிள்ளையார்களின் காலத்தைக் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியாகக் கொள்ள முடியும். இவ்விரு குடைவரைகளையும் ஆய்வு செய்ய உடனிருந்து உதவியவர் முனைவர் அர. அகிலா.

★ ★ ★



# காணாபத்தியம்

*ஞானசிரோன்மணி சைவப் புலவர் பண்டிதர்*
**ஆர். வடிவேல்**

*ஐந்து கரத்தனை யானை முகத்தனை*
*இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை*
*நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்*
*புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.*

*–திருமந்திரம் –*

இந்து மதத்திற்கு மூலாதாரமாக விளங்குவது ஸ்ரீசங்கரர் அருளிய அறுவகைச் சமயவழிபாடு. அவை சைவம், சாக்தம், வைஷ்ணவம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என்பன.

கணபதி வழிபாட்டையே பிரதானமாகக் கொண்டு அதனையே ஒரு மதப்பிரிவாக ஏற்பதே காணாபத்தியம். கணபதியையே கண்கண்ட தெய்வமாக ஏற்று, பஞ்ச பூதங்களின் பிறப்பிடமாகவும். பிரம்மா, விஷ்ணு, ருத்திர வடிவமாகவும் அனைவருக்கும் முதற் கடவுளாகவுங் கொண்டு வழிபடுவதே காணாபத்தியத்தின் சிறப்பம்சமாகும்.

இந்துக்களில் சிலர் கணபதியையே பரம்பொருளாக வழிபட்டு வருகிறார்கள். இந்த வழிபாட்டிற்கு காணபதம் அல்லது காணாபத்தியம் என்று பெயர். இந்த வழிபாட்டை நடத்துபவர்கள் காணபதர். இவர்கள் கணபதி மூலாதார சக்தி உருவினர் என்றும்; பிரணவம் என்ற ஓங்கார வடிவினரென்றும் அவருடைய துதிக்கை அந்த ஓங்காரத்தையே குறிக்கும் என்றும் கூறுவர்.


பஞ்ச கிருத்தியங்களுக்கும் கர்த்தாக்களாகக் கூறப்படும் பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் ஆகிய ஐந்து மூர்த்திகளும் பிள்ளையாராகிய இவரே என்று கூறுகின்றது காணாபத்தியம்.

காணாபத்தியத்தை மேற்கொள்ளுபவர்கள் கணபதி உபாசனையில் சொல்லும் சுலோகம்


''அவ்யாக்ருத பிரும்மனோ குணேசஸ்ய சரீரே நாபிர் பிரும்மா: முகம் விஷ்ணும்: நேத்ரம் ருத்ர: வாம பார்ச்வம் சக்தி: தக்ஷணம் சூர்ய: ஆத்மா ஸ்மிதாமய:'' என்பதாகும்.

இதன் பொருள் – கணபதியுடைய நாபி பிரும்ம ஸ்வரூபம்: முகம் விஷ்ணு ஸ்வரூபம்: நேந்திரம் சிவ ஸ்வரூபம்: இடப்பக்கம் சக்தி ஸ்வரூபம்: வலப்பாகம் சூரிய ஸ்வரூபம்: என்று மகா கணபதியை உணர்ந்து கொள்வோம்.

சிவபெருமானின் வைகரி வாக்கின் வடிவம் விநாயகர். அதாவது ஒலியின் வடிவம். நால் வகை வாக்கியங்களிலொன்று வைகரி. வைகரி அட்சரங்கள் வெளிப்பட்டுத் - தோன்றாதது. பொருளுடையதாய் கண்டத்திலிருந்து பிறக்கும் நாதம். சிவனுடைய வாக்கே மந்திரம் அதனால் மா கணபதி மந்திரவடிவானவர் என்பர். அவரை ஓங்கார ரூபியாக வழிபடுகிறார்கள். சிவபெருமானின் வைகரி வாக்கியமாகிய ஓங்காரத்தில் உதித்த பரம்பொருளாயிருப்பவர் விநாயகர். ஆதலால் விநாயகர் சிவபெருமானின் கண்டத்திலிருந்து அவதரித்தவர் என்றும் கூறுவார்கள்.



பிள்ளையாருடைய வடிவத்தி லேயே பிரணவ மந்திரத்தின் உருவத்தை காண்கிறார்கள். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனப்படும் பஞ்சபூதங்களால் உருப்பெற்றது இந்த உலகம். இப்பஞ்ச பூதங்களும் முழுமுதற் கடவுளாகிய கணபதியின் உருவத்தில் அடங்கியிருப்பதாகக் கொள்வது காணாபத்தியக் கோட்பாடு.



## திருவுருவ தத்துவம்

காணாபத்தியர் கணபதியின் பெயருக்கும் அவருடைய உறுப்புக்களுக்கும் தத்துவப் பொருள்கள் கூறுவார்கள். கணபதி என்னும் பதத்திலுள்ள "க" என்பது மனோவாக்குகள் ; "ண" என்பது அவற்றைக் கடந்த நிலை. அவ்விரண்டுக்கும் ஈசன் கணேசன்.

சிலர் "க"என்பது அறிவு; "ண" என்பது வீடு; என்று பொருள் கொண்டு கணேசன் அறிவுக்கும் வீட்டுக்கும் உரிய தெய்வம் என்று கூறுவார்கள். வக்ரதுண்டர் என்னும் அவருடைய பெயர் கொடிய மாயையைத் துண்டிப்பவர் என்றும் லம்போதரர் (பெருவயிறர்) என்னும் அவருடைய பெயர் பிரபஞ்சம் முழுவதையும் உண்டு தம்முள் அடக்கிக் கொள்பவர் என்றும் பொருள்படும்.

விநாயகருடைய திருவுருவம் பக்தர்களுடைய மனத்தின் பரிபக்குவத்திற்கேற்ப முப்பத்திரண்டு வகைகளாகப் போற்றி வணங்கப்படுகின்றது. அவையாவன– பால கணபதி, தருண கணபதி, பக்தி கணபதி, வீர கணபதி, சக்தி கணபதி, துவிஜ கணபதி, விஜய கணபதி, நிருத்த கணபதி, ஊர்த்துவ கணபதி, ஏகாட்சர கணபதி, வர கணபதி, திரயாக்ஷர கணபதி, க்ஷிப்ர பிரசாத கணபதி, ஹரித்திரா கணபதி, ஏகதந்த கணபதி, சிருஷ்டி கணபதி, உத்தண்ட கணபதி, ரணமோசன கணபதி, துண்டி கணபதி, சித்தி கணபதி, உச்சிஷ்ட கணபதி, விக்ன கணபதி, க்ஷிப்ர கணபதி, ஏரம்ப கணபதி, மகா கணபதி, துவிமுக கணபதி, மும்முக கணபதி, பஞ்சமுக கணபதி, யோக கணபதி, துர்க்கா கணபதி, சங்கடஹர கணபதி, என்பன.

தேவர்களைத் துன்புறுத்திய கஜமுகாசுரனை அழிக்கப் பரம்பொருளின் சக்தியே யானைத் தலையும், தேவ உடலும், பூதக்கால்களும், ஐந்து கரங்களுங்கொண்ட விநாயகமூர்த்தியாக ஓங்கார நாதத்திலிருந்து அவதரித்தார் என்பது கந்தபுராண அகச்சான்று. தனக்கு மேலான நாயகர் இல்லாத விநாயகரின் வலது பாகம் ஞானசக்தி என்றும், இடப்பாகம் கிரியாசக்தி என்றும் கூறுவர். இதனையே சித்தி, புத்தி என விநாயகரின் சக்திகளாகக் கொள்வார்கள்.

அண்டசராசரங்கள் அனைத்துமாயிருக்கும் அன்னை தந்தையரை வலம் வந்து மாங்கனி பெற்ற வரலாற்று நாயகனாகிய விநாயகரின் ஐந்து திருக்கரங்களில் மேலேயுள்ள வலக்கரம் அங்குசம் ஏந்தியது அது அழித்தற் தொழிலைக் குறிப்பது. பாசமேந்திய கரம் படைத்தற் தொழிலைக் குறிப்பது கீழேயுள்ள ஒடிந்த தந்தத்தை ஏந்திய கரம் காத்தற் தொழிலைக் குறிப்பது. மோதகமேந்திய இடக்கரம் அருளலைக் குறிப்பது. துதிக்கை மறைத்தலை குறிக்கின்றது.

பஞ்சகிருத்தியங்களையும் செய்யும் விநாயகரின் பெருவடிவம், அன்பும் பக்தியும் நிறைந்த மெய்யடியார்களின் சிறு உள்ளத்துள் அடங்கி அருள்புரிகின்றது. யாரறிவார் இந்த அருளாடலை? அவரே அடியவர்க்கு அறியத்தருகின்றார். மூஷிகம் பிள்ளையாருடைய வாகனம். மூஷிகம் சிறியது. மூஷிகவாகனர் பெருவடிவுடையவர். பக்திவயப்பட்ட மெய்யடியார்கள் மூஷிகமாயிருந்து மூஷிகவாகனராகிய பிள்ளையாரை மனத்திலே வைத்துச் சுமக்கின்ற திருவுருவ தத்துவத்தை ஆலயத் திருவிழாக்களில் நமக்கு உணர்த்துகிறார் விநாயகர்.



தெய்வத் திருவுருவங்களை வடித்துத்தரும் சிற்பிகளும் ஓவியர்களும் பிள்ளையார் ஒரு காலை மடக்கி இன்னோரு காலை உயர்த்தி ஆசனத்தில் அமர்ந்திருக்கும் வடிவத்தை அமைத்துத் தருகிறார்கள். பிள்ளையாருடைய இந்தத் தோற்றம் இம்மையில் உலக துன்பங்களையும் மறுமையின் உயர்ந்த இன்பங்களையும் சமமாக மதித்து ஈடுசெய்வதைக் காட்டுகின்றது. இரு கால்களுக்கும் இடையே தோன்றும் பெரு வயிற்றுக்கு நடுவே சிந்தனையை ஆடாமல் அசங்காமல் சம நிலைப்படுத்தும் யோக நிலையை இதன்மூலம் அவர் உணர்த்துகின்றார். இந்த உலகில் பெறும் அனுபவங்களில் ஊன்றி நிற்பதன் மூலந்தான் மறு உலகில் இணையில்லாத இன்பத்தை அடைய மனதை உயர்த்த முடியும் என்பதை ஊன்றிய காலும், உயர்த்திய காலும் காட்டுகின்றது.

### விநாயக வழிப்பாட்டு வியாபகம்

காணாபத்தியத்திற்கு ஆதாரமான நூல்கள் கணபதி உபநிடதம், ஹேரம்ப உபநிடதம் என்ற இரு சிறு உபநிடதங்கள் கணேச புராணம், ஸ்காந்தத்திலுள்ள கணேசமான்மியம், முத்தலை புராணம் என்பனவும், கணேச கீதை, கணேச தந்திரம், கணேச கல்பம், விநாயக பரத்துவம் முதலிய தனி நூல்களும் ஆகும். விநாயக புராணத்தை திருவாவடுதுறைக் கச்சியப்ப முனிவர் தமிழில் பாடியிருக்கிறார்.

காணாபத்தியம் என்ற தனிவழிபாடு ஒருபுறமிருக்க, பொதுவாக இந்து மக்கள் அனைவரும் தொழும் தெய்வங்களுள் கணபதியே முதலிடம் பெறுவார். அவருக்கு நடப்பதே முதற்பூசை கணேசனே முழுமுதற் கடவுளாக எல்லாத் தெய்வ பூஜைகளிலும் விளங்குகின்றார். கணங்களுக்கெல்லாம் நாயகரான அவரது துணையையே நாம் நற்காரியங்கள் எதனைத் தொடங்கினாலும் முதலில் நாடுகிறோம். ஆற்றங்கரையானாலும், குளக்கரையானாலும், வீதியானாலும், அரசமரமானாலும், ஆலமரமானாலும், குடிசையானாலும், கூரையில்லாத கோயிலானாலும் அங்கங்கே எழுந்தருளியிருந்து அருள் பாலிக்கும் பெருமை அவருக்குண்டு.

இந்தியாவில் சிறந்த விஷ்ணுத்தலமாகிய ஸ்ரீரங்கத்தில் விக்கின கணபதி என்றும், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாள் கோவிலில் வெண்ணெய்ப் பிள்ளையார் என்றும், அழகர் கோவிலில் தும்பிக்கை ஆழ்வார் என்றும் பிள்ளையார் வழிபாடு வைஷ்ணவர்களாலும் நடைபெறுகின்றது. சமணர்களும், பௌத்தர்களும் கணபதியை வணங்குகிறார்கள்.

இந்தியாவைத் தவிர நேப்பாளம், திபெத், பர்மா, சீனா, ஜப்பான், மங்கோலியா, இலங்கை, தாய்லாந்து, கம்போடியா, ஜாவா ஆகிய நாடுகளிலும் விநாயக வழிபாடு நடைபெற்று வந்துள்ளது.

விநாயகரை வழிபட்டபின்பே அன்னை பராசக்தி பண்டாசுரனைப் போரிலே வென்றாள். விநாயகரை வழிபட்டபின்பே சிவபெருமான் திரிபுரதகனம் செய்தார். விநாயகரை வழிபட்டபின்பே வள்ளியை முருகன் திருமணம் செய்தார். வேதவியாசர் மகாபாரதக் காவியத்தை இடையூறின்றி இயற்ற விநாயக வழிபாடு செய்து அவரைக் கொண்டே எழுதுவித்தார். ஔவையார் திருக்கயிலை செல்ல விநாயகரே அருள் புரிந்தார். இவையெல்லாம் புராண வரலாறுகள்.

இராவணனுடைய கர்வத்தை அடக்கி அவன் இலங்கைக்குக் கொண்டு செல்லவிருந்த சிவலிங்கத்தை கோகர்ணத்தில் நிலைக்கச் செய்தவர் பிள்ளையார். விபீஷணன் இராமபிரானிடமிருந்து பரிசாகப் பெற்ற ரங்கநாதரின் திருவுருவச் சிலையை ஸ்ரீரங்கத்தில் நிலைக்கச் செய்தவர் பிள்ளையார். அகத்தியருடைய கமண்டலத்திலிருந்து காவிரி தீர்த்தத்தைப் பெருகச்

செய்தவர் பிள்ளையார். நம்பியாண்டார் நம்பிக்கு அருள் புரிந்து தில்லையிலிருந்த தேவாரத் திருமுறைகளை வெளியுலகத்திற்குக் கொண்டுவந்தவர் பிள்ளையார். இவையெல்லாம் இதிகாச வரலாறுகள்.

## வழிபாடு

இறை வழிபாட்டில் பலவகையுண்டு. சாஸ்திர ரீதியாகவும், அனுபவ ரீதியாகவும் பல முறைகள் வழக்கில் இருந்து வருகின்றன. பஞ்சாயதன பூஜை



என்பது ஒருவகை வழிபாடு. இதில் பஞ்சமூர்த்திகளை ஒரே சமயத்தில் வழிபடுகிறோம். கணபதி, விஷ்ணு, உருத்திரன், பராசக்தி, சூரியன் ஆகியோரை ஏக காலத்தில் பூஜிப்பது பஞ்சாயதன பூஜை. வழிபடுபவர்கள் ஒவ்வொருவருக்கும் உபாசனா மூர்த்தி எதுவோ அதைப் பீடத்தில் நடுநாயகமாக வைத்துப் பூஜை செய்வார்கள். பஞ்சாயதன ஆராதனையில் மூர்த்திகளை விக்கிரக உருவில் அமைப்பதில்லை. ஒவ்வொன்றுக்கும் ஒரு சின்னம் உபயோகமாகின்றது. கணபதிக்கு சோணா பத்திரமும், விஷ்ணுவுக்கு சாளக்கிராமமும், சூரியனுக்கு ஸ்படிகமும், பராசக்திக்கு அம்பிகம் என்னும் ஸ்வர்ணக் கல்லும், சிவனுக்கு பாணலிங்கமும் இடம்பெறுகின்றன. காணாபத்தியக் கோட்பாட்டின்படி பஞ்சாயதன பூசையில் பிரதானமாகவுள்ள மூர்த்திகளையெல்லாம் தம்முள் தாங்கியவராய் நடுநாயகமாயிருப்பவர் மகா கணபதி.

கடவுளின் உருவத்தை அமைக்க கல், மரம், செம்பு, மண் என்பவற்றை பயன்படுத்தலாமென்று ஆகமங்கள் கூறுகின்றன. விநாயகரைப் பூஜை செய்வதற்கு மஞ்சள், கல், செம்பு, பளிங்கு, முத்து, பவளம், யானைத் தந்தம், வெள்ளெருக்குவேர், அத்திமரம், அரைத்த சந்தணம், வெண்ணீறு, சர்க்கரை, பசுச்சாணி என்பவைகளால் பிள்ளையாரை அமைக்கலாம். விநாயக சதுர்த்தியன்று பசுவின் சாணி, மஞ்சள், புற்று மண் என்பவற்றால் பிள்ளையார் செய்து வழிபடுவது வழக்கிலிருந்து வருகின்றது. விநாயக வழிபாட்டின் போது கும்பத்திலும் கூர்ச்சத்திலும், ஹோம அக்கினியிலும் விநாயகரை ஆவாகனம் செய்து வழிபடுவதுமுண்டு.

## கணபதி பூசைக்கு உகந்தவை

அறுகம்புல், வன்னி பத்திரம், மந்தாரைப்பூ, ஆகியவை சிறந்தவை. தாளம்பூ, துளசி என்பனவற்றால் விநாயகரைப் பூசை செய்தலாகாது. சிவபூசைக்குரிய எல்லாப் பத்திர புஷ்பங்களும் விநாயக வழிபாட்டுக்கு உகந்தவை.

பிள்ளையாருக்கு உகந்த நிவேதனப் பொருட்கள் தேங்காய், வெல்லம், எள்ளுருண்டை, அப்பம், அவல், வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கிழங்கு வகைகள், பயறு வகைகள் முதலியன.


## விரதங்கள்

விநாயகப் பெருமானுக்குரிய விரதங்களில் ஆவணி மாதம் சுக்கிலபட்ச நான்காம் நாளாகிய சதுர்த்தி மிகவும் சிறப்பானது. இந்நாளில் தான் விநாயகர் அவதரித்ததாகவும் கணங்களுக்குத் தலைவரானதாகவும் கூறப்படுகின்றது.

வெள்ளிக்கிழமை விரதம் – வைகாசி மாதத்து சுக்கில பட்ச முதற்சுக்கிரவாரம் தொடங்கி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தவறாது அனுட்டிக்கப்படுவது.

குமாரசஷ்டி விரதம் – கார்த்திகை மாதம் கிருஷ்ணபட்சப் பிரதமை முதல் மார்கழி மாதம் சுக்கில பட்ச சஷ்டி திதிவரையில் இருபத்தொரு நாள் அனுஷ்டிப்பது.

சங்கடஹர சதுர்த்தி – மாசிமாதம் தேய்ப்பிறையில் செவ்வாய்க்கிழமையோடு வரும் சதுர்த்தியில் தொடங்கி ஓராண்டு விதிப்படி அனுட்டிக்கப்படுவது.



கணபதியை வழிபடுவ்தற்கு மிகவும் முக்கியமானது சதுர்த்தி வழிபாடு. இது சுக்கில சதுர்த்தியென்றும், கிருஷ்ணசதுர்த்தியென்றும் மாதம் இரண்டு முறை வரும். சுக்கில பட்ச சதுர்த்தியில் பகல் பூசையும் விரதமும் விசேஷம். கிருஷ்ண பட்ச சதுர்த்தியில் இரவு பூசையும் விரதமும் விசேஷமானது.

## சுஷுப்தி தத்துவம்

கணபதியின் சந்நிதியை அடைந்ததும் நாம் நெற்றியின் இருபக்கக் கன்னங்களிலும் குட்டிக் கொண்டு, தோப்புக் கரணம் போடுகிறோம். இது கணபதி வழிபாட்டுக்கு மாத்திரமே சிறப்பாக உரியது. ஏனைய தெய்வங்களுக்கு உரியதல்ல.

நமது மூலாதாரத்தில் குண்டலினி சக்தியாக உள்ளவர் கணபதியே என்பதை எடுத்துக் காட்டுவதே இந்த இரு வழிபாடுகளிலுமுள்ள முக்கியமான தத்துவமாகும். நெற்றியில் குட்டிக் கொள்வது அங்கே உள்ளடங்கியிருக்கும் அமிர்த கலசத்தை எழச் செய்து அதிலுள்ள அமிர்தம் தேகம் முழுவதும் பரவச் செய்வதற்காகவேயாகும்.தோப்புக் கரணம் போடுவது மூலாதாரத்திலுள்ள குண்டலினி சக்தியை சுஷூப்னா நாடிவழியாக தட்டி எழுப்புவதற்காகவேயாகும். இந்த சுஷூப்னா நாடி, அமிர்த கலசம் இரண்டிலுமிருந்து பூரணபலன் பெறுவதே இந்த வழிபாட்டின் நோக்கமாகும்.

விநாயகருக்கு முன் காதுகளைப்பிடித்து, நெற்றியில் குட்டிக் கொண்டு தோப்புக்கரணம் போடுவதற்கு இப்படியும் பொருள் கொள்ளலாம். அதாவது எவ்வளவு உயர்ந்த கௌரவமுள்ள மனிதனானாலும் சிந்தையைக் கட்டுப்படுத்தி வாழ்க்கையில் பணிவுடன் இருக்க வேண்டுமென்பதை இந்த வணக்கம் அடையாளமாகக் காட்டுகிறது. அகங்காரமடங்கி பணிவுவரத் தோப்புக்கரணம் போடவைக்கும் முறை இந்த அடிப்படையில் ஏற்பட்டதாகவும் கொள்ளலாம்.

## பிள்ளையார் சுழி

கணபதி உடல்பலத்திற்கும் ஞானச் செழுமைக்கும் அடையாளமான கடவுள். எந்தக் காரியத்துக்கும் இவை இரண்டும் தேவை. அதனாலேயே எந்தக் காரியத்தையும் தொடங்குவதற்கு முன் அவரை முதலில் வணங்குகிறோம். எழுதும் போது பிள்ளையார் சுழி போடுகிறோம். வேத மந்திரங்களின் முதலெழுத்தாகப் பிரணவம் அமைவது போல் எல்லாக் காரியங்களுக்கும் கணபதியை முதலில் வழிபடும் மரபைச் சைவ உலகம் கடைப்பிடித்து வருகின்றது.

ஊமை எழுத்தொடு பேதம் எழுத்துறில்
ஆமை அகத்தினில் அஞ்சும் அடங்கிடும்
ஓமயமுற்றது உள்ளொளி பெற்றது
நாமயமற்றது நாமறியோமே —திருமந்திரம்—

ஊமை எழுத்தென்பது பேசா எழுத்து. அஃதாவது "ம்" பேசும் எழுத்து அகரம் – உகரம். அகர உகரங்கள் மகரத்தோடு சேரும் போது "ஓம்" என்றாகும் (அ – உ – ம்)= ஓம். இது பிரணவம். அகரம்–சிவம், உகரம்–சக்தி. ஒலிவடிவமாகிய பிரணவத்திலிருந்து தோன்றியவர் விநாயகர். "முந்தை வேத முதலெழுத்தாகிய எந்தை"

என்பது கந்தபுராண அகச் சான்று. எனவே பிரணவ சொரூபியாயிருப்பவர் விநாயகர்.

வேத மந்திரங்கள் முதலில் "ஓம்" என்று தொடங்குகிறது. இந்தப் பிரணவம் விநாயகரின் சொரூபமாதலை அவரது திருமுகம் உணர்த்துகின்றது. பிரணவத்தின் முதலாம், இரண்டாம் எழுத்துக்களாகிய அகர, உகரங்கள் நட்சத்திரவடிவின. அகரம்–ழ், உகரம்–ழ், இ, இவை பேசும் எழுத்து பேசா எழுத்து தண்டவடிவு. (........)

சிவமும் (அகரம்), சக்தியும் (உகரம்) நெருப்பும் சூடும் போல அத்துவிதமாய், சைதன்னிய மயமாய் பிரிப்பின்றியிருக்கும். நட்சத்திரவடிவோடு, தண்டவடிவு சேரும் போது உ என்னும் எழுத்து நாத விந்துக்களின் வரிவடிவாகி மூலமனு எனப்படும் பிள்ளையார் சுழியாய் அமைவதாகக் காமிகாகமம் கூறுகின்றது.

ஆமை ஐந்து உறுப்புக்களையும் தன்னுள் அடக்கிக் கொள்வது போல "ஓம்" என்னும் பிரணவத்துள் சிவமும், சக்தியும், விநாயகரும் அடங்குவதால் மூவரையும் (உ) பிள்ளையார் சுழி உணர்த்துகின்றது.

கஜாநநம்.............................. பாதபங்கஜம்.
கஜா நநம் பூத கணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பூ பலஸார பக்ஷிதம்
உமாசுதம் சோக வினாச காரணம்
நமாமி விக்னேச்வர பாதபங்கஜம்.

# மலர்கள், பழங்கள், தேங்காய்

ஆலயங்களுக்குச் செல்லும் போது மலர்கள், பழங்கள் ஆகியவற்றை எடுத்துப் போவது தேங்காயை எடுத்துச் சென்று உடைப்பது யாவும் நமது வாழ்க்கையைத்தான் பிரதிபலிக்கின்றன. மலர் என்பது வாழ்க்கையின் மலர்ச்சி. அது குவிந்து காயாகி கனியாகிறது. அது வாழ்க்கையின் முழுமை. நமக்கு இறைவன் கொடுத்த இந்த இன்பங்களை இறைவனுக்கே அர்ப்பணித்து மகிழ்கிறோம். அதுவே பூஜாதிரவியங்களாக நம்முடன் ஆலயத்துக்கு வருகின்றன. தேங்காய் என்பது வெளியே அழகான வழுவழுப்பான மேற்தோல்; ஆனால் உள்ளே அவ்வளவும் பிசிறு பிடித்த தேங்காய் நார். அதே போல் நமது உடல் பார்க்க அழகாக இருக்கிறது; ஆனால் உள்ளே எண்ணங்களில் எத்தனை அழுக்கு? தேங்காயை நார் உரித்து எடுத்துச் செல்லுவதைப் போல, கோயிலுக்குச் செல்லும்போது இந்த எண்ண அழுக்குகளைப் பின்னால் விட்டுச் செல்லுகிறோம். ஆயினும் துளிபாக்கி இருக்கிறது; தேங்காயில் குடுமியை நாம் பாக்கிவிட்டு வைப்பதைப் போல் மூன்று முறை வலம் வந்து முடிவில் கருவறைக்குள் உள்ள இறை உருவத்தைத் தரிசிக்கிறோம். அங்கே குருக்கள் கற்பூரம் ஏற்ற அந்தத் தெய்வ உருவத்தை நாம் தரிசிக்க முடிகிறது. பக்தி அதே போல வாழ்க்கையில் படிப்படியாக முன்னேறி நாம் நம்மையே உணர முற்படுகிறோம். அப்போது குருநாதர் வந்து நமக்கு வழிகாட்டுகிறார். வித்யா மூலம் நாம் இறை உணர்வைப் பெற உதவுகிறது. ஞானதீபம் கடவுளை நமக்கு அடையாளம் காட்டுகிறது. குருநாதர் ஞானப்பார்வையை அளித்து மூன்றாவது கண்ணைத் திறக்கிறார். அதேபோல குருக்கள் மூன்றுகண் உள்ள தேங்காயை உடைக்கிறார்.

ஆசைகளும் பற்றுகளும் நீங்கிய நமது உள்ளத்தை இறைவனுக்கு அர்ப்பணிக்கிறோம். அதேபோல உடைந்த தேங்காய், சத்தான நீரும் பருப்புமாக இறைவனுக்கு நைவேத்தியம் ஆகிறது போல நமது வாசனைகளும் வெளியேறி விடுகின்றன.

கற்பூரம் என்பது என்ன? அபூர்வமானதோர் மணம் உறைந்திருப்பதுதானே? அதைக் கொளுத்தினால் ஒளி பெருக்கி, வாசனையைப் பரப்பி அது தன்னையே அழித்துக் கொள்கிறது. அதேபோல நம்முடைய எண்ண வாசனைகள் நிறைந்த உடலை இறைவனுக்குரிய பணிக்கு அர்ப்பணிக்கும் போது, அது தனக்குரிய தொண்டுகளை நிறைவேற்றி, உலக வாழ்க்கையிலிருந்து விடைபெற்றுக் கொள்ளுகிறது. அந்தத் தெய்வீகப் பணியில் நமது வாழ்க்கை ஒளி ஜோதிமயமாக ஒளிபரப்புகிறது. நமது அகந்தை, ஆணவம் ஆகிய யாவும் கற்பூரம் கரைந்து மறைவதைப் போல, உருத் தெரியாமல் மறைந்து போகின்றன.

உ



# விநாயகர் வழிபாட்டு மரபுகள்

- 卐 ஆனைமுகனும் அறுகம்புல் வழிபாடும்
- 卐 குட்டிக் கொள்ளல்
- 卐 தோப்புக்கரணம்
- 卐 விநாயகர் விரதங்கள்
- 卐 அறுகும் வன்னியும்



# ஆனைமுகனும் அறுகம்புல் வழிபாடும்


**கலாநிதி சபா ஜெயராசா**
(யாழ் பல்கலைக் கழகம்)

இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் எழுந்தருளியிருக்கும் செம்பொன் மணி நிலத்தில், மாரி தவழுங் காலங்களில் மரகதப் பச்சை விரிப்பாக அறுகம்புல் படர்ந்து வளர்ந்து பரவிச் செழித்திருக்கும். அறுகம்புல்லின் மகிமை புராணங்களிலே சிறப்பாக விநாயக புராணத்திலே விதந்து உரைக்கப் பட்டுள்ளமையை யாவரும் அறிவர்.

பார்க்கவ புராணத்திலே ஆனைமுகக் கடவுளுடைய பெருமை மிகவும் விரிவாக விளக்கப் பெற்றுள்ளது. பார்க்கவ புராணம் பிருகு முனிவரால் வழங்கப்பெற்றது. பிருகு முனிவர், இப் புராணம் யாவருக்கும் பயன்பட வேண்டும் என்னும் இலட்சியத்தோடு உபாசனா காண்டம், லீலா காண்டம் என்னும் இரண்டு காண்டங்களாக அமைத்து. அவற்றை இருநூற்றைம்பது பிரிவுகளாக்கிப் பன்னிரண்டாயிரஞ் சுலோகங்களால் ஒரு புராணமாக்கினார்.


முதலாவது உபாசனா காண்டத்தில் அறுகம் புல்லின் பெருமை விதந்து உரைக்கப்பட்டுள்ளது. நறுமணமுடைய பலவகையான மலர்கள் இருக்கவும், அறுகினால் நான்முகனை ஏன் வழிபட வேண்டும் என்பதை விளக்க, அவந்தி பட்டணத்திலுள்ள சுபலன் என்னும் பெயருடைய ஓர் அரசனுடைய கதை கூறப்படுகிறது. சுபலனுடைய மனைவியின் பெயர் சுபத்திரை. அவர்களைத் தேடி வந்த அந்தணனுடைய பெயர் மதுசூதன். அம்மூவரையும் அடியொற்றி அவர்கள் இயற்றிய செயல்களால் அறுகின் பெருமை உரைக்கப்படுகின்றது. மேலும், அனலாசுரனை அழித்த ஆனைமுகக் கடவுளின் வெப்பம் தண்ணெனக் குளிரும் வண்ணம் எண்பதாயிரம் முனிவர்கள் அங்கு வந்து ஒவ்வொருவரும் இருபத்தோரறுகுகளை முடிமுதல் அடிவரை சொரிந்தார்கள் என்பதும் விநாயக புராணத்திலே எடுத்துரைக்கப் பெறுகின்றது.

சனக மன்னனுடைய பசு அறிவைப் போக்கிப் பதியறிவைக் கொடுத்து ஆட்கொண்ட நிகழ்ச்சியிலும் அறுகின் பெருமை விளக்கப்பட்டுள்ளது. ஒரு புல்லுக்கு நிகராகுமா குபேரனுடைய செல்வம்; என்று கூறுமளவுக்கு அறுகின் நிறைகோல் ஏறிய வரலாறு உண்டு. "ஆனைமுகக் கடவுளினுடைய திருவடிகளிலே சேர்க்கும் அறுகுக்கு இந்திரன் முதலானவர்களுடைய செல்வமும் ஒப்பாகாது." என்பது விநாயக புராணம் விளக்கும் உண்மை.



புராணங்கள் சாதாரண மக்களுக்கு நல்லறிவூட்டும் அறிவுக் கருவூலங்கள் என்று கொள்ளப்படும் பொழுது, புராணங்களின் இலக்கியப் பண்பில் உட்பொதிந்து காணப்படும் படிமவாக்கங்களும், குறியீட்டுப் பண்புகளும் ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்க்கின்றன. அறுகு என்பது சாதாரணமாகத் தரையிலே படரும் ஒரு புல் என்ற எளிமை ததும்பிய படிமவாக்கம் வாமனாவதாரம் போன்ற செயல் வீச்சுடன் இணையும் வண்ணம் அமைக்கப் பெற்றிருத்தல் குறிப்பிடத்தக்கது.

சிறியன என்று கருதப்படுபவை விந்தை மிகு அணுவின் அடக்கமாய் ஆற்றலாய் ஒளிர்விடும் புனைவிலே சாமானியர்களின் பெருமை உணர்த்தப்படுதல் நினைவுக்குரியது.



# குட்டிக் கொள்ளல்

**திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்**

முனிவர்களுள் முதல்வராகிய அகத்திய முனிவர் சிவபெருமானிடம் இருந்த காவிரி நதியைக் கமண்டலத்தில் அடக்கிக் கொண்டு தென்திசை நோக்கி வருவாராய் குடகு மலையில் சிவபூசை செய்து கொண்டு இருந்தார்.

அப்போது இந்திரன் சீகாழியில் பூசை செய்து கொண்டிருந்தான். மழையின்றி நந்தவனம் வாடியது.

நாரத முனிவர் இந்திரனைப் பார்த்து "அகத்தியருடைய கமண்டலத்திலுள்ள காவிரி பெருகுமானால் உன் பூங்கா பொலிவு பெறும்," என்று கூறினார்.

இந்திரன் விநாயகரை வழிபட்டு வேண்டிக் கொண்டான். விநாயக மூர்த்தி காக்கை வடிவுடன் சென்று காவிரியடங்கிய கமண்டலத்தின் மீது அமர்ந்தார். அகத்தியர் காகத்தை கரத்தால் ஒட்டினார். காகம் உந்திப் பறந்தது. கமண்டலம் கவிழ்ந்து காவிரி பெருக்கெடுத்து ஓடியது.

அகத்தியர் காகத்தின் மீது சீறிப்பாய்ந்தார். அது அந்தணச் சிறுவனாகி நின்றது. அச்சிறுவனை இரு கரங்களாலும் குட்டும் பொருட்டு குறுமுனி ஓடினார். பிள்ளையார் அவருக்கு அகப்படாமல் அங்கும் இங்குமாக ஓடினார். அகத்தியர் அச்சிறுவனை அணுகிக் குட்டுவதற்கு இரு கரங்களையும் ஓங்கினார். ஐங்கரங்களுடன் - விநாயகர் காட்சி தந்தருளினார் அகத்தியர் திகைத்து நடு நடுங்கினார்.

"ஓங்காரப் பொருளே!" வேத வித்தகனே! உன்னைச் சிறியேன் அறியேனாகிக் குட்டுவதற்குக் கையை ஓங்கினேனே. என்னே என் சிறுமதி "என்று தன் சென்னியிலேயே குட்டிக் கொண்டார். விநாயகர் அவருடைய கரங்களைப் பற்றிக் கருணை புரிந்தார்." "இன்று முதல் நம் திருமுன் பய பக்தியுடன் சென்னியில் குட்டிக் கொண்டோர் கூரிய மதியும், சீரிய நிதியும் பெறுவார்கள் " என்று வரமளித்தருளினார். இதனால், விநாயகரின் திருமுன் அடியார்கள் சிரத்தில், குட்டிக் கொள்ளும் மரபு உண்டாயிற்று.

## தேங்காய் உடைப்பதன் காரணம்



தேங்காய் உடைப்பதன் காரணம், தேங்காய்க்கு மேலே உள்ள பச்சை மட்டை மாயா மலம், உரித்து எடுக்கின்ற நார்கள் கன்ம மலம், உடைத்து எடுக்கின்ற ஓடு ஆணவ மலம். இந்த மூன்றும் நீங்கினால் வெண்மையான பருப்பு வெளிப்படுகின்றது. இறைவனிடத்தில் "மும்மலத்தை நீக்கி சுத்த, சத்துவ, சித்தத்தை அருள வேண்டு"மென்று குறிப்பிடுவதே தேங்காய் உடைப்பதன் உட் பொருளாகும்.

**- வாரியார் சுவாமிகள்**



# தோப்புக்கரணம்

— பிரம்ம ஸ்ரீ வேதாகமமாமணி —
**சோ. இரவிச்சந்திரக் குருக்கள்**


நமது உள்ளங்காலிருந்து தலையுச்சிவரை அநேகம் நரம்புக் கற்றைகள் உள்ளன. நாம் சுறு சுறுப்பாக அடிக்கடி உட்கார்ந்து எழுந்திருந்தால் (தோப்புக்கரணத்தால்) அந்த நரம்புக் கற்றைகள் சுருங்கிச் சோர்வடையாமல், இரத்தம் நன்கு பாய்ந்து மூளைக்கு பலம் கொடுக்கும். அந்த இரத்தம் மூளைக்குச் சென்றால், மனதில் சாந்தமான நினைவுகள் மலரும்.

நாம் தோப்புக்கரணம் போடும் போது உடல் அசைவில் சுஷீம்னா என்ற நாடி, தட்டி எழுப்பப்படுகிறது. இரு கரங்களில் நெற்றிப் பொட்டுக்களில் குட்டிக் கொள்ளும் போது ஸஷஸ்ராரம் என்ற இடத்திலிருந்து யோகிகளுக்கு அமிர்தம் சிந்தும், விநாயக உபாஸனையின் மூலம் சுஷீம்னா நாடி, அமிர்தகலசம் இரண்டும் ஒருங்கே இயங்குவதால் பூரண பலன்களை அடைய முடிகிறது என்பர்.

எந்தத் தேவதையை வணங்கத் தொடங்கினாலும், முதல் விநாயகரை தியானித்து சுக்லாம் பரதரம் என்ற ஸ்துதியை கூறி நெற்றியில் குட்டிக் கொண்ட பின்னரே வணங்க வேண்டும். இவ்வாறு குட்டிக் கொள்வதால் ப்ரம்மரந்த்ரத்தில் அமிர்தம் பெருகி நாடிகளில் பாய்ந்து உபாசகர்களுக்கு சோம்பல் முதலிய அவகுணங்களை விரட்டி நல்ல மனநிலையை அளிக்கிறது.

மூலக்கனல் என்று சொல்லப்படுவதே சுஷீம்னா நாடி. இது மனித சரீரத்தில் அடி வயிற்றின் கீழ் ஓங்கார ரூபத்தில் அமைந்து செயலாற்றுகிறது. இதைத் தட்டிச் செயல்படுத்தி மேல் நோக்கி ஸஷஸ்ரார மண்டலம் வரை செலுத்தி சிரஸிலிருக்கும் அமிர்தத்துடன் கலந்து அவ்விடமே அதை நிலைநிறுத்திக் கொண்டால் மனிதன் தன் நிலை மறந்து ப்ரும்மத்துடன் ஐக்கியப்பட்டு நிற்பான். பேரானந்தத்தைக் காண்பான். இந்த நாடியைச் செயற்படுத்துவதற்கு – தட்டி எழுப்புவதற்கு மூலாதாரத்தில் அளவில்லாத உஷ்ணத்தை உண்டு பண்ணவேண்டும். அதற்கு மனத்தை ஒரே நிலையில் ஐக்கியப் படுத்தி, நெடுங்காலம் ஜபதபங்கள் புரிய வேண்டும். அதிக உஷ்ணமான பொருட்களை உபயோகித்து-பூஜை முதலியன புரிதல் மறைமுகமாக யோகத்தீமூட்டு என்று உணர்த்தவேயாகும்.

மூலாதாரத்திலுள்ள சுஷம்னா நாடிகணபதி என்பதாலே நமது ரிஷிகள், சாஸ்திர விற்பனர்கள் ஆகியோர் தாவர வர்க்கத்திலேயே மிக மிக உஷ்ணமான அறுகம் புல் வெள்ளெருக்கு, வன்னிப்பத்திரம் ஆகியவை கணபதி பூசைக்கு உகந்தவை எனக் கூறியிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நெற்றிப் பொட்டில் குட்டிக் கொண்டு தோப்புக்கரணம் போடுவதையும் விநாயக வழிபாடு மரபாக அமைத்துள்ளார்கள்.



# விநாயகர் விரதங்கள்

எஸ்ஸாரெம்

விநாயகப் பெருமானுக்குரிய விரதங்கள் நான்கு. ஒவ்வொரு வாரத்திலும் வரும் வெள்ளிக்கிழமையும் (சுக்கிரவாரம்), ஒவ்வொரு மாதத்திலும் வரும் வளர்பிறைச் சதுர்த்தியும் தேய்பிறைச் சதுர்த்தியும் (சங்கட ஹர சதுர்த்தி) விநாயக சஷ்டியுமே அவை. சிறப்பாக ஆவணி மாத வளர்பிறையில் வரும் சதுர்த்தியையே, மக்கள் விநாயக சதுர்த்தி எனக் கொண்டாடுகின்றனர்.

மிகப் பழங்காலத்தில், ஆவணித் திங்களை முதல் மாதமாகக் கொண்டு மாதங்களைக் கணித்தல் பழக்கத்தில் இருந்திருக்கிறது. ஞாயிற்றுக்கிழமைக் குரியது சிங்க ஓரை (சிம்ம இலக்கினம்) என்றும், அதற்குரிய திங்கள் ஆவணி ஆதலின், ஆவணி தொடங்கி மாதங்களைக் கணக்கிடுதல் ஒரு முறை என்றும் பண்டையோர் கொண்டிருந்தனர்.

இந்த ஆவணி வளர்பிறைச் சதுர்த்தியே விநாயகர் அவதரித்த நாளாகும் என்பர். ஒரு சமயம் உமாதேவியார் விநாயகர் மந்திரமாகிய ஏகாக்ஷரத்தை உபதேசமாகக் கேட்டுப் பிள்ளையாரை உபாசித்து வந்தார். விநாயகர் ஆறு திருக்கரங்களோடும், யானை முகத்தோடும் வெண்ணிறமான குழந்தையாகப் பாலசந்திர விநாயகர் என்ற திருப்பெயர் தாங்கி, உமாதேவிக்கு மகனாகத் தோன்றினார்.

அந்நாள் ஆவணி வளர்பிறைச் சதுர்த்தியும், விசாக நட்சத்திரமும் (முருகன் அவதரித்ததும் விசாக நட்சத்திரமே என்பது குறிப்பிடத்தக்கது) சோமவாரமும் (திங்கட்கிழமை), சிம்ம இலக்கினமும் கூடிய நாளாகும், ஆகையால் ஆவணிச் சதுர்த்தி மிகச் சிறப்புடையதாகக் கருதப்பெறுகிறது.

விநாயக சதுர்த்தியன்று புற்று மண்ணால் விநாயகப் பெருமானின் திருவுருவம் அமைத்து, அதில் விநாயகரை மந்திரம், பாவனை, கிரியைகளால் எழுந்தருளச் செய்து, அபிஷேக அலங்காரங்கள் செய்து நிவேதனப் பொருள்கள் வைத்துப் போற்றி வழிபடுதல் முறையாகும்.

நிவேதன வகையில் மோதகம், அப்பம், எள்ளுருண்டை, அவல், பொரி, கரும்பு, விளாம்பழம் முதலியவை சிறந்தவையாகும். அவருக்கு உகந்த மலர்கள், தும்பை, வன்னி, எருக்கு, அறுகு, கொன்றை முதலியவையாகும். இவ்விதம் பெருமானை வழிபட்டு மறுநாள் அவ்வுருவத்தைத் திருக்குளத்திலோ, புண்ணிய ஆறுகளிலோ விட்டு விடுவார்கள்.



ஒவ்வொரு மாதமும் வளர்பிறை–தேய்பிறைகளில் வரும் சதுர்த்தி திதிகள்[1] வழிபாட்டுக்கு உகந்தவை.

வளர்பிறை (சுக்லபட்ச) சதுர்த்தி திதியின் அதிபதியான தேவி, தன்னை அவருடைய இருப்பிடமாகச் செய்து கொள்ளுமாறு வேண்டினாள். அதற்கு அருள் புரிந்த விநாயகர், 'நான் உனக்கு மத்தியானத்தில் காட்சி அளித்த படியால், சுக்லபட்ச சதுர்த்தியும், மத்தியானமும் கூடிய நன்னாளில் என்னை வழிபடுவோர், என் அருளைப் பெறுவர். சதுர்த்தியன்று ஆகார மில்லாமல் என்னை வழிபடுவோருக்கு அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பேறுகளையும் வழங்குவேன்' என்றார்.

ஆவணித் திங்கள் வளர் பிறையில் வரும் சதுர்த்தி நாளில், இந்தச் சதுர்த்தி விரதத்தைத் தொடங்க வேண்டும். அன்று விடியற்காலையில் எழுந்து நீராடி, அன்றாடக் கடமைகளைச் செய்த பிறகு, அர்ச்சனைக்குரிய மலர்களையும், மற்றும் அபிஷேகப் பொருட்கள், தூபதீபம், பூசைக்குரிய பொருட்களையும் சேகரித்துப் பூஜை மண்டபத்தை அமைத்து, விநாயகரை வழிபடவேண்டும், இவ்வாறு அடுத்த மாத வளர்பிறைச் சதுர்த்தி வரையில் நாள்தோறும் முறைப்படி பூஜை செய்யவேண்டும்.



சங்கஷ்டஹரணி என்ற பெயர் உண்டாகட்டும்[1] என்றார்.

அங்காரகன் விநாயகரை ஒரு செவ்வாய்க்கிழமை சதுர்த்தியில் (மாசி மாதத் தேய்பிறைச் சதுர்த்தி) பூஜை செய்து பேறு பெற்றான். அதனால் செவ்வாயும் சங்கடஹர சதுர்த்தியும் சேரும் நாள் மிகச் சிறப்பு வாய்ந்ததாகும். மாசி மாதம் தேய்பிறைச் செவ்வாய்க்கிழமையன்று சதுர்த்தி வருமானால் அன்று கணபதிக்கு உகந்த சங்கடஹர சதுர்த்தி விரதத்தைத் தொடங்குவார்கள்.

இந்த முப்பது நாள்களிலும் ஆகாரம் பகலில் உறக்கம் இல்லாமல், இந்திரிய ஆசைகளை நீக்கி, இறை எண்ணத்திலேயே ஈடுபட வேண்டும். 31ஆவது நாள் விருந்தினர், ஏழைகளோடு இருந்து உணவு உண்ண வேண்டும்.

முப்பது நாள் உண்ணாவிரதம் இருக்க இயலாதவர்கள், பூஜைக்கு முதல்நாளாவது அப்படி இருந்து, மற்ற நாட்களில் பால், பழம், அவிசு,(உப்பின்றி சமைத்த உணவு) முதலியவற்றில் ஏதேனும் ஒன்றை உண்ணலாம். முப்பது நாள் விரதம் இருக்க முடியாதவர்கள், பூஜை தொடங்கிய ஒரு நாளாவது உணவு, உறக்கம், இச்சை முதலியவற்றை நீத்து, இவ்விரதத்தைக் கடைப்பிடிக்கலாம்.

கிருஷ்ணபட்ச சதுர்த்தியின் அதிபதியான சக்தி, விநாயகரை வழிபட்டபோது அவர் கூறினார். 'சந்திரோதயத்தில் நீ என்னை வழிபட்டதால், கிருஷ்ணபட்ச சதுர்த்தியும் சந்திரோதயமும் கூடிய காலம் முக்கிய விரத நோரமாகும். அப்போது என்னை வழிபடுவோருக்கு என் அருள் நிச்சயம் கிட்டும். சங்கடஹர சதுர்த்தி[3] விரதம் கடைப்பிடிப்போரின் சங்கடமெல்லாம் தீர்ந்து விடும். உனக்கும்

சங்கடஹர சதுர்த்தியன்று காலை முதல் சந்திரோதயம் வரை, நீர் தவிர வேறு ஏதும் உட்கொள்ளாமல் சந்திரனைப் பார்த்த பின்னர்[4] அருக்கியம் கொடுத்து (மந்திர நீர் இறைத்தல்) 21 அறுகம்புல் கொண்டு, விநாயகனின் 21 திருப்பெயர்களை அர்ச்சித்து அதன்பின் உப்பு, காரம், சேர்க்காத உணவை உட்கொள்ளவேண்டும்.

இரவு கண்விழித்து விநாயகரின் கதைகளைக் கேட்க வேண்டும். இவ்வாறாக ஓராண்டு காலம் சதுர்த்தி நாட்கள் தோறும் விடாமல் விரதம் மேற்கொள்ள வேண்டும்.

ஆண்டு முழுவதும் 24 சதுர்த்திகளிலும் விரதம் மேற்கொண்டு ஆவணி சுக்கில சதுர்த்தியில் விரதத்தைப் பூர்த்தி செய்து விநாயகரை வழிபடுவதன் வழி பெறற்கரிய பேறுகளைப்[5] பெறலாம்.

விநாயகரை வழிபடுவதற்கு ஏற்ற 21 பத்திரங்கள் (இலைகள்) வருமாறு: அலரி, துளசி, மருதமர இலை, எருக்கு, அறுகு,(வேருடன்கூடிய வெள்ளறுகு மிகச் சிறந்தது என்று கூறுவர்), கையாந்தகரை (கரிசிலாங்கண்ணி), முள்ளி, அரசமர இலை, பச்சை



(மாசிப் பச்சை), நாயுருவி, நாவல்மர இலை, எலுமிச்சை இலை, நொச்சி, சாதிப்பூ இலை, இலுப்பைமர இலை, இலந்தைமர இலை, தேவதாருமர இலை, மாதுளை இலை, விஷ்ணுகாந்தி இலை[6].

## விநாயக சஷ்டி

ஆவணி வளர்பிறைச் சதுர்த்தியும், விசாக நட்சத்திரமும், சோம வாரமும், சிம்ம இலக்கினமும் கூடிய நன்னாளில் கயமுகாசுரனைச் சம்ஹரிக்கும் பொருட்டு விநாயகர் அவதரித்தார். அவர் கயமுகாசுரனை அடக்கி வாகனமாக்கிக் கொண்ட வரலாற்றையும் அறிந்துள்ளோம்.

முருகனைப் போலவே விநாயகப் பெருமானுக்கும் சஷ்டி விரதம் உகந்ததாகிறது. ஒரு முறை சிவபெருமானும் உமாதேவியும் சொக்கட்டான் விளையாடிக் கொண்டிருந்தபோது, மகாவிஷ்ணு பொய்ச்சாட்சி சொல்லும்படி ஆகிவிட்டது. அதனால் கோபமுற்ற உமாதேவி, மகாவிஷ்ணுவைக் குருட்டு மலைப்பாம்பாகப் போகுமாறு சபித்துவிட்டார். அவருக்கு ஆறுதல் கூறிய சிவபெருமான் கயமுகாசுரவதம் நடைபெறும் வரை காத்திருக்குமாறு சொன்னார்.

விநாயகர் கயமுகாசுரனுக்கு முத்தி கொடுத்த பின்னர், கணபதீச் சரத்திலிருந்து மூஷிஹ வாகனத்தில் திரும்பும் வழியில், ஆலங்காட்டில், மலைப்பாம்பாக மாறியிருந்த மகாவிஷ்ணுவைக் கண்ணுற்றார். அவர் பார்வை பட்ட மாத்திரத்தில் மகாவிஷ்ணு தம் சுய உருவைப் பெற்றார்; மகிழ்ச்சி அடைந்தார். விநாயகரே! எனக்குக் காட்சியளித்து நன்மை புரிந்த இந்த மார்கழித் திங்கள் சஷ்டி நாளில் உம்மை யார் வழிபட்டாலும் அவர்கள் சகல துயரங்களிலிருந்தும் விடுபட்டுச் சகல விருப்பங்களையும் அடையும்படி அருள்புரிய வேண்டும் என்று கோரினார். அதற்கு விநாயகரும் மகிழ்ச்சியோடு இசைந்தார்.

இது விநாயக சஷ்டி என்றும் மார்கழி சஷ்டி, குமார சஷ்டி, பெருங்கதை விரதம் என்றும் கூறப்பெறுகிறது. கார்த்திகைத் திங்கள் கிருஷ்ண பட்சப் பிரதமை முதலாக, மார்கழித் திங்கள் (வளர்பிறை) சஷ்டி இறுதியாகவுள்ள இருபத்தொரு நாளும் இந்த விரதம் கடைப்பிடிக்கப் பெறுகிறது. சைவர்களுக்கு இக்காலம் மிகவும் புனிதமான காலமாகும்.

இவ்விரத காலத்தில் 21 நூல் இழைகளினால் ஆகிய காப்புக் (காவல்) கட்டிக் கொள்வர். (ஆண்கள் வலது மணிக்கட்டிலும் பெண்கள் இடது மணிக்கட்டிலும் கட்டிக் கொள்வர்.)

21 நாட்களும் ஒரு பொழுது உண்டு, இறுதி நாளில் உபவாசம் இருந்து, இளநீர், கரும்பு, மோதகம், அவல், எள்ளுருண்டை முதலானவற்றை நிவேதித்துச் சிறப்பு வழிபாடு செய்ய வேண்டும். 21 நாட்களும் பெருங்கதை எனப்பெறும் விநாயக புராணம் (பார்க்கவ புராணம்) படிக்க வேண்டும்; கேட்கவேண்டும். (இந்த 21 நாட்களிலும் விநாயக கவசத்தை நாள் ஒன்றுக்கு 21 முறை பாராயணம் செய்தால் நினைத்த காரியம் கைகூடும்.)

அடுத்த நாள் ஏழை எளியவரோடு இருந்து உணவு உண்டு. விரதத்தை நிறைவேற்ற வேண்டும்.

## குறிப்புகள்

1. விநாயகருக்குரிய ஷோடச (16) நாமாக்களில் இது ஒரு பெயர்; Baala-chandran, அதாவது குழந்தை சந்திரன் என்று நிறையப்பேர் இதைத் தப்பாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். Baa இல்லை; அது தப்பு. Bhaa என்பதே சரி, Pa. Pha, Ba, Bha என்ற சம்ஸ்க்ருதத்தில் நாலு இருப்பதில், நாலாவதான Bha காரம் போட்டு Bhaala chandran, என்று சொல்ல வேண்டும். Bhaalam என்றால் நெற்றி அல்லது முன்தலை. முன்னந்தலையில் எவர் சந்திரனை தரித்துக் கொண்டிருக்கிறாரோ அவர் Bhaala chandran, அல்லது இரண்டாவது ப– வாக, Phaala என்றும் சொல்லலாம். அப்படிச் சொன்னால், கேசத்தில் இரண்டு பக்கங்களில் ஒன்று. ஈசுவரன் ஜடாபாரத்தில் நேராக சந்திரனை வைத்துக் கொள்ளாமல், இடப்பக்கமாகச் சாய்த்து வைத்துக் கொண்டிருப்பதாக அநேக சில்ப – சித்திரங்களில் பார்க்கிறோமல்லவா? அங்கே பரமசிவன் Phaala ஆகிறார். ஆனால், பாலசந்திரன் என்ற பெயர், முக்கியமாகப் பிள்ளையாருக்குத்தான். காஞ்சிப் பெரியவர் சங்கராச்சாரிய சுவாமிகள், தெய்வத்தின் குரல், 4 ஆம் பாகம்.

2. சாதாரணமாக ஒவ்வொரு தெய்வத்துக்கும் ஒரு குறிப்பிட்ட திதி விசேஷமானதாகும். அது வளர்பிறை, தேய்பிறை என்கிற இரண்டில் ஏதோ ஒன்றில் வருவதாகத்தான் இருக்கும். முருகனுக்கு சஷ்டி என்றால் அது சுக்கல சஷ்டிதான். பரமேச்வரனுக்குச் சதுர்த்தசி என்றால் கிருஷ்ணபட்ச சதுர்த்தசிதான். அதற்கு மாத சிவராத்திரி என்று பெயர். இராமருக்கு நவமி பூஜை என்றால் சுக்கல நவமிதான். கிருஷ்ணருக்கு அஷ்டமி பஜனை என்றால் கிருஷ்ணபட்ச அஷ்டமிதான். அம்பாளுக்குப் பௌர்ணமி – அது சுக்லபட்சத்தில் மட்டும்தான் உண்டு. ஆனால் பிள்ளையாருக்கும் மட்டும் சதுர்த்தி விசேஷம் என்றால், சுக்லபட்ச சதுர்த்தி, கிருஷ்ணபட்ச சதுர்த்தி இரண்டுமே அந்த விசேஷத்துக்கு உரியவனாக இருக்கின்றன – காஞ்சிப் பெரியவர், தெய்வத்தின் குரல் 4 ஆம் பாகம்.

3. சங்கடஹர சதுர்த்தி என்றால் உபத்திரவங்களைப் போக்குகிற சதுர்த்தி என்று அர்த்தம். ஆனால் ஹர என்ற இந்த முக்கியமான வார்த்தையை விட்டு விட்டு சங்கட சதுர்த்தி என்று சொல்கிறார்களே என வருத்தப்படுகிறார் சங்கராச்சாரிய சுவாமிகள்.

4. இந்தப் பூஜை முடியும்போது ரோஹிணி சமேதனான சந்திரனையும் பூஜை பண்ண வேண்டும் என்று, புராணத்தில் விநாயகர் குறிப்பிடுவதாகக் காஞ்சிப் பெரியவர்கள் கூறுகிறார்கள்.

5. விநாயகப் பெருமானைச் சதுர்த்தி நாட்களில் வழிபடுவதால் கிடைக்கும் 21 பெரும் பேறுகள்: தர்மம், பொருள், இன்பம், சௌபாக்கியம், கல்வி, பெருந்தன்மை, நல்வாழ்வுடன் கூடிய மோட்சம், முகத்தில் பால் வடியும் தன்மை, வீரலக்ஷிமி கடாட்சம், விஜயலஷ்மி கடாட்சம், எல்லோரும் தன்னிடம் அன்பாக இருக்கும் தன்மை, குடும்பத்தில் கர்ப்ப ரக்ஷை, மக்கட்பேறு, நுண்ணறிவு நற்புகழ், சோகத்தினால் வாடாத தன்மை, அசுபங்களை அகற்றல், தன் வாக்குக்கு எதிர்வாக்கு அடங்கிப் போதல், கோபங் கொண்டவர்களைச் சாந்தப்படுத்தும் தன்மை, பிறர் ஏவும் ஆபிசாரம் (பகைவன் மரணம் அடையும்படி செய்யும் கொடுந்தொழில்), அடக்குதல், துயர் தீர்த்தல் – நஜன், வினை தீர்க்கும் விநாயகர்.

6. அரும்பாத்தை வேதவிநாயகர் பிள்ளைத்தமிழ்ப் பாடல் ஒன்றில் (வருகைப் பருவம்) இவை குறிப்பிடப் பெறுகின்றன.

## நன்றிகள்

**சிங்கப்பூர் சிலோன்றோட் செம்பக விநாயகர் ஆலய கும்பாபிஷேக மலரிலிருந்து விநாயகப் பெருமான் பற்றிய சில கட்டுரைகள் இம்மலரில் தொகுக்கப் பெற்றுள்ளது. சிங்கப்பூர் செம்பக விநாயகர் தேவஸ்தானத்துக்கு எமது நன்றிகள்**



# அறுகும் வன்னியும்

அறுகம்புல் பூமியில் இருந்து கிளம்பும் போது நேராக தலை நிமிர்ந்து கிளம்பி, பிறகு கொடியாகப் பரவி, ஒவ்வொரு கணுவுக்கும் வேரை ஊன்றி, அதில் குருத்தும் கிளம்பி பரவிக் கொண்டே போகும், அப்படி நன்றாக வளர்ந்ததைச் சீக்கிரத்தில் அழித்துவிட முடியாது. அது சிறந்த மூலிகையாகவும் இருக்கிறது. அத்துடன் இதைப் பச்சையாக தீயில் போட்டாலும் அது உடனே நன்றாக எரிய ஆரம்பித்துவிடும். அப்படிப்பட்ட அறுகம் புல்லிற்கு தூர்வை என்ற பெயரும் உண்டு. ஆலமரம் பூமிக்கு மேல் உயரமாக வளர்ந்து படர்ந்து விரித்த குடை மாதிரியாக இருக்கிறது. அறுகு பூமியில் மேல் நோக்கிப் படர்ந்து பசுமையாக இருக்கிறது. அதுபோல் மனித சரீரத்தில் உள்ள ஆறு ஆதாரங்களில் மூலாதாரத்தில் குண்டலினி சக்தியாகக் கணபதி திகழ்கிறார். அந்த குண்டலினி சக்தியானது, அறுகு நிமிர்ந்து பசுமையாக படர்வது போல் ஆறு ஆதாரங்களிலும் வேரூன்றிப் படர்ந்து ஸஹஸ்ராரம் என்ற தலை உச்சியை அடைந்து ஆல மரம் போல் தழைத்து விரிந்து இருக்க வேண்டும் என்ற தத்துவமாக விநாயகருக்கு அறுகு முதல் இடமாக அமைகிறது.

இந்த அறுகு வெப்ப நோய்களை நீக்குவதாகவும் அரு மருந்தாகவும் இருக்கிறது. விநாயகர் அனலாசுரன் என்பவனை விழுங்கியதால் ஏற்பட்ட வெப்பத்தை அறுகு தண்ணீரால் தணித்ததாக விநாயக புராணம் கூறுகிறது. ஜுரம் கண்டவர்களுக்கு அறுகை நீரிலிட்டு நன்றாகச் சுண்ட காய்ச்சி கஷாயமாகக் கொடுத்தால் ஜுரம் நீங்கிவிடும். இந்த அறுகை நீண்ட மஞ்சளுடன் சேர்த்து அரைத்து சிரங்கு போன்ற தோல் வியாதிகளுக்கு மேல்பூச்சாகத் தடவக் குணம் உண்டாகும். அறுகினால் இரத்த அழுத்தம், நீரழிவு போன்ற நோய்களுக்கும் குணம் உண்டாகிறது என்று சித்த வைத்தியர்கள் கூறுகிறார்கள். அறுகை சிறு சிறு துண்டுகளாகத் துண்டித்து அம்மியில் நன்றாக அரைத்து கெட்டித் தயிருடன் சேர்த்து வாரம் இரண்டு முறை உணவுடன் உட்கொண்டால் அல்சர் போன்ற குடல் சம்பந்தமான வியாதிகள் வராமல் தடுப்பதுடன் உடலின் வெப்பத்தையும் சரியான முறையில் நிலைக்கச் செய்யும் என்று மூலிகை வைத்தியத்தில் கூறப்படுகிறது. யோகிகள் நீண்ட நேரம் உட்கார்ந்து யோகத்யானம் செய்வதால் மூலாதாரத்தில் ஏற்படும் உஷ்ணத்தைத் தணிப்பதற்கு அறுகைக் கஷாயம் வைத்து அருந்துவார்கள். அந்த கஷாயத்திற்கு "மூ தண்டக் கஷாயம்" என்று பெயர்.

இவ்வளவு பெருமைகளைப் பெற்ற அறுகம்புல் முழுமுதற் கடவுளாகவும், பிரணவ ரூபமானவருமான கணபதிக்கு மிகவும் உகந்ததாக அமைந்து இருக்கிறது. அதன் காரணமாக அறுகு என்ற தூர்வையால் விநாயகரை அர்ச்சிக்கப்படுகிறது, அந்த அர்ச்சனை "தூர்வாயுக்ம அர்ச்சனை" என்றும் "தூர்வாயுக்ம பூஜா" என்ற பெயரிலும் அழைக்கப்படும். தூர்வா என்றால் அறுகம்புல். யுக்மம் என்றால் இரண்டு சேர்ந்தது. ஆகையால் இரண்டு இரண்டு அறுகம்புல்லாகக்



கணபதியை இருபத்தியொரு தடவை அர்ச்சிக்க வேண்டும். அதாவது (1) ஓம் கணாதிபாய நம: தூர்வாயுக்மம் – ஸமர்ப்பயாமி என்ற முறையில் (2) பாஸாங்குஸதராய, (3) ஆகுவாஹநாய (4) விநாயகாய (5) ஈஸபுத்ராய, (6) ஸர்வ ஸித்திப்ரதாய (7) ஏகதந்தாய (8) இபவக்த்ராய (9) மூஷிகவாகநாய (10) குமார குருவே (11) கபிலவர்ணாய (12) ப்ரஹ்மசாரிணே (13) மோதகஹஸ்தாய (14) ஸுரச்ரேஷ்டாய (15) கஜ நாஸிகாய (16) கபித்த பலப்ரியாய (17) கஜமுகாய (18) ஸுப்ரஸந்தாய (19) ஸுராக்ரஜாய (20) உமாபுத்ராய (21) ஸ்காந்தபரியாய என்ற இருபத்தியொரு (ஏகவிம்ஸதி) நாமாக்களைக் கொண்டு இரண்டு இரண்டு அறுகம் புல்லாக அர்ச்சிக்க வேண்டும் என்று புராணம் கூறுகிறது. இந்த முறையில் கணபதியை வழிபட்டு நன்மைகள் அடைந்தவர்கள் பலர் இருந்தாலும் அதில் கவுண்டின்னிய முனிவரும், அவருடைய மனைவி ஆசிரியையும் மிகச் சிறந்தவர்கள் ஆவர்.

## வன்னி பத்தரம்

அவுரவ முனிவர் என்ற முனிவருக்கு சமி என்ற மகள் இருந்தாள். அவளுக்கும் மந்தாரன் என்பவருக்கும் திருமணம் ஆகி, இருவரும் கணவன் மனைவியாக வாழ்ந்து வந்தார்கள். ஒரு சமயம் கணேசரின் பூர்ணமான அருளைப் பெற்று கணேச ரூபமாக இருந்த புருசுண்டி என்ற முனிவரை இகழ்ந்து பேசியதால் அவருடைய சாபத்திற்கு ஆளாகி இருவரும் வன்னி மரமாகவும், மந்தார மரமாகவும் ஆகிவிட்டார்கள். அவர்கள் இருவரும் தங்கள் தவற்றை உணர்ந்து விநாயகப் பெருமானை வழிபட்டு அவருடைய அருளைப் பெற்று சாப விமோசனம் அடைந்தார்கள். அவர்கள் இருவரும் விநாயகப் பெருமானிடம் நாங்கள் இருவரும் தங்களின் வழிபாட்டுக்கு உரிய பத்தரம் – புஷ்பமாக இருக்க வேண்டும் என்றும் அப்படி வழிபடுபவர்களுக்கு தாங்கள் அருள வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டார்கள் (பத்தரம் = இலை) விநாயகர் மனமகிழ்ந்து வரம் அளித்தபடியால் சமியும் – மந்தாரனும் இன்றும் வன்னி மரமாகவும் – மந்தார மரமாகவும் இருக்கிறார்கள். விநாயகரின் அருளால் உண்டான வன்னியின் பத்தரம் (இலை) மந்தாரையின் புஷ்பமும் விநாயகருக்கு உகந்ததாக இருக்கின்றன.

ஸம்ஸ்கிருத மொழியில் வஹ்னி என்றால் நெருப்பு என்று பொருள். நெருப்பை தன்னில் அடக்கிக் கொண்டு இருப்பதால் வன்னி என்ற பெயரை அடைந்தது. சூரியகாந்தக் கல்லோடு சூரிய ஒளி கலந்தால் அதில் இருந்து தீ வெளிப்படுவது போல் வன்னியின் கட்டையை, அதன் கட்டையைக் கொண்டு தயிர் கடைவது போல் கடைந்தால் தீ வெளிப்படுகிறது. அப்படியாக வன்னியில் இருந்து கடைந்து எடுக்கப்பட்ட தீயை ஹோமம், யாகம் முதலிய நற்காரியங்களுக்கு மிகவும் உயர்ந்ததாகச் சாஸ்திரங்கள் விவரிக்கின்றன. இதுவே முதன்மையானதாகவும் மற்ற வழி முறைகள் இதனை அடுத்ததாகவும் தான் கூறுகின்றன. தீயை அடைந்த பொருள்கள் எரிந்து பஸ்பமாகி விடுகிறதோ, எப்படி தீயைச் சார்ந்த தங்கம், சங்கு போன்ற பொருள்கள் மேலும் மேன்மையானதாக ஆகிறதோ, எப்படி தீயில் சம்பந்தப்பட்ட பொருள்கள் மிகவும் சுத்தமானதாக, தூய்மையான தாக ஆகிறதோ அதுபோல் வன்னி மரம், வன்னி இலையைத் தொட்ட மாத்திரத்திலேயே மனிதர்களின் பாபம் அழிகிறது. வன்னி என்ற நெருப்புடன் மனிதனின் தேகம்

சம்பந்தப்படுவதால் அவன் தங்கம், சங்கு போன்று மேன்மை ஆனவனாக ஆகிறான். வன்னியின் இலையைக் கொண்டு பக்தியுடன் ஈஸ்வரார்ப்பணம் செய்யும் போது தீயில் சம்பந்தப்பட்ட பொருள் சுத்தம் ஆவது போல் மனிதன் மனமும் புத்தியும் சுத்தம் அடைந்து தெய்வீக ஞானம் மிக்கவனாகின்றான். மண்ணுலகில் பிறவி என்ற மாசை அகற்றிடச் செய்பவர் விநாயகப் பெருமான். அதன் காரணமாகவேதான் வன்னிப் பத்தரத்தைத் தனக்கு உகந்த பத்தரமாக வைத்துக் கொண்டும் வன்னி மரத்தடியிலும் கணேசர் எழுந்தருளியிருக்கிறார்.

வன்னி இலைக்கு ஸ்ரீசமி பத்தரம் என்று பெயர். விநாயக பூஜையில் இருபத்தொரு நாமாவால் அறுகம்புல்லால் அர்ச்சிக்கப்படுவதுபோல இருபத்தொரு பத்ர (இலை) ங்களால் அர்ச்சிக்கப்பட வேண்டும். அதற்கு "ஏகவிம் சதி – பத்ர பூஜை" என்று பெயர். அதில் மாசிப் பச்சை, கண்டங் கத்திரி, பில்வதளம், அறுகம்புல், உமத்தை, இலந்தை, நாயுருவி, துளசி, மாவிலை, அரளி, விஷ்ணு கிராந்தி, நெல்லி, மருக்கொழுந்து, நொச்சி, ஜாதி, வெள்ளெருக்கு, வன்னி கரிசிராங்கன்னி, வெண்மருதை, கிளுவை, நாகை என்ற 21 பத்ரங்கள் கூறப்படுகின்றன. இந்த வன்னியின் இலை கொண்டு வழிபடுவதால் நன்மை அடைந்தவர்கள் பல பேர்கள் இருக்கிறார்கள். அவர்களில் சாம்பன் என்ற மன்னனும் அவனுடைய மந்திரியும் அடைந்த பலன் விசித்ரமானது. எனவே அறுகாலும் வன்னியாலும் ஆனைமுகனை அஞ்சலி செய்து "மண்ணுலகத்தினிற் பிறவி மாசை" அறுத் தெறிவோம்.

*நன்றி : மாணிக்க விநாயகம்*

# மறுபிறவித் தத்துவம்

நிரந்தரமான ஒரு தெய்வீக சக்தி நமக்குள்ளேயே இருக்கிறது. அதையே ஆத்மா என்று கூறுகிறோம். நமது கனவில் நமது மனம் இல்லாத இடம் இல்லை. அதேபோல உலகியல் வாழ்வில் ஆத்மா நிலவாத இடம் இல்லை. எங்கேயாவது இல்லை என்றால் அல்லவா, ஒரிடத்தை விட்டு இன்னொரு இடத்துக்குப் போவதற்கு? இறந்தபிறகு பூதஉடல் மட்டுமே எஞ்சி நிற்கிறது. அந்தக்கரணம் என்னும் சூக்ஷ்ம உடலுடன் ஆத்மா விடை பெற்றுச் செல்லுகிறது. அத்துடன் அது வாழ்க்கையில் அனுபவித்து உணர்ந்த அனுபவங்களின் வாசனையும் தொடர்ந்து செல்லுகிறது. இப்போது நீங்கள் இங்கே இருக்கிறீர்கள். உங்களுடைய வீட்டில் இல்லை. அதேபோல வீட்டுக்குப் போய்விட்டால் இங்கே இருக்கமாட்டீர்கள். அதே போல சூக்ஷ்ம உடல் இடம் மாறுகிறது. நல்ல வாழ்க்கை வாழ்ந்தால் பதவி உயர்வு பெற்று, இன்னும் உயர்வான வாழ்க்கையை அநுபவிக்கப் போகிறது. நல்ல விஷயங்களை நாடி ஆசைப்பட்டிருந்தால், அந்த நல்ல வாசனையுடன் அவற்றை நிறைவேற்றிக் கொள்ள அடுத்த பிறவியை நாடிப் போகிறது. இதைப் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு நாம் கூர்ந்த முனைப்புடன் உருவாக்கும் எண்ண சக்தியே நமது அடுத்த பிறவியை நிர்ணயிக்கிறது. ஆக, மறு பிறவித்தத்துவம் என்பது விஞ்ஞான பூர்வமானது. தர்க்க பூர்வமானது.

உ



# விநாயகர் பெருமை

- 卐 பிள்ளையார் பெருமை !
- 卐 தேவாரங்களில் விநாயகர்
- 卐 இலக்கியத்தில் விநாயகர்
- 卐 ஸ்ரீ வித்யா கணபதி
- 卐 திருமுறை தந்த விநாயகர்
- 卐 பிள்ளை யார்?
- 卐 விநாயகர் பரத்துவம்
- 卐 விநாயகர் பெருமை
- 卐 பிள்ளையார் கருவிகள்



# பிள்ளையார் பெருமை !

*(சுகி. சிவம்)*

உலகம் முழுவதையும் ஒரே குடும்பமாகக் பார்க்க வேண்டும். இது உயர்ந்த கொள்கை. அதே போல குடும்பத்தையே உலகமாகப் பாவிக்க வேண்டும். இதுவும் நல்ல வாழ்க்கை முறை. இந்த இரண்டு இலட்சி யங்களையும் விளக்கிய இரண்டு ஸ்வாமிகள் முருகனும், பிள்ளையாரும்.

உலகத்தைச் சுற்றி வந்தால் பழம் என்ற பழைய கதையில் முருகன் உலகத்தைச் சுற்றினார். பிள்ளையாரோ பெற்றோரைச் சுற்றினார். உலகமே குடும்பம். இது முருகன் கொள்கை. குடும்பமே உலகம். இது பிள்ளையார் கொள்கை. இவை முரண்பாடுகள் அல்ல. ஒரு மரத்தின் இரு பிரிவுகள். மரத்தில் வேரும் உண்டு; கொழுந்தும் உண்டு. குடும்பமே உலகம் இது வேர். உலகமே குடும்பம் இது கொழுந்து. பிள்ளையார் கொள்கை வேர் மாதிரி. முருகன் கொள்கை கொழுந்து மாதிரி.

பிள்ளைகள், பெற்றவர்களை எப்படி மதிக்க வேண்டும், போற்ற வேண்டும் என்கிற நடைமுறைக்கு நல்ல வழிகாட்டி பிள்ளையார்: சிவபெருமானுக்கு ஐயப்பன், முருகன், பிள்ளையார் யாவருமே பிள்ளைதான் என்றாலும் 'பிள்ளை யார்?' என்றதும் விநாயகர்தான் முன்நிற்கிறார்.

ஒரு அப்பாவுக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தவன் சாது. (இப்போதெல்லாம் சாது என்றால் அசடு என்ற பொருள் வழக்கத்தில் வந்து விட்டது. ஆனால் ஆசையற்ற அமைதியான பொறுமைசாலி என்பதுதான் உள்ளர்த்தம்.) இரண்டாவது பிள்ளை சுறுசுறுப்பு. பள்ளியில் கப், மெடல் என்று ஓடி ஓடி வாங்குவான்.

மூத்தவன் அம்மாவுக்கு ரொம்ப உதவி. காய்கறி வாங்குவது, அதைத் திருத்திக் கொடுப்பது, ரேஷன் கடைக்குப் போவது, அப்பாவுக்கு எப்போது என்ன தேவை? என்று தெரிந்து செய்வது; பிளட் பிரஷர் மாத்திரை தீர்ந்து விட்டதனால் வாங்கி வைப்பது, ஞாயிறு என்றால் மொபெட்டைக் கழற்றி, துடைத்து வைப்பது என்று ஏக உதவி. அவன் ஒரு நாள் இல்லை என்றால் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் கையே காணாமல் போன மாதிரி.


சின்னவன் படுசுட்டி. வீட்டில் அவன் இருந்தாலே ஏக அமர்க்களமாக இருக்கும். உத்தரவு தூள் பறக்கும். அவன் வீட்டுக்குள் வருவதும் போவதுமே எப்போதும் ஒரு வேகத்தில் தான் நடக்கும். காரணம் எப்போதும் பரபரப்புத்தான். அவன் தெருவுக்குள் நுழைந்தால் தெருவுக்கே உயிர் வந்த மாதிரி. போதாக்குறைக்கு அந்தத் தெருவின் ஒரு நற்பணி மன்றத்துக்கு அவன் தலைவன் வேறு.

பத்து பொடியன்கள் வீடு தேடி வந்து அவனை விசாரிப்பதே ஒரு கலையாக இருக்கும். "தலைவர் இருக்காரா?.." இந்தக் கேள்வியை அவன் அப்பாவிடம் கேட்டு விட்டால் கொஞ்சம் கடுப்பாகி விடுவார். மனைவியிடம் பாய்வார். "தலைவராம் தலைவர்! வீட்டுக்கு ஒரு காரியம் செய்வதில்லை; எங்கே போறான் எங்கே வர்றான் தெரிவதில்லை. தலைவராம் தலைவர்!"

அப்போது அம்மா முகத்தைப் பார்க்க வேண்டுமே. முகமெல்லாம் மகிழ்ச்சி பொங்க, "இந்த வயதிலேயே அவனைத் தலைவர்னு கூப்பிட நாலு பேர் இருக்கானுங்க. சில பேருக்கு எத்தனை வயசானாலும் அந்த அதிஷ்டம் வரலையே!" என்பாள் இந்த அஸ்திரத்தில் அப்பா அடங்கி விடுவார்.

யாராவது நண்பர், ‘சின்னப் பிள்ளை எப்படி இருக்கிறான்? என்ன பண்றான்?” என்று கேட்டால், “சார் அவர் நம்ம பிள்ளை இல்லை. ‘தலைவர்!’ அவரை ‘அவன் இவன்’னு கூப்பிடடா நாலு பேர் சண்டைக்கு வருவாங்க சார்! அவருக்கு ரத்த தானம், அறியாமை ஒழிப்புன்னு உலகம்தான் முக்கியம். வீட்டைப் பற்றித் துளி அக்கறை கிடையாது. பிள்ளைன்னா பிள்ளை முதல் பையன்தான் சார்! என்ன பொறுப்பு! என்ன பாசம்! அவன்தான் சார் பிள்ளை. சின்னவர் நமக்குத் தலைவர்” என்று புராணம் படிப்பார் அப்பா.

இதே கதைதான் கைலாயத்தில். முருகன் சின்னவர்; ஆனால் சிவனுக்கே தலைவர். தகப்பன் சுவாமி அப்பாவுக்கே குருபீடம். பிள்ளையாரோ அன்பான பிள்ளை. அம்மாவின் செல்வப் பிள்ளை. குடும்பமே உலகம் என்று பெற்றோரைச் சுற்றி வந்த ஞானப் பழம்! அதனால் தான் ‘பிள்ளை என்றால் அவர் தான்’ என்ற அர்த்தத்தில், ‘ஆர்’ விகுதி பெற்று, பிள்ளையார் ஆனார், நம் விநாயகப் பெருமான்.



அது மட்டுமல்ல. அவர் பிள்ளைகளின் கடவுள். காஞ்சி பரமாச்சாரியார் பாஷையில் ‘குழந்தை ஸ்வாமி’, ‘குழந்தைகளின் ஸ்வாமி’. பிள்ளைகளுக்கு என்னதான் சாப்பாடு கொடுத்தாலும், நொறுவல் முக்கியம். “தின்பதற்கு என்ன இருக்கும்?” அடிக்கடி கேட்பது பிள்ளைக் குணம். அவருக்குப் பட்சணங்கள் நைவேத்யம்.

*“இக்கவரை நற்கனிகள் சர்க்கரைப ருப்புடன் நெய்*
*எள் பொரிய வல்துவரை இளநீர்வண்*
*டெச்சில் பய றப்பவகை பச்சரிசி பிட்டுவென*
*ரிப்பழ மடிப்பல் வகை தனிமூலம்*
*மிக்கஅடி சிற்கடலை பக்ஷமெனக் கொளொரு*
*விக்கினச மர்த்தனெனும் அருளாழி.”*

என்று நைவேத்தியப் பட்டியலைப் பாட்டியல் ஆக்கினர் அருணகிரிப் பெருமான்.

சிதறுகாய் போடுவது ஆணவத்தை நீக்குவது என்று தத்துவமாக நாம் பேசுகிறோம். காஞ்சிப் பரமாச்சார்யார் சிதறுகாய் குழந்தைகளின் சொத்து என்கிறார்கள்.

சிதறு காய் போட்டதும் குழந்தைகள் ‘ஓ’ என்று அலறிக்கொண்டு ஓடி வரும். ஆனந்தக் கூத்தாடும். அந்தக் குழந்தைகளின் ஆனந்தம் தான் இந்த வழிபாட்டின் முக்கிய அம்சம். அவரே குழந்தை. குழந்தைகள் கூத்தும் கும்மாளமும் அவருக்கு நிகழ்த்தும் பூசனைப் போல; ஆனந்தமே அவர் சந்நிதானம்.

பிள்ளைகளோடு பிள்ளையாய் ஒன்றிப் போவதால் அவர் பிள்ளையார். கவலை, கஷ்டம், கடன் என்ற வயதின் அவஸ்தைகள் தொலைந்து போய் பக்தனைப் பிள்ளையாக்குவதால் பிள்ளையார்.

இது பெரிய உண்மை. குழந்தையோடு குழந்தையாய் ஒரு மணி நேரம் விளையாடினால், நாம் குழந்தைகளை விட அதிக சேட்டைகள் செய்வோம். முறுக்கிய நிலையில் இருந்த மனம் – இறுக்கிய நிலையில் இருந்த இதயம் எல்லாமே நெகிழ்ந்து போய் நாமும் குழந்தையாகி விடலாம். மறுபடியும் குழந்தையாகிவிட மாட்டோமே என்ற ஏக்கம் இல்லாதவர் இல்லை. அதனால்தான் மறுபடியும் நம்மைக் குழந்தை ஆக்கி (மறுபிறவி) நமது ஆசையைக் கடவுள் பூர்த்தி செய்கிறார்.

பிள்ளையார் பெற்றோரால் நேசிக்கப்பட்ட பிள்ளை மட்டுமல்ல. பெற்றோரை நேசிக்கும் நல்ல பிள்ளை. நமது குழந்தைகள் பெற்றவர்களை எப்படி நேசிக்க வேண்டும் என்ற ரகசியத்தை விநாயகர் விளக்கியிருக்கிறார். அபரிமிதமான அன்பைக் கொட்டி நம்மை வளர்த்தவள் அன்னை. அவள் அன்புக்கு ஈடு கிடையாது. பத்து மாதம் சுமந்து, மரணத்தைத் துச்சமாகக் கருதி நமது ஜனனத்தை வழங்கிய தாய் ரொம்பவும் பெரியவள். அவள் அன்பு காட்டியது போல் முடியாவிட்டாலும் அதில் பத்தில் ஒரு பங்காவது பிள்ளைகள் அவளிடம் அன்பு காட்டுவது அவசியம். தாய்ப்பாலுக்கு ஏது விலை? பிள்ளையார் பார்வதி தேவியிடம் அதீதமான அன்பு கொண்டவர்.


திருவிளையாடற் புராணம் என்ற நூலில் இந்த உண்மையைப் பரஞ்சோதி முனிவர் விளக்குகிறார். பார்வதி தேவியிடத்தில் விநாயகருக்கு எவ்வளவு பாசம் என்பதை மிக மிக அழகான ஒரு கதை மூலம் விளக்குகிறார். சிவபெருமான் பெருமையை விளக்க நூல் எழுதிய பரஞ்ஜோதியார் அப்படியே தம்மை மறந்து பிள்ளையாரின் பெருமை ஒரு படி மேலே என்பதையும் எழுதி வைத்து விட்டார்! பிள்ளையார் பக்தர்கள் சந்தோஷப்பட இது ஒரு நல்ல இடம். பிள்ளையார் பக்தர்கள் எப்போதுமே சந்தோஷமாக இருப்பார்கள் என்பது வேறு விஷயம். இது ஒரு போனஸ் சந்தோஷம்.

கடற்கரைப் பகுதியில் வாழ்ந்த மீனவர் தலைவர் ஒருவர். அதியனாயன் என்பது அவர் பெயர். அவரது பக்திக்கு இரங்கி பார்வதி தேவி அவரது மகளாக வந்து கிடைத்தார். வளர்ந்தார். சிவபெருமானையே கணவனாக அடைய நினைந்து நாளும் அவரையே வணங்கியும் வந்தார். பாசியும் மணியும் சங்குகளும் கலந்த பரதவர் குலத்துக்கேற்ற மாலைகளை அணிந்து, புன்னை மர நிரலில் வீடு கட்டி விளையாடிய சிறுமியாக இருந்தும், சிவனை நினைப்பதை மறந்திலர்.

அப்போது கடலின் நடுவில் ஒரு கலக்கம். வலிமை வாய்ந்த சுறாமீன் ஒன்று எங்கிருந்தோ வந்தது. கடலைக் கலக்கியதோடு மட்டுமல்லாமல் கடலை நம்பி வாழும் மீனவர் வயிற்றையும் வாழ்வையும் கலக்கியது. படகுகளும் தோணிகளும் பாழாகும் படி பாய்ந்து பாய்ந்து தாக்கியது. பயந்து பயந்து மீனவர் திரும்பினர்.

வலிய சுறாவை வலை வீசிப் பிடிக்க வழிவகை தெரியாமல் மீனவர் நடுங்கினர். அது கடவுள் போல் யாருக்குமே அகப்படவில்லை. சுறாவை பிடிப்பவர் தம் மகளை மணக்கலாம் என்று பரதவர் தலைவர் பகிரங்கப் படுத்தினார். பார்வதி கரம் பிடிக்கக் கடவுளே ஓடி வந்தார்.

நெய்தல் மலர் நிறைந்த கடற்புறத்தில், உப்பங்கழிகளையும் முள்ளிக் காட்டையும் தாழைக் காட்டையும் கடந்து, வீசும் வலையையும் தோளில் இடுகிற கூட்டையும் சிவ கணத்துள் ஒருவர் சுமந்து வர, வலைஞர் திருவடிவில், பக்தி வலையில் படும் பரம் பொருள் வந்து சேர்ந்தார். அங்கயற்கண் அம்மையின் அழகிய மீன்விழிகள் வலை வீசி இழுத்த காரணத்தால் சுறாவை வலை வீசிப் பிடிக்க ஆவலாய் அண்ணல் ஓடோடி வந்தார். மீனவர் வடிவில் வந்து வென்றார். பற்றற்றவர் பலகாலம் தேடிப் பற்றமுடியாத பரம் பொருள், பரதவர் வடிவில் வந்து அலைந்தது என்ன காரணத்தால்?



அம்பிகையைத் தண்டித்தவர் தம்மையே தண்டித்துக் கொண்டது ஓர் அவசியமான அதிசயம். அந்தத் தண்டனையில் வெளிப்பட்டது அதிசயமான ரகசியம். அதைப் புரிந்து கொள்வது அன்பர்களுக்கு அவசியம்.

திருக்கயிலை நந்தவனத்தில் அமைதியான ஓர் இடத்தில் பரமேஸ்வரனும் பார்வதியும் வீற்றிருந்தனர். வேத உட்பொருளை விளக்கி, அம்மைக்கு உபதேசித்தார் சிவபெருமான். கவனம் இன்றி, கவலை தோய்ந்த முகத்துடன் பாடம் கேட்டார் பார்வதி தேவி. இதுவரை அப்படி அவர் கவனம் இன்றிக் கேட்டதில்லை. அதன் காரணமும் தெரியவில்லை என்கிறார் பரஞ்ஜோதியார்.

பாராமுகமாய், மனம் ஒன்றாது வேதப் பொருள் கேட்டதைக் காரணமாக்கி, உமையம்மைக்குத் தண்டனை கொடுக்கிறார் உலகத் தலைவரான சிவபெருமான். எத்தனை பெரிய தண்டனை தெரியுமா? மண்ணில் பிறக்கும்படி ஆணையிட்டார். அதுவும் எங்கே? எப்படி? என்ற விவரங்களுடன்.

'அறம், விரதம், நெறி என்பது பற்றிக் கவலைப்படாத, உயிர்க் கொலைக்கஞ்சாத அறிவு நலம் சாராத குடும்பத்தில் பிறக்க வேண்டும்! வேதத்தை

அலட்சியப்படுத்தியமையால் வேதமேயறியாத மனையில் பிறக்க வேண்டும்' என்று கடினமான உத்தரவாகச் சிவபெருமான் பிறப்பித்தார். அஞ்சி ஒதுங்கினார் அன்னை. பிரிய மாட்டாது தவித்தார்.

அன்னைக்கு நேர்ந்த துன்பத்தை அறிந்ததும் பதறி ஓடி வந்தார் பிள்ளையார். அம்மாவுக்கு துன்பம் என்றதும் துடித்து ஓடி வந்தார். அவ்வளவு பாசம் அவருக்கு. அம்மா பூமிக்குப் போவது என்றால் அவரைப் பிரிய வேண்டுமே என்ற கவலை அவருக்கும் வந்தது.

இத்தனைக்கும் எது காரணம் என்று யோசித்தார். ஆகா! அந்தச் சுவடிகள் வேதப் பொருளை விளக்கும் புத்தகங்கள், ஏடுகள் அவர் கண்ணில் பட்டன. நீண்டு தொங்குகிற துதிக்கையைத் தூக்கி உணவை விழுங்குவதற்கு யானை உட்புறம் சுழற்றுவது போல் சுழற்றி, அத்தனை ஏடுகளையும் கடலில் எறிந்தார். 'குடும்பமே உலகம்' என்ற கொள்கையுடைய பிள்ளையாருக்கு அந்தப் பிரிவு அப்படித் துன்பம் கொடுத்தது. அவர் அம்மா பிள்ளை. அம்மாவைப் பிரியக் காரணமான ஏடுகளை எறிவது குற்றமாகத் தெரியவில்லை அவருக்கு.

எப்போதுமே சின்னப் பிள்ளைகள் பெரிய பிள்ளைகளை அப்படியே பின்பற்றுவது இயல்பு. சின்னவர் முருகன் சீறிப் பாய்ந்தார். அண்ணன் கடலில் எறியும் போது நழுவி விழுந்த ஏடுகளை எடுத்துக் கடலில் வீசினார். திரும்பிப் பார்த்தால் அப்பா கையிலே ஒரு புத்தகம். அது சிவ ஞானபோதம் என்ற சித்தாந்த விளக்கம்.

எட்டிப் பாய்ந்து தட்டிப் பறித்தார். குறிபார்த்து வேல் வீசி சூரனைக் கொன்றவர். குறிபார்த்துக் கடலில் எறிந்தார். கடலுக்குள் கரைந்தன ஏடுகள். கோபப்படுவது போல் நடித்துப் பழக்கப்பட்ட சிவபெருமான், காவலுக்கு நின்ற நந்தி தேவரை நெருப்பாகப் பார்த்தார்.

"எப்படி இவர்கள் உள்ளே வரலாம்? நீ காவல் காத்த லட்சணம் அப்படி! இப்படியா காவல் புரிவது? 'பூமியில் போய் அறிவற்ற சுறாமீனாக நீ உப்புக்கடலில் உழலக் கடவது" என்றார். போச்சு! போச்சு! பிள்ளைகள் உள்ளே வருவதைக் காவலர் எப்படித் தடுக்க முடியம்? ஆனாலும் சாபம் பாய்ந்தது!

பிள்ளைகள் தவறு செய்தால் கணக்குப் பிள்ளை மீது பாயும் முதலாளிகள் போல, இது என்ன வேடிக்கை? ஒரு வேளை சிவ பெருமானுக்குப் பிள்ளைகள் மீது அவ்வளவு பாசமா? அதுவும் இல்லை. எட்டிப் பாய்ந்து சிவஞான போதத்தைத் தட்டிப் பறித்த முருகனைப் பார்த்தார், "பூமியில் போய் நீ ஒரு ஊமையாகப் பிறக்கக் கடவாய்" என்று உத்தரவு போட்டார்.

மீனவர் குலத்தில் பிறந்து வேதங்களை விட்டு, எளிய வாழ்க்கை வாழ அம்மைக்குச் சாபம். 'காவல் காக்கத் தவறியமைக்கு, சுறாவாகப் பிறக்கும்படி நந்திக்குச் சாபம். தட்டிப் பறித்ததால் ஊமைப் பிள்ளையாகப் பிறக்கும்படி முருகனுக்குச் சாபம். இந்தக் கலாட்டாவுக்குப் பிள்ளையார் சுழி போட்ட பிள்ளையாருக்குச் சாபம் கிடையாதா? என்ன நியாயம்? சுவடிகளைக் கடலில் எறிந்து முருகனுக்குத் தெம்பு ஊட்டியவர் அவர் தானே? அவருக்கு ஏன் சாபம் இல்லை?


சிவ பெருமான், பெருமைகளை வளர்க்க வேண்டும் என்பதற்காகவே நூல் செய்த பரஞ்ஜோதியார், பிள்ளையார் பெருமையை மிகுதியாக விளக்கும் வகையில், பிள்ளையாரைச் சபிக்கவில்லை! ஏன் என்றால், சபித்தால் அந்தச் சாபம் சிவபெருமானையே சென்று சேரும். விநாயகருக்குச் சாபம் கொடுத்தால் அதை அவரே அநுபவிக்க வேண்டும் என்பதால் சபிக்கவில்லை என்று பொருள்.

வெருவரை செலவின் வேழமுகத்தனை விதித்த சாபப்
பெருவலி தன்னைச் சாரும் பெற்றியல் சாபம் கூறான்
என்று பாடினார்.

'மதுரையை அடுத்த பரமக்குடி வடகிழக்கில் உள்ள உப்பூரில் குடிகிழார் மகன் உருத்திர சன்மனாக முருகன் பேசாப் பிள்ளையாகப் பிறந்தான்' என்று இறையனார் அகப் பொருள் முதல் சூத்திர உரை இந்நிகழ்ச்சிக்குச் சான்று கூறும். உமையம்மை மீனவர் குலத்தில் வளர, நந்தி சுறாவாக வசிக்க, சிவபெருமான் வலை வீசி வென்றார் என்பது திருவிளையாடற் புராணக் கதை.

சாபங்கள் எப்படி விநாயகரைப் பாதிக்காதோ, சபித்தவர் யாரானாலும் சாபம் எப்படி அவரையே சாருமோ, அது போலவே விநாயகர் பக்தர்களையும் சாபங்கள் சாராது; சபித்தவனையே சென்று சேரும்! அம்மா மீது உள்ள பாசத்தில் ரொம்பவும் மேலே போய் விட்டார் பிள்ளையார். பிள்ளை என்றால் அவர் தானே பிள்ளை? அதனால் அவர்தான் பிள்ளையார்.

*நன்றி: கல்கி பொன்விழா மலர்*



# தேவாரங்களில் விநாயகர்*

விக்நேஷ்வரரைப் பற்றி வருகிற இரண்டு தேவாரக் குறிப்புகளை விஷயம் தெரிந்தவர்கள் விசேஷித்துச் சொல்வார்கள். ஒன்று அப்பர் வாக்கு. மற்றது சம்பந்தருடையது.


சமணனாயிருந்த பல்லவ ராஜா தன் மாதிரியே சமணராயிருந்து விட்டு அப்புறம் சைவராகி விட்ட அப்பர் ஸ்வாமிகளைப் பல விதத்தில் ஹிம்ஸைப்படுத்திக் காளவாயில் போட்டான்; கல்லைக் கட்டி சமுத்திரத்திலே போட்டான்; அப்புறம் அதெல்லாம் பலிக்கவில்லை என்பதைப் பார்த்துத் தானும் அவரை நமஸ்காரம் பண்ணி வைதிக மதத்திற்குத் திரும்பி விட்டான் என்று கதை. அதிலே காளவாய்க்கும், கல்லைக் கட்டிப், போட்டதற்கும் நடுவில் விஷம் கொடுத்ததாகவும், அவர் மேலே மதயானையை ஏவி விட்டதாகவும் இருக்கிறது. அப்படி மதயானையை ஏவினபோது அவர் பாட்டுக்குக் கொஞ்சங்கூடப் பயப்படாமல், "*அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்சவருவதுமில்லை*" என்று பதிகம் பாடிக் கொண்டு தீரமாக நின்றார். * மத்தகஜம் வேகமாக வருகிறபோது சஜஸ்ம்ஹார மூர்த்தியான ஸ்வாமியை, 'வேழம் உரித்த நிலை' என்று துதித்துக் கொண்டு நின்றார்! கஜானனரைப் பற்றியும் அந்தப் பதிகத்தில்தான் சிறப்பித்துச் சொல்லியிருக்கிறார்!


"*பலபல காமத்த ராகிப் பதைத்தெழு வார்மனத் துள்ளே*
*கலமலக் கிட்டுத் திரியுங் கணபதி யென்னுங் களிறு.*"

"அந்தக் களிறு எந்த ஈச்வரனின் பரிவாரத்தில் இருக்கிறதோ, அந்த ஈச்வரனின் "தமர் நாம்", அதாவது, "தம்மவர் நாம்", அதாவது ஈச்வரனே, "இவர்கள் என்னுடைய மநுஷர்கள்" என்று சொல்லிக் கொள்ளும் படியான அடியார் நாங்கள்! ஆகவே நாங்கள் ராஜா ஏவி விட்டிருக்கிற இந்த மதக் களிறானாலும் சரி, வேறே என்ன உத்பாதமானாலும் சரி, அஞ்சுவது யாதொன்று மில்லை!" என்று பாடினார்.

மதயானை அவரைப் பிரதக்ஷிண நமஸ்காரம் பண்ணிவிட்டு ஏவினவனையே தாக்குவதற்குப் பாய்ந்தது. அவன் ஓட்டம் பிடித்தான்.

"கணபதி என்னும் களிறு" பற்றி அவர் என்ன சொல்லியிருக்கிறாரென்றால்: நம்மில் ஒவ்வொருத்தரும் நூறாயிரம் ஆசைகளை வைத்துக் கொண்டு, ஒன்று பூர்த்தியானால் இன்னொன்று என்று ஸதா பரபரக்கிற, படபடக்கிற சஞ்சல மனஸுக்காரராக இருக்கிறோம். இதைத்தான் "பல பல காமத்தராகிப் பதைத்தெழுவார் மனம்" என்றார். சாதாரணமாகச் சொல்வது, ஆசாபூர்த்திக்கு ஏற்படும் இடையூற்றை அகற்றி அது நிறைவேற அநுக்ரஹிக்கிறவரே விக்நேச்வரர் என்பது. ஆனால் அப்பர் ஸ்வாமிகளோ அப்படிச் சொல்லாமல் ரொம்ப 'ஹை லெவ'லுக்குக் கொண்டு போய் விடுகிறார். நல்ல விஷயஜ்ஞான புலவர்கள் எப்படி அர்த்தம் பண்ணுவார்களோ, எனக்குத் தோன்றுகிற அர்த்தம் இப்படித்தான். என்னவென்றால்: ஆசைப் பூர்த்தி என்று போனால் அதற்கு முடிவேயிருக்காது. ஒன்று பூர்த்தியாச் சென்றால் இன்னொன்று என்று அது போய்க் கொண்டேதான் இருக்கும். முடிவிலே அத்தனை ஆசைகளும் ஸம்ஸார பந்தத்தை மேலும் மேலும்





இறுக்குகிறவைதான். கணபதி இதற்குத்தான் அநுக்ரஹிக்கிறாரென்றால் அதொன்றும் சிறப்பில்லை என்று அப்பர் நினைத்திருக்கிறார். அவர் அபிப்ராயத்தில் – 'அநுபவத்தில்' என்று சொல்லணும் – கணபதி என்ன பண்ணுகிறார்? ஆசைகளினால் சதா பதறிக் கொண்டிருக்கும் நம் மனஸில் பிள்ளையார் 'கலமலக்கிட்டுத் திரிகிறா'ராம். அப்படியென்றால் ஒரே கலக்காகக் கலக்கிக் கொண்டு உத்ஸாஹமாகச் சுற்றுகிறார் என்று அர்த்தம். ஏற்கனவே ஆசைகளால் பதைத்துக் கலங்கிப் போயிருக்கிற மனஸை அவர் எதிர்த்திசையில் போட்டுக் கலக்குகிறார். கலக்கல், அதற்கு எதிர்க்கலக்கல், *revolution* ம் அதற்கு எதிரான *counter- revolution*–ம் என்றால் என்ன ஆகும்? முதலாவதை இரண்டாவது சமனம் பண்ணி, கலக்கம் எல்லாம் அடங்கி *equilibrium* என்கிற ஸமநிலையான பரம சாந்த நிலை உண்டாகும். மனசு அப்படி சாந்தமாக அடங்கி விட்டால் அதுதான் மோக்ஷம். ஒரு களிறு – ஆண் யானை – எத்தனை சக்தியோடு ஒரு சுழலுக்குள்ளே நுழைந்து கலக்கு கலக்கு என்ற கலக்கி விளையாடிக் கம்பீரமாக சஞ்சாரம் பண்ணுமோ, அப்படி நம்முடைய ஆசைச் சுழல்மயமான மனஸுக்குள்ளே பரமகிருபையோடு விக்நேச்வரர் புகுந்து எதிர்ச் சுழலாகச் சுழற்றிக் கொண்டு வெற்றிநடை போட்டுத் திரிகிறாராம்! இது அப்பர் சொல்வது.

சம்பந்தமூர்த்தி என்ன சொல்லியிருக்கிறா ரென்றால்: விக்நேச்வரர் பல வேறு சந்தர்ப்பங்களில் பல வேறு கோலங்களாக அவதரித் திருக்கிறார். அவற்றிலே ஒன்றில், பிடி என்கிற பெண் யானையாக அம்பாள் ஒரு ரூபம் கொண்டிருந்தாள். அந்தக் காலத்தில், ஸ்வாமி (சிவபெருமான்) தன்னுடைய அடியார்களுடைய இடர்களைத் தானே கடிந்து போக்கிவிடாமல் அதற்கென்றே 'ஆதரைஸ்' ஆன ஒரு விக்ன நிவாரண மூர்த்தியைத் தன்னுடைய பிள்ளையாகப் பெற்று, அந்தப் பிள்ளை மூலம் நடத்தணும் என்ற லீலையாக ஒரு சங்கல்பம் பண்ணினார். உடனே அவர் ஆண் யானையாகி, பிடியாயிருந்த அம்பாளோடு அப்படி ஒரு புத்ரோத்பத்தி பண்ணினார். இந்த விருத்தாந்தத்தைத் தான் சம்பந்தர், வலிவலம் என்று திருவாரூர்கிட்டே உள்ள ஷேத்திரத்தில் தாம் பாடிய தம்முடைய பதிகத்தில் சொல்லியிருக்கிறார்.

*பிடியதன் உருஉமை கொளமிகு கரியது*
*வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்*
*கடிகண பதிவர அருளினன் மிகுகொடை*
*வடிவினர் பயில்வலி வலம்உறை இறையே.*

வலிவலத்தில் தானதர்ம வள்ளல்களாக 'மிகுகொடை வடிவினர்' இருப்பதை ஸம்பந்தமூர்த்தி பார்த்தார். உடனே அவருக்குப் பரமேச்வரன் லோகம் பூராவுக்குமாக அளித்திருக்கிற பெரிய கொடை ஒன்றைச் சொல்லத் தோன்றிற்று. என்ன கொடை என்றால், அடியார் இடர் கடியவே அவர் கணபதியை வரவழைத்தாரே, அதுதான்! 'தனதடி வழிபடும் அவரிடர் கடி கணபதி வர அருளி'னாரே அதுதான்!

விக்னேஸ்வரருக்குப் பல நாமாக்கள் இருந்தாலும் அப்பர் பாடல், ஸம்பந்தர் பாடல் இரண்டிலும் கணபதி என்ற நாமாவே வருகிறது. பிள்ளையார் மந்திரங்களில் முக்கியமானவற்றிலும் அந்தப் பேர்தான் இருக்கிறது. பிள்ளையார் மதத்தின் பெயரும் 'காணபத்யம்' என்ற அந்தப் பேரை வைத்தே இருக்கிறது.

சுந்தரமூர்த்தி ஸ்வாமி இந்த இரண்டு பேரைப் போலப் பிள்ளையாரைப் புகழ்ந்து பாடவில்லை. பரமேச்வரனையே ரொம்பவும் நிந்தாஸ்துதி செய்த 'வன்றொண்டர்' அல்லவா அவர்? பிள்ளையாரையும் அப்படித்தான் இறக்கியிருக்கிறார்! ஒரு இடத்தில் "கணபதியேல் வயிறுதாரி" என்று[1]. இன்னோரிடத்தில், கணக்கு வழக்

கில்லாமல் தின்று கொண்டு தொப்பையை வளர்க்கிறதைத் தவிர வேறே ஒன்றும் தெரியாத கணபதி என்ற அர்த்தத்திலே 'எண்ணிலியுண் பெருவயிறன் கணபதி, ஒன்றறியான்' என்று சொல்கிறார்[2]. இங்கேயும் இரண்டு இடத்திலேயும் கணபதி நாமாதான். இரண்டிலுமே பெருந்தீனிக்காரர் என்ற அவருக்கு வசவு!

இப்படி அவர் சொன்னார் என்றுதான் பிள்ளையார், "பெருந்தீனிக்காரன்னுதானே சொன்னே? அப்படியே இருக்கட்டும். ஔவை படைக்கற பெருந்தீனி முழுசையும் ஸாவகாசமா மொக்கி (வி)ட்டும், ஒனக்கு முந்தி அவ கைலாஸத்துல சேரும்படிப் பண்றேனா, இல்லியா, பார்!" என்று கடைசியில் பண்ணிக்காட்டினார் போலிருக்கிறது!

ஆனாலும் அவர் சுந்தரருக்கு நிறைய அநுக்ரஹங்களும் பண்ணித்தான் இருக்கிறார்.

### சுந்தரருக்கு அருள்

அப்பர் – சம்பந்தர்களுக்கு அன்பிலில் ஏற்பட்டாற் போல, சுந்தரரும் திருவையாற்றுக்குப் போனபோது காவேரியில் பெரிய வெள்ளமாக வந்து அவரைத் தடுத்தது. அவர் எதிர்க்கரையிலேயே நின்று கொண்டு, "ஐயாறுடைய அடிகளே!" ஓலம் ஓலம்! என்று கதறினார். இங்கேயும் அப்பாவுக்கு முந்தித் திருவையாற்றுப் பிள்ளையார்தான் பக்தர் கஷ்டத்தைத் தெரிந்து கொண்டு அவருடைய ஓலத்தை அப்பாவுக்குத் தாமே 'ரிலே' பண்ணினார். அதனாலே அவருக்கு 'ஓலமிட்ட விநாயகர்' என்றே பெயர். தோழர் – 'தம்பிரான் தோழர்' என்று சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளைச் சொல்வார்கள் – அந்தத் தோழர் ஓலமிட்டு, அதை மூத்த புத்ரனும் 'ஸெகன்ட்' பண்ணின கணமே ஸ்வாமி வெள்ளத்தை வடிய வைத்தார்.

நண்பர் என்கிற முறையிலே சுந்தரர் ஸ்வாமிகிட்டே எதை வேணாலும் கேட்பார். பரவை நாச்சியார் என்று அவருக்கு ப்ரியமானவள். அவள் சுந்தரமூர்த்திகளின் ஊரான திருவாரூர் கோவிலில் நாட்யம் பண்ணுகிறவர்களில் பரம பக்தையான ஒரு உத்தமி. ரொம்பவும் தானதர்மிஷ்டை. அவள் வாரிக் கொடுக்கிறதற்காக ஸுந்தரர் அப்பப்போ "பொன்னு தா", "நெல்லு தா" என்றெல்லாம் ஸ்வாமியிடம் நச்சரித்துப் பெற்றுக் கொள்வார். அப்படி, 'திருமுதுகுன்றம்' என்று தேவாரத்தில் சொல்லியிருக்கும் விருத்தாசலத்திலேயும் அவர் பொன் கேட்டு, ஸ்வாமியும் பன்னிரண்டாயிரம் பொன் கொடுத்தார். சுந்தரர் அதோடு விடாமல், "கொடுத்தது மட்டும் போறாது. இதைக் காபந்து பண்ணி எடுத்துண்டு நான் ஊர் ஊராப் போய்த் திருவாரூர் சேருகிறது கஷ்டம். ஆனதாலே இதை நீயே எப்படியாவது அங்கே சேத்துடு" என்றார்.

ஸ்வாமியும் "சரி" என்றார். ஆனால் கொஞ்சம் லீலை பண்ணவும் நினைத்து, "இந்தப் பொன்னை இங்கே ஓடற மணிமுத்தாற்றிலே போட்டுடு, அப்புறம் ஊர் ஊரா என்னைப் பாடிண்டு திருவாரூருக்குப் போய் அங்கே கமலாலயத்திலே – அதுதான் அங்கே உள்ள பிரசித்தி பெற்ற திருக்குளம் – ஈசான்ய (வடகிழக்கு) மூலையிலேருந்து கலெக்ட் பண்ணிக்கோ" என்றார்.

"அப்படியே!" என்று மணிமுத்தாற்றிலே பொன் மூட்டையைப் போடப் போன சுந்தரருக்கு ஒரு சந்தேஹம் வந்தது, "நாம படுத்தியெடுக்கறோம் என்கிறதாலே ஸ்வாமி ஏதாவது கொனஷ்டை பண்ணி வெக்கப் போறார்! இங்கே உசந்த மாற்றுத் தங்கமாக் குடுத்துட்டு கமலாலயத்திலே எடுக்கறப்போ மாற்று கொறைச்சுடப்போறார்" என்று




நினைத்தார். மாற்று என்பது காரட் மாதிரி. 24 காரட், 14 காரட் என்கிறோமே அப்படி 24 ஐயே 14 ஆக ஸ்வாமி பண்ணி விடப்போகிறாரே என்று சுந்தரர் நினைத்தார். இரண்டு இடத்திலேயும் உரைத்து மாற்றுப் பார்த்துக் கொள்வதுதான் நல்லது என்று நினைத்தார்.

உடனே அவருக்கு சஹாயம் செய்வதற்காகப் பிள்ளையார் அவர் பக்கத்தில் வந்து நின்றார். பொன்னை உரைத்துப் பார்த்து, பத்தரை மாற்று – 24 காரட் – என்ற 'ஸர்டிஃபை' பண்ணினார். விருத்தாசலம் கோவிலில் அறுபத்து மூவருக்குப் பக்கத்தில் 'மாற்றுரைத்த பிள்ளையார்' என்றே அவர் இருக்கிறார், அறுபத்து மூவரையும் சொல்லித் திருத்தொண்டத்தொகை பாடியவர் சுந்தரர்தானே?

அந்தப் பொன்னில், பின்னாடி 'கம்பேர்' பண்ணுவதற்காக ஸாம்பிளாக 'மச்சம்' என்று ஒரு துணுக்கை சுந்தரர் வெட்டியெடுத்துக் கொண்டு மூட்டையை அப்படியே மணிமுத்தாற்றில் போட்டு விட்டார்.

அப்புறம் க்ஷேத்ரம் க்ஷேத்ரமாகப் பாடிக்கொண்டே போய்த் திருவாரூரை அடைந்தார். பரவை நாச்சியாரைக் கமலாலயத்தின் ஈசான்யத்தில் படித்துறையில் நிறுத்தி விட்டுக் குளத்துக்குள் இறங்கினார், பொன்னை எடுப்பதற்காக!

இவர் நினைக்காத ஒரு கொனஷ்டையை ஸ்வாமி பண்ணினார். ஏதோ மாற்றுதான் குறைந்தது என்றில்லாமல் முதலுக்கே மோசமாக ஸ்வாமி விளையாடினார். இவர் தேடு தேடு என்று தேடியும் பொன் மூட்டையே அகப்படவில்லை!



பரவையானால், "எங்கேயோ ஆத்துலே போட்டுட்டு இங்கே கொளத்துலே தேடறீரே ஸ்வாமி!" என்று பரிகாசம் பண்ணினாள். அவள் சொன்னது பிற்பாடு வசனமே ஆகிவிட்டது!

சுந்தரருக்கு எரிச்சல் பொத்துக்கொண்டு வந்தது. உணர்ச்சி ஜாஸ்தியானால் அவருக்குப் பாட வந்துவிடும். ஆனால் வழக்கம் போல் நிந்தாஸ்துதி பண்ணினால், இந்தத் தடவை ஸ்வாமி காது கொடுக்காமலிருந்து, ஒரு பொம்மனாட்டிக்கு முன்னே தாம் இன்னும் அவமானப் படப் போகிறோமே என்பதால் ரொம்பவும் தைரியமாகவே குழைந்து வேண்டிக் கொண்டு பதிகம் பாடினார். பொன் ஸமாசாரமானதால் "பொன் செய்த மேனியினீர்!" என்றே ஆரம்பித்துப் பாடினார். (பிறிதொரு சமயத்தில்) "பொன்னார் மேனியனே"! பாடினதும் சுந்தரர்தான்.

ஸ்வாமி இவருடைய பாட்டைப் பெறணுமென்றே தான் சோதித்தது! இவர் பாடினவுடனே பொன் அகப்படும்படிப் பண்ணிவிட்டார்!

இங்கேயும் பிள்ளையார்தான் வந்து மாற்றுப் பார்த்தார். அதனால் திருவாரூரிலும் ஒரு மாற்றுரைத்த விநாயகர் உண்டு.

சுந்தரர் நினைத்த கொனஷ்டையையும் ஸ்வாமி இப்போது பண்ணியிருந்தார்! மச்சத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால், மாற்று குறைந்திருந்தது! 14 காரட்!

பாட்டு ப்ரியரை சுந்தரர் மறுபடி ஸ்துதித்தார். ஸ்வாமியும் பதினாலை இருபத்து நாலாகவே மாற்றிக் கொடுத்தார்.

அப்புறம் ஒரு ஸமயம் சுந்தரமூர்த்தி, சேரமான் பெருமாளுடைய ஊருக்குப் போய் அரண்மனையில் தங்கி விட்டுப் புறப்பட்டார். ராஜாவான சேரமான் அவருக்கு ராஜோபசாரம் பண்ணி வழியனுப்பும்போது மூட்டை மூட்டையாக – 'பொதி' என்று சொல்வது; அப்படி – நிறையப் பொதி பொன்னும் பொருளும் கொடுத்தனுப்பினார். ராஜஸேவகர்கள் அவற்றைத் தூக்கிக் கொண்டு வர, சுந்தரர் கொங்கு நாட்டு வழியாகத் திருவாரூர் திரும்பிக் கொண்டிருந்தார்.

திருப்பூருக்குக் கிட்டே திருமுருகன்பூண்டி என்ற க்ஷேத்ரம். அங்கே காட்டு வழியில் சுந்தரர் ஆள்களோடு போய்க் கொண்டிருந்தார். அந்த ஊர் ஸ்வாமி பார்த்தார். 'வழக்கமாக நம்மிடம் அதைத் தா, இதைத் தா என்று நச்சரித்தபோது ஒரு க்ஷேத்ரம் விடாமல் நம்மிடம் வந்து பாடியவன், இப்போது நம்மை லக்ஷ்யமே பண்ணாமல் அல்லவா பெரிய ராஜஸம்பாவனையுடன் போகிறான்? நாம் ஏதாவது கொடுத்தால், 'நீயே அதைத் திருவாரூரில்

சேரு' என்கிறவன், ராஜஸேவகர்கள்தான் நிஜமான துணை என்ற தைரியத்தில்தானே இப்போது காட்டிலே இத்தனை பொதியுடன் போகிறான்?' என்ற நினைத்தார். கொஞ்சம் சோதனை லீலை செய்வதற்கு முடிவு பண்ணினார்.

பூதகணங்களை வேடர்களாக ஆக்கி சுந்தரர் கோஷ்டியை எதிர்த்து வழிப்பறி செய்ய வைத்தார். உயிருக்கு ஹானி செய்யாமல் அந்த கணங்கள் பொருளை மட்டும் பிடுங்கிக் கொண்டு ஸ்வாமியிடம் வந்து பொதியைக் கொடுத்துவிட்டன.

எல்லாம் பறி கொடுத்துவிட்டு சுந்தரர் என்ன செய்வது என்று தெரியாமல் நின்று கொண்டிருந்தார்.

அப்போது அந்த ஊர்ப் பிள்ளையாருக்குத்தான் கருணை பெருகிற்று. ஊருக்குப் பேர் திருமுருகன்பூண்டி அந்த முருகன் "வைதாரையும் வாழ வைப்பான்" என்கிறார்கள். ஆனால் அந்த ஊரிலோ அவனுடைய அண்ணாக்காரர்தான் தன்னை 'வயிறுதாரி' என்று சுந்தரர் வைததையும் நினைக்காமல் அவரை வாழவைக்க நினைத்தார்!

அதனால் கோவிலை விட்டே கொஞ்ச தூரம் ஓடி வந்தார். சற்றுத் தூரத்தில் சுந்தரரைப் பார்த்தவுடனேயே ஒரே கூவலாகக் கூவி அவரைக் கூப்பிட்டார். "இங்கே கோவிலில் இருக்கிற என் அப்பாதான் கணங்களை அனுப்பி வழிப்பறி செய்தது. அதிலே கணபதியான எனக்குப் பங்கு இல்லை. நீ கோவிலுக்கு வந்து அவரைப் பாடு. நீ பாடி விட்டால் அவர் மனஸு குளிர்ந்து, தான் பண்ணினதை அப்படியே மாற்றி விடுவார்" என்று தகவல் கொடுத்து உபாயமும் சொல்லிக் கொடுத்தார். சுந்தரமூர்த்தியைக் கூவிக் கூவிக் கூப்பிட்ட அந்தப் பிள்ளையார் 'கூப்பிடு பிள்ளையார்' என்ற பெயரில் திருமுருகன் பூண்டியிலிருந்து அவிநாசிக்குப் போகிற வழியில் இருக்கிறார்.

அவருக்கு ரொம்பவும் நன்றி சொல்லி விட்டு, அவர் பரம கருணையோடு வழிகாட்ட சுந்தரர் கோவிலுக்குப் போனார். 'நிந்தாஸ்துதி பண்ணி இன்னும் கஷ்டம் ஏற்பட இடம் கொடுக்க வேண்டாம். ஸ்வாமியேதான் கொள்ளை நடத்தினது என்பதுகூட நமக்குத் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ள வேண்டாம். துஷ்ட வேடர்கள் நிறைந்த இந்த ஊரில் நீ இருக்கலாமா என்று ஸ்வாமியிடம்




அங்கலாய்த்துக் கொள்கிற ரீதியிலேயே பாடலாம்' என்று சுந்தரர் நினைத்தார். 'இங்கே ஏன் ஸ்வாமி, நீ வாஸம் பண்ணணும்?' என்று அர்த்தம் கொடுக்கும்படியாக ஒவ்வொரு பாடலும் "எத்துக்(கு) இங்(கு) இருந்தீர். எம்பிரானே?" என்று முடித்துப் பதிகம் பாடினார்.

ஸ்வாமியும் தாம்தான் அந்த வழிப்பறியை 'அரேஞ்ஜ்' பண்ணினது என்று காட்டிக் கொள்ளாமல், அந்த வேடர்களுக்கே மனஸ் மாறிவிட்ட மாதிரிக் காட்டி, கணங்களை மறுபடி வேடர்களாக்கி அவர்கள் பொதியை எல்லாம் ஸந்நிதியிலேயே சுந்தரருக்கு முன்னாடி கொண்டு வந்து போட்டுவிடும்படி பண்ணினார்.

பக்தர்களும் பகவானும் விளையாடிக் கொள்கிறதற்கு எல்லையே இல்லை!

## விநாயகரும் மாணிக்கவாசகரும்

தேவாரம் பாடிய மூவரைப் பற்றி விக்நேச்வர ஸம்பந்தமாக இவ்வளவு! ஆனால் மாணிக்கவாசகர் அவருடைய திருவாசகத்திலே பிள்ளையாரைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. இருந்தாலும் அவருடைய வாழ்க்கையிலே இவர் நெருக்கமாக ஸம்பந்தப் பட்டிருக்கிறார்.



பழங்காலத்திலே பாண்டிய நாட்டிலேயிருந்து சோழ தேசம் போகிறதற்கு ஆவுடையார்கோவில் வழியாகத்தான் நல்ல சாலை இருந்தது. மாணிக்கவாசகர் காலத்தில் ஆவுடையார்கோவிலுக்கு திருப்பெருந்துறை என்று பெயர். அங்கே வழிப்போக்கர்கள் தங்குவதற்கு ஒரு சத்திரம் இருந்தது. அதற்குப் பக்கத்தில் வானம் பார்க்க, அதாவது கூரையில்லாமல், ஒரு பிள்ளையார் உட்கார்ந்திருப்பார். வெயிலில் வந்த யாத்திரிகர்கள் ஒரு கூரையின் கீழ் 'ரெஸ்ட்' பண்ணிக் கொள்ளும் சத்திரத்துக்குப் பக்கத்திலேயே இப்படி அத்தனை வெயிலையும் தன் மேலே வாங்கிக் கொள்கிற ஒரு பிள்ளையார்! இன்னும் சில இடங்களிலும் இப்படி உண்டு. அங்கேயெல்லாம் 'வெயில் உகந்த பிள்ளையார்' என்று அவருக்குப் பேர் சொல்லுவார்கள். இங்கேயோ 'வெயில் காத்த பிள்ளையார்' என்ற பேர். என்ன வித்யாசமென்றால் மற்ற இடங்களில் ஜனங்கள் அநுபவிக்கிற வெயில் கஷ்டத்தை நாமும் அவர்களோடு சேர்ந்து அநுபவிப்போமே என்று 'ஸிம்பதி'யிலே அவராக வெயிலை பிரியப்பட்டு உகந்து ஏற்றுக் கொள்கிறார். இங்கேயோ அதற்கு மேலே ஒரு படி போய், சத்திரத்தில் தங்கினவர்கள் அப்புறம் யாத்திரை தொடரும்போது வெயிலால் கஷ்டப்படாமல் அந்த வெயிலை அவர்களுக்குமாகச் சேர்த்து *Vicarious suffering* என்கிறார்களே, அப்படித் தாமே வாங்கிக் கொண்டு, அவர்களை உஷ்ணத்திலிருந்து காப்பாற்றுகிறார். அதனால் 'வெயில் காத்த பிள்ளையார்' என்று பெயர் பெற்றிருக்கிறார்.

பாண்டிய ராஜாவுக்காகக் குதிரை வாங்கப் போன மந்திரி திருவாதவூரர் அப்புறம் மாணிக்கவாசகர் என்ற மஹானான கதை தெரிந்திருக்கும். அவர் குதிரை வாங்கப் போகிற வழியில் அந்தத் திருப்பெருந்துறைச் சத்திரத்தில் தான் இரவு தங்கினார். அப்போது அவருடைய ஸ்வப்பனத்திலே வெயில் காத்த பிள்ளையார் தோன்றினார். வெயிலா, *suffering* – ஆ எதுவும் தெரியாத பரப்ரஹ்மமே தாம் என்று வாதவூரருக்குத் தெரிவிக்க நினைத்து, தான் ஒருத்தரே ப்ரஹ்ம – விஷ்ணு–ருத்ரர் ஆகிய மூன்று ரூபமுமாக மாறி அவருக்குக் காட்சி கொடுத்தார். கொடுத்த அப்புறம், "இந்த ஊரிலே பரப்ரஹ்மத்துக்குக் கோவில் கட்டு. அரூபமாகவும் நிர்க்குணமாகவும் இருக்கிற தத்துவத்துக்கு எப்படிக் கோவில் கட்டுவது என்று கேட்காதே. அதற்கு நேரடியாகக் கோவில் கட்ட முடியாதுதான். ஆனாலும் அப்படி ஒரு தத்துவம் உண்டு என்று ஸகல ஜனங்களுக்கும் துளியாவது நினைப்பு வர வேண்டுமல்லவா? அதற்காகத்தான் அதை 'ஸிம்பாலிக்'காக (உருவகமாக)ப் புரிந்து கொள்ளும்படி ஒரு கோவில் கட்டச் சொல்கிறேன்.

"ப்ரஹ்மம் அருவம், நாம் பார்க்கிற மூர்த்திகளுக்குள் சிவலிங்கம் தவிர பாக்கி எல்லாம் உருவம். சிவலிங்கத்துக்கு அவயவங்கள் கொண்ட உருவமும் இல்லை; அது அருவமுமில்லாமல் ஒரு நீள உருண்டையாயிருக்கிறது. அதனால் அருவுருவம் என்று அதற்குப் பேர். சிவலிங்கத்துக்குப் பீடம் இருக்கிறதே, ஆவுடையார் என்று, அதுவே ப்ரஹ்ம – விஷ்ணு–ருத்ர ஸ்வரூபம். அதற்கு மேலே சிவம் என்கிற அருவ ப்ரஹ்மம் இருப்பதை ஸிம்பாலிக்காகக் காட்டத்தான் லிங்கம் வைத்தது.

"ஆனால் உருவ தத்வத்திலேயே ருசியுள்ள ஜனங்கள் அதை மறந்துவிட்டு லிங்கத்தையும் ஒரு உருவ மூர்த்திதான் என்று நினைக்கிறார்கள். பொது ஜனங்கள் உள்ள ஸ்திதியில் அப்படி நினைப்பதுதான் இயற்கை. அதனால் மற்றக் கோவில்களி லெல்லாம் அப்படியே இருந்து விட்டுப் போகட்டும். ஆனாலும், இத்தனாம் பெரிய



தேசத்தில் ஒரு இடத்திலாவது வேதத்தின் பரம தாத்பர்யமான பரப்ரஹ்மத்தை, அருவப் பரம்பொருளை, அழுத்தமாக ஞாபகப்படுத்த ஒரு ஆலயம் வேண்டாமா? உருவம் என்பதிலிருந்து அருவுருவம் என்கிற வரையில் கொண்டு விட்டிருக்கிற ஈச்வரனுக்குத்தான் அதற்கும் அடுத்த நிலையான அருவமாக வைத்தும் கோவில் கட்டினால் பொருத்தமாயிருக்கும்; ஜனங்களின் மனோபாவத்துக்கும் அதுவே சரியாய் வரும்.

"ஆனபடியால் நீ இங்கே ஆவுடையாரை மட்டும் மூலஸ்தானத்தில் வைத்து, அதற்கு மேல் லிங்கம் ப்ரதிஷ்டை பண்ணாமல் காலியாகவே விட்டுக் கோவில் கட்டு, காலி என்பதால் சூன்யமில்லை, அதுதான் நம் இத்தனை ஜீவாத்மாக்களுக்கும் மூலம் என்று ஜனங்களுக்குப் புரிவிப்பதாக அதற்கு ஆத்மநாதஸ்வாமி என்று பெயர் வை.

"நான் சொன்னேனே என்று இப்பவே காரியத்தில் இறங்காதே! இங்கே ஒரு குருந்த மரத்தின் கீழே என் தகப்பனார் குரு ஸ்வரூபத்தில் வந்து ஆத்மாவை நீ அநுபவத்தில் தெரிந்து கொள்ளும்படியாக – அதாவது, நம்முடைய ஆத்மா பரப்ரஹ்மமே என்பதை நீ அநுபவமாக அறியும்படி – உபதேசிப்பார். அதற்கப்புறமே ஆலய நிர்மாணம் பண்ணு" என்ற சொல்லி விட்டுப் பிள்ளையார் மறைந்து விட்டார்.

இப்படி ஒரு ஆனை சொன்னதன் மேல்தான் குதிரைக்கான பணத்தில் மாட்டுக்குக் கோவில் எழும்பிற்று! ஆவுடையார் என்பது மாடுதான்; பரமேச்வரனின் ரிஷபம்! ஆ – மாடு; உடையார் என்றால் ஸ்வாமி. கோவில் கல்வெட்டுக்களில் பார்த்தால் 'ஸ்வாமி' என்பதற்குத் தமிழ் வார்த்தையாக 'உடையார்' என்றே போட்டிருக்கும்: ராஜராஜீச்சுரமுடையார், திருநாகேச்சுரமுடையார் என்கிற மாதிரி. மற்ற மாடுகளுக்கெல்லாம் தலைமையில் அவற்றுக்கு ஸ்வாமியாக உள்ள ரிஷபந்தான் ஆவுடையார். மற்ற ஊர்களில் அந்த ரிஷபத்தின் மேலே லிங்க ரூபத்தில் பரமேச்வரன். ஜீவாத்மாக்களான அத்தனை பசுக்களுக்கும் உடையாரான பசுபதி மாட்டு ஜாதிப் பசுபதியான ஆவுடையார் மேலே உட்கார்ந்திருப்பார்.

பிள்ளையார் சொன்னபடியே அப்புறம் ப்ராம்மண குருவாக ஈச்வரன் வர, அவரிடம் வாதவூரர் உபதேசம் பெற்றுக் கொண்டு, ஆவுடையாரை மட்டும் வைத்துக் கோவில் கட்டினார். ஞானாநுபூதி பெற்றவுடனேயே அவருக்கு மணி மணியாகத் திருவாசகம் பாட வந்ததால் மாணிக்கவாசகர் என்ற புதுப் பெயரும் உண்டாகி விட்டது.

அரூப ஸ்வாமி ! ஆவுடையார் மட்டுமே மூல ஸ்தானத்தில் இருந்ததால் ஜனங்கள் அந்தத் திருப்பெருந்துறைக்கும் 'ஆவுடையார் கோவில்' என்று புதுப் பெயர் வைத்துவிட்டார்கள்.

அம்பாளும் அங்கே அரூபந்தான். இவர் ஆத்மநாதர் என்றால் அவள் யோகாம்பிகை.

இப்படி அவர்களை அரூபமாக விட்டதற்கு வட்டியும் முதலுமாக மாணிக்கவாசகர் என்ன பண்ணினாரென்றால் கோவில் கட்டச் சொன்ன பிள்ளையாருக்கே அங்கே மூன்று மூர்த்திகள் சேர்ந்தாற்போல் வைத்து விட்டார். அவர் இவருக்கு மும்மூர்த்திகளாக மூன்று ரூபத்தில் தரிசனம் தந்ததால் இவரும் அவருக்கு மூன்று மூர்த்தி வைத்து விட்டார் – மும்மூர்த்திகளும் அவரே என்று காட்டுவதாக.

இரட்டைப் பிள்ளையார் பல ஊரில் உண்டு. ஆவுடையார் கோவிலில் மட்டும் மூன்று பிள்ளையார்!

*நன்றி: 'தெய்வத்தின் குரல்'*



# இலக்கியத்தில் விநாயகர்

**பண்டிதர் – கலாநிதி செ. திருநாவுக்கரசு**

வடமொழி நூல்களைப் போலவே தமிழிலக்கிய நூல்களிலும் விநாயகர் பற்றிய சிந்தனைகளும், வர்ணனைகளும் பலவாறாக அமைந்துள்ளன. யானை முகத்தர்; இடைஞ்சல்களுக்கு அரசர்; எடுத்த கருமத்தை நிறைவேற்றுபவர்; கணத்தலைவர்; பார்வதி மைந்தர்; ஒற்றைத் தந்தர்; முதற்பூசைக்குரியர்; அரசமரத்தடி அமர்பவர்; கொழுக்கட்டை உண்பவர்; அறுகம்புல்லால் அர்ச்சிக்கப்படுபவர்; பெருச்சாளி வாகனர் தலைவர்; நூல் ஆக்குபவர்; தொந்தியுடையவர்; ஓம் என்னும் மந்திர வடிவினர் என்றவாறெல்லாம் விநாயகப் பெருமான் கருதப்படுவது தமிழர் மரபாகக் கைக்கொள்ளப்படுகிறது. பாசம், அங்குசம், தந்தம், வேதாளம், சக்தி (வேல்) அம்பு, வில், சக்கரம், கத்தி கேடயம், சம்மட்டி, கதை, நாகபாசம், சூலம், குந்தாயி, மழு, கொடி, தண்டம், கமண்டலம், பரசு, கரும்பு வில், சங்கம், புஷ்பபாணம், கோடரி, அட்சமாலை, சாமரம், கட்டுவாங்கம், தீயகல், வீணை முதலானவற்றை ஆயுதங்களாகவே பொருட்களாகவோ கைகளில் ஏந்தியுள்ள விநாயகரை தமிழ் இலக்கியங்கள் காட்டத் தவறவில்லை. வெள்ளிக்கிழமை, மாதந்தோறும் வரும் வளர்பிறைச் சதுர்த்தி ஆவணி மாதச் சதுர்த்தி, கார்த்திகை மாதத்துக் கார்த்திகைக்கு அடுத்து வரும் பிள்ளையார் கதை நாட்களாகிய 21 நாட்கள் ஆகிய விநாயகர் சிறப்பு வழிபாட்டு நாள்கள் பற்றியும் பல தமிழ் நூல்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

ஓம் என்ற சொல்லின் அகர, உகர, மகர ஒலிகள் இணைந்து வேதத்தின் உட்பொருளாகிய பிரணவத்தை உணர்த்துகின்றன. ஓம் என்ற ஒலி வடிவமே பிள்ளையார். அவர் ஓங்கார வடிவினர் என்ற நம்பிக்கை தமிழர்களிடையே உண்டு. அதேபோன்று புள்ளியை முதலில் இட்டு அதனோடு சேர்த்து கோடு நீட்டி எழுதும் "பிள்ளையார் சுழி" முறையினை, எழுதும் போது முதலில் இட்டுக் கொள்வதும் காணப்படுகிறது. – பிந்து புள்ளி வடிவமாகவும் நாதம் கோடாகவும் விளங்கி முறையே சக்தியும் சிவமும் இணைந்த வடிவமே பிள்ளையார் என்பதை உணர்த்துவதாகக் கருதப்படுகிறது.

வடமொழி சிவசங்கிரக சங்கிதையின் தழுவலாக கச்சியப்ப சிவாச்சாரியாரால் தமிழில் ஆக்கப்பட்ட சமயக் காப்பியம் கந்தபுராணமாகும். இது, கி.பி 14ஆம் நூற்றாண்டளவில் எழுந்ததாகலாம். பல தமிழறிஞர்கள், சோழர் காலத்தின் பிற்பகுதியில் கந்தபுராணம் எழுந்ததென நம்புகின்றனர். இந்நூலில் "ததீசி வாக்கியம்" எனும் பகுதி 280 பாடல்கள் கொண்டது. இதனையே தமிழில் உள்ள விநாயக புராணம் என்கின்றனர். விநாயகரின் தோற்றம் பற்றிக் கச்சியப்பர் கூறுகையில், சிவபெருமானும் உமாதேவியாரும் திருக்கைலாய மலையில் உள்ள பூங்காவில் அமர்ந்திருந்த ஒரு வேளையில் அங்குள்ள சித்திர மண்டபத்தின் சுவர் புறத்தில் காணப்பட்ட ஓம் எனும் பிரணவத்தை ஒத்து விழித்துப் பார்க்க, அவை ஆண், பெண் வடிவு கொண்ட இரு யானைகளாகத் தோன்றி ஒன்றுகூடி அக்கூட்டத்தின் பயனாக பிள்ளையாரைத் தோற்றுவித்தனர் என்கிறார். இதனையே திருஞானசம்பந்தர் தமது முதலாம் திருமுறையில் "பிடியதனுருவுமை கொள" என்னும் திருவலிவலப் பதிகத் தேவாரத்தினூடு தெளிவுபடுத்துகிறார். மூவர் தேவாரங்களிலும் விநாயகர் பற்றிய சில தகவல்கள் கிடைக்கின்றன.

அப்பரும் சம்பந்தரும் கி.பி 7ம் நூற்றாண்டினர் என்பது கருதத்தக்கது. சுந்தரரது காலம் கி.பி 8ம் நூற்றாண்டு. எனவே பல்லவர் ஆட்சிக் காலத்தில் பிள்ளையார் வழிபாடு தமிழகத்தில் வழக்குற்றமை நிதர்சனமானது. பெரும்பாலும் தமிழர்கள் பிரமச்சாரி வடிவிலேயே விநாயகரை வழிபட்டனர். வடநாட்டவரோ சித்தி, புத்தியாகிய தேவியருடன் சேர்த்தே வழிபடுகின்றனர். மேலும் வல்லபை, நீலசரஸ்வதி ஆகியவர்களையும் இணைத்து கணபதியின் சக்திகள் நால்வரென்பர். உச்சிட்ட கணபதி, மகா கணபதி, ஊர்த்துவ கணபதி, பிங்கள கணபதி, லட்சுமி கணபதி என்பன சக்தியுடன் சேர்ந்த விநாயகர் வடிவங்கள் ஆகும்.



விநாயகர் பன்னிரு அவதாரங்களை எடுத்ததாக வடமொழி, தமிழ்மொழி புராண இலக்கியங்கள் கூறுகின்றன. கஜானனர், விநாயகர், சிந்தாமணி, மயூரேசர், விக்கினேராஜா, கணபதி, விக்கிரதுண்டர், பாலசந்திரா, மகோற்கடர், வல்லபை கணேசர், துண்டி விநாயகர், தூமகேது என்பனவே இவையாகும். பிள்ளையார் கயமுகாசுரனை வதைத்தமை, ஔவை, கம்பர், நம்பியாண்டார் நம்பி ஆகியோருக்கு அருள் புரிந்தமை முதலான கதைகளும், பாடல்களும் தமிழ்மொழியிலுள. விநாயகர் சந்நிதியில் தோப்புக்கரணம் மூன்று முறையிட்டு வழிபடுதலோடு கயமுகாசூரன் கதை இணைக்கப்பட்டுள்ளது. தேவர்கள் அவனுக்குச் செய்த வழிபாட்டினையே, அவனது ஆணவத்தை அழித்து அவனை பெருச்சாளி (எலி) வாகனமாக்கிக் கொண்ட விநாயகப் பெருமானுக்கும் செய்ததாகக் கூறப்படும் மரபையொட்டி எழுந்ததே இச்செய்கை எனலாம். உருவமில்லா இறைவன் விலங்கு, மனிதர், பூதம், தேவர் ஆகிய நான்கு படைப்புகளின் உருவமான பிள்ளையாராய்த் தோன்றினார் என்றும் அவர் பாசம் (படைத்தல்) அபயம் (காத்தல்), அங்குசம் (அழித்தல்), மோதகம் (அருளல்), தும்பிக்கை (மறைத்தல்) ஆகியவற்றை ஐந்து கரங்களிலும் ஏந்தியவர் என்றும், முகத்தில் உள்ள இரு கொம்புகளில் வலதானது பாரதக் கதையினை எழுதும்போது முறிந்தது என்றும், சுளகுச் செவியுடையவர், மூன்று கண்கள் உடையவர், பிறையினை முடியில் அணிந்தவர், பாம்பை அணிந்தவர் என்றும் பலவிதமாக விநாயகரின் தோற்றமும் அருட் செயல்களும் தமிழ் நூல்களில் அழகுபடப் புனையப்பட்டுள்ளன.

*சந்த மலரணி தாழ் சடையன்*
*தந்த மதத்தவன் றாதை யோதான்*
*அந்த மில்பாடலோன ழகனல்ல*
*எந்த வனிராமன மீச்சரமே.*

எனச் சம்பந்தர் திருவிரமனதீச்சரப்பதிகத்தில் பாடியமை இங்கு நோக்கத்தக்கது. மேலும் அவர், "செற்றிட்டேவெற்றி" (திருக்கழுமலம்), "நெருப்புறு வெண்விடை" (திருப்பிரம புரம்), "கரியின் மாமுகமுடைய கணபதி" (சீர்காழி) எனத் தொடங்கும் பாசுரங்களிலும் விநாயகர் தோத்திரம் செய்துள்ளார் எனலாம். சம்பந்தரது வாழ்வுக் காலத்தின் முன்பும் பின்புமாக வாழ்ந்த திருநாவுக்கரசரோ தமது பாடல்களிலும் விநாயகர் பெருமைகளை பேணி உள்ளமை புலனாகிறது.

*பல பல காமந்தராகிப் பதைத்தெழுவார் மனத்துள்ளே*
*கலமலக்கிட்டுத் திரியுங் கணபதி*

(திருவதிகை வீரட்டாணம்– 4 ஆந் திருமுறை)

*முன்னை யார் மயிலூர்தி . . .*
*பிள்ளையாரவர் பேரெயிலாளரே*

(திருப்பேரெயில் 5ஆந் திருமுறை)

*கோவாய விந்திர னுள்ளிட்டாராகக்*
*குமரனும் விக்கின விநாயகனும்*

(திருப்புறம்பியம் –6ஆந் திருமுறை)

*பொருந்தாத செய்கை ... ... ...*
*மெல்லியலும் விநாயகனும் தோன்றக் கண்டேன்.*

(திருவாரூர் – 6ஆந் திருமுறை)

*கைவேழ முகத்தவனை படைத்தார்*


(திருவீழிமிழலை – 6ஆந் திருமுறை)

*முந்தை காண் ..... ...... .......*
*தந்தை காண் கடமா முகத்தினார்க்கே*

(திருக்கச்சியேகம்பம் – 6ஆந் திருமுறை)

சிவபெருமானைப் போற்றி செய்யும் முகமாக அவர் மூத்த பிள்ளையையும் புகழுகின்ற தன்மையினை நாவுக்கரசரின் தேவாரங்கள் காட்டுகின்றன. சுந்தரமூர்த்தி நாயனாரின் "திங்கடங்கு சடையின்" எனத் தொடங்கும் திருப்பதிகத்தில் "கணபதி யேல் வயிறுதாரி" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு விநாயகர் பற்றிய கருத்துக்கள் பல்லவர் காலத்தில் எழுந்த தேவார முதலிகளின் திருப்பதிகங்களில் முன்னோடியாக விளங்கியிருப்பதற்கு அவர்களது தேவாரங்கள் வேதசாரமாகக் காணப்பட்டமையும் காரணமாயிருக்கக் கூடும். சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய திருக்கைலாய ஞான உலாவில் "வேழமுகத்து விநாயகனை யுள்ளுறுத்தி சூழ்வளைக்கை தொண்டைவாய் கெண்டையொண் கட்டாழ் கூந்தல் மங்கையெழுவரும்" என்கிறது.

கி.பி ஐந்தாம் நூற்றாண்டின் பின்னர் தமிழகத்தில் களப்பிரரின் ஆட்சி ஏற்பட்டுப் படிப்படியாக அது நிலைபெற்று மறுபடியும் 6ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பல்லவர்களிடம் வீழ்ச்சி கண்டது. களப்பிரர் ஆட்சிக்காலத்தில் சமண, பௌத்தர்களின் வருகையும் புறச்சமய எழுச்சியும் ஏற்பட்டது. வடமொழிச்



செல்வாக்கு மிகவும் அதிகரித்ததுடன் பிராமணிய மேன்மையும் ஏற்பட்டது. இச்சந்தர்ப்பத்திலேயே வேதாகமக் கருத்துக்களும், புராண – இதிகாசக் கருத்துக்களும் அதிகளவில் உட்புகுந்தன. தமிழர்களின் முருகனும், வடநாட்டு ஸ்கந்தனான ஸ்சுப்பிரமணியனும் ஒன்றாயினர். தமிழரின் திருமால், வடவரின் விஷ்ணுவுடன் சங்கமமாகினார். சிவனும், உருத்திரனும் ஒரே இயல்பாகினர். தமிழர் கடைப்பிடித்த பூசை முறையானது வடக்கின் ஆரிய நெறிப்பாற்பட்ட கிரியைகளுடன் இணைந்து கொண்டது. இத்தகு சூழ்நிலைகளின் அருட்டுணர்வே தமிழ் மக்களிடையே மெல்லமெல்லக் கணபதியாகிய விநாயகர் வழிபாட்டினை ஏற்கச் செய்திருக்க முடிந்ததெனலாம்.

பல்லவர் காலத்தை அடுத்துள்ள 400 ஆண்டுகால சோழர் ஆட்சியின் போது தமிழ் இலக்கியம் வளமும், பலமும் பெற்று விளங்கியது. அக்கால இலக்கியங்கள் தாராளமாகவே பிள்ளையார் வழிபாட்டினை முதன்மைப்படுத்திய முதல் காப்புச் செய்யுளானது விநாயகர் வணக்கமாகவோ பல தெய்வங்களுடன் விநாயகரையும் இணைத்து வழிபடுவதாகவோ அமைந்து காணப்பட்டது. சில விதிவிலக்காகவும் அமைந்தன. "தன தனற்றோழா" என்ற திருவிசைப்பாவில் திருமாளிகைத் தேவரும், "குணமணிக்குருளை" எனத் தொடங்கும் திருவிசைப்பாவில் சேந்தனாரும் விநாயகப் பெருமானைக் குறித்துப் பாடியுள்ளனர். சேக்கிழாரின் பெரிய புராணமானது,

*எடுக்கு மாக்கதையின் தமிழ்ச் செய்யுளாய்*
*நடக்கு மேன்மை நமக்கருள் செய்திட*
*தடக்கை யைந்துடைத் தாழ்செவி நீண்முடிக்*
*கடக் களிற்றை கருத்துளி ருத்துவாம்.*

என விநாயகரை நெஞ்சத்தே நிலை நிறுத்துகின்றது. கந்தபுராணத்தில் காப்புச் செய்யுள் "திகடசக்கரச் செம்முகமைந்துளான்" எனத் தொடங்குவது நாம் அறிந்ததே. அதில்வரும் விநாயக புராணத்தில்,

*அம்பு யக்கண் அரியவன் வாசவன்*
*உம்பர் அவ்வரை ஒல்லையின் நீங்குறாத்*
*தம்ப தந்தொறுஞ் சார்ந்தனர் வைகினார்*
*தும்பி யின்முகத் தோன்றல் அருளினால்.*

என விநாயகர் புகழப்படுகின்றார். விநாயகர் புராணத்தில் வரும் பிள்ளையார் பற்றிய கதைகளே பிற்காலத் தமிழ் நூல்கள் பல வற்றிலும் எடுத்தாளப் பட்டுள்ளன.

சோழர் காலத்தெழுந்ததும் முதற்பரணி இலக்கியமுமான சயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணியில் ஐங்கரன்துதியும் எட்டு அடிகளில் கூறப்பட்டுள்ளது. ஆனால் ஏனைய தெய்வங்களுக்கான வணக்கங்களுடன் இதுவும் சேர்க்கப் பட்டுள்ளது. அதில்,



*காரண காரியங்களின் கட்டுஅறுப்போர் யோகக்*
*கருத்து என்னும் தனித்தறியில் கட்டக், கட்டுண்டு*
*ஆரணமாம் நாற்கூடத்து அலைந்து நிற்கும்*
*ஐங்கரத்து ஒரு களிற்றுக்கு அன்பு செய்வோம்*

எனக் கூறப்பட்டுள்ளது. சோழர் காலத்தின் இலக்கிய மெனக் கருதப்படும் நளவெண்பாவிலும் தெய்வ வணக்கங்களில் முதலாமிடம் விநாயகருக்கே அளிக்கப்பட்டுள்ளது.

*நேசம் இதங்கூர் நிலவலயம் தாங்கிநளன்*
*மாசரி தங்கற பெருந்துணையாம் – ஈசன்*
*கரியா னைத்தான் கருது புகழ்பூன்*
*கரியா னைத்தான் கழல்.*

நளவெண்பாவைப் போலவே பன்னிரு படலத்தின் வழிநூலான புறப்பொருள் வெண்பாமாலையின் தெய்வ வணக்கங்களாக ஆனைமுகன், சிவபிரான், கலைமகள் பற்றிய பாடல்கள் காணப்படுகின்றன. கி.பி 12ஆம் நூற்றாண்டளவில் தெய்வத் திருமுறைகளைத் தேடியெடுத்துத் தொகுத்தளித்தவர் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி. அவரியற்றிய திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை 20 பாடல்களால் பிள்ளையார் பெருமை பேசித் துதிக்கின்றது. கி.பி 9–14 நூற்றாண்டு வரையுள்ள காலமானது சோழராட்சிக்குரியது. 13 ஆம் நூற்றாண்டுப் பிற்பகுதியிலேயே சோழர் வலிகுன்றத் தொடங்கினர். சைவசித்தாந்த தத்துவத்தினை விளக்கும் மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கும் சோழர் காலத்திற்குரியவை. இவற்றுள் பலநூல்களின் கடவுள் வாழ்த்து விநாயகருக்குரியது. மெய்கண்டாரின் சிவஞானபோதம், உமாபதி சிவாசாரியாரின் சிவப்பிரகாசம், திருவருட்பயன் என்பன இதற்கு உதாரணங்களாகும்.

*கல்லார் மலையின் வில்லார் அருளிய பொல்லார்.*
*சிவஞானபோதம்*

*நற்குஞ் சரக்கன்று கண்ணிற் கலைஞானம்*
*கற்குஞ் சரக்கன்று காண்– திருவருட்பயன்*
*ஒளியான திருமேனி யுமிழ்தான மிகமேவு*
*களியார வருமானை கழனாளு மறவாம*
*வளியாளு மலர்தூவு மடியார்க ளுளமான*
*வெளியாரும் வலிதாய வினைகூட நினையாவே*
*சிவப்பிரகாசம்.*

பல்லவர் காலத் தமிழிலக்கியங்களில் விநாயகர் பற்றிய செய்திகளும் போற்றுதல்களும் முளை கொள்ளத் தொடங்கி, சோழர் காலத் தமிழிலக்கியங்கள் பலவற்றில் தவிர்க்கவியலா வண்ணம் முதல் வணக்கத்துக் குரியவராகவோ சிறப்பு வணக்கத்துக்குரியவராகவோ விநாயகர் போற்றப்படுதல் பரவலாக்கம் பெற்றது. இதனையடுத்துள்ள நாயக்கர் காலத்தில் இந்த மரபு மேலும் இறுக்கம் பெற்று விளங்கியது. பழைமையை மீட்கும் இந்து சமயப் போராட்டத்தில் விநாயகரின் நிலை மேலும் உயர்த்தப்பட்டது. கணேச புராணம், முற்கலி புராணம், பவிடியபுராணம், கணபதி உபநிடதம், கணேசகீதை போன்ற விநாயகர் பற்றிய வடமொழி நூல்களிலுள்ள கருத்துக்கள் தமிழில் எழுந்த புராண நூல்களில் பிரதிபலித்தன. நாயக்கர் காலந்தொட்டுத் தமிழில் பலநூற்றுக்கணக்கான புராணங்கள், தல புராணங்கள் என்பன எழுந்துள்ளன. இவற்றுள் விநாயகர் வணக்கம் இயல்பாகவே முதனிலைப் படுத்தப்பட்டுள்ளது. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் தமது நால்வர் நான்மணி மாலையில்,

*எப்போ தகத்து நினைவார்க் கிடரில்லை*
*கைப்போ தகத்தின் கழல்*

என்கிறார். அவரே சிறுவர்களுக்கான நீதிநூலாகிய நன்னெறியில்,

*மின்னெறி சடாமுடி விநாயகன் அடிதொழ*
*நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே*

என்பதும் நோக்கத்தக்கது. கபிலதேவர் பாடிய மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை விநாயகரைப்

பற்றியது. இதனுடன், அதிராவடிகளின் மூத்த பிள்ளையார் திருமும் மணிக்கோவை, ஒளவையார் அருளிய விநாயகரகவல், நக்கீரர் அருளிய ஸ்ரீ விநாயகர் அகவல், காசிபமுனிவர் வடமொழியில் இயற்றிய தை கச்சியப்ப சுவாமிகள் தமிழில் தந்த விநாயகர் கவசம், அருணகிரியாரின் சில திருப்புகழ்ப் பாடல்கள், சிவப் பிரகாசரின் பிரபுலிங்கலீலையின் கடவுள் வாழ்த்து, கல்லாடம் நூலின் இறுதிப்பாடல், ஒளவையாரின் நீதிநூல்களின் காப்புச் செய்யுட்கள், இராமலிங்கரின் அருட்பாக்கள் சில, சுப்பிரமணிய பாரதியாரின் விநாயகர் நான்மணி மாலை, சுன்னாகம் அ. வரதபண்டிதரின் பிள்ளையார் கதை முதலானவை விநாயகர் பெருமை பேசுவனவாகும். இன்று வரையில் பல நூற்றுக்கணக்கில் விநாயகரைப் போற்றும் நூல்கள் சிறியனவும் பெரியனவுமாகத் தமிழ்மொழியில் தோன்றியுள்ளன. அதனுடன் பல இலக்கியங்களில் காப்புச் செய்யுளாக அல்லது வணக்கப் பொருளாக விநாயகர் இடம் பெற்றுள்ளமை கண்கூடு.

இவற்றுக்கான சில உதாரணச் செய்யுட்களைப் பார்ப்போம்.

*சுரகு லாதிபன் தூய்மலர் நந்தனம் – பிரபுலிங்கலீலை.*

*பாரதத்தை மேருவெளி திகழ் கோடொடித்த நாளில்*
*வரைபவர் பானிறக் கணேசர் குவாகுவாகனார்*
*இளையோனே* – திருப்புகழ்

*கைத்தல நிறைகனி அப்பமோ டவல்பொரி*
*கப்பிய கரிமுகன் அடிபேணி* –திருப்புகழ்

*ஐந்துகரத்தானை முகப் பெருமானே'* – திருப்புகழ்

*வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை*
*நினைந்து வருவினைகள் தீர்ப்பாம்*
– பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடற் புராணம்.

இப்படியாகக் கி. பி. 7ஆம் நூற்றாண்டிலிருந்து இன்றுவரை விநாயகர் வழிபாட்டு மரபு தமிழர்களிடத்தே கடைப்பிடிக்கப்பட்டு வருவதனை அக்காலத் தமிழிலக்கிய நூல்கள் சுட்டுவதை நாமறிய முடிந்துள்ளது. தமிழகத்திற்குப் பிந்திவந்ததொரு நெறியான போதிலும் பிள்ளையார் வழிபாடு ஆழமாக வேரோடியுள்ளது. இலங்கைத் தமிழிலக்கியங்களின் வரலாறு கி. பி. 13ஆம் நூற்றாண்டிலிருந்தே ஓரளவு துவக்கம் பெற்றதாயினும், கி. பி. 1658 – 1796 காலப்பகுதிக்குரிய ஒல்லாந்தராட்சியின்போதே பறாளை விநாயகர் பள்ளு, பிள்ளையார் கதை ஆகிய தனிப்பிரபந்தங்கள் விநாயகர் மீது பாடப்பட்டன. அதன் தொடர்நிலை இன்றுவரை நீடிக்கிறது.

## திருப்புகழ்

*கைத்தல நிறைகனி அப்பமொடு அவல்பொரி*
*கப்பிய கரிமுகன் அடிபேணிக்*
*கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவர்*
*கற்பகம் எனவினை கடிதேகும்*
*மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்*
*மற்பொரு திரள் புய மதயானை*
*மத்தள வயிறனை உத்தமி புதல்வனை*
*மட்டவிழ் மலர்கொடு பணிவோனே*
*முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்*
*முற்படி எழுதிய முதல்வோனே*
*முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்*
*அச்சது பொடிசெய்த அதிதீரா*
*அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்*
*அப்புறம் அதனிடை இபமாகி*
*அக்குற மகளுடன் அச்சிறு முருகனை*
*அக்கண மணம்அருள் பெருமாளே.*



# ஸ்ரீ வித்யா கணபதி

ஸ்ரீ மஹா கணபதியை 'மகேஸ்வரன்' என்று ஆதிசங்கரர் கூறுகிறார். ஈஸ்வரனுக்கும் மேலானவர் என்ற பொருள்படக் குறிப்பிடுகிறார். கணபதியை முழுமுதற் கடவுள் என்று கூறுவதுண்டு. கணபதியை மட்டுமே வழிபடுபவர்கள் 'காணாபத்யர்' என அழைக்கப்படுவர்; இவர்கள் தீவிர பக்தர்கள். கணபதியைத் தவிர வேறெந்தத் தெய்வத்தையும் உயர்வாகக் கருதமாட்டார்கள். இப்படிப்பட்ட பக்தர்கள் கணபதியை சக்தியுடன் வழிபடுகிறார்களா என்று தெரியவில்லை.

சக்தியுடன் கூடிய பல விநாயக மூர்த்தங்கள் உள்ளன. அவரைப் பற்றிய நூல்களிலும் சக்தி கணபதியைப் பற்றி விரிவாகவே விளக்கப் பட்டிருக்கின்றன. சக்தி கணபதி திருவுருவங்கள் பல உள்ளன. அவற்றுள் ஒன்றான 'ஸ்ரீ வித்யா கணபதி' யைப் பற்றித்தான் இங்கு விளக்கப்படுகிறது.

சக்தியை முதன்மையாக வழிபடுபவர்கள் (சாக்தர்கள் எனப்படுவர்) 'ஸ்ரீ வித்யையை' மிகவும் சிரத்தையுடனும் உரிய உபாசனா மார்க்கங்களுடனும் பூஜை செய்வர். அவர்கள் 'ஸ்ரீ வித்யோபாசகர்கள்' என்று அழைக்கப்படுவார்கள் . தக்க குரு மூலம் தீட்சை பெற்று வழிபடுவார்கள்.

ஸ்ரீ வித்யா சக்தி கணபதியுடன் இணைந்து 'ஸ்ரீ வித்யா கணபதி' யாக விளங்குகிறார்.

ஸ்ரீ வித்யா கணபதியை ஆராதித்து வழிபடுவது என்பது மிகவும் கடினம். வழிபாட்டு முறைகளை நன்கு தெரிந்து கொண்டு, ஒரே சிந்தனையோடு பூஜை செய்யவேண்டும். பூஜைக்குரிய மந்திரங்களைச் சரியாக உச்சரிக்கவேண்டும். ஒழுக்கம், நேர்மை, சுத்தம் ஆகியனவெல்லாம் வழிபடுபவருக்கு இருத்தல் அவசியம். அப்படிச் செய்யும் மகான்கள் சிலரே இருப்பார்கள். சத்தியையும் கணபதியையும் இணைத்து வழிபட்டு சித்தி பெற்றுவிட்டால் அவர்களே 'ஸ்ரீ வித்யா கணபதி' ஸ்வரூபமாகி விடுகிறார்கள் என்று நூல்கள் கூறுகின்றன. அவரைப் பார்த்து வணங்கினாலே நம் துன்பங்கள் போய்விடும். அவர்களுடைய வாக்கு தெய்வ வாக்காக ஆகிவிடுகிறது.

ஸ்ரீ வித்யா கணபதியை ஆராதிப்பவர்கள் மிகச் சிலரே இருப்பார்கள். வழிபாடு கடினமானதுதான். இருந்தாலும் ஸ்ரீ வித்யா கணபதியைப் பற்றித் தெரிந்து கொள்வதில் தவறேதும் இல்லை.

சக்தியுடன் விநாயகர் இணைந்து கொண்டாரா? அல்லது விநாயகரோடு சக்தி சேர்ந்து கொண்டாளா என்ற விவரத்தை ஆராயாமல் 'ஸ்ரீ வித்யா கணபதி' யைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.



ஸ்ரீவித்யா கணபதியின் சிற்ப வடிவங்கள் பாரதத்தில் சில இடங்களில்தான் காணப்படுகின்றன. இவ்வுருவங்களைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு முன் ''ஸ்ரீவித்யா கணபதி''யின் தத்துவத்தைக் கொஞ்சம் தெரிந்து கொள்வது நல்லது.

'வாஞ்சா கல்ப லதா கல்பம்' என்ற நூல் – கணபதியைச் சக்தி உருவத்தில் வழிபட உதவும் அரிய பொக்கிஷமாகும். மந்திரங்கள் மறைபொருளுடன் இருக்கும் உபாசகர்கள் ஸ்ரீ கணபதியை, ஸ்ரீ வித்யா வாகவே நினைத்து வழிபடுகிறார்கள் என்று பெரியோர் கூறுவர்.

ஸ்ரீ வித்யா கணபதியை வழிபட முதலில் தக்க குருவின் மூலமாக மந்திர தீட்சை பெறவேண்டும். இது முதற் படியாகும்.

லலிதா சகஸ்ரநாமாக்களில் ஒன்றாக 'காமேஸ்வர முகாலோல கல்பித ஸ்ரீ கணேஸ்வரா' என்று ஒரு நாமா (பெயர்) வருகிறது. இந்நாமா, கணபதியின் ஆவிர் பாவத்தைப் பற்றிக் கூறுகிறது.

மேற்கண்ட வார்த்தைக்குப் பொருள்: சிவபெருமானுக்கு 'காமேஸ்வரன்' என்ற பெயர் உண்டு. "அவருடைய திருமுகத்தை அன்னை பராசக்தி பார்த்ததன் விளைவாக கணேசனைத் தோற்று வித்தவள்" என்ற கருத்து உள்ள நாமாவாகும்.

மகேஸ்வரனும் பராசக்தியும் இரு பெரும் சக்திகளாவர். இவர்களின் இணைப்பால் உலகமும், ஜீவன்களும் உய்கின்றன.

இம்மாபெரும் சக்திகளின் கூட்டுறவால் முதன்மை ஸ்தானம் வகிப்பவராக ஸ்ரீ கணேசர் சக்தி தெய்வமாகத் திகழ்கிறார்.

உடலும் உயிரும் ஒன்று சேர்ந்திருப்பதுதான் ஜீவ அமைப்பு. உடல் சக்தியின் கூறு. உயிர் சிவத்தின் கூறு. இவ்விரண்டின் தெய்வீக சேர்க்கைதான் கணேச மூர்த்தியில் இடம் பெறுகின்றன. அதனால் மஹா கணபதி 'ஸ்ரீ வித்யா கணபதி' யாகக் காட்சி தருகிறார்.



ஸ்ரீ வித்யா கணபதிக்குத் தனிச் சந்நிதியோ கோயிலோ அதிக அளவில் இல்லை. பாரதத்தில் சில இடங்களில்தான் ஸ்ரீ வித்யா கணபதியின் வடிவத்தைக் காணலாம். ஆனால் தென் பாரதத்தில் ஓர் இடத்தில்தான் ஸ்ரீ வித்யா கணபதிக்கு பூஜை முதலான வழிபாடுகள் நடக்கின்றன.

லலிதா சகஸ்ரநாமாவில் 'ஸ்ரீ வித்யா' என்ற திருப்பெயர் வருகிறது. அதற்கு சகல வித்தைகளுக்கும் முதன்மையாக விளங்குபவள் என்றும் தெய்வீக அழகுடையவள் என்றும், பொருள். ஸ்ரீ வித்யை மகாசக்தி படைத்தவள். ஆன்மிகவாதிகள் ஸ்ரீ வித்யையைப் பற்றி விரிவாக விளக்கிப் பேசுவார்கள்.

ஸ்ரீ வித்யா பல பிரிவு கொண்டவளாக உள்ளாள். யக்ஞ வித்யா, குஹ்ய வித்யா, பிரம்ம வித்யா, மஹா வித்யா என்று நான்கு ரூபங்களில் காணப்படுகிறாள்.

## ஸ்ரீ வித்யோபாசனையும் மஹா கணபதியும்

ஸ்ரீ வித்யோ பாசனை முறையில் தொடக்கத்தில் ஸ்ரீ வித்யா கணபதி உபாசனை உள்ளது. ஸ்ரீ சக்கரத்தில் பூஜை செய்யும் தகுதி கணபதிக்குத்தான் முதன்மை ஸ்தானம் உள்ளது. மஹா கணபதிக்கு ஸ்ரீ சக்கரம் உண்டு. ஸ்ரீ வித்யா உபாசகர்கள் நவாவரண பூஜையில் ஷோடசாநியாசம் என்றதோர் அங்கம் (பகுதி) உண்டு. அதில் கணபதி நியாசமும் இடம் பெறும். கணபதி நியாசம் என்றால், உகந்த சூரிய நிறத்தோடும். யானை முகத்தோடும், மூன்று கண்களோடும். பாசம், அங்குசம் வரதம் போன்றவற்றுடனும் சக்தியுடன் கூடிய விநாயகனைத் தியானிப்பது என்று பொருள்படக் கூறும் மந்திரமாகும்.

ஸ்ரீ மஹா கணபதியை 51 வித மாத்ருகா ஸ்தானங்களில் நியாசம் செய்யவேண்டும்.

## பஞ்சமுக விநாயகர் சக்தியின் வடிவமே !

மஹா கணபதி – சித்த கணபதி – சக்தி கணபதி– மோட்ச கணபதி – வித்யா கணபதி என்று இவ்வைந்து முகங்களோடு, 'பஞ்சமுக விநாயகர்' என்று அழைப்பர். இந்த விநாயகப் பெருமானோடு வித்யாவும் சக்தியும் இடம் பெறுகின்றனர்.



'ஐந்து' என்ற எண்ணில் சில விவரங்கள் உண்டு. ஐந்து திக்குகள், பஞ்சாட்சரம், பஞ்சகவ்யம், பஞ்சகோசம், பஞ்சதளம், பஞ்ச பிராமணங்கள், பஞ்சபூதங்கள் இப்படியாக ஐந்தின் மகிமையோடு விளங்குவதுதான் 'ஸ்ரீ வித்யா கணபதி' ரூபம். மேலும் சக்தியின் வாகனமான சிங்கத்தின் மீது ஐந்து முகங்களோடு காட்சி தருபவர் சக்தி விநாயகரே.

லலிதா சகஸ்ரநாமாக்களில் அம்பிகையை, பஞ்சமி, பஞ்சபூதேசி, பஞ்ச சங்க்யோபாசாரிணி என்று குறிப்பிடுவதெல்லாம், மஹா கணபதிக்கும் பொருந்தும். ஐந்து என்ற எண் உலகில் காணும் எல்லாப் பொருள்களிலும் சக்தியின் பரிமாணம் பரவியுள்ளது என்ற விவரம் தைத்ரீயோப நிஷத்தில் காணப்படுகிறது.

விநாயகப் பெருமானுக்கு ஐங்கரங்கள் இருப்பதாலும். ஐந்து முகங்களோடும் இருப்பதாலும் சக்தி தெய்வமாகவே விளங்குகிறார்.

யானை முகம் கொண்ட சக்தி தெய்வம் என்பதைவிட, சக்தியுடன் கூடிய 'ஸ்ரீ வித்யா கணபதி' என்றே கூறலாம்.

உருவ விளக்கம்: (வேதம்) ஸ்ரீ வித்யா கணபதிக்கு பன்னிரு கரங்கள் – சிரசில் பிறைச் சந்திரன் – மூன்று கண்கள் – சக்தியின் அம்சமாக இதய பாகம் இரு ஸ்தனங்களோடு காணப்படுகின்றன. பெண்களுக்குரிய அங்க அமைப்புகள் – துடி இடை – சிறு வயிறு (தொந்தியன்று) இடக்காலை மடக்கி, வலக்காலைத் தொங்கவிட்டு அமர்ந்த நிலையில் காணப்படுகிறார்.

## கரங்களும் அவற்றில் காணும் பொருள்களும்

வலக்கையில் – அமிருத கலசம் – இடக் கையில் சங்கிலி போன்ற ஆயுதம் – மற்றும் வலப்புறமுள்ள ஐந்து கரங்களும், இடப்புறம் ஐந்து கரங்களும், வலக்கைகள் ஐந்தில், கீழேயிருந்து மேல் நோக்கி வரம் – சூலம் – கரும்புவில் – கதாயுதம் – பிளந்த மாதுளம்பழம்.

இடக்கைகள் ஐந்தில் மேலிருந்து கீழ்ப் புறமாக, தாமரை – பாசக்கயிறு – ஆம்பல் மலர் – நெற்கதிர்– தன்னுடைய தந்தம்.

சிருங்கேரி சாரதா ஆலயத்தின் மேற்குப் பிராகாரத்தில் பத்துக் கரங்களுடன் சக்தி கணபதியைக் காணலாம். ஸ்ரீ வித்யா சங்கரர் ஆலயம் ஒரு தனிச் சிறப்பு வாய்ந்தது. அமைப்பு: ஸ்ரீ வித்யா கணபதி தெற்கில் சந்நிதி (தெற்குத் திசை) கொண்டுள்ளார்.

இங்கு ஸ்ரீ வித்யா கணபதியின் சிற்பமும் அதையொட்டி வண்ண ஓவியமும். பஞ்சமுக கணபதி உருவங்களையும் காணலாம்,

சிருங்கேரியீல்தான் 'ஸ்ரீ வித்யா கணபதி' கோயில் கொண்டுள்ளார் என்று ஊகிக்க முடிகிறது.

சுசீந்திரத்தில் உள்ள தாணுமாலேஸ்வரர் கோயிலில் உள்ள ஒரு தூணில் பெண் வடிவில் கணபதியின் சிற்பத்தைக் காணலாம். 'விக்னேஸ்வரி' என்று கூறுகிறார்கள். இரு கரங்களோடு, மெலிந்த இடையுடன் காணப்படும் கணபதி பெண் வடிவத்தில் இருந்தால் 'ஸ்ரீ வித்யா கணபதி' எனக் கூறலாம். ஒரு காலை மடக்கி மற்றொரு காலைத் தொங்கவிட்டு சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிறார். இதைப் பற்றிய வேறு விளக்கம் தெரியவில்லை.

வட இந்தியாவில் ஜபல்பூர் அருகே 'பீராகேட்' என்ற தலத்தில் கணேசர் பெண் வடிவில் காட்சி தருகிறார். மதுரை சுந்தரேஸ்வரர் சந்நிதிக்குப் போகும்போது வலப்பக்கத் தூண் ஒன்றில் 'கணேசனி' என்ற பெயருடன் பெண் ரூபத்தில் விநாயகரைக் காணலாம். வடிவீஸ்வரம் ஆலயத்திலும் பெண் ரூபத்தில் வீணை வாசிப்பது போன்ற பிள்ளையார் காணப்படுகிறார்.

*நன்றி: மாணிக்க விநாயகம்*



# திருமுறை தந்த விநாயகர்

**பேராசிரியர் – சுப திண்ணப்பன்**

திருமுறை என்னும் தொடர் தெய்வத்தன்மை வாய்ந்த நூல்களைக் குறிக்கும். சைவசமயத்தவர்க்கு வேதம் போல விளங்குவன திருமுறைகளே ஆகும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் பாடிய தேவாரப் பாடல்களும், மாணிக்கவாசகர் பாடிய திருவாசகப் பாடல்களும் திருக்கோவையாரும், சேந்தனார் முதலிய ஒன்பது பேர் பாடிய திரு இசைப்பா, திருப்பல்லாண்டுப் பாடல்களும், திருமூலர் இயற்றிய திருமந்திரமும், திருவாலவாயுடையார் முதல் நம்பியாண்டார் நம்பி ஈறாகப் பாடிய பாடல்களும், சேக்கிழார் இயற்றிய பெரிய புராணமும் திருமுறைகளாகத் தொகுக்கப் பெற்றன. இவற்றைத் தொகுத்துத் தந்தவர் நம்பி ஆண்டார் நம்பி என்பர். திருமுறைகள் பகுப்பால் பன்னிரண்டு. இயற்றியவர் எண்ணிக்கை இருபத்தேழு. இத்திருமுறைகள் சிவபெருமானை முழுமுதற் பொருளாகக் கொண்டு பாடப்பெற்றவை. இத்திருமுறை ஆசிரியர்கள் அனைவரும் இறைவனின் திருவருளைப் பெற வழிகாட்டியவர்கள். அத்தகைய வழிகாட்டிய அருமறைகளே திருமுறைகள். இவை தமிழில் பக்தி இலக்கியம் தழைக்க வழிவகுத்தன. இத்தகைய திருமுறைகளுக்கும் விநாயகப் பெருமானுக்கும் இருக்கும் தொடர்பினைத் திருமுறை தந்த விநாயகர் என்னும் தலைப்பில் ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம் ஆகும்.

திருமுறை தந்த விநாயகர் என்னும் தலைப்பினை இரண்டு வகையாக நோக்கலாம். திருமுறைகளைத் தந்த விநாயகர் என்பது ஒரு வகை நோக்கு. திருமுறைகள் தந்த விநாயகர் என்பது மற்றொரு வகை நோக்கு. முதல் நோக்கில் திருமுறைகள் வெளிப்பட – உலகுக்குக் கிடைக்கக் காரணமாக இருந்த விநாயகரைப் பற்றி விளக்கப்படும். இரண்டாம் நோக்கில் திருமுறைகள் காட்டும் – விவரிக்கும் விநாயகரைப் பற்றிய செய்திகள் இடம்பெறும்.

திருமுறைகள் எழுதப்பெற்ற ஏட்டுச் சுவடிகள் எவ்வாறு கிடைத்தன? அவை எவ்வாறு தொகுக்கப்பெற்றன? என்பதைத் திருமுறை கண்ட புராணம் என்னும் நூல் தெளிவாக விளக்குகின்றது. அதனை இயற்றியவர் உமாபதி சிவாசாரியார் எனக் கூறுவது மரபு. இதன்வழி விநாயகர் திருமுறைகளை வெளிக்கொணர்வதற்கு எவ்வாறு காரணமாக இருந்தார் என்பதைக் காண்போம். சோழப்பேரரசன் இராசராசன் ஒரு நாள் திருவாரூர்த் தியாகேசரை வணங்கிக் கொண்டிருந்தபோது சைவ அன்பர் சிலர் தேவாரப் பதிகம் ஒன்றைப் பாடக் கேட்டுக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி நின்றான். அந்நாள் முதலாகத் தேவாரப் பாடல்களை தேடித் தொகுக்க வேண்டும் என்னும் முயற்சியில் ஈடுபட்டான். அப்போது திருநாரையூரிலுள்ள பொல்லாப் பிள்ளையார் என்னும் விநாயகப் பெருமானுக்குப் பூசை செய்யும் மரபில் தோன்றிய நம்பியாண்டார் நம்பி என்னும் சிறுவனைப் பற்றிக் கேள்விப்பட்டான். அச்சிறுவன் தன் தந்தையார் வெளியூர் சென்றிருந்த போது விநாயகருக்குப் பூசை செய்தான். அப்போது அவன் வைத்த அமுதினை (நிவேத்தியத்தை) பொல்லாப் பிள்ளையாராகிய விநாயகப் பெருமான் உண்ணாதிருக்கக் கண்டு வருந்தித் தன் தலையைக் கல்லில் மோதப் போனான். உடனே பொல்லாப் பிள்ளையார் தோன்றித் தடுத்து அமுது உண்டார். அவர் அருளால் வேதம் முதல் பலகலைகளைக் கற்றறிந்தான். இந்த அதிசயத்தை அறிந்த சோழப்



பேரரசன் இராசராசன் தானும் அளவிலாத பொருள்களை திருநாரையூர் பொல்லாப் பிள்ளையாருக்குப் படைக்க திருநாரையூர் வந்து வணங்கி நின்றான். நம்பியின் வேண்டுதலுக்கு இணங்க அரசன் அளித்த பொருள்களையும் பொல்லாப்பிள்ளையார் அமுது செய்து அருளினார். இந்த அதிசயத்தைப் பார்த்த அரசன் விநாயகரிடம் மூவர் தேவாரப் பாடல்கள் இருக்கும் இடம் கேட்டறிந்து சொல்ல வேண்டும் என நம்பியிடம் வேண்டினான். அதற்கேற்ப நம்பியும் பொல்லாப் பிள்ளையாரை வேண்டி வழிபட்டார்.

நம்பியின் வழிபாட்டுக்கு இரங்கிய பொல்லாப் பிள்ளையார். தேவாரத் திருமுறைப் பாடல்கள் உள்ள ஏட்டுச் சுவடிகள் சிதம்பரத்தில் நடராசப் பெருமான் திருக்கோயிலில் ஓர் அறையில் கைகள் அடையாளமிட்டு வைக்கப் பட்டுள்ளதாக நம்பிக்குக் கூறி அருளினார். மேலும் அவற்றை இயற்றிய அன்பர் பெருமைகளை எடுத்து உரைத்தார். பிறகு நம்பி இவற்றை அரசனுக்கு எடுத்துக் கூற முற்பட்டார். சிவபெருமான் அருளிச் செய்த மந்திரங்களே திருமுறைகள், இப்பாடல்களை ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் வாயிலாகத் தேவாரமாக இறைவன் வெளிப்படுத்தினான் என்றும், இவை ஆயிரக்கணக்கான பாடல்கள் என்றும் நம்பி அரசனுக்குக் கூறினார். பிறகு அரசன் இத்தகைய செய்திகளை நம்பிக்கு அருளிச் செய்த பொல்லாப்பிள்ளையாரின் பெருங்கருணைத் திறத்தைக் கண்டு வியந்து நின்றான். பிறகு தில்லைக்கு– சிதம்பரத்துக்குச் சென்று அந்தணர்களிடம் முறையிட்டுத் திருமுறைகள் இருந்த அறையைத் திறந்து பார்த்தான். அங்கே ஏடுகளைக் கறையான் அரித்திருக்கக் கண்டு கவலையுற்றான். எஞ்சிய பாடல்களைக் கொண்ட ஏட்டுச் சுவடிகளை நம்பியிடம் கொடுத்து அவற்றைப் பகுத்து முறையாகத் தொகுக்கச் சொன்னான். அதற்கேற்ப நம்பியும் "தோடுடைய செவியன்" முதல் தொடங்கி "கல்லூர்ப் பெருமணம்" என முடியும் பாடல்கள் வரையுள்ள ஞான சம்பந்தர் பாடல்களை முதல் மூன்று திருமுறைகளாகவும், "கூற்றாயினவாறு" எனத் தொடங்கி "ஒரு மானைத் தரிக்கும்" என முடியும் திருநாவுக்கரசர் பாடல்களை 4,5,6 திருமுறை களாகவும். "பித்தா பிறைசூடி" எனத் தொடங்கி "ஊழிதோறும்" என முடியும் சுந்தரர் பாடல்களை 7ம் திருமுறையாகவும் தொகுத்தருளினார். இவ்வாறே பின்னர் திருவாசகம். திருக் கோவையார் 8ம் திருமுறையாகவும், திருவிசைப்பா. திருப்பல்லாண்டு 9ம் திருமுறையாகவும், திருமந்திரம் 10ம் திருமுறையாகவும், திருவாலவாயுடையார் முதல் நம்பியாண்டார் நம்பி முடியப் பதினொருவரின் பாடல்கள் 11ம் திருமுறையாகவும், சேக்கிழாரின் பெரியபுராணம் 12ம் திருமுறையாகவும் தொகுக்கப் பெற்றன. எனவே திருமுறை கண்ட புராணம் கூறும் வரலாற்றின் அடிப்படையில் பார்த்தால் திருமுறைகளை உலகிற்குத் தந்தவர் – அதாவது தில்லையில் பூட்டி வைக்கப்பட்ட திருமுறைச் சுவடிகளைக் காட்டி உலகிற்கு வெளிப்படுத்தியவர் பொல்லாப்பிள்ளையார் ஆகிய விநாயகப்பெருமானே என்னும் கருத்துத் தெரிய வரும். எனவேதான் இன்றும் சிதம்பரம் நடராஜப்பெருமான் கோயிலில் மேற்கு வாசல் படிக்கட்டுக்கு எதிரில் "திருமுறை காட்டிய விநாயகர்" திருவுருவச் சிலை இருப்பதைப் பார்க்கலாம்.

இனித் திருமுறைகள் விளக்கும் விநாயகப் பெருமானின் சிறப்புகளைப் பார்ப்போம். முதல் 7 திருமுறைகளாகிய தேவாரத்தில் விநாயகப் பெருமானுக்குரிய இடம் யாது என்பதை முதலில் காணலாம். தேவாரம் இயற்றிய ஞானசம்பந்தர்,

நாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் சிவபெருமானைத் தவிர வேறு தெய்வத்தை வணங்கும் இயல்பினர் அல்லர். எனவே சிவபெருமானோடு தொடர்புபடுத்தியே விநாயகரைப் பற்றி அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஞானசம்பந்தர் பின்வரும் தேவாரப் பாடலில் விநாயகப் பெருமானின் தோற்றத்தைப் பற்றிக் கூறுகின்றார்.

பிடியதன் உரு உமைகொள, மிகு கரியது
வடி கொடு தனது அடி வழிபடும் அவர் இடர்
கடி கணபதி வர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில் வலி வலம் உறை இறையே.


இப்பாடலில், உமை அம்மையார் பெண் யானை வடிவம் கொள்ளவும், சிவபெருமான் ஆண் யானை வடிவம் கொண்டு தன்னை வணங்கும் அடியவர்களின் துன்பத்தைப் போக்க விநாயகப் பெருமானைத் தோற்றுவித்தார் என்னும் கருத்தை ஞானசம்பந்தர் கூறுகிறார். விநாயகப் பெருமானை இங்கு கணபதி என அழைப்பதால் அவர் தேவகணம், பூதகணம், மனித கணம் முதலிய எல்லாக் கூட்டத்தினருக்கும் பதி– அதாவது தலைவர் என்னும் செய்தியும் தெரிகிறது. இதே கருத்தை "நீள்கோதைத் தெரியிழை பிடியதுவாய்... புகர்முக இறையைப் பெற்றிட்டே" என்று கூறி வலியுறுத்துகிறார். மேலும் இப்பாடலில் விநாயகரைச் சிவபெருமான் தோற்றுவித்ததன் நோக்கமே உலகிலுள்ளோர் துயரத்தையும், பிறவி நோயையும் போக்குவதுதான் என்று கூறுகிறார். "புகர்முக இறையைப் பெற்றிட்டே, மற்று இப்பார் பெருத்து மிக்க துக்கமும் பேரா நோய்தாம் மேயாமைப் பிரிவு செய்தவன்" என்னும் இப்பாடல் அடி இதனைக் காட்டும். புகர்முக இறை என்னும் தொடர் யானை முகத்தோன் விநாயகன் என்பதைக் கூறும். "கரியின் மாமுகம் உடைய கணபதி" என்னும் ஒரு பாடலில் சம்பந்தர் குறிப்பிடுகிறார்.



"ஒற்றைச்சேர் கொம்புடையான்" "முற்றற் கொம்புடையான்" "மருப்புருவன்" என்றெல்லாம் விநாயகப் பெருமானின் தந்தம் பேசப்படுகிறது. அவரின் முக்கண், தடக்கை பற்றிய குறிப்புகளும் உள்ளன. சிவபெருமானைக் "கணபதி தாதை" என்றும் மூன்று பாடல்களில் சம்பந்தர் குறிப்பிடுகிறார். எனவே ஞானசம்பந்தர் தேவாரத்தில் விநாயகர் தோற்றம், இடர் களையும் இயல்பு, வேழ முகம், முக்கண், தடக்கை கொண்ட உருவம் ஆகியவை இடம் பெற்றிருக்கக் காணலாம். தமிழ் இலக்கியத்தில் ஞானசம்பந்தர் தேவாரத்தில் தான் விநாயகரைப் பற்றிய குறிப்பு முதல் முதலாக வருகிறது என்பதை மையமாகக் கொண்டு ஞான சம்பந்தர் காலமாகிய கி.பி 6ம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் தமிழ் நாட்டில் விநாயகர் வழிபாடு தோன்றியதாக அறிஞர் கருதுவர்.



திருநாவுக்கரசர் தேவாரத்தில் விநாயகர் "ஆனை முகன்" "கடமா முகத்தினான்" "கணபதி" "வாரணன்" "விக்கின விநாயகன்" "விநாயகன்" "வேழ முகத்தவன்" என்னும் திருப்பெயர்களால் குறிக்கப்பெறுகிறார். கடமா என்பதும் யானையைக் குறிக்கும். இடர் கடி கணபதி என்பதையே இவர் விக்கின விநாயகன் என்று கூறுகிறார். வாரணம் என்பதும் யானையைக் குறிக்கும் சொல்லே. விநாயகன் என்னும் திருப்பெயர் சிறப்பு மிக்க தலைவன் – தன் ஒப்பாரில்லாத தலைவன் என்பதை உணர்த்தும் இச்சொல்லை தமிழ் இலக்கியத்தில் முதல் முதல் கையாண்டவர் நாவுக்கரசரே. மேலும் திருவாய்மூரில் சிவபெருமான் காட்சி தந்த போது "விநாயகனும் தோன்றக்கண்டேன்" என்ற நாவுக்கரசர் குறிப்பிடுவதை நோக்கும் போது விநாயகப் பெருமான் திருக்காட்சியை முதன் முதல் கண்டு நமக்கு காட்டியவரும் நாவுக்கரசரே எனக் கூறலாம். "விநாயகனும் போற்றிசைப்ப" என்று இன்னொரு பாடலிலும் இதனை வலியுறுத்துகிறார். அவர் மேலும், "ஆனை முதற்கு அப்பன்" என்றும் "தண் கடமா முகத்தினாற்குத் தாதை காண்" என்றும்



சிவபெருமானை அவர் அழைக்கிறார். "கைவேழ முகத்தவனை படைத்தார் போலும் கயாசுரனை அவனால் கொல்வித்தார் போலும்" என்னும் பாடலடியின் வாயிலாகச் சிவபெருமான் விநாயகனைப் படைத்துக் கயாசுரனை அழித்த வரலாற்றை நாவுக்கரசர் கூறுகிறார். இது ஒரு புதுச் செய்தி. கயாசுரனை விநாயகப் பெருமான் அழித்த கதை தோன்ற இந்த அடிகளே காரணமாக அமைந்தன போலும். இன்னொரு செய்தியும் இவர் கூறுகிறார். "பல பல காமத்தராகிப் பதைத்து எழுவார் மனத்துள்ளே கலமலக்கிட்டுத் திரியும் கணபதி என்னும் களிறு" என்னும் அடிகளின் வாயிலாக விநாயகப் பெருமான் பக்தர்கள் ஆசைகளை அகற்றித் தெளிவு தரும் ஞானப் பண்பினர், விருப்பங்களை நிறைவேற்றும் ஆற்றல் உடையவர் என்பதை அறிய முடிகிறது.

சுந்தரர் தேவாரத்தில் கணபதியைப் பற்றிய குறிப்பு இரண்டு பாடல்களில் இடம்பெறுகிறது. "எண்ணிலியுண் பெருவயிறன் கணபதி ஒன்று அறியான்" "கணபதியேல் வயிறு உதாரி" என்று கணபதியின் தொந்தி வயிற்றினைக் கூறிச் சிவபெருமானுக்கு அடிமை செய்ய மாட்டேன் என்று தம் நண்பரிடம் ( சிவனிடம்) எள்ளி நகையாடுகிறார் சுந்தரர். எல்லை கடந்த – எண்ணுக்கு அடங்காத (Infinity) – பொருள்களை உள்ளடக்கியவர் விநாயகர் என்பதை அவர் பெருவயிறு காட்டுகிறது. இதனைத்தானே சுந்தரர் நமக்குச் சொல்லாமல் சொல்கிறார்.

எட்டாம் திருமுறையாகிய மாணிக்கவாசகரின் திருவாசகம், திருக்கோவையார் ஆகியவற்றில் விநாயகர் பற்றிய குறிப்பு இல்லை.

ஒன்பதாம் திருமுறையாகிய திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகியவற்றிலும் விநாயகர் பற்றிய செய்திகள் மிகுதியாக இல்லை. திருமாளிகைத் தேவர் பாடிய திருவிசைப்பா ஒன்றில் சிவபெருமானைக் "குமர விநாயக சனக!" (அதாவது முருகனையும் விநாயகனையும் தோற்றுவித்தவனே!) என்று அழைக்கும் தொடர் ஒன்று இடம் பெறுகிறது. இவ்வாறே சேந்தனார் பாடிய திருவிடைக்கழித் திருவிசைப்பாவில் முருகனை "கணபதி பின் இளங்கிளையே" என்று (விநாயகர் தம்பி முருகன் என்று) அழைப்பதைப் பார்க்கிறோம்.


பத்தாம் திருமுறையாகிய திருமூலரின் திருமந்திரம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்து அடி போற்றுகின்றேனே.

என்னும் கடவுள் வாழ்த்துடன் தொடங்குகிறது. ஐந்து திருக்கைகளை உடையவர், ஆனைமுகத்தை உடையவர், சிவபெருமான் மைந்தர், ஞானத்தின் கொழுந்தாக விளங்குபவர் விநாயகர் என்னும் செய்தியை இப்பாடல் உணர்த்துகிறது. இத்தகையவரை என் மனத்தில் வைத்து வணங்குகிறேன் என்று இப்பாடல் கூறுகிறது. எனவே இதனைத் தியானத்திற்குரிய பாடல் எனச் சொல்லலாம். இந்து மதத்தில் எந்தக் காரியத்திற்கும் – சடங்கிற்கும் முதலில் கூறப்படும் "சுக்கிலாம் பரதம்" என்னும் வடமொழிப் பாடலுக்கேற்ற தமிழ்ப்பாடலாக இதனைக் கூறலாம். இப்பாடல் திருமந்திரத்தில் இடைச்செருகல் எனக் கருதுவாரும் உள்ளனர்.

பதினோராம் திருமுறையில் தான் விநாயகருக்கும் முருகனுக்கும் தனித்தனியாக நூல்கள் இடம்பெற்றுள்ளன. இத் திருமுறையில் இடம்பெற்ற கபில தேவநாயனார் இயற்றிய மூத்த நாயனார்,

திருவிரட்டை மணிமாலை என்னும் நூலும், அதிரா அடிகள் இயற்றிய மூத்த பிள்ளையார் திருமும் மணிக்கோவை எனும் நூலும் நம்பியாண்டார் நம்பி இயற்றிய திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை என்னும் நூலும் விநாயகப் பெருமானையே முழுமுதற் பொருளாகக் கொண்டு போற்றுகின்றன. விநாயகரின் சிறப்பையெல்லாம் விரிவாகப் பேசுகின்றன. விநாயகர் மூத்த பிள்ளையார், மூத்த நாயனார் என அழைக்கப் பெறுவதை இந்நூல் தலைப்புகள் எடுத்துக் கூறுகின்றன.




கபில தேவநாயனார் இயற்றிய நூலில்தான் "திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும்" "விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்" ஆகிய புகழ்மிக்க பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இவர் விநாயகருக்குத் தனியே நூல் ஒன்று இயற்றி இருந்தாலும் சிவபெருமானுடன் சார்த்தியே விநாயகரைப் பேசுகிறார். சிவபெருமானைப் பற்றி இத்திருமுறையில் இவர் இரண்டு நூல்கள் இயற்றியுள்ளார். இந்த இரட்டை மணிமாலையில் வெண்பா பத்தும் கட்டளைக் கலித்துறை பாடல்கள் பத்தும் ஆக இருபது பாடல்கள் உள்ளன. விநாயகரைப் படைத்தான் என்றும், விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதன் என்றும், விநாயகர் வெவ்வினையை அறுத்து, ஆசையையும் அறுப்பவர் என்றும், விநாயகரை வணங்கியவர்கள் திருமகள் அருள் பெற்றுச் செல்வராய்த் திகழ்வர் என்றும் கபில தேவநாயனார் கூறுகிறார். தேவர் வணங்கும் விநாயகர் அப்பம், இடி அவல், எள்ளுருண்டை, வாழை, பலா, மா ஆகிய முக்கனிகள் விரும்பும் பெருவயிறன் என்று இந்நூலில் பேசப்படுகிறார். யானைமுகத்தான், சிவன் சேய், மால்மருகன், உமையாள் காதற் புதல்வன், ஒரு கோட்டன், இரு செவியன், முக்கண்ணன், செம்மேனியன் என்றெல்லாம் விநாயகர் இங்கே விவரிக்கப்படுகிறார். விநாயகன், கணபதி என்னும் பெயர்களும் இடம்பெறுகின்றன. பெரும்பாலான பாடல்களில் சிவபெருமானின் புதல்வன் என்னும் செய்தியே உள்ளது.

அதிரா அடிகள் இயற்றிய மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவையில்,அகவல்,வெண்பா, கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்த முப்பது பாடல்கள் விநாயகரைப்பற்றி பேசுகின்றன. இப்போது 23 பாடல்களே இந்நூலில் உள்ளன. எஞ்சிய ஏழு பாடல்கள் கிடைக்கவில்லை. "சேவடி யுகளம் அல்லது யாவையும் இலம் இனி இருநிலத்தினிடையே" என்றும் "எந்தை அல்லது மற்று யாவுள, சிந்தை செய்யும் தேவதை நமக்கே" என்றும் வரும் இவர் பாடல் அடிகள் இவர் விநாயகரிடம் கொண்டிருந்த பக்தியை விளக்குகின்றன. கணபதி, போதகம், வேழக்கன்று, துளைக்கடவுள், கும்பக் கிழவி என்ற சொற்களால் விநாயகரை இவர் அழைக்கிறார். கணபதியின் விசுவரூபம்– பேருரு– அடி முதல் முடிவரை ஒரு பாடலில் அழகாகப் புனையப்படுகிறது (பா.22). மேலும் கணபதி அரக்கரை வென்றமை, வியாசர் கூறிய பாரதக் கதையை மேரு மலையில் விநாயகர் எழுதிய வரலாறு. சிவபெருமான் திரிபுரம் எரித்த போது விநாயகர் உதவியது, மாங்கனி பெற முருகன் உலகை வலம் வந்தமை ஆகிய புராணச் செய்திகளைக் கபிலதேவ நாயனார் கூறுவதை இந்நூலில் காண முடிகிறது. மேலும் உமையம்மை ஈன்ற சேயாகிய விநாயகர் நிலம், மேருமலை, வானம் எல்லாம் நடுங்கச் சப்பாணி (கை) கொட்டிய செய்தி பற்றியும் (2) ஏழு மலைகள், திக்கு யானைகள் பேர்ந்தாடச் செங்கீரை ஆடிய (மழலை பேசிய) செய்தி பற்றியும் இந்நூல் கூறுகின்றது. முருகன் உலகை வலம்வரத் தந்தையாகிய சிவனை வலம் வந்து மாங்கனி பெற்ற விநாயகர் வரலாற்றை முதல்முதலில் அதிரா அடிகளே கூறுகின்றார். இந்நூலில் இடம்பெற்றுள்ள ஒரு பாடல் வருமாறு:

> மொழியின் மறைமுதலே முந்நயனத்து ஏறே
> கழிய வரு பொருளே கண்ணே– தெழிய
> கலாலயனே எங்கள் கணபதியே நின்னை
> அலாது ஐயனே சூழாது என் அன்பு

நம்பியாண்டார் நம்பி அருளிய திருநாரையூர் விநாயகர் திரு இரட்டை மணி மாலையில் வெண்பா, கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்த 20 பாடல்கள் உள்ளன. இவை அந்தாதி முறையில் அமைந் துள்ளன. ஒவ்வொரு பாடலிலும் நாரையூர் என்னும் சொல்லாட்சி வருகிறது. ஏனைய பாடல்களில் கணபதி, ஐங்கரத்தான், சிவக்களிறு, ஒரு கொம்பன், கரிவதனன், முக்கண் அரசு, அத்திமருப்பினன் என்று விநாயகர் அழைக்கப்



படுகிறார். மேலும் அடுமருப்பினன், பெருச்சாளி ஊர்தி உடையவன், செந்தீ வண்ணன், கையில் மாங்கனி, கொம்பு அண்டம், பாசம், மழு உடையவன் என்று விநாயகர் இயல்புகளும் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. மேலும் இமையவள் (உமை) தான் பெற்ற யானை என்றும், நாரையூர் மன்னும் சிவன் மகன் என்றும், குமரற்கு முன்னவன் என்றும் நம்பி விநாயகரைப் பற்றிக் கூறுகிறார். தந்தையை வணங்கி மாங்கனியைப் பெற்றுக் கொண்டவர் விநாயகர் என்னும் கதைச் செய்தி இரண்டு பாடல்களில் வரக்காணலாம். (3,8) மேலும் விநாயகர் தம் கொம்பொன்றையே படையாகக் கொண்டு கயாமுகாசுரனை (யானை முக அசுரனைக் ) கொன்ற கதையும் ஒரு பாடலில் வருகிறது. "என்னை நினைந்து அடிமை கொண்டு என் இடர் கெடுத்துத் தன்னை நினையத் தருகின்றான்" நாரையூர் விநாயகப் பெருமான் என்று இந்நூலை நம்பி தொடங்குகிறார்.

இம்மூன்று நூல்களைத் தவிரப் பதினோராம் திருமுறையில் சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய திருக்கைலாய ஞான உலாவில் வேழ முகத்து விநாயகனை உள்ளுறுத்து மங்கையர் சூழ இறைவன் உலா வந்த செய்தி வருகிறது. பட்டினத்தாரின் திருவிடை மருதூர் மும்மணிக் கோவை என்ற நூலில் பவள மால்வரை போல்பவன், பணைக் கையோன், தாழ்ந்த செவி உடையவன் விநாயகர் என்னும் செய்தி இடம் பெறுகிறது. பக்தர்கள் குறைகளைத் தம் தாழ்ந்த காதுகளால் கேட்டு, அவர்கள் கேட்பனவற்றைத் தம் பெரிய கைகளால் வாரி வழங்குபவர் அல்லவா விநாயகர்? இவை தவிரப் பதினோராம் திருமுறையில் விநாயகர் பற்றிய குறிப்பு வேறு இடங்களில் இல்லை.

பன்னிரண்டாம் திருமுறையாகிய சேக்கிழாரின் பெரிய புராணத்தில் விநாயகர் பற்றிய செய்திகள் மிகுதியாக இல்லை. பாயிரத்தில் வாழ்த்துப்பாடல்களில் ஒன்றாக வரும் பாடல் கீழே தரப்பட்டுள்ளது.

எடுக்கும் மாக்கதை இன் தமிழ்ச் செய்யுளாய்
நடக்கும் மேன்மை நமக்கு அருள் செய்திடத்
தடக்கை ஐந்து உடைத் தாழ்செவி நீள்முடிக்
கடக்களிற்றை கருத்துள் இருத்துவாம்

இப்பாடலில் பெரியபுராணம் இன் தமிழ்க் காப்பியமாய் இலங்கிடத் தமக்கு அருள் புரியுமாறு விநாயகரைச் சேக்கிழார் வேண்டுகிறார். ஐந்து பெரிய கைகள், தாழ்ந்த காதுகள், நீண்ட முடி, ஆண்யானை வடிவம் உடையவர் விநாயகர் என்று இப்பாடலில் கூறப்பட்டுள்ளது. பிறகு சிறுத் தொண்ட நாயனார் புராணத்தில் திருச்செங்காட்டங்குடியில் சிறுத் தொண்டர் வழிபட்ட திருக்கோயிலின் பெயர் கணபதீச்சுரம் ஏன்னும் ஒரு செய்தியை மட்டுமே சேக்கிழார் கூறுகிறார். இங்கு கணபதி வழிபட்ட கோயில் என்னும் கருத்து ஒன்றே வெளிப்படுகிறது. இவை தவிரப் பெரிய புராணத்தில் பிற செய்திகள் விநாயகர் பற்றிக் காண இயலவில்லை. எடுத்த காரியம் இனிது நிறைவேற உதவுபவர் விநாயகர் தானே. சிறுத் தொண்டராகிய பரஞ்சோதியார் நரசிம்மவர்ம பல்லவனின் (கி.பி ஆறாம் நூற்றாண்டு) படைத் தலைவராக இருந்து வாதாபியை வென்று அங்கிருந்து விநாயகர் திருவுருவச் சிலையைத் தமிழ் நாட்டிற்குக் கொண்டுவந்து திருச்செங்காட்டங்குடியில் பிரதிஷ்டை செய்தார் என்றும் அறிஞர் எண்ணுவர்.

விநாயகப் பெருமானே திருமுறைகள் இருக்கும் இடத்தைக் காட்டி உலகிற்குத் தந்தவர் என்பதைப் பற்றியும், திருமுறைகள் காட்டும் விநாயகரின் தோற்றம், உருவம், பெயர், பெருமை, புராணக் கதைக் குறிப்பு ஆகியவை பற்றியும் இக்கட்டுரை வாயிலாக அறிந்துகொண்டோம். எனவே தமிழ் வேதமாகிய திருமுறைகள் தரணியில் பரவவேராகவும் விழுதாகவும் இருந்த விநாயகப் பெருமானை வணங்கி வழிபடுவோமாக.



# பிள்ளை யார்?

**திரு. க. வி. விக்னேஸ்வரன்**
*மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர், கொழும்பு.*

**மகன் :** ஆனைமுகனுக்கு ஏன் பிள்ளையார் என்கிறோம்?

**தகப்பன்:** முழுமுதற் கடவுள் சிவபெருமானின் பிள்ளை ஆனைமுகன். வள்ளலாக இருந்தவரை வள்ளலார் என்பதுபோல பிள்ளையாக இருப்பவரை பிள்ளையார் என்று மதிப்புக் கொடுத்து அவரை அழைக்கிறோம்.

**மகன் :** முருகனும் பிள்ளைதானே! அவரை ஏன் பிள்ளையார் என்று கூறுவதில்லை.

**தகப்பன்:** முதற்பிள்ளை ஆனைமுகன். பெருத்த வயிறன். அலட்டிக் கொள்ளாமல் இருந்த இடத்திலேயே இருந்து விடுவான். முருகன் துடுதுடுப்புள்ளவன்; அவனும் பிள்ளைதான். ஆனால் அவன் எங்களுடன் விளையாடும் பிள்ளை விளையாட்டுப்பிள்ளை. ஔவை யாரிடம் சுட்ட பழமா சுடாத பழமா வேண்டும் என்று கேட்டுத் திணறவைத்தவன். எங்கள் சக மாணவர்களை மதிப்புடன் நாங்கள் அழைக்கிறோமா? இல்லையே! ''அடே முருகா'' இஞ்ச வா!'' என்றுதானே அழைக்கிறோம். முதற்பிள்ளை மூத்த பிள்ளை, தொந்தியுடன் இருந்த இடத்தில் அமர்ந்திருக்கிறான். ஆகவே மதிப்பு மரியாதை கொடுத்து பிள்ளையாகப் பட்டவனை 'பிள்ளையார்' என்று அழைக் கிறோம். இவன் கடைக்குட்டி. இளையவனை, சிறியவனை நடைமுறையில் அவ்வாறு அழைப்பதில்லை. முருகா, வேலா, கந்தா என்றுதான் அழைக்கிறோம்.

**மகன் :** அப்பா! கடவுள்மாரிலும் அப்பா, அம்மா, மாமன், மாமி பிள்ளைகள் என்று குடும்பமாய் இருக்கிறார்களா?

**தகப்பன் :** (சிரித்துக் கொண்டே) ஏன் இருக்கக் கூடாதா?

**மகன் :** இல்லை எங்களைப் போலத்தானா அவர்களும் என்று கேட்க வந்தேன். அப்படி என்றால் எங்களுக்கும் அவர்களுக்கும் என்ன வித்தியாசம்?

**தகப்பன் :** மகனே! இந்து மதத்தின் அத்திவாரத்தையே தொடத் தொடங்கியுள்ளாய் இந்தக் கேள்வி யினூடு?

**மகன் :** அப்பா! முஸ்லீம்கள் ''அல்லா'' தான் சகலதும் என்கிறார்கள் கிறீஸ்தவர்கள் பரம மண்டலத்தில் இருக்கும் பிதாவைப் பற்றி மிகவும் பயபக்தியாகப் பேசு கிறார்கள். பௌத்தர்கள் கடவுள் என்று கூறா விட்டாலும் புத்தரைப் பூரண மனிதனாகப் பாவித்து கர்மவினைப் பயனை வலியுறுத்து கிறார்கள். நாங்களோ மனிதனுக்கு மிருகமும் கொடுத்து கையில் பழங்காலத்து ஆயுதங்கள் கொடுத்து, அப்பா, அம்மா சொந்தம் கொண்டாடி இரண்டு பெண்டாட்டிக்

காரன்களைக் கூட வணங்குகிறோம். மற்ற மதத்தவர்களுடன் ஒப்பிடும்போது எங்களுக்கு வெட்கமாக இருக்கிறது. நீங்கள் மிருகங்களையும் கும்பிடுகிறவர்கள் தானே என்று அலோஷியஸ் நேற்றுக் கூறினான். எனக்கு வந்த கோபத்தில் நாங்கள் மிருகங்களைத் தின்பவர்கள் அல்ல கும்பிடுகிறவர்கள் மட்டுமே என்று சொல்லி விட்டு வந்தேன். அப்பா உண்மையில் சிவன், பார்வதி, பிள்ளையார், முருகன், சித்தி, புத்தி, வள்ளி, தெய்வானை என்று ஒரு குடும்பமே இருக்கிறதா?

அப்பா : நல்ல கேள்வி. ரொம்ப நேரம் எடுக்கும் இதை விளக்க. இண்டைக்கு நீ விளையாடப் போகமுடியாது. பொறுமையுடன் இருந்து கேட்க வேண்டியிருக்கும். முடியுமா உன்னால்?

மகன் : "அலோஷியஸ்"க்கும், அபூசலிக்கும் அறை கொடுப்பது போல் இரண்டு வார்த்தை சொல்ல முடியுமென்றால் நான் விளையாடாமலே இருந்து கேட்கிறேன் அப்பா!

அப்பா : பார்த்தாயா? உனக்கு உன் சமயம் பற்றி அக்கறை இல்லை. அலோயிஷஸ் உடனும், அபூசலி உடனும் வாக்குவாதப் படத்தான் பிரியமாக இருக்கிறது. அறிவிலும் பார்க்க அகங்காரம் தான் அலாரிக்கிறது.

மகன் : இல்லை அப்பா! அவர்கள் தான் என்னைச் சீண்டி விடுகிறார்கள்.

அப்பா : அவர்கள் உன்னைச் சீண்டவில்லை யென்றால் நீ இவ்வளவு உற்சாகமாய் இருந்து கேள்வி கேட்க மாட்டாய் அல்லவா? உன்னை மேலும், மேலும் உன் மதம் பற்றி ஆராய வைக்க அவர்கள் இறைவனால் உன்னிடம் அனுப்பப் பட்டவர்கள். ஆகவே ஆராயப்படும் எம்மதமும் சம்மதம் என்பது தான் இந்து மதக் கோட்பாடு. அவர்கள் மீது கோபப்படத் தேவையில்லை.

மகன் : என்னப்பா! எம்மதமும் சம்மதம் தான் என்று எப்படிச் சொல்வது. அவர்கள்தானே எங்களைப் பார்த்துச் சிரிக்கிறார்கள். நாங்கள் பயந்து ஒதுங்கிக் கொள்ள வேண்டியிருப்பதால் தான் எம்மதமும் சம்மதம் என்று கூறிவிட்டு நழுவப் பார்க்கிறோம். முதுகெலும்பு இல்லாதவர்கள் நாங்கள்.

அப்பா : சரி! சரி! இன்று நீ உன் மதம் பற்றிச் சரியாகத் தெரிந்து கொண்டாயானால் நாளை அலோயிஷஸ், அபூசலி இரண்டு பேரும் உன் மதம் பற்றி உன்னிடம் தெரிந்து கொள்வார்கள். உன்னை மதிப்புடன் நோக்குவார்கள். அதில் சந்தேகமில்லை.

மகன் : சரி சொல்லுங்கள்.

அப்பா : இப்போ நீ எங்கே இருக்கிறாய்?

மகன் : இரத்மலானையில் இந்துக் கல்லூரிக் கருகில்.

அப்பா : இரத்மலானை எங்கே இருக்கிறது?

மகன் : கொழும்பில்.

அப்பா : கொழும்பு எங்கேயிருக்கிறது?

மகன் : இலங்கையில்.

அப்பா : இலங்கை எங்கே இருக்கிறது?

மகன் : இந்து சமுத்திரத்தில்.

அப்பா : அது எங்கே?

மகன் : ஆசியா கண்டத்தை ஒட்டி இருக்கிறது?

அப்பா : ஆசியா எங்கே இருக்கிறது?

மகன் : உலகத்தில்.

அப்பா : உலகம் எங்கே இருக்கிறது?

மகன் : (யோசித்துக் கொண்டு) அந்தரத்தில் சுற்றுகிறது.

அப்பா : என்னத்தைச் சுற்றுகிறது ?

மகன் : தன்னைத் தானே சுற்றுகிறது. அத்துடன் சூரியனையும் சுற்றி வருகிறது.

அப்பா : தன்னைத்தான் சுற்றுவதால் நாட்களும், பகல், இரவு என்பவையும் வருகின்றன. சூரியனைச் சுற்றுவதால் பருவ காலங்கள் வருகின்றன. அப்படித்தானே?

மகன் : ஆமாம், என்னப்பா? பூகோளப் பாடம் படிப்பிக்கிறீர்களா?

அப்பா : இல்லை உன் அறிவை விரிவாக்கிக் கொண்டு போனால் தான் நான் கூறப்போகின்றவை உனக்குப் புரியும். உலகச் சுழற்சியில் இருந்து விடுபட்டு விட்டால் பகலும், இரவும் வருமோ? பருவ காலங்கள் தான் வருமோ?

மகன் : இ..................ல்...................லை.

அப்பா : ஏன் தயங்குகிறாய்?

மகன் : அதெப்படி உலகம் சுற்றுவதில் இருந்து விடுபடுவது?

அப்பா : ஏன் ரொக்கட்டில் செல்லும்போது உலகத்திற்கு வெளியேதானே செல்கிறோம்? சந்திரனில் நிற்கும்போது உலகச் சுற்றுக்கு அப்பால் தானே நிற்கிறோம்?

மகன் : ஆனால் ரொக்கட்டின் அல்லது சந்திரனின் சுழற்சியில் மாட்டிக் கொள்கிறோமே?

அப்பா : அதைத்தான் கூறவந்தேன். நாங்கள் இந்த உலகத்தில் அதன் நடப்புகளில், அதன் நிகழ்வுகளில் பங்கு பற்றிக் கொண்டு இருந்தோமானால் அவைதான் உண்மையாகத் தெரிகின்றன. வேறெதுவும் எங்கள் புலன்களுக்குப் புலப்படுவதில்லை. இவற்றி லிருந்து விடுபட்டு விட்டோமானால் உலகத்தில் இருக்கும்வரை அங்கு நடந்ததும், நடப்பதையும் தான் உண்மையென்பதும் ஆனால் அதற்கு அப்பாலும், உண்மை இருக்கின்றது என்பதும் தெரியவரும்.

மகன் : அதாவது உலகத்தில் இருக்கும்வரை உலக சுழற்சியும் அதன் பெறுபலன்களும் உண்மை. சந்திரனில் இருக்கும்போது உலக உண்மைகள் சந்திர உலகத்திற்கு ஏற்புடையவை ஆகாது. அப்படித்தானே?

அப்பா : ஆமாம், ஆனால் சந்திரனைச் சற்று மறந்து விடுவோம். உலக நடப்புக்கள் உலகத்திற்கே சொந்தம். அதற்கு அப்பால் சென்று விட்டோமானால் உலக நடப்புகள் எங்களைப் பொறுத்த வரையில் வெறும் கற்பனைதான் என்று கூறவருகின்றேன்.

மகன் : அதெப்படி? உலகத்தில் உள்ளவர்களுக்கு அது உண்மைதானே?

அப்பா : அப்பால் செல்பவனை அவை கட்டுப்படுத்தா என்கிறேன்.

மகன் : சரி.

அப்பா : இப்பொழுது நாங்கள் அந்தரத்தில் நின்று கொண்டிருக்கிறோம். உலகத்திற்கு வெளியே வந்து விட்டோம். உலக வாழ்க்கை உலகத்தோடு சரி. நாங்கள் அந்தரத்தில் நிற்கிறோம். கற்பனை பண்ணிப்பார்க்க முடிகிறதா?

மகன் : ஆமாம். உலகத்தை எங்கோ தூரத்தில் இருந்து வெறும் வெளியில் நின்று கவனித்துக் கொண்டிருப்பதுபோல் இருக்கிறது.

அப்பா : வெரிகுட்! இன்னுமொன்றை நினைவில் வைத்திருக்க வேண்டும். உலகமானது நீளம், அகலம், பருமன் ஆகிய பரிமாணங்களைக் கொண்டவற்றையும் அவற்றின் செயல்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. ஆனால் காலத்தையும் கற்பனை பண்ணிப்பார். காலமும் ஒரு பரிமாணம் தான். கண்களுக்குப் புலப்படாத பரிமாணம். அதோ! ஏதோ ஒன்று உலகத்தில் பிறக்கிறது. வளர்கிறது. சில காலத்தின் பின் மடிகிறது. அதன் வாழ்க்கைக் காலத்தினுள் அடங்குவது, இங்கிருந்து பார்க்கும்போது உலகத்தில் உயிரினங்கள் பிறந்து வளர்ந்து மடிவது எங்களுக்குக் கண்கூடாகும். நாங்கள் இருக்கும் அந்தர நிலையில்

எங்களுக்குக் காலமே இல்லை. சூரியன் எழுவதும் இல்லை. படுவதும் இல்லை. காலங்கடந்த அந்தரத்தில் நிற்கிறோம். புரிகிறதா?

**மகன்** : (நெற்றியைச் சுருக்கிக் கொண்டு) ஓரளவுக்குப் புரிகிறது.

**அப்பா** : அப்படியென்றால் சரி. இனி நாங்கள் உலக வரலாற்றில் 3500 அல்லது 4000 வருடங்கள் பின் நோக்கிச் செல்வோம். இந்துக்களின் சமய அடிப்படைத் தத்துவங்களை எடுத்துச் சொல்பவைதான் வேதங்கள். உலகத்திற்குப் பெயர்கள் தெரியாமல், ஆங்காங்கே இறை எண்ணத்துடன் இருந்து, உலக அறிவில் சிறந்தும், இறை இன்பத்தில் திளைத்தும் சென்ற ஞானிகளின் வாயிலிருந்து உதிர்ந்த பொன்மொழிகளின் சேர்க்கையே வேதங்கள். வேதங்களின் சாரம் உபநிடதங்கள். மற்றைய சமயங்கள் போலல்ல இந்துமதம். ஒரு குறிப்பிட்ட நபரின் தத்துவங்களோ, வாழ்க்கை வரலாறோ அல்ல இந்துமதம்.

பலவருட காலங்கள் பலர் வாழ்ந்து தத்தமது வாழ்க்கையில் புரிந்து கொண்ட உண்மைகளை குரு சிஷ்ய பரம்பரையாக அல்லது கர்ண பரம்பரையாகச் சொல்லி வந்து என்றும் பரீட்சித்துப் பார்த்து புரிந்து கொள்ளக் கூடிய உண்மைகளே உபநிடதங்கள்.

**மகன்** : உபநிடதங்கள் பைபிள் போன்றதா?

**அப்பா** : உபநிடதம் தனிமனிதன் சம்பந்தப்பட்டதல்ல. பல ஞானிகளின் வேத மொழி. வேதாந்தம் கூறுவது என்னவென்றால் கடவுள் ஒன்றே உண்மை என்றும், இந்தப் பிரபஞ்சமும், நாங்கள் அதில் தனித்து வெவ்வேறாக நீ, நான் என்று வாழ்கிறோம் என்ற எண்ணமும், வெறும் மாயை என்பதையே சங்கராச்சாரியாருடைய உபநிடத பாஷ்யத்தில் கடவுள் ஒன்றே உண்மை. அவனன்றி வேறில்லை என்ற கருத்து மிக ஆணித்தரமாக விபரிக்கப்பட்டது. சச்சிதானந்த சொரூபன் இறைவன். சத்+சித்+ஆனந்தம் என்றால் என்றும் இருப்பவன், எல்லாம் அறிந்தவன், என்றும் ஆனந்த மயமானவன் என்று அர்த்தம். இந்து மதத்தின்படி நடப்பதெல்லாம் அவன் செயல். அவன் ஒருவனே உண்மை. அவனின் உண்மைநல ஆனந்தம். ஆகவே நாங்கள் ஒவ்வொருவரும் இந்த உலக வாழ்க்கை எனும் மாயையிலிருந்து விடுபட்டோமானால் அவனின் ஆனந்தத்தில் திளைக்கலாம். எல்லாவற்றையும் அறியலாம். எல்லாவற்றிலும் உறையலாம். எங்கள் ஆத்மாவே பரப்பிரம்மம் என்பது இந்துமதக் கோட்பாடு. இதை புரிந்து கொள்ளும் விதத்தில் இந்து மதத்தினரிடையே சில வித்தியாசங்கள் இருக்கின்றன.

**மகன்** : மாயை என்றால் என்ன?

**அப்பா** : மாயை என்றால் எங்கள் பார்வை முழுமையானது அல்ல என்று அர்த்தம். அஞ்ஞானமே மாயை. எங்கள் உடல், சூழல் என்பவற்றில் மயங்கி அவற்றிற்கு அப்பால் எங்களை நடத்துவிக்கும் உண்மை இயக்க சக்தியை உணராதிருப்பதே மாயை.

நாங்கள் அண்டவெளியில் அந்தரத்தில் இருந்து பார்க்கும்போது இரவு, பகல், மாரி, கோடை, இலையுதிர், வசந்தம் என்ற உலகத்தையே கால நேரங்கள் எல்லாம் எங்களுக்கு உண்மையாகத் தெரிவதில்லையல்லவா? ஒரு சினிமாப் படம் பார்ப்பது போல் இருக்கின்றதல்லவா? உலக சூழலில், சுழற்சியில் இருந்து விடுபட்டதும் உலகத்தில் யதார்த்தம் எனப்படுவது வெறும் மாயையே என்று உணர்கிறோம். ஆகவே இந்து மதம் எல்லாவற்றையும் உள்ளடக்கிய சாஸ்வதமாகிய ஒரு கருப் பொருள் பற்றிக் கூறுகிறது. அதன் இயக்கம் எங்கும் எல்லாவற்றிலும் வியாபித்துள்ளது. அதனடிப்படை இயக்கத்தை அறியாமல் தாங்களே இயங்குவதாக மனிதர்கள் நினைத்தார்களேயாகில் அது மாயை ஆகும். மாயையில் விழுந்தவன் கர்மவினையிலும் சிக்குப் பெறுகிறான். என்னால் தனித்து இயங்க முடியும் என்று நினைப்பவன். மாயையின் வலைக்குள் சிக்குண்டவன்

ஆவான். அவனைக் கர்ம வினை பாதிக்கும். கர்ம வினையில் இருந்து விடுபடுபவன், உலகில் உள்ள சகலதும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை என்று உணர்த்துபவையாகவும் இயற்கையின் படைப்பில் நாமும் ஒரு பகுதி என்பதை உணர்ந்து கடமையில் ஈடுபடுபவன் ஆகவும் இருப்பான்.

**மகன்** : ஆகவே கடவுள் ஒன்று. அவனே எல்லாம். மனிதர்கள் தங்களைக் கடவுளின் இயக்கத்தில் இருந்து பிரித்துத் தாம் சுயமாக இயங்கக் கூடியவர்கள் என்று நினைப்பதுதான் மாயையின் ஆரம்பம்.

**அப்பா** : அந்த அஞ்ஞானம் எப்பொழுது அகல்கிறதோ அப்பொழுது ஆரம்பமாவது மெஞ்ஞானம். மெய்ஞ்ஞானம் எழ மாயை மறைந்துவிடுகிறது. சூரியனைக் கண்ட பனிபோல.

**மகன்** : கடவுள் ஒன்று என்றீர்கள் ஆனால் என் கேள்வியே அது பற்றித்தானே? ஒரே கடவுள் குடும்பமாகவும் வசிக்கிறாரோ?

**அப்பா** : (சிரித்துக் கொண்டே) அவசரப்படாதே. இப்பொழுதுதானே உபநிடதக் கருத்துக்களை அந்தரத்தில் இருந்து ஆராய்கிறோம். ஆனால் சமயப் பெரியார்கள் இந்தக் கருத்துக்கள் சகலருக்கும் புரியாது என்ற காரணத்தால் இக்கருத்தை உணர்த்த வேறு வழிகள் தேடினார்கள். இலங்கையில் இருக்கும் மலைகள், ஆறுகள் போன்றவற்றை உன் ஆசிரியர் உனக்கு உணர்த்த வேண்டுமானால் என்ன செய்கிறார்?

**மகன்** : வரைபடம் கீறி அதில் அவற்றைக் குறித்துக் காட்டுவார்.

**அப்பா** : வரைபடம் இலங்கையாகுமா?

**மகன்** : இல்லை.

**அப்பா** : வரைபடத்தின் உதவியோடு எங்கெங்கே என்னென்ன இருக்கின்றன என்று புரியவைக்கிறார் அல்லவா?

**மகன்** : ஆமாம்.

**அப்பா** : பின்னர் வயது வந்த பின் அந்தந்த மலைகளையும் ஆறுகளையும் காணும்போது இலங்கை நாடு எத்தகையது எங்கெங்கே என்னென்ன இருக்கின்றன என்று முன்னர் தெரிந்து கொண்ட அறிவை வைத்து உண்மையைப் புரிந்து கொள்ளலாம் அல்லவா?

**மகன்** : ஆமாம்.


**அப்பா** : வரைபடம் மாணவனின் அறிவு வளர்ச்சிக்கு ஒரு தூண்டுகோல், அப்படித்தானே?

**மகன்** : ஆம்.

**அப்பா** : அதே போல், கருத்துக்கும், அறிவுக்கும் அப்பாற்பட்ட எல்லையற்ற முடிவற்ற உண்மைப் பொருளைக் கிரகிப்பதற்கும் அதனோடு சம்பந்தப்பட்ட தத்துவங்களைத் தெரிந்து கொள்வதற்கும், வியாசர் போன்ற பெரும் ஆசான்கள் பிரத்தியட்சமாக மனிதர்கள் கண்ணால் கண்டு அதனூடு இறைவனைக் கிரகிக்கும் பொருட்டு புராணங்களை உருவாக்கினார்கள். உண்மையை வரை படமாக்கிய பெருமை வியாசமுனிவருக்கே பெரும்பாலும் சாரும். உண்மையின் குறியீடு களாக அடையாளங் களாக புராணங்களில் நீ சற்று முன்கூறிய கடவுள் குடும்பமும் மற்றைய தெய்வங்களும் இடம் பெறுகின்றார்கள். இந்த இறை யுருவங்களும் மறைபொருளாக உபநிடதக் கருத்துக்கள் செறிந்துள்ளன. உலக பந்த பாசங்களில் நிலைநின்று தப்ப வழிகாணாது தவித்துக் கொண்டிருக்கும் மனித குலத்திற்கு "தியானம் செய்" என்று கூறினால் அது தலைக்கேறாது. ஆகவேதான் உபாசனை செய்வதற்காக, தொழுவதற்காக, வழிபடுவதற்காக வேதவியாசர் புராணங்களில் தெய்வங்களையும், தெய்வ ரூபங்களையும், கோயில்களையும் பற்றிய தத்துவத்தை உட்புகுத்தினார்.

**மகன்** : அப்படியானால் தெய்வங்கள் என்று நாம் வழிபடுவது சில தத்துவார்த்த ரீதியான அடையாளங்களையா?

**அப்பா** : ஆம் என்று கூறுவாரும் உளர். இல்லை என்று கூறுவாரும் உளர்.



மகன் : புரியவில்லையப்பா.

அப்பா : இந்தக் கோயில்களும் கடவுள்மார்களும் தான் பல நூற்றாண்டு காலமாக இந்துக்களை ஒன்றிணைத்து வைத்துள்ளன. இராமாயணம், மகாபாரதம் போன்ற காவியங்கள் இந்துக்களின் அறிவு மேம்பாடு, மனவெழுச்சி ஆகியவற்றிற்கு அடிகோலியிருக்கின்றன. படிக்காத பாமரரும் இக்காவியங்களின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு இறை எண்ணத்தில் இலயிக்க உதவி யிருக்கின்றன. ஆனால் வெறும் கதைகளில் மட்டும் இலயிப்போர் இறைவனை உணரமாட்டார்கள். கதைகளுக்கு அப்பால் இருக்கும் எங்கும் வியாபித்திருக்கும் அந்தப் பரம்பொருளை கதையின் மூலமாக உணர்ந்தோர் கடவுளையும் உணர்ந்தவர்களானார்கள். கபீர், சூர்தாஸ், துளசிதாஸ், மீரா போன்றவர்கள் இராமாயண, மகாபாரதப் பாத்திரங்களின் ஊடாகக் கடவுளைக் கண்டவர்கள். இந்தக் கடவுள்மார் இருக்கிறார்கள் என்று நம்பினால் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வெறும் கற்பனை என்று நினைத்தோமானால் அவர்கள் கற்பனையேதான். வரைபடம் உண்மையே, அதிலிருந்து இலங்கையின் பௌதீக நிலையை உணரலாம். அறியலாம். அதை வெறும் வரைபடம் என்று மட்டும் நினைத்தால் அது காகிதமும் கீறப்பட்ட வரிகளும் மட்டுமே.

மகன் : என்னப்பா புதிர் போடுகிறீர்கள்? சிவன், பார்வதி, பிள்ளையார், முருகன் என்று ஒரு குடும்பமே இருக்கிறதா இல்லையா?

அப்பா : இருக்கிறார்கள் என்றால் இருக்கிறார்கள். இல்லையென்றால் இல்லை.

மகன் : என்னப்பா நீங்கள் என்னைக் குழப்புகிறீர்கள்?

அப்பா : கடவுள் எங்கும் உள்ளவன், எல்லாம் வல்லவன், எல்லாம் உணர்ந்தவன் என்று நாங்கள் படித்திருக்கிறோம் அல்லவா?

மகன் : ஆமாம்.

அப்பா : ஆகவே கல்லிலும் கடவுள் இருக்கிறாரல்லவா?

மகன் : ஆமாம்.

அப்பா : அந்தக் கல்லில் ஒரு உருவம் வடித்து அதைக் கந்தன் என்றால் அங்கே கந்தன் இருக்கத் தானே வேண்டும். அதாவது கல்லில் இருக்கும் கடவுளை நாங்கள் கந்தனாகப் பார்க்கிறோம். அவன் எங்கும் நிறைந்து எல்லாம் வல்லவனாக இருப்பதால் எங்கள் உள்ளத்தில் எவ்வாறு கந்தனைப் பார்க்கிறோமோ அந்த உருவத்தில் அவன் காட்சி கொடுக்கிறான். உனக்கு முருகன் காட்சி கொடுத்தால் அதே முகத்தோடு அவன் எனக்கும் காட்சி கொடுக்கத் தேவையில்லை. நீ திருச்செந்தூர் முருகனை நினைத்தால் அவன் ரூபத்தில் இறைவன் உனக்கு காட்சி அளிப்பான். எனக்குப் பழனிமலைக் கந்தனாகக் காட்சியளிப்பான். எங்கள் எண்ணங்களுக்கும் புலன்களுக்கும் ஊடகத்தால் உருவமற்ற, எண்ணத்திற்கு அப்பாற்பட்ட இறைபொருளை நாங்கள் புரிய வேண்டி இருக்கிறது. எங்களுக்குக் காட்சி கொடுக்கையில் எங்கள் எண்ணத்தில் நிறைந்திருக்கும் இறை வடிவமாகவே பரம்பொருள் காட்சி கொடுக்கிறான். ஆகவே சிவன், பார்வதி, பிள்ளையார், முருகன் ஆகியோர் ஒரே பரம்பொருளின் வெவ்வேறு வடிவங்களில்.

மகன் : அதாவது இறை தத்துவத்தை எடுத்துக் காட்டும் வடிவங்களா இவர்கள்?

அப்பா : ஆமாம். இறைவன் எக்காலமும் இருந்தவன், இருக்கப் போகிறவன். தொடக்கம் இறுதி அற்றவன். அவனை வெறும் கதைகளால் ரூபங்களால் ஏன் தத்துவங்களினால் கூட வரையறுத்து விட முடியாது. ஆனால் இறை தத்துவத்தை ஓரளவு புரிந்தால் எங்கும் வியாபித்திருக்கும் இறைவனை ஓரளவு எம்மால், எம் உணர்வினால் தொட முடியும். மின்சாரம் எங்கும் வியாபித்திருக்கும். எந்த இடத்தில் அதை வெளியாக்குகிறோமோ அங்கு எமக்கு வேண்டிய விதத்தில் அது வந்து காட்சி கொடுக்கிறது. என்னமாதிரி மின் குமிழ் பாவிக்கிறோமோ அதைப் பொறுத்து மின்சாரம் வெளிப்படுகிறது.

மகன் : அப்படியானால் யானைமுகப் பிள்ளையார் வெறும் கற்பனைதானோ?

அப்பா : அதுதான் கூறினேனே. அவன் கற்பனையால் உருவாக்கப்பட்டவன். அக்கற்பனை வடிவத்தினூடு கடவுளை ஸ்பரிசிக்கலாம், உணரலாம். இன்று நேரமின்மையால் பிள்ளையார் வடிவத்தை மட்டும் எடுத்துப் பார்ப்போம்.

மகன் : அதாவது அவருக்கு யானை முகம் ஏன் கொடுக்கப்பட்டது என்று அறிவதற்காக?


அப்பா : ஆமாம். பிள்ளையார் என்று ஆராய்ந்து பார்ப்போம். பிள்ளையாரை விநாயகன் என்போம். கணபதி என்போம். விக்கி னேஸ்வரன் என்போம். தன்நிகரற்றவன் விநாயகன். கணங்களின் தலைவன் கணபதி. எல்லாத் தடைகளுக்கும் காரணமாய் இருப்பவனும் அவற்றை நிவர்த்திக்க வல்லவரும்தான் விக்கினேஸ்வரன். அதனால்தான் விக்கினங்கள் ஏற்படாமல் ஏதுவும் சுமூகமாக நடந்தேற முதலில் பிள்ளையாரை வணங்குகிறோம். சித்தி ஆகிய சரஸ்வதி அவதாரத்தையும் அவன் மணந்திருப்பதால் அறிவிற்கும் அவன்தான் நாயகன்; உலக ஐஸ்வரியங்களுக்கும் அவன் தான் தலைவன். மெஞ்ஞானத்திற்கும் அவனே நாயகன். அஞ்ஞான உலக வாழ்க்கைக்கும் அவனே தலைவன். எப்படிப்பட்டவர் பிள்ளையார் என்று ஆராய்ந்தால் குற்றமற்ற பூரணமான ஞானத்தைப் பெற்றவர் அவர் என்று தெரியவரும். புராணங்களின் மிக சூட்சுமமான மிக உயர்ந்த கருத்துக்களை மிக இலகுவாக வெளிக்கொண்டு வரும் கதாபாத்திரம்தான் எங்கள் பிள்ளையாரப்பன். அறிவில் பூரண மானவன் அந்த விநாயகன். அதனால் தான் அவனுக்கு ஆனைமுகம் வேதம் அனைத்தையும் தன் வேழமுகத்தில் கொண் டிருக்கிறான். அதாவது எவன் ஒருவன் சகல வேதங்களையும் கற்று அறிவில் பூரணமாக விளங்குகிறானோ அவனே பிள்ளையார். சகலதையும் அறிந்தவன் என்ற கருத்தை முன்வைக்கவே வியாசமுனி வேழமுகத்தை மனித உடலுக்குள் உட்புகுத்தி பாரிய, பூரண அறிவு கொண்டவன் பிள்ளையார் என்ற கருத்துப்பட ஆனைமுகம் கொடுத்தார். வேதங்கள் குருவினிடம் கேட்டறிந்து கொள்பவை. ஆகவே பூரண அறிவுள்ள மனிதனுக்கு கேட்கும் திறன் இருக்க வேண்டும். அதனால்தான் அவனுக்கு பெரிய காதுகள் கொடுக்கப்பட்டன.

அறிவைத் தலையில் வைத்திருந்தால் போதாது. காதால் கேட்டறிந்து கொண்டால் மட்டும் போதாது. அதை அலசி ஆராய்ந்து உணரும் சக்தி வேண்டும். அண்ட சராசரத்தை அறியும் திறனும் அதற்கு அப்பால் இருக்கும் அதி சூட்சும இறைபொருளை உணரும் திறனும் ஒருங்கே இருப்பவன் தான் உண்மையான பூரண ஞானி. அதனால் பிள்ளையாருக்குத் தும்பிக்கை வைத்தார்கள். மரத்தைப் பிடுங்கக் கூடியது தும்பிக்கை. ஒரு ஊசியை நிலத்தில் இருந்து எடுக்கக் கூடியதும் தும்பிக்கை. வெளி உலக வாழ்க்கையின் பிரச்சனைகளை அலசக் கூடியவனும், உள்மனதில் அமைதியை ஏற்படுத்தி அதிசூட்சும உட்பொருளை அறியக் கூடியவனும் அவனே என்ற கருத்தைத் தும்பிக்கை வலியுறுத்துகிறது. அடுத்துப் பிள்ளையாரிடம் இருப்பது என்ன?

மகன் : தந்தங்கள் !

அப்பா : ஆமாம். இரு தந்தங்களுக்கு இடையே தான் தும்பிக்கை இருக்கிறது. பகுத்தறிவு என்பது இரு விடயங்கள் ஒரே நேரத்தில் இருந்தால்தான் அது சாத்தியமாகும். இதை ஏற்பதா அதை ஏற்பதா என்ற பகுத்தறியும் மனக்கூர்மை பயன்படுவது இருமை இருந்தால்தான். ஆகவே நல்லது – கெட்டது, உண்மை – பொய்மை, சரி – பிழை என்ற இருமையின் இடையில் உண்மையை உணர்ந்திருப்பவன் பூரண மனிதன். பூரண மனிதனின் பகுத்தறியும் கருவியான துதிக்கை இருமையின் நடுவே செல்கிறது. ஆனால் பிள்ளை ஒரு தந்தம் ஒடிந்து காணப்படுகிறது. பூரண ஞானத்தைப் பெற்றவன் இருமைக்கு அப்பாற்பட்டவன் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது. எது சரி பிழை என்று அறியும் திறனும் அவற்றிற்கு அப்பால் சரியும் பிழையும் இறைவனில் அடக்கம் என்பதை புரியும் திறத்தை அடைந்தவன் பிள்ளையார் என்பதை ஒடிந்த தந்தம் எடுத்துக் காட்டுகிறது. இருமைக்கு அப்பாற்பட்டவன் பிள்ளையார் என்ற பூரண மனிதன் என்பதை உடைந்த தந்தம் உணர்த்துகிறது. (துவந்வாதீதன் இருமைக்கு அப்பாற்பட்டவன்)

மகன் : வாய் பெரிது, வயிறு பெரிது, பசி பெரிது பிள்ளையாருக்கு ஏன்? சம்பத்துகளும் ஐஸ்வரியங்களும் கொண்டவர் எவருமில்லையென்று குபேரனுக்கு இறுமாப்பு. குபேரன் தேவர்களையெல்லாம் அழைத்தான் விருந்துக்கு ஒருநாள் தன் செல்வத்தை வெளிப்படுத்தப் பிள்ளையார் முதலில் வந்தார். உண்டார். எல்லா விருந்தினருக்கும் ஆக்கிய உணவு அனைத்தையும் பிள்ளையார் ஒருவரே உண்டார். அதற்குப் பின்னரும் அவருக்குப் பசி. பாத்திரங்கள் அனைத்தையும் உண்டார். இன்னும் பசி அடங்கவில்லை. மகர தோரணங்கள் யாவற்றையும் உண்டார். ஊ.......... ஊ.......... ஊகும். அடங்கவில்லை பசி. உடனே தந்தையார் சிவன் வந்து கொஞ்சம் பொரி அரிசி கொடுக்கப் பசி அடங்கியது. இதன் அர்த்தம் என்னவென்றால் அவர் போகி அல்ல யோகி, கட்டுப்பாடானவர். கட்டுப்பாடான ஒருவனின் காலடியில் உலகம் கைகட்டி நிற்கும். தேவையான போது எதையும்



ருசிக்கலாம், பாவிக்கலாம், எடுக்கலாம். சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கையை எடுத்துப்பார். அவர் முன் உலகம் வாய் புதைத்து மண்டியிட்டுக் கிடந்தது. யோகியின் பெருமை அதுதான். கட்டுப்பாடற்றவன் முன் எதுவும் நிலைத்து நிற்கா. அவன்தான் அவற்றிற்காக அலைய வேண்டியிருக்கும். இங்கு பிள்ளையாரின் முன் எல்லாமே ஏங்கிக் கிடக்கின்றன. அவர் வேண்டும்போது அவற்றை எடுத்துக் கொள்வார்.

மகன் : எலி வாகனம் அவசியமா?

அப்பா : எலிதான் மனம். எலியைப் பார். மேலே நிமிர்ந்து நின்று பிள்ளையாரின் ஆஞ்ஞை பிறக்கும்வரை காத்துக்கிடக்கிறதல்லவா?

மகன் : எதையோ எதிர்பார்ப்பது போல!

அப்பா : அதேதான், பூரண மனிதனின் மனம். கட்டுப்படுத்தப்பட்ட மனம். அறிவும் ஞானமும் அதற்கிடும் கட்டளையைத்தான் அந்த மனம் செயலாற்றும். நினைத்தவாறு உலக சம்பத்துக்களை கண்டு ஏங்கி அதன்பின் ஓடித்திரியாது. மோதகங்கள் இருந்தும் வாய் வைக்கவில்லை எலி. தன் நாயகனின் கட்டளை வரும்வரையில்

காத்துக்கிடக்கிறது. விட்டால் அனைத்தையும் சாப்பிட்டு முடித்துவிடும் எலி. ஆனால் விடமாட்டார் பூரண யோகியாகிய பிள்ளையார். பெற வேண்டும், தொடவேண்டும், ருசிக்க வேண்டும் என்ற ஆசையில் துடிக்கும் மனத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் அந்தப் பூரண மனிதர். உலகத்தில் ஒரு பூரண மனிதர் ஏதாவது ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்றால் அதுவும் ஒரு ஆசையே. உலகத்திற்கு சேவை செய்ய வேண்டும் என்று நினைக்கும்போது அந்த ஆசை அவரைச் செயற்பட வைக்கிறது. அதுதான் பிள்ளையார் எங்காவது செல்வதானால் அந்த எலியின் மீது அமர்ந்தே செல்கிறார். கட்டுப்பாடான மனத்தைத் தேவையான போது பாவிக்கலாம். மற்றவர் துன்பம் அகற்றப் பாவிக்கலாம்.

மகன் : விநாயகர் சதுர்த்தியில் சந்திரனைப் பார்க்கக் கூடாது என்பது எதற்காக?

அப்பா : புராணத்தில் ஒரு கதை இருக்கிறது. எலி மீது பிள்ளையார் போகும்போது சந்திரன் பார்த்துச் சிரித்தானாம். அப்பொழுது பிள்ளையார் சந்திரனைப் பார்த்துச் சபித்து விட்டாராம். "இந்த நாளில் உன்னை யாரும் பார்க்காமல் இருக்கட்டும், என்று, இதன் அர்த்தம் என்னவென்றால் விருப்பு வெறுப்பு இருக்கட்டும். என்ன, இதன் அர்த்தம், என்னவென்றால் விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்ட பூரண மனிதர்கள் மக்களுக்குச் சேவை செய்வதற்கு மட்டுமே தமது விருப்பினைப் பாவிக்கிறார்கள். ஆசையே அற்று இருப்பவன் மக்கள் சேவைக்கு மட்டுமே ஆசையை அல்லது விருப்பைப் பாவிக்கிறான். யோகி என்றால் ஒரு மரத்துக்குக் கீழ் இருந்து தவம் செய்வதற்குப் பதிலாக ஏன் இந்த மனிதன் மக்களோடு மக்களாக இயங்க வேண்டும் என்று "படித்தவர்கள்" பரிகாசம் செய்வார்கள். அந்தப் "படித்தவர்கள்" அறிவை ஆட்சி செலுத்துபவனே சந்திரன். எங்கள் மனங்களை ஆள்பவன் சந்திரன். ஆகவே "படித்த முட்டாள்களே! உண்மையான யோகிகளைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டீர்கள், அவர்கள் சுயநலத்தின் அடிப்படையில் சேவையாற்று வதில்லை என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லையே. உங்களை மக்கள் பார்க்கமாட்டார்கள். ஒதுக்கி விடுவார்கள்" என்று பூரண மனிதர்கள் கூறுவதையே இந்தக் கதை வெளிக்கொண்டு வருகிறது.

மகன் : பிள்ளையாருக்கு நான்கு கைகள், ஆயுதங்கள் இவை எல்லாம் அவசியமா?

அப்பா : அந்தக்கரணங்கள் நான்கு, அவை மனம்( (mind), புத்தி ( reason), சித்தம்( Will-power), அகங்காரம்( Egoism) என்பன. இவை தான் எங்கள் உள் மனதில் வேலை செய்யும் கருவிகள். மனம் முதலில் நினைக்கிறது. அதே மனம் பகுத்தறிவினால் அடுத்து ஆராய்கிறது. பின்னர் இப்படித்தான் செய்யவேண்டும் என்று முடிவு எடுக்கிறது. அதன் பின் அதனை நடைமுறைப் படுத்துகிறது. நடைமுறைப் படுத்தும் போது "நான்" செய்கிறேன் என்ற எண்ணத்துடன் செயலாற்றுகிறது மனம். ஆகவே தான் நான்கு கைகள் கொண்டிருக்கிறார் பிள்ளையார். பிள்ளையாரைப் பார். ஒரு கையில் கயிறு. இன்னுமொன்றில் கோடரி. மற்றையதில் மோதகம். நான்காம் கை அபயகரம் காட்டுகிறது. கோடாலி ஆசை, அவர்களை வெட்டி அறிய ஆசையை அழித்தால் ஆனந்தம் காணலாம் என்றார் புத்தபகவான். ஆசைகள் தான் எம்மைக் கர்மவினை என்ற சக்கரத்தினுள் தள்ளுகின்றன. கயிறு பக்தனை இறைவன் பால் ஈர்க்க, மோதகம் சாதனையின் வெகுமதி. ஆத்மீக சாதனைகள் புரிபவர்களுக்கு ஆத்ம திருப்தியை அளிக்கின்றார். பூரண மனிதன் பிள்ளையார். அபயகரம் விக்கினங்கள் அகற்றி பக்தனை இறைவழியில் செல்ல உதவுகிறது.

மகன் : விக்னேஸ்வரன் என்ற பெயர் பிள்ளையாருக்கு ஏன் வந்தது?

அப்பா : ஆத்ம விசாரணையில் விக்கினங்கள் வெளியில் இருந்தும், உள்ளிருந்தும் வருவது போல் இருந்தாலும் விக்கினங்கள் எங்கள் மனதில் தான் ஆரம்பமாகின்றன. உலக ஆசாபாசங்களில் நிலைத்திருப்பதே விக்கினங்களுக்கு அத்திவாரம், பொருட்கள், உணர்ச்சிகள், எண்ணங்கள்

இவற்றில் ஆசை வைத்தால் அது தான் விக்கினங்களின் ஆரம்பம் அவற்றை அறுத்தெறிவதே விக்னேஸ்வரனின் சக்தி. அந்த விதத்தில் அவன் விக்கினங்களை நிர்மூலமாக்குபவன் அதாவது ஈஸ்வரன், பிள்ளையார் ஆசைகளை அழித்து ( கோடாரி), தன்பால் ஈர்த்து ( கயிறு), ஆத்ம சுக அனுபவங்களை அளித்து( மோதகம்), பக்தர்களை அபயகரம் காட்டிக் காப்பாற்றும் போது அவன் விக்னேஸ்வரன் ஆகின்றான்.

அம்மா : இரவுச் சாப்பாட்டுக்கு நேரமாகிவிட்டது.

அப்பா : கடைசியில் எங்கள் ஆத்ம விசாரம் சாப்பாட்டில் சங்கமம் ! இன்று இத்துடன் நிறுத்துவோம். முக்கியமாக நினைவில் வைத்திருக்க வேண்டியது என்னவெனில் இறை உருவங்கள் வியாசமுனிவரால் தமது புராணங்களில் எடுத்தாளப்பட்ட சொல் ஓவியங்கள். உண்மையை உணர்த்த அவர் உண்டாக்கிய உருவங்களே இறையுருவங்கள். இவை தத்துவங்களின் பிரதிவிம்பங்கள். ஆனால் அவற்றைத் தத்துவங்கள் என்று தள்ளி வைக்கக்கூடாது. அவற்றின் உதவியால் அந்த மறைபொருளை உணர வேண்டும். அதற்குக் கவிஞனின் உணர்வும், விஞ்ஞானியின் அறிவுக் கூர்மையும், பக்தனின் அன்பும் அவசியம். வெறும் அறிவு வழியில் சிந்திப்பவர்களுக்கு இறை உருவங்கள் வெறுங் கற்பனையே. இந்தத் தெய்வீக வடிவங்கள் அறிவுடன் அன்பு சேர்ந்தால் கற்பனை வடிவம் இறை பொருளாய் வந்து இன்பம் பயக்கும்.

மகன் : இப்பொழுது ஓரளவு புரிகிறது எங்கள் மதம் பற்றி.

அப்பா : "அலோய்ஷஸ்" அபூசாலிக்கும் இனி நீ பிள்ளையார் பற்றி எடுத்துரைக்கலாம். ஆனால் அவர்களுக்கு விளங்குமோ தெரியாது !

# கலசத் தத்துவம்

சங்கரபகவத்பாதர் நம்முடைய மனத்தை ஒரு கலசமாக வருணித்து, பகவானின் விஷயத்தில் நமக்குள்ள அளவிடமுடியாத பிரேமை என்ற நூலைக் கொண்டு அதைச் சுற்றவேண்டும் என்கிறார். தண்ணீருக்கு 'அமிர்தம்' என்ற ஒரு பெயரும் சமஸ்கிருதத்தில் உண்டு. மனமாகிய கலசத்தில் சந்தோஷம் என்ற நீரை ஊற்றவேண்டும் என்பதற்காக சங்கரர் 'முதம்ருதாபூர்ணே' என்று சொல்லுகிறார். சந்தோஷமாக உள்ளவனால்தான் எந்த நல்ல காரியத்தையும் நன்றாகச் செய்ய முடியம். அதுவும் தூய்மையானதாகக் கலப்பற்றதாக இருக்க வேண்டும். அப்போதுதான் அந்தச் சிந்தனை பகவானிடத்தில் ஈடுபடும். எல்லோருக்கும் நல்லதையே நினைக்கும். அதற்காகவே கலசத்தில் தூய நீரை நிறைக்கிறோம். கலசத்தின் மேல் மாந்தளிர்களை வைத்து, அதன் மேல் தேங்காயை வைப்பது நம்முடைய வழக்கம். பக்தனுடைய மனத்தில் பகவானுடைய இரு பாதாரவிந்தங்கள்தாம் பிரதிபலிக்க வேண்டும். பகவானுடைய பாதங்களுக்கு மலரிதழ்களை உவகையாகக் கூறுவதைப் போல தளிரையும் உவமையாகச் சொல்லுவதுண்டு. அதனால்தான், 'தளிரைப் போன்ற உன்னுடைய பாதாரவிந்தத்தை எனது மனமாகிய கும்பத்தின் மேல் வைத்து' என்கிறார். கலசத்தின் மேல் உள்ள மாந்தளிர் இதையே குறிக்கிறது. கடைசியில் வைக்கப்படும் தேங்காய் ஞான பலத்தைக் காட்டுகிறது. 'நமக்கு இறைவன் ஞானஸ்வ ரூபத்தைக் கொடுக்க வேண்டும். அதனால் நாம் 'சிரயேஸ்ஸை அடைய வேண்டும்' என்ற எண்ணத்தோடுதான் நாம் எப்போதும் இறைவனை ஆராதிக்கிறோம். ஞானரூபமாய் உள்ள பலத்தை நாம் பிடித்துக் கொண்டு வந்து சேர்க்க வேண்டியதில்லை. அது தானாகவே வந்து உட்கார்ந்து விடுகிறது.

'ஸாம்ப தவாஸ்க்ரி பல்லவயுகம் ஸம்ஸ்தாப்ய ஸம்வித்பலம்' என்று சங்கரர் கூறுகிறார். இப்படி நம்மிடம் வந்து அமர்ந்து நம்மை ஆட்கொள்ளும் ஞானபலத்தையே தேங்காய் உணர்த்துகிறது. வீட்டில் நல்ல காரியங்கள் நடைபெறும்போதே, இப்படிப் பூர்ணகும்பம் வைப்பதுண்டு. அப்போது நம்முடைய மனம் நல்ல எண்ணங்களால் நிறைந்து, இறைவன் அருளால் ஞான பலம் கொண்டு இருக்க வேண்டும் என்பதையே இந்த அமைப்பு உணர்த்துகிறது.



# விநாயகர் பரத்துவம்


"பிரதிஷ்டா பூஷணம் சிவாகமஞானபானு"
பிரதிஷ்டா கலாநிதி
**சிவாசார்ய சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்**
*(ஆதீன குரு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம் - நயினை)*

"வாகீ ஸாத்யாஸ் ஸும நஸஸ் ஸர்வார்த்தாநாம் உபக்ரமே
யம் நத்வா கீருதக்ருத் யாஸ்யுதம் நமாமி கஜாநநம்"

பிரம்மாதி தேவர்கள் கூட எந்தக் காரியத்தின் ஆரம்பத்திலும் எவரை நமஸ்கரித்து எடுத்த காரியத்தை முடித்தவர்களாகிறார்களோ அந்த கஜானனரை நானும் நமஸ்காரம் பண்ணுகிறேன். (வாகீஸாத்ய ஸுமனஸ – ஸுமனஸ என்றால் தேவர். வாகீசர் முதலான தேவர்கள். என்று அர்த்தம்)


ஒரு மஹா க்ஷேத்ரமிருந்தால் அதைச் சுற்றி ஐந்து குரோசத்திற்கு தெய்வீகசக்தி பரவியிருக்கும். ஒரு குரோசம் என்றால் இரண்டு அல்லது இரண்டேகால் மைல்கள் இருக்கும். ஒரு க்ஷேத்திரத்தின் தெய்வீக சக்தி பன்னிரண்டு மைல் தூரத்திற்குட்பட்ட பகுதிக்கு சுற்றிப் பரவியிருக்கும். இதனைப் பஞ்ச குரோச எல்லை என்பர். இத்தகு அருள் பெருகு சிவபுண்ய ஸ்தலம் திருக்கோணேஸ்வரம் ஆகும். இஃது கைலாச பர்வதத்தின் ஒன்று என்பது புராண வரலாறு. இறைவன் கல்லால விருட்ஷத்தின் கீழ் தென்முகக் கடவுளாக வீற்றிருந்து நால்வருக்கு மோன நிலையில் இருந்தபடி ஞானோபதேசம் செய்தார். இதே வரலாற்றைத் திருகோணமலையிலும் காண்கிறோம்.

திருகோணமலை ஆலடி விநாயகர் மூர்த்தி, தல, தீர்த்தம் ஆகியவை ஒருங்கேயமைந்த பெருமை உடையது. கைலாசத்தில் கல்லால விருக்ஷம். இங்கே பசுமையான ஆல விருக்ஷம் "சித்ரம் வடதாரோர் மூலே" என்பதற்கு அமைய ஞானகாரனாகக் கணபதி அமர்ந்துள்ளார். திருநாவுக்கரசு சுவாமிகள் கோயில் வகைகளை கரக்கோயில், ஞாழற் கோயில், கொகுடிக் கோயில், இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில் எனப் பலவாறாக பகுத்து அருளினார். இக் கோயில் ஸ்தல தரு கல்லாலான மரம் ஆலக் கோயில் எனப் பெயர் பெற்றது. "கல்லால நிழற்கீழ் அறங்கள் உரைத்த அம்மானே" என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரம். "திருக்கச்சூர் வடபால் ஆலக் கோயில் அம்மானே" என்று திருநாவுக்கரசு சுவாமிகள் பாடிப் பரவியுள்ளார். காசி சேக்ஷத்திரத்தில் அக்ஷய வடம் பஞ்சவடி (5 ஆலமரம்) என்று கூறப்பட்டதன் மூலம் ஆலமரத்தின் பெருமையை அறியலாம். மேலும் "ஆல் போல் தழைத்து" என்று கூறி வாழ்த்துவது ஆலமரத்தின் பரந்து வளரும் தன்மை போன்றும், ஆலின் கிளைகளிலிருந்து தொங்கும் விழுதுகளிலிருந்து புதிய மரங்கள் தோன்றுவதும் ஆல விருக்ஷத்திற்கு உரிய தனிச்சிறப்பாகும். ஆல் இலையில் கிருஷ்ண பகவான் பள்ளி கொண்டதாகவும் கூறுவதுண்டு. இத்தகு பெருமை கொண்ட ஆல விருக்ஷத்தை தல விருக்ஷமாகக் கொண்டு விநாயகப் பெருமான் கோயில் கொண்டு எழுந்தருளி அருள் பாலிக்கும் இடமே ஆலடிப் பிள்ளையார் கோயில் ஆகும். "பாபநாசம்" தீர்த்தம் அண்மையில் அமைந்த பெருமையும் ஆலடி விநாயகருக்கு உண்டு.



தனக்கு மேலான எவரும் இல்லாது தானே தனி முதல்வனாக விளங்குபவர் விநாயகப் பெருமான். எந்த வேலையையும் நாம் ஆரம்பிக்கும் போதும், அவ்வேலை இடையூறு இன்றி நடைபெற விநாயகப் பெருமான் அருள் வேண்டி நிற்பது நமது வழக்கமாகும். விக்னங்கள் நீக்கும் கடவுளாக வழிபடப்படுகிறார். விக்னேஸ்வரர்,

விநாயகர், பிள்ளையார் கணபதி, கஜமுகன் பிரணவமூர்த்தி, என்றும் இன்னும் பல்வேறு நாமங்களாலும் அழைக்கப்படுகிறார். விநாயகப் பெருமானது சிறப்பு, அருமை, பெருமை அளவிடற்கரியது. விநாயகப் பெருமானுடைய பெருமைகளை அதர்வ வேதத்தின் கணபதி உபநிடதத்தில் இருந்து சிலவற்றைத் தெரிவோம்.



"ஓம் பத்ரம் கர்ணேபி : ச்ருணு யாமதேவா"

தேவர்கள் கணபதிக்கு மங்களத்தை கூறும்போது நாம் அதைக் கேட்போமாக. செய்யும் யாகங்கள் குறைவின்றி தடையின்றி நிறைவேறவும் திடமான அங்கங்கள் கொண்ட சரீரத்தால் நாம் சந்தோஷம் பெறவும், இந்திரன் மங்களாசி தரவும், உலகில் வேதங்கள் எமக்கு புஷ்டியைத் தரவும், தொல்லைகள் தரும் எதிரிகளால் வரும் அரிஷ்டங்கள் யாவும் இல்லாது மங்களம் உண்டாகவும், தேவர்களுக்கும் பிராமணருக்கும் குருவான பிரகஸ்பதி எமக்கு மங்களத்தைக் கொடுக்கட்டும்.

"அவத்வம் மாம்...................சமந்தாத்"

நேர்மை, சத்யம் இவற்றுடன் பேசுபவனும் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷமென்னும் ப்ரம்ம பாவத்தையும் யாசிக்கும் என்னைப் பல்வேறு இடையூறுகளின் தாக்குதலின்றும் காப்பீராக.

"அவோத் தராத்தாத்" – எல்லாத் திக்குகளின்றும் விக்னங்களைக் காக்க வேண்டும்.

இவ்வாறு நேர்மை, சத்யம் இவற்றுடன் வேண்டுகோள் விடுத்த பிறகு உள்ளத்திலுறைந்து புத்தியை இயங்க வைக்கும், பல்வித சித்திகளையும் நல்கும் ஸ்ரீ கணபதிப் பெருமானை பிரார்த்தித்து பின்வருமாறு கூறப்படுகிறது.

"த்வம் வாங் மயத்வம்.........விஞ்ஞானமய யோசி" வாக்கினால் சொல்லப்படும் நாம ரூப மயமாகவும் (கருணையுடனும்) ஜீவஸ்வரூபம் அற்ற பரமாத்வான சித்ஸ்வரூபர் – சின்மயமானவர் தஹர வித்தையில் அறியத்தக்க பரம்பொருள் ஹ்ருதயத்தில் வீற்றிருக்கும் விஞ்ஞான மயமானவரான தாங்களே. (நாமம், ரூபம், அகங்காரம் – இவை ஜீவஸ்வரூபம்) இவ்வாறு இதயக்கமலத்தில் விளங்கும் பரப்பிரம்மமாக கணேசரை நிரூபித்து அவ்யாக்ருதமான பரப்பிரம்மமாக ஸ்ரீ கணபதியை நிரூபித்து அதர்வ உபநிஷத் மேலும் கூறுகிறது.

"ஸர்வம் ஜக திதம் த்வத் திஷ்டதி"

தங்கள் கர்ம வினைக் கேற்ப பலனை அனுபவிக்க அருளும் செயல் புரிவதால் இவ்வுலகமெல்லாம் தங்கள் பரிபாலனத்தில் நிலைபெற்றுள்ளது.

"த்வம் சத் வாரி வாக் பரிமிதாபதானி"........என்பதால் பரா, பச்யந்தீ, மத்யமா, வைகரீ என்ற நான்கு வாக்குகளும் தங்களது சுவாசத்திலிருந்து தர்மா தர்ம சமஞான போதமயமாக உண்டாயின். இவ்வாறெல்லாம் பகவானை மூலாதார கணபதியாக உபநிஷத் காட்டுகிறது.

" த்வம் குணத்ரயாதீத.........
பூர் புவஸ் வர ஓம்"

தாங்கள் பிரணவ மயமாக இருப்பதால் ஜனங்களின் உடலில் மூலாதாரமாக இருந்து முக்குணங்களான சத்வ ரஜோ, தாமஸ தோஷத்தால் உண்டான பிரகாசம், அஞ்ஞானம் என்பன இல்லாது மூலாதார மயமாக கணபதி இருக்கின்றார். யோகிகள் சாஸ்வத அம்ருத மயமான தங்களை (கணபதியை) தினமும் மூலாதாரத்தில் தியானிக்கின்றனர்.

ஆகமங்களில் கணபதியைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. காரணாகமத்தில் பதினாறு கணபதிகளையும் பஞ்சபக்த விநாயகரையும் அவரது பஞ்சமுக தியானங்களும் பிரதிஷ்டையும் சொல்லப்

பட்டுள்ளது. விநாயகபுராணம், விநாயக பரத்துவம் முதலானவற்றில் பிரணவ மூர்த்தியாகிய விநாயகப் பெருமான் தம்மை வழிபடும் அடியார்களுக்கு காட்சி கொடுத்து திருவருள் செய்யும் வண்ணம் கொண்டருளிய மூர்த்தங்களின் வரலாறும் திருவருட் திறனும் கூறப்பட்டுள்ளது.

வேதாகமங்கள் உபநிஷதங்கள் மட்டுமன்றி இவற்றுக்குப் பின்பும் உலகம் எங்கும் விநாயகர் வழிபாடு, தொடர்ந்து நடைபெறுகிறது.

தேவார முதலிகள், ஔவையார், நக்கீரர், கச்சியப்ப சிவாசாரியார் ஆதிசங்கரர் முதலானோரும் விநாயகர் வழிபாடு செய்து அருள் பெற்றவர்கள் என்பது அவர்கள் பாடியருளிய நூல்கள் மூலம் அறியலாம்.

விநாயகரின் தோற்றம் பற்றி பல வரலாறுகள் கூறப்படுகின்றன. உமாதேவியின் உத்யான வனத்திலிருந்த சித்திர மண்டபத்தில் ஒரு பிரணவம் எழுதப் பெற்றிருந்தது. சக்தியும் சிவமும் ஏக காலத்தில் பிரணவத்தை நோக்கவே கணபதிப் பெருமான் அவதரித்தார் என்பதும் ஒரு வரலாறு.


இராவணன், அகத்தியர், இராமர் போன்றோர் வரலாறுகளில் விநாயகர் அனுக்கிரகம் செய்தார் என்று அறிகிறோம். இவை யாவும் ஒவ்வொரு யுகங்களில் ஏற்பட்டது. ஒவ்வொரு யுகங்களின் முடிவு தோற்றங்களில் இறைவன் அவ்வவ் யுகங்களில் தோன்றியவையே அன்றி அவற்றுள் பேதமில்லை. ஆனால் விக்னங்கள் நீக்கும் விநாயகருக்கே முதல் வழிபாடு என்பதில் ஒத்த கருத்தே நிலவுகிறது.

"சதுர்த்தி திதி சம்பவாய" என்பதில் விநாயகப் பெருமானின் தோற்றத்தை அறிய முடிகிறது.

வாதுளாகமத்தில் தத்துவ பேதப் படலத்தின் 134ம் ஸ்லோகத்திலே மகேஸ்வரருடைய திருக்கண்டத்தினின்றும் கணேசர் தோன்றினார் என்று கூறப்பட்டிருக்கிறது. கந்தபுராணம், சுப்ரபேதாகாமம் முதலியவற்றில் கஜமுக சம்ஹாரத்தின் பொருட்டு பிரணவத்தினின்றும் தோன்றினார் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இவை இரண்டும் முரண்பாடாகாது என்றும், முதலில் கூறியது பிரதம மகா சிருஷ்டியின் தோற்றத்தையே என்றும், புராணம் முதலியவற்றில் கூறியது அவாந்தர சிருஷ்டியின் தோற்றத்தை எனவும் விநாயக பரத்துவம் கூறுகிறது.

ஓம் எனும் பிரணவ மந்திரத்தின் உட்பொருளாய் விளங்குபவர் விநாயகப் பெருமான். விநாயகர் என்றால் நமக்கு மேலான தலைவர் இல்லாதவர் என்றும் பொருள்படும். சிவபெருமானின் வாக்கின் வடிவம் விநாயகர். அதாவது ஒலியின் வடிவம். ஒலியே மந்திரமாகும். அதனால் கணபதி மந்திர வடிவானவர். அவருடைய வடிவத்திலேயே பிரணவ மந்திரத்தின் உருவத்தைக் காண்கின்றனர். மண், காற்று, தீ, ஆகாயம், ஆகிய பஞ்ச பூதங்களில் இருந்துதான் உலகம் உருப்பெற்றது. இந்தப் பஞ்ச பூதங்களும் முழுமுதற் கடவுளான கணபதியின் உருவத்தில் அடங்கி யிருப்பதாகச் சொல்வார்கள்.

கணபதியின் உருவம் தியானிப்போரை பரவசத்தில்



ஆழ்த்தும் அற்புத வடிவமாகும். விநாயகரின் திருமேனி தத்துவம் நிறைந்தது. விநாயகப் பெருமான் யானை முகமும், மூன்று கண்களும், இரு செவிகளும், ஐந்து கரங்களும், பெரிய வயிறும், குறுகிய இரு திருவடிகளும், கொண்ட திருவுருவ அமைப்பினை உடையவர். யானை முகம், விநாயகர் பிரணவ ஸ்வரூபி என்பதை விளக்குகிறது. தத்துவத்தின் உண்மைப் பொருளினை ஆராயும் போது நாதம், விந்து ஆகிய இரு தத்துவங்களின் உரு வெளிப்பாடு விநாயகப் பெருமானது தோற்றமாக காணப்படுகிறது என்று தத்துவ நூல்கள் விளக்குகின்றன.

நாத தத்துவம் சிவனையும், விந்து தத்துவம் சக்தியையும் குறிப்பனவாம். நாத விந்துக்கள் சேர்ந்த நிலையிலே "ஓ" என்ற எழுத்து தோன்றியது என்றும், இந்த ஓங்காரத்தின் தோற்றமே விநாயகர் உருவத்தின் தோற்றம் என்னும் தத்துவ விளக்கம் கூறுகிறது. "ஓ" என்னும் எழுத்தும் – விநாயக வடிவமும் ஒன்றாக இருப்பதை அவதானிக்கும் போது இவ்வுண்மை புலனாகும்.

விநாயகரின் திருக்கரங்கள் ஐந்தில் மேலே உள்ள வலக்கரம் அங்குசத்தையும், இடக் கரம் பாசத்தையும், கீழே உள்ள வலக்கரம் ஒடித்த ஒற்றைத் தந்தத்தையும், இடக்கரம் மோதகத்தையும், தாங்கி உள்ளன. பாசம் ஏந்திய கரம் படைத்தலையும், ஒற்றைக் கொம்புள்ள கை காத்தலையும், மோதகம் தாங்கிய இடக்கை அருள் புரிதலையும் குறிக்கின்றன. ஐந்து கரங்களும் பஞ்ச கிருத்தியத்தைச் செய்யும் ஆற்றல் உடையவை என்பதை உணர்த்தி நிற்கின்றன.

விநாயகரின் வாகனம் மூஞ்சூறு. மூஞ்சூறு மண்ணைக் குடைந்து செல்லும் பழக்கமுடையது. அதைப் போல அறிவைத் தேடி ஆய்பவன் ஞானத்தை பெற முடியுமென்பதை ஞானமூர்த்தியாகிய விநாயகப் பெருமான் உணர்த்தி நிற்கின்றார். தேவர்களைத் துன்புறுத்திய கஜமுகா சூரனை அழிக்க. பரம்பொருளான சக்தியே யானைத் தலையும், தேவ உடலும், பூதக் கால்களும், ஐந்து கரங்களும் கொண்ட விநாயகமூர்த்தியாக அவதரித்தார் என்று புராணங்கள் கூறுகின்றன.

விநாயகக் கடவுளின் இடது பாதம் கிரியா சக்தி எனவும், வலது பாதம் ஞானா சக்தி எனவும் கூறுவர். இந்தப் பாதக்கமலங்களை நாடும் பக்தர்களை துதிக்கையால் தூக்கி அவர் தம் துன்பங்களை அழித்து விடுவார். உலகம் யாவற்றையும் தம்முள் அடக்கியிருப்பதைக் காட்டும் தத்துவத்தை விநாயகரின் பேழை வயிறு உணர்த்துகின்றது.

" ஸ்வஸ் வா நந்த மஹாதேவ
கணேச ப்ரமண ஸ்பதி
ஆநந்தஸ் யாதிதே வோயம்
ஸ்வாநந்த தேச இதிர்யதே"

இவ்வடமொழி ஸ்லோகம் கணபதி தத்துவத்தைச் சிறப்பாக விளக்குகிறது. ஆநந்தமே ஆத்மாவின் சொரூபம். ஆத்மாவே பிரம்மம் எனவே எல்லா ஜீவராசிகளுக்கும், ஈஸ்வரர்களுக்கும் ஒரே ஆன்ம ஸ்வரூபமாக விளங்குவது கணேச பரப் பிரம்மமே என்பது தான் இச்சுலோகத்தின் விளக்கமாகும்.



அதர்வ வேதம் விநாயகரின் தியானத்தை பின்வருமாறு கூறுகிறது.

" ஏக தந்தம் சதுர்ஹஸ்தம் ........ யோதினாம்வர :–" ஸ்ரீ விநாயகப் பெருமான் பாசம், அங்குசம், தந்தம் வரத முத்திரை இவைகளை தன் பக்தர்களை ரக்ஷிப்பதற்காக தரித்திருக்கிறார். மோகத்தைப் போக்க பாசக் கயிறும், தீய வழியில் செல்லாமல் பக்தர்களைக் காக்க அங்குசத்தையும், விரோதிகளை நீக்க தந்தத்தையும், பக்தர்களுக்கு அனுக்கிரகிக்க வரத முத்திரையையும் தாங்குகின்றார் என்று கூறப்படுகிறது. நந்தியை வாகனமாகவும், கொடியாகவும் கொண்ட சிவனைப் போன்று அபேதமான விநாயகரும் மூஷிகத்தை - கொடியாகவும், வாகனமாகவும் கொண்டிருக்கிறார்.

ஆதி அந்தம் இல்லா ஓங்கார கணநாதன் முதன் முதலாக ஒலி வடிவை வரி வடிவாக்கிய பெருமையைக் கொண்டவர். ஓம் எனும் பிரணவத்தின் உட்பொருளாய் விளங்குபவர் விநாயகப் பெருமான். 'அ' காரம், 'உ' காரம், 'ம' காரம் என்னும் எழுத்துக்கள் சேர்ந்ததுதான் ஓம் எனும் பிரணவ எழுத்தாகும். 'அ' – சிருஷ்டிக்கிறது 'உ' – ரக்ஷிக்கிறது 'ம' – சம்காரம் செய்கிறது என்று கூறுவர் திருமூலர் 'அ' காரம் உயிர், 'உ' காரம் இறை, 'ம' காரம் பலம் என்று கூறி அருளினார். எதையாவது எழுத ஆரம்பிக்கும் போது பிள்ளையார் சுழி போடுவது வழக்கம். இது 'உ' என்ற எழுத்தாகும். இது எங்களை ரக்ஷிக்கட்டும் என்று விநாயகரை வேண்டிப் போடுவதாகும்.

இவ்வாறு ஓம்காரம் மூர்த்தியாகத் திகழும் விநாயகர் வழிபாட்டை பிரதானமாகக் கொண்டு அதையே ஓர் மதப்பிரிவாக ஏற்பதே 'காணாபத்யம்' ஆகும். கணபதியையே கண்கண்ட தெய்வமாக ஏற்று பஞ்ச பூதங்களின் பிறப்பிடமாகவும், பிரம்மா, விஷ்ணு,

உருத்திரன் வடிவமாகவும், அனைவருக்கும் முதற் கடவுளாகவும் கொண்டு வழிபடுவதே காணாபத்யத்தின் சிறப்பாகும். காணாபத்யத்தை மேற் கொண்டவர்கள் கணபதி உபாசனையில் பின்வரும் ஸ்லோகத்தைச் சொல்வார்கள்.

"அவ்யாக்ருத ப்ரும்மனோ குணே சஸ்ய சரீரே நாபிர் பிரும்மா
முகம் விஷ்ணு ; நேத்ரம் ருத்ர ; வாம பார்ச்வம் சக்தி ;
தக்ஷிணம் சூர்ய ; ஆத்மா ஸ்மிதாமய;

கணபதியினுடைய நாபி பிரம்ம ஸ்வரூபன் என்றும், முகம் விஷ்ணு ஸ்வரூபன் என்றும், இடப்பாகம் சக்தி ஸ்வரூபம் என்றும், வலது பாகம் சூரியன் என்றும் கணபதியை உணர்ந்து கொள்வோம் என்பது இதன் பொருளாகும்.

காணாபத்யம், சைவம், கௌமாரம், சாக்தம், வைஷ்ணவம், சௌரம் என்னும் ஆறு மதங்களையும் ஷண் மதங்கள் என்பர். காணாபத்யம் – கணபதியையும், சைவம் – சிவனையும், சாக்தம் – சக்தியையும், கௌமாரம் – முருகனையும், வைஷ்ணவம் – விஷ்ணுவையும், சௌரம் – சூரியனையும் முழுமுதற் கடவுளாக ஏற்று வழிபாடு இயற்றும் மதங்களாகும். ஷண் மதங்களை ஸ்தாபித்த காஞ்சி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் தன்னுடைய வழிகளைப் பின்பற்றும் ஸ்மார்த்தர்கள் சமரச பாவனை பெற்றவர்களாக இருக்க வேண்டும் என நினைத்து பஞ்சாயதன பூஜையை விதித்தார். பஞ்சாயதன பூஜை என்பது பஞ்ச மூர்த்திகளை வழிபடுதலாகும். இங்கே கணபதி, ருத்திரன், தேவி, விஷ்ணு, சூரியன் ஆகிய இந்த வகையில் ஏக காலத்தில் பூஜிக்கப்படுகிறார்கள். இவ்வைந்து மூர்த்திகளில் உபாசிப்பவர் எந்த மூர்த்தியை பிரதானமாகக் கருதிப் பூஜிக்கிறாரோ, அவரையே பீடத்தின் நடுநாயகமாக வைப்பார்கள். மற்ற நான்கு மூர்த்திகளையும் நான்கு திசைகளிலும் வைத்து அபிஷேக ஆராதனை செய்வர். பஞ்சாயதன பூஜையில் பிரதானமாக உள்ள மூர்த்திகளை எல்லாம் தம்முள் தாங்கியவர் ஆகிறார் கணபதி.

ஸ்ரீ ஆதி சங்கரரின் ஷண் மதம் பரம்பொருளை ஆறு (06) பிரதான தெய்வமாகக் காட்டுகின்றது. ஆனால் பாரத நாட்டைப் போன்று நமது நாட்டிலே சிவன், சக்தி, விநாயகர், முருகன், விஷ்ணு என்ற வேறுபாடின்றி எல்லாத் தெய்வங்களையும் ஒரு சேர வழிபடுவது வழக்கமாக இருக்கிறது. இருப்பினும் எந்த ஒரு காரியத்தையும் ஆரம்பிக்கும் போதும் விநாயகரை வணங்கி விக்னங்கள் இன்றி அக்காரியம் நிறைவுற வழிபாடு இயற்றப்படுகிறது.

கடவுள் உருவத்தைச் சமைக்க கல், மரம், செம்பு, மண் முதலியவற்றையும் பயன் படுத்தலாம் என்று ஆகமங்கள் கூறுகின்றன. இது போலவே விநாயகரை பூஜையில் மஞ்சளினாலும், கல், செம்பு, பளிங்கு, முத்து, அரைத்த சந்தனம், வெண்ணீறு, சர்க்கரை ஆகியவற்றாலும் அமைத்து வழிபடுவது வழக்கமாக இருந்து வருகிறது. தைப்பொங்கலன்று பசும் சாணியாலும், திருமணம் முதலிய நற்காரியங்களின்போது மஞ்சளாலும், விநாயக சதுர்த்தியன்று புற்று மண்ணாலும் பிள்ளையார் உருவத்தைச் செய்து வழிபடுகிறார்கள். வழிபாட்டின் போது கும்பத்திலும், கூர்ச்சத்திலும், ஹோம அக்னியிலும் விநாயகரை ஆவாகனம் செய்து வழிபடும் முறையும் உண்டு.

நாம் போற்றி வணங்கும் தெய்வங்கள் யாவும் கணபதியினுள் அடக்கம் என்பதை விளக்கும் வண்ணம் புராண வரலாறுகள் பல வழங்குகின்றன. அவை பல தெய்வங்களும் விநாயகரைப் போற்றியதை எடுத்துக் கூறுகின்றன. கணபதியைச் சகல தேவதைகளும் ஆராதித்து தங்கள் எண்ணங்களை அடைந்துள்ளனர் என்று உபநிடதங்களும் புராணங்களும் கூறுகின்றன.

திரிபுர அசுரர்களை சிவபெருமான் வெற்றி கொண்டது கணபதியின் அருளால்தான் என்பதை ஹேரம்ப உபநிஷதம், கணேச புராணம், ஸ்கந்த புராணம் ஆகிய நூல்கள் கூறுகின்றன. ஹேரம்ப குருவின் திருவருளினால்தான் திரிபுரம் எரிக்கப்பட்டது என்று உபநிஷதத்தில் பரமேஸ்வரன் பார்வதிக்கு கூறுவதாக உரையாடல் அமைந்துள்ளது. ஹேரம்பன் என்பது கணநாதனின் 16 திவ்ய நாமங்களில் ஒன்றாகும்.

அம்பாளும் விக்னேஸ்வரரைத் தோற்றுவித்து அவர் உதவியினாலேயே பண்டாசுரன் எனும் அசுரனுடன் யுத்தம் செய்து வெற்றி பெற்றார் என வல்லப கணபதி மகாத்மியத்தில் கூறப்பட்டுள்ளது. இவ்வரலாறு ஸ்ரீ லலிதா சகஸ்ரநாம ஸ்துதியிலும்

"காமேஸ்வர முகாலோக கல்பித ஸ்ரீ கணேஸ்வரா"

"மஹா கணேச நிர்பின்ன விக்ன யந்திர ப்ரஹர்ஷிதா" என்று குறிப்பிடப்படுகிறது.

பண்டகாசுரனுடன் யுத்தம் செய்த போது சக்தி சேனை எனப்படும் தேவ ஸ்த்ரீகளைக் கொண்ட படையுடன் சக்தி சென்றாள். அசுரன் மிகுந்த மந்திர பலம் கொண்டவனாதலால் விக்ன யந்திரம் ஒன்றைப் பண்ணி அதை அம்பாளின் சேனைகள் உள்ள இடத்தில் விழும்படி வீசினான். யந்திரத்தின் சக்தியால் சேனைகள் யாவும் மயங்கி விட்டன. உடனே அன்னை விநாயகரை வேண்டித் துதிக்க விநாயகர் தோன்றி விக்ன யந்திரத்தை அழித்தார் என்று வரலாறு கூறுகிறது.

மேலும் அருணகிரி நாதரின் விக்னேஸ்வர ஸ்துதியில் ஈஸ்வரனின் திரிபுர ஸம்ஹாரம், சுப்பிரமண்யரின் வள்ளித் திருமணம் இரண்டிலும் விநாயகருக்கு உள்ள பங்கைச் சொல்லியிருக்கிறார்.

மஹாவிஷ்ணு ராம, கிருஷ்ண அவதாரங்களின் போது பிள்ளையாருக்கு சாஸ்த்ரோத்தமாக பூஜை பண்ணியிருக்கிறார்.

உலகுக்கெல்லாம் ஒளிதரும் சூரியனும் கணபதியை வணங்கி அருள் பெற்றவரே. தம் ஒளி எக்காலத்தும் குறையாது இருப்பதற்காக சூரியதேவன் கணபதியை தட்சிணத்தில் அர்க்க கணபதி வடிவத்தில் வழிபடுவதாக கூறப்படுகிறது. பிரம்மா தமது சிருஷ்டியின் ஆரம்பத்தில் கணபதியை வழிபடாது அறியாப்பிழை ஒன்றைச் செய்து விட்டார். தன் தவறு புரிந்ததும் மனம் வருந்தி தும்பிக்கையானை வணங்கிய பின் சிருஷ்டியில் சிக்கல் நீங்கப் பெற்றார்.

சைவ உலகம் அறிந்த தலைசிறந்த கணேச பக்தை ஒளவையார். ஒளவையின் கதை யாவருக்கம் தெரிந்த ஒன்றே. மணப்பருவம் எய்தி மணவறையில் இருந்து விலகி வாழ்க்கையை வேறுதிசையில் செலுத்த கணபதியை தமக்கு வழித்துணையாக அழைத்துக் கொண்டு ஆரம்பம் முதல் இறுதி வரை புனிதத் தொண்டு செய்தவர் ஒளவையார். ஒளவையாருக்கு அருள்வழி காட்டிச் சென்ற விநாயகர் சேரமான் பெருமாள் நாயனார், சுந்தர மூர்த்தி சுவாமிகள் ஆகிய இருவருக்கும் முன்னராகவே தமது துதிக்கையால் தூக்கி கைலாசம் கொண்டு சேர்த்தார்.


இவ்வாறாக புராண வரலாறுகள் யாவும் கணபதியின் சிறப்பினையும், பெருமையினையும், முதன்மையினையும் விளக்கி நிற்பதைக் காணலாம்.

தன்னை உள்ளன்புடன் பூஜித்தவர்க்கு நல்வரம் அருளும் விநாயகப் பெருமானை நாமும் தினந்தோறும் வழிபட்டு இஷ்ட சித்திகளைப் பெறலாம். முக்கியமாக விநாயகரை விஷேட தினங்களில் விஷேட வழிபாடு செய்து வந்தால் இம்மைப் பயன்களை மட்டுமன்றி மறுமைப் பயன்களையும், வீடுபேற்றையும் அடையலாம்.

வைகாசி மாதத்து சுக்ல பட்சத்து முதற் சுக்கிர வாரம் தொடங்கி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தவறாது விநாயகரின் அருள் வேண்டி அனுஷ்டிக்கப்படும் விரதம் சுக்கிர வார விரதமாகும். ஆவணி மாதத்து சுக்ல பட்சத்தில் வரும் சதுர்த்தியில் விநாயகரைப் பூஜித்து வழிபடுவது விநாயக சதுர்த்தி விரதமாகும். இவை தவிர கார்த்திகை மாதத்து கிருஷ்ண பட்ச பிரதமை முதல் மார்கழி மாதம் சுக்லபட்ச ஷஷ்டி திதி வரையில் இருபத்தொரு நாள் (21) அனுஷ்டிக்கப்படும் விநாயக ஷஷ்டி விரதமும், மாசி மாதம் தேய் பிறையில் செவ்வாய்க்கிழமையோடு வரும் சதுர்த்தியில் தொடங்கி ஓராண்டு விதிப்படி அனுஷ்டிக்கப்படும் சங்கடஹர கணபதி விரதமும் முக்கியமான விரதங்களாகும்.

சங்கடஹர சதுர்த்தி விரதம் சர்வ மங்களத்தையும் தரவல்லது. எல்லா விக்னங்களையும் விலக்க வல்லது. இந்த சங்கடஹர சதுர்த்தியை விநாயகர் உண்டாக்கினார் என்று கூறப்படுகிறது. சந்திரனை சுக்ல சதுர்த்தியில் பார்க்கக் கூடாது என்று தான் கூறியது அவரின் கருணை உள்ளத்திற்கு கஷ்டமாக இருந்தமையால் அதனைச் சரி செய்வதற்காக கிருஷ்ண பட்ச சதுர்த்தியில் சந்திரனையும் நினைந்து அர்க்கியம் தந்தருள வேண்டுமென்று அருள் புரிந்தார். பூஜை முடிவில் ரோகிணி சமேதரான சந்திரனையும் பூஜை பண்ண வேண்டும் என்றார்.

இவ்விரதத்தை அகஸ்திய முனிவர் அனுஷ்டித்து சமுத்திரத்தை பானம் செய்யும் சக்தியைப் பெற்றதாகவும், ஸ்ரீ பார்வதி தேவி ஈஸ்வரனை கணவனாக அடைந்ததாகவும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா ஸ்யமந்தக மணியை ஜாம்பவானிடமிருந்து கைப்பற்றி தனக்கு ஏற்பட்ட அபவாதத்தை நீக்கிக் கொண்டதாகவும், நளனை விட்டுப் பிரிந்த தமயந்தி பின்னர் ஒன்று சேர்ந்ததாகவும் புராணங்கள் கூறுகின்றன.



விநாயகர் தோன்றியது சுக்ல சதுர்த்தியில் எனப்படுகின்றது. அதனால் விநாயக சதுர்த்தி விரதமும் சிறப்பான விரதமாக அனுஷ்டிக்கப்படுகிறது. ஒரு சமயம் சந்திரன், பெருந் தொந்தியுடனும், யானை முகத்துடனும் நடந்து வந்த விநாய்கரைப் பார்த்து கேலியாகச் சிரித்தான். இதனால் கோபமடைந்த கணேசர் ''அழகால் கர்வமடைந்த உன்னை இன்று முதல் யாரும் கண்ணால் பார்க்க மாட்டார்கள். பார்ப்பவர்களுக்கு வீண் அபவாதம் ஏற்படும்.'' என்று சாபம் கொடுத்தார் பின் சந்திரன் பிரம்மாவின் உபதேசப்படி சுக்ல சதுர்த்தி விரதத்தை அனுஷ்டித்து கணேசரைப் பிரார்த்தித்தான். அதனால் சந்தோஷமடைந்த விநாயகர் சாபத்தை சிறிது மாற்றி சுக்ல சதுர்த்தியன்று மட்டும் உன்னைப் பார்த்தால் தோஷம் ஏற்படும். த்விதியை அன்று உன்னைப் பார்த்தால் அந்த தோஷம் ஏற்படாது என்று கூறி அருளினார் என்பதை புராணங்கள் வாயிலாக அறியலாம். இவ்வாறு விநாயக விரதங்கள் மகத்துவம் வாய்ந்து விளங்குகின்றன.

விநாயகர் பூஜைக்கு அறுகம்புல், வன்னிப் பத்திரம், மந்தாரைப்பூ, ஆகியவை சிறந்தவை தாழம்பூ. துளசி ஆகியவற்றால் விநாயகரைப் பூஜை செய்யக் கூடாது. இவை தவிர சாதாரணமாக சிவபூஜைக்கு உகந்த எல்லா பத்திர புஷ்பங்களும் விநாயகர் வழிபாட்டிற்கும் ஏற்றவையே.

அறுகம்புல் கொடிய உஷ்ணத்தை தணித்து குளிர்ச்சி தரும் சக்தி உள்ளது. அனலாசுரன் என்னும் ஓர் அசுரன் தேவர்கள், முனிவர்கள் முதல் சகல ஜீவராசிகளையும் துன்புறுத்தி வந்தான். தேவர்கள் விஷ்ணுவிடம் முறையிட, விஷ்ணுவும் விநாயகக் கடவுளே இவனை அழிப்பார் என்று கூறினார். தேவர்கள் விநாயகரிடம் சென்று அனலாசுரனையும், எமது துன்பத்தையும் நீக்கி அருள வேண்டும் என்றும் வேண்டினர். விநாயகரும் சிவபெருமான் ஆலகால விடத்தை தமது கண்டத்தில் அடக்கியது போல, அனலாசுரனை தனது திருக்கரத்தில் அடக்கும்படி எடுத்து ஒரு கவளமாய் விழுங்கினார். விநாயகரின் திரு வயிற்றினுள் அனலாசுரன் அடங்குதலும், ஆன்மாக்களின் உதரங்களில் அக்னி பற்றியது போல் வெப்பம் உண்டாகியது. எல்லோரும் துன்புற்று வருந்தினர். அந்நேரம் விநாயகரை முனிவர்கள் யாவரும் அறுகம் புல்லினால் தனித்தனியாகப் பூஜித்தனர். இதனால் துன்பம் நீங்கி யாவரும் நன்மை அடைந்தனர். இவ்வாறு விநாயக பரத்துவம் கூறுகிறது. எனவே விநாயகரை அறுகம்புல்லினால் அர்ச்சித்து வணங்குவது விஷேடமாகும்.

''யோதுர் வாங்குரோர்யஜதி – சர்வ லபதே''

*(அதர்வசீர்ஷ தொடர்)*

அறுகம் புல்லினால் ஹோமம் செய்பவன் குபேரனை ஒத்த செல்வந்தனாக ஆகிறான். நெற் பொரியினால் ஹோமம் செய்பவன் புகழ் மிக்கவனாகின்றான். மேதத்தன்மையும் அடைவான். ஆயிரம் மோதகத்தினால் தான் விரும்பிய பலனை அடைகின்றான். நெய்யினால் நனைக்கப்பட்ட சமித்துக்களால் ஹோமம் செய்பவன் எல்லாவற்றையும் பெறுகின்றான் எனக் கூறப்படுகின்றது. அறுகம் புல் போன்று எருக்கும் விநாயகர் பூஜைக்கு உகந்ததாக கொள்ளப்படுகிறது.

விநாயகரை வணங்கும் போது

''சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர் புஜம்
பிரசன்ன வதனம் த்யாயேத் சர்வ விக்நோப சாந்தயே''

என்ற சுலோகத்தைக் கூறி நெற்றியில் குட்டி தோப்புக்கரணம் போட்டு விநாயகரை வணங்க வேண்டும்.


| | | |
|---|---|---|
| சுக்லாம் பரதர | – | வெள்ளைவஸ்திரம் தரித்திருப்பவர் |
| விஷ்ணும் | – | நிலா போன்ற நிறமுடையவர் |
| சதுர் புஜம் | – | நான்கு கை உடையவர் |
| ப்ரசன்ன வதனம் | – | நல்ல மலர்ந்த முகமுள்ளவர் |
| த்யாயேத் | – | தியானிக்க வேண்டும் |
| சர்வ விக்நோப சாந்தயே | – | எல்லா விக்னங்களும் இடையூறுகளும் நீங்க வேண்டும். |

சுக்லாம், பரதரம், விஷ்ணும், சசிவர்ணம், சதுர்புஜம், பிரசன்ன வதனம் என்னும் ஐந்து பதங்களில் ஒவ்வொன்றுக்கும் ஒரு குட்டாக ஐந்து தரம் நெற்றிப் பொட்டில் குட்டிக் கொள்ள வேண்டும். மூன்று முறை குட்டிக் கும்பிடுவதும் தொன்று தொட்டு நிலவுகிறது.

கணபதியின் சன்னிதியை அடைந்ததும் நாம் நெற்றிப் பொட்டில் குட்டிக் கொள்கிறோம். தேகத்தை மடக்கித் தோப்புக்கரணம் போடுகிறோம். நமது மூலாதாரத்தில் உள்ளவர் கணபதியேதான் என்பதை எடுத்துக் காட்டுவதே இந்த இரு வழிபாடுகளிலும் உள்ள முக்கியமான தத்துவமாகும். நெற்றிப் பொட்டில் குட்டிக் கொள்ளும் போது அங்கே உள்ளடங்கி இருக்கும் அமிர்த கலசத்தை எழுப்பி, அங்கே உள்ள அமிர்தம் தேகம் முழுவதும் பரவச் செய்வதற்காகவேயாகும். தோப்புக்கரணம் மூலாதாரத்தில் உள்ள சுஷும்னா நாடியைத் தட்டி எழுப்புவதற்காகப் போடப்படுகிறது. அகஸ்திய மகரிஷி காவேரியைக் கமண்டலத்தில் அடைத்து வைத்து இருந்தார். பூவுலகுக்கு பயனளிக்க வேண்டி காக்கை ரூபத்தில் கணபதி சென்று அதைக் கவிழ்த்து விட்டார். காவேரியும் விடுதலை பெற்றாள். அகஸ்தியர் கோபத்தால் அதனை விரட்டிச் செல்ல அது சிறுவனாக மாறி ஓடியது. சிறுவனை துரத்திப் பிடித்து குட்ட எண்ணினார். ஆனால் பின் தான் குட்ட நினைத்தது கணபதியையே என்று ஞான திருஷ்டியால் அறிந்தார். தன் தவறை எண்ணி தன் தலையிலேயே குட்டிக் கொண்டார். இதனால் இவ்வழக்கம் உண்டானதாக புராண வரலாறு கூறுகிறது.

ஒரு சமயம் இராவணன் கைலைக்கு சென்று ஆத்ம லிங்கத்தை வாங்கிக் கொண்டு இலங்கைக்கு திரும்பிக் கொண்டிருந்தான். அந்த லிங்கத்தை இலங்கையில் பிரதிஷ்டை செய்து விட்டால் அவனை வெல்ல யாராலும் முடியாது என்பதை உணர்ந்த தேவர்கள் கணபதியைப் பிரார்த்தித்தனர். மஹா கணபதியும் தேவர்கள் பிரார்த்தனைக்கு இணங்க பிரம்மச்சாரிச் சிறுவன் வடிவம் தாங்கி இராவணன் வரும் வழியில் வந்தார். இராவணன் ஆத்ம லிங்கத்தை வாங்கும் போது இரண்டு நிபந்தனைகளுக்குட்பட்டே பெற்றுக் கொண்டான்.

1. அதைக் கீழே பூமியில் எங்கும் வைக்கக்கூடாது. அப்படி வைத்தால் மீண்டும் அதை எடுக்க முடியாது.
2. சரீர சுத்தியும் அவசியமாதலால் மலசல நிவர்த்தி சமயத்தில் கையில் வைத்துக் கொள்ள கூடாது.



இவ்விரு நிபந்தனைகளையும் ஏற்று வந்து கொண்டிருந்த இராவணன் சிறுநீர் கழிக்க எண்ணி எதிரில் வந்து கொண்டிருந்த சிறுவனிடம் லிங்கத்தை ஒப்படைத்துச் சென்றான். ஆனால் விநாயகரும் நிபந்தனை விதித்தார். தான் மூன்று முறை கூப்பிடுவதற்குள் வராவிட்டால் லிங்கத்தை கீழே வைத்து விடுவேன் என்று கூறி வாங்கினார். சிறுவனும் மூன்று முறை கூப்பிட்டு வராது போகவே லிங்கத்தை கீழே வைத்து விட்டான். திரும்பி வந்து பார்த்த இராவணன் ஏமாற்றமும் கோபமும் அதிகரிக்க பையன் தலையில் குட்டினான். விநாயகர் சுயவடிவுடன் காட்சி தரவும் தன் தவறை உணர்ந்த இராவணன் தன் தலையிலே குட்டி விநாயகரை வணங்கினான். விநாயகரை குட்டிக் கும்பிடும் வழக்கம் இவ்வாறு தான் உண்டாகியது என்று புராண இதிகாச வரலாறுகள் கூறுகின்றன.

எனவே விநாயகரை வணங்கும் போது தலையில் குட்டி வணங்கும் வழக்கம் தொன்றுதொட்டே இருந்து வந்தது என்பது தெளிவாகின்றது.

இரண்டு காதுகளையும் வலது கை இடது காதையும், இடது கை வலது காதையும் மாறிப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்தும் எழுந்தும் மும்முறை அல்லது ஐந்து முறை

செய்வது தோப்புக்கரணம் எனப்படும். தோப்புக்கரணம் என்பது தோர்பிகரணம் என்றாகும். தோர்பி என்பது வடமொழிச்சொல்லாகும். தோர்பி என்றால் பலகைகள் எனப் பொருள்படும். மஹா விஷ்ணுவின் சக்கரத்தை விநாயகப் பெருமான் விளையாட்டாக வாய்க்குள் வைத்துக் கொண்டார். அதனை மீளப் பெறுவதற்காக விஷ்ணு பகவான் அவரைச் சந்தோஷப்படுத்தி சிரிக்கவைக்க இவ்வாறு தோப்புக் கர்ணம் போட்டார். இதனைப் பார்த்து விநாயகர் சிரிக்க சக்கரம் வாயிலிருந்து விழுந்தது என்று புராணங்கள் கூறுகின்றன. எனவே விநாயகப் பெருமானை சந்தோஷப்படுத்த நாமும் தோப்புக்கரணம் போட்டு வணங்கினால் எடுத்த காரியங்கள் விக்னங்கள் இன்றி நிறைவுறும் என்பதில் ஐயமில்லை. மேலும் நற்பலன்களை அடையலாம்.

கணபதி பிரம்மசாரி என்பதை யாவரும் அறிவர். அவர் வல்லபையோடு இருப்பதாக ஆகமங்கள் கூறுகின்றன. யாகங்கள், ஸ்நபனம் முதலானவற்றில் வல்லபையை வைத்து பூஜிப்பது ஆகம மரபாகும். சித்தி, புத்தி என இரு சக்திகள் இருப்பதாக புராணங்கள் விளம்புகின்றன.

சிவன் அபிஷேகப் பிரியர்.விஷ்ணு அலங்காரப் பிரியர் என்று கூறுவர். இதே போன்று விநாயகரும் நைவேத்யப் பிரியராவார். குழந்தை சுவாமியான பிள்ளையாருக்கு குறைவில்லாமல் கொழுக்கட்டை, அப்பம், மோதகம், பொங்கல், தேங்காய், பழவகை யாவும் நைவேத்யம் பண்ணி வழிபடுவது மிகவும் சிறப்பானதாகும். ஔவையார் கூட விநாயகரை துதிக்க ஆரம்பிக்கும் போது " பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும்" என்று ஆரம்பிக்கிறார். இவற்றைத் தருகிறேன் நீ எனக்கு சங்கத் தமிழ் மூன்றும் தா என்று கேட்டுப் பெறுகிறார். இது போன்று திருப்புகழிலும் அருணகிரிநாத சுவாமிகள் " கைத்தலம் நிறை கனி அப்பமொடு அவல் பொரி" என்று பாடியுள்ளார். இதிலிருந்து விநாயகர் நைவேத்யப் பிரியர் என்று அறிய முடிகிறது.

இவ்விதம் அருமை, பெருமை சிறப்புக்களைத் தாங்கி நிற்கும் விநாயகப் பெருமான் அகரமென அறிவாகி உலகமெங்கும் அமர்ந்திருக்கின்றார். நமது நாட்டிலும் பாரத நாட்டிலும் மட்டுமன்றி சீனா, பர்மா, ஜாவா, திபெத், இந்தோனேஷியா, எகிப்து போன்ற நாடுகளிலும் தமிழர்கள் வாழும் எல்லா நாடுகளிலும் விநாயகர் வழிபாடு தொன்மை வாய்ந்து நிகழ்ந்தது என்றும் அங்கு சின்னங்கள் காணப்படுவதாகவும் வரலாற்று நூலோர் கூறியிருக்கிறார்கள். இன்னும் அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியாவிலும் விநாயக ஆலயங்கள் எழுந்துள்ளன.

கணேசனே முழுமுதற் கடவுளாக எல்லாத் தெய்வ பூஜைகளிலும் விளங்குகிறார். கணங்களுக்கெல்லாம் நாயகனான அவரது துணையையே நற்காரியங்கள் எதனையும் ஆரம்பிக்கும் போதும் நாடுகிறோம். ருக் வேதத்தில் கூட " கணாநாந்துவா" என்னும் வேத வாக்கியம் உள்ளது. இது கணங்களுக்குத் தலைவர் கணபதி என்பதே பொருளாகும். இவர் ப்ரம்மணஸ்பதி என்றும் ஜேஷ்டராஜன் என்றும் அறிகிறோம். சுவாமி ஊர்வலங்களிலும் முதலில் இடம்பெறும் நாயகர் அவரே. ஆற்றங்கரையானாலும், குளக்கரையானாலும், வீதியானாலும், அரசமரமானாலும் கூரை இல்லாமல் எழுந்தருளி அருள் பாலிக்கும் பெருமை விநாயகப் பெருமானுக்கு உண்டு. இவ்விதம் பெருமை மிகு விநாயகர் திருகோணமலையில் ஆலடியில் அருளாட்சி செய்கின்றார். விக்னங்கள் தீர்க்கும் விநாயகப் பெருமான் அருள் வேண்டி அனைவரும் நலம் யாவும் பெற்று நன்மை பெருக விநாயகப் பெருமான் பாத கமலங்களை வணங்கிப் பிரார்த்திப்போமாக.

*நன்றி : காணபத்திய மலர்*
*(திருக்கோணமலை ஆலடி விநாயகர் தேவஸ்தானம்)*

## நீசருக்கு ஏன் உதவி செய்யக் கூடாது?

பாம்புக்குப் பால் வார்த்தால் விஷம் விருத்தியாகும். அதுபோல் நீசருக்கு உபகாரம் செய்தால் அபகாரமே சம்பவிக்கும்.

வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக் காகாரம் ஆனாற்போல் – பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின்மேல் இட்ட கலம். - ஔவையார் -



# விநாயகர் பெருமை

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**
*சமாதான நீதிபதி – தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.*

விநாயகர் என்றால் மேலான தலைவன் என்பது பொருளாகும். அப்பெருமானை நினைத்து எக் கருமத்தைத் தொடங்கினாலும் அதில் வெற்றி நிச்சயமாகும். புத்தியையும் சித்தியையும் முத்தியையும் தருபவர் விநாயகரே ஆவார். சிவகணங்களுக்கு அதிபதியும் இவரே. இப்பெருமானை நினைத்து வழிபடுவோர் ஒவ்வொரு மாதத்திலும் வரும் சதுர்த்தியையும் ஆவணிச் சதுர்த்தியையும் கார்த்திகைப் பூரணைக்குப் பின் பிரதமை முதல் இருபத்தொரு நாட்கள் வரும் சஷ்டியையும் விரத தினங்களாகக் கொள்வர். இதனைப் பெருங்கதை விரதம் என்றும் கூறுவர். இக்காலத்தில் பிள்ளையார் கதை படிப்பது வழக்கமாகும். பிள்ளையார் ஆலயங்களில் இவ்விழாக்கள் மிகவும் பக்தி பூர்வமாக நடைபெறுவது வழமையாகும்.

விநாயகர் சஷ்டிப் பெருவிழாவைப் பற்றிப் பல புராணக் கதைகளைக் கூறுவர். அவற்றில் ஒன்றைக் கீழே நோக்குவோம். திருமால் குருட்டுப் பாம்பாகும்படி ஒரு சாபத்தைப் பெற்றார். அச்சாபத்தை நீக்கிக் கொள்ளும் பொருட்டு விநாயகப் பெருமானை வழிபட்டார். இப்படி விநாயகரை வழிபட்டதனால் அச்சாபத்தினின்றும் நீங்கினார். அப்படி நீங்கிய தினமே விநாயக சஷ்டி தினமாக அனுட்டிக்கப்படுகிறது. இத்தினத்தில் விநாயகரை வழிபடுவோர் இப்பிறவியில் செல்வம், புகழ் போன்ற சிறப்புக்களை எய்துவர். மறுமையில் மோட்சத்தையும் அடைவர் என்பது எமது நம்பிக்கை ஆகும். இப்பெருங்கதை நடைபெறும் இக்காலங்களில் அதிகாலையில் நீராடி பிள்ளையார் கோயில்களுக்குச் சென்று ஆசார சீலராய் விரதம் அனுட்டித்து விநாயகரின் அருளைப் பெறலாம் என்பது எமது நம்பிக்கையாகும். இந்நாளில் நூல் அதாவது காப்புக் கட்டி ஒரு நேர உணவு உண்டு இருபத்தோராம் நாள் உபவாசமிருந்து அடுத்த நாட்காலை போசனமுண்டு விரதத்தை நிறைவு செய்து கொள்ளலாம். இவ்விரத காலங்களில் பிள்ளையார் கதைகளைக் கேட்டும் படித்தும் மற்றவர்களுக்குக் கூறியும் பயனடைய வேண்டும். அந்தணர்கள், அறிஞர்கள், செல்வர்கள் மற்றும் யாவரும் இவ்விரதத்தால் பெரும் பயனை அடைவர். பிள்ளையாரின் இவ்விரதத்தை அனுட்டிப்போர் நோயின் கொடுமையில் நின்றும் இயம பயத்தில் நின்றும் நீங்குவர் என்பது வரலாறு கூறும் பாடமாகும். விநாயக விரதங்களில் மேன்மையான இவ்விரதத்தை அனுட்டித்து எல்லா நலன்களையும் பெறலாம் என்பர்.

விநாயகப் பெருமானின் துதிப்பாட்டாக பின்வரும் பாடலைப் பாராயணம் செய்து மேன்மை அடையலாம்.

*"ஒற்றை மருப்பும் ஓரிரண்டு*
*கைத்தலமும்*
*வெற்றி புனைந்த விழி மூன்றாம்*
*– பெற்றதொரு*
*தண்டைக்கால் வாரணத்தைத்*
*தன்மனத்தி லெப்பொழுதும்*
*கொண்டக்கால் வாராது கூற்று."*

என்பதே அப்பாடலாகும். விநாயகப்

பெருமானை வழிபட்டால் எவ்வகையான துன்பமும் எம்மை அணுக முடியாது என்பது இப்பாடலின் கருத்தாகும்.

விநாயகர் ஆலயங்களில் விநாயக சஷ்டி தினத்தில் கயமுக சங்காரம் நடைபெறுவது வழமையாகும். கயமுகன் ஒரு கொடிய அசுரன். தேவர்களை வருத்தியவன் அவன். இவனுடைய கொடுமைகளைத் தாங்க முடியாமல் தேவர்கள் தவித்தனர். இவ்வசுரனைத் தேவர்கள் வணங்கித் தோப்புக்கரணம் போட்டுத் தலையிலே குட்டி வணங்கினர். ஆனால் இத்தேவர்கள் சிவபெருமானை நினைத்து வழிபட்டுத் தம் துன்பத்தை நீக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்தனர். இவர்களது துன்பத்தை நீக்க முனைந்த சிவபெருமான் விநாயக வடிவம் எடுத்து யானைமுகத்தோடு நின்று யானைத் தலையை உடைய கயாசுரனை வென்றார். இதனால் தேவர்கள் மகிழ்ந்து தமது தலையிலே குட்டித் தோப்புக்கரணம் போட்டு விநாயகப் பெருமானை வழிபட்டனர். அவனுடைய யானை முகமே ஓங்காரம் ஆகும். அதுவே பிரணவமாகவும் விளங்குகின்றது. அதுவே ஞானமாகவும் மிளிர்கின்றது. அதனை நினைத்தாலே போதும் எங்களுக்குச் சகல ஞானமும் வந்தடையும். ஆகவே பிள்ளையாரை வழிபட்டுச் சித்தி, புத்தி, முத்தி என்ற மூன்றினையும் பெற்றுக் கொள்ளலாம் என்பது அருளாளர்கள் கண்ட முடிவாகும்.

*"திருவாக்கும் செய்கருமம் கை கூட்டும் செஞ்சொற்*
*பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்*
*ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்*
*காதலால் கூப்புவர் தம்கை"*

# பிரம்ம முகூர்த்தம்

உபாசனையில் காலையில் பிரும்ம முகூர்த்தத்தில் எழுந்திருக்க வேண்டும் என்பது முக்கியமான ஒரு கடமையாகும். பிரும்ம முகூர்த்தத்தில் எழுவதற்கு உரிய பழக்கங்களை நாமேதான் நம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டும். பிரும்ம முகூர்த்தத்தில் ஏன் எழுந்திருக்க வேண்டும் என்று கேட்டால் பிரும்ம முகூர்த்தம் என்ற வார்த்தையை இரண்டாகப் பிரித்துப் பார்த்தால் அதனுடைய பொருள் நன்றாக விளங்கும்.

பிரும்ம+முகூர்த்தம். பிரும்ம என்ற சொல்லானது நான்முகனைக் குறிக்கும். நான்முகன் படைப்புக்கு உரியவர். திருமாலுடைய உந்திக்கமலத்தில் தோன்றிய அவர் தன்னுடைய நான்கு முகங்களினாலும் முதலில் நான்கு வேதங்களைப் படைத்தார். தன்னுடைய நாவிலே சரஸ்வதியை அமரச் செய்து கொண்டு 64 கலைகளையும் படைத்தார். 64 கலைகளைப் போலவே 64 தந்திரங்களும் உண்டு. இந்த 64 தந்திரங்கள் என்பதே மந்திர சாஸ்திரத்தின் ஆணிவேராக – 64 வேர்களாக விளங்குகின்றன. பிரும்ம முகூர்த்தம் என்பது பிரும்மாவினுடைய சக்தியை, நினைவாற்றலை, தன்னைத்தானே வழிபடுத்திக் கொண்டு மேன்மை அடைய வேண்டிய நிலைக்கு அடித்தளம் போடுகின்ற காலமாகும்.

பிரும்ம முகூர்த்தத்தில் எழுந்தால் எழுபவனது மனநிலையானது ஒருமைப்படுகிறது. இதற்கு ஏற்ற வண்ணம் அந்தக் காலம் இருக்கிறது. அதிகாலையில் சூரியனுடைய வெப்பம் கிடையாது. சந்திரனுடைய வெட்ப திட்பக் குளுமையும் கிடையாது. இவை இரண்டுக்கும் மத்தியில் உறங்கிக் கிடந்த ஜீவன்களெல்லாம் எழுந்திருக்கும் காலமாக விளங்குவது, பிரும்ம முகூர்த்தம். பிரும்மம் அறியப்படாதது என்பதைப் போல, பிரும்ம முகூர்த்தத்தின் இனிமையும் சாதாரணமாக அறிய முடியாதது. – பிரும்ம முகூர்த்தத்தில் எழுந்து தங்கள் தங்கள் உபாசனா தெய்வங்களை நினைந்து ஜெபம் செய்து சித்தி அடைவதைப் போலச் சிறந்த மேன்மையான வழி வேறு எதுவும் கிடையாது.

பிரும்ம முகூர்த்தம் ஜீவன்களை எழச் செய்வது போல மந்திரங்களையும் எழச் செய்கிறது. மந்திரங்கள் ஜெபிப்பவனுடைய மனத்திலிருந்து படிப்படியாக அவனுடைய நுண் அலைகளை – ஒலி அலைகளை மேலே எழுப்பி சஹஸ்ராரத்தில் அந்த ஜெபம் செய்பவனுடைய மந்திர ஒலியானது வெளிப்படச் செய்கிறது. இவ்வண்ணம் பிரும்ம முகூர்த்தத்தில் எழுந்து ஜெபம் செய்பவனுடைய ஜெப சித்தியானது அவன் செல்லுமிடங்களிலெல்லாம் அவனை அறியாமலேயே அந்தந்த இடங்களில் நல்ல நன்மைகளை விளைவிக்கும் வித்தாக இருக்கிறது. எனவே பிரும்ம முகூர்த்தத்தை ஒரு முக்கியமான காலமாக ஜெபத்திற்குச் சொல்லியிருக்கிறார்கள்.

பிரும்ம முகூர்த்தத்தில் ஜெபிப்பது, தியானம் செய்வது, யோகம் செய்வது எல்லாமே ஒரு சிறப்பானதாகும். பிரும்ம முகூர்த்தத்தில் செய்யும் இந்த தெய்வீகக் காரியங்கள் எல்லாம் படிப்படியாக மேலோங்கி வளரும் என்பதில் எந்த விதத்திலும் ஐயமில்லை.



# பிள்ளையார் கருவிகள்

ஸ்ரீ கிருஷ்ணானந்த சர்மா


காலதேவன் நமது வாழ்க்கைப் பாதையைப் பல்வேறு வழிகளில் பலநாட்டு மக்களுடைய கூட்டுறவைக் கொண்டு கணந்தோறும் மாற்றி அமைக்கின்றான். அதனால் நமது அகவாழ்வு புறவாழ்வு இரண்டுமே மாறுகின்றன. நமது பண்டைய வாழ்வியலில் துணைப் பொருள்களான பாத்திர பண்டங்களும் போர்க் கருவிகளும் இன்று வேற்றுருவத்தில் வேறு வேறு பெயர் தாங்கி நிற்கின்றன. சில மறைந்தே போயின. சில பெயர் மட்டும் மறைந்து போயின.


கருவிகள், கருவிகளாக இருந்த காலத்தில் காரியப்பாட்டிற்கு வேண்டிய உருவும் தகுதியும் உடையனவாக இருந்தன. அவற்றில் ஆடம்பரமும் அணியழகும் அடிவைக்கத் தொடங்கிய காலத்தில் எத்தனையோ இழைப்பு வேளைகளும் கொடிக் கருக்கு வேளைகளும் சிற்ப சித்திர வேலைகளும் கலந்து விட்டன. அதனால் அவை ஆயுதங்களா அணிகளா என்று கூட அறியமுடியாத நிலை நமக்கு ஏற்பட்டுவிட்டது. போர்க் கருவிகள் மக்கள் கையாண்ட காலத்துக் கருவிகளாகவே இருந்தன. மன்னர்களும் மந்திரிகளும் கையாளுவனவற்றில் சித்திரம் கலந்தன. கடவுள் கைகளில் இருப்பன, என்றும் காட்சிப் பொருள்களாகவே இருப்பதால் அவை அழகுப் பொருள்களாகவே ஆயின. மற்றும் நாட்டுக்கு நாடு கருவிகளினுடைய அமைப்பு மாறியிருக்கின்றது.

கல்லுக்கு உயிர் கொடுத்து, கற்பனைக்கு உறைவிடமாக்கி, கலைத் தெய்வத்தின் கருணையை விளங்கச் செய்த பல்லவர்களில் முற்காலப் பல்லவர்கள் சாளுக்கியர்கள் இவர்கள் சிற்பங்களில் கருவிகளின் அமைப்பு நிலை வேறு. அவற்றினின்றும், பிற்காலச் சாளுக்கிய பல்லவ ஹொய்சால மன்னர்களின் சிற்பங்களிலுள்ள கருவிகளின் அமைப்பு முற்றிலும் வேறுபட்டது. அவற்றை கிடைத்த வரையில் கணபதி கரங்களிலுள்ள கருவி வகைகளைக் கொண்டு காட்ட முயலுவோம்.

**1. பாசம் :** கயிறு பகைவர்கள் கைகளையும் கால்களையும் கட்டப் பயன்படும் ஒரு கயிறு அல்லது இரண்டு மூன்று கயிறுகள் சேர்த்து, எளிதில் அவிழ்க்கும் சுருக்கு முடிச்சாக இடப்பட்டிருக்கும். சுருக்கிடாமல் வளையமாகவும் இருக்கும். விநாயகருக்குச் சிறப்பாக நாகமே பாசமாக அமைவதும் உண்டு. இதனை நாக பாசம் என்பார்கள். இதன் வகைகள் நான்கு.

**2. அங்குசம் :** இது யானையை அடக்கப் பயன்படுவது. இரும்பாற் செய்யப்பெற்ற வளைந்த மூக்கும் குத்தியடக்கக் கூடிய ஒரு கூரிய நேரான பகுதியும் உடையது. நீளமான கழிகளிற் செருகப் பெற்றிருக்கும். யானைப் பாகன் இதனை யானை காதிலே மாட்டி தொங்கவிட்டிருப்பான். இதில் இரண்டு உருவங்கள் உள்ளன. விநாயகருக்குரிய சிறப்புக் கருவிகளில் இதுவும் ஒன்று.





**3. தந்தம் :** ஒடிந்த யானைக் கொம்பு

**4. வேதாளம் :** தசை நாரில்லாத, அச்சமும், அருவெருப்பும் தரத்தக்க பூதவடிவாக இருப்பது. இதனை ஏவி பகைவர்களை விழுங்கச் செய்வது வழக்கம். இது வீரகணபதி கரங்கள் ஒன்றில் இருக்கிறது.

**5. சக்தி :** இது வேல்; ஆறு கூரிய பகுதிகளை உடையது. தகட்டு வடிவானது. முருகனுக்குச் சிறப்பானது. விநாயகரும் வீரகணபதியாக விளங்கும் பொழுது தாங்கியிருக்கிறார். இது பிடித்தபடியே எறியும் கருவிகளில் ஒன்று. இரும்பாலானது இதனை நடுவில் பிடித்து எறிவது வழக்கம் இருமருங்கும் குத்தும் இயல்பினது.

**6. அம்பு :** வில்லை வளைத்து அதில் வைத்து எய்யப் பெறுங் கருவி. நுனிகூரிய முள் போன்றது. நுனி மட்டும் இரும்பாலானது. நுனியை ஒரு கழியிற் செருகியிருப்பார்கள். அதனது வால்பக்கத்தில் கழுகின் இறகுகளையும், மற்ற பறவை இறகுகளையும் கட்டியிருப்பார்கள். பெரும்பாலும் கழுகிறகே இதற்குப் பயன்படும். இறகு கட்டுவது விரைந்து காற்றை ஊடுருவிச் செல்வதற்காகவே.

**7. வில் :** இது அம்பு எய்யப் பயன்படுவது மூங்கில் போன்ற வளையக்கூடிய நார் மரத்தால் செய்யப் பெறுவது. இந்த வில்லினது இரு தலையிலும் தோல் அல்லது நார்க் கயிற்றாலியன்ற நாண் கட்டப்பெற்றிருக்கும். வில்லை வளைத்து நாணை இறுகக் கட்டி அதன் நடுவில் அம்பை வைத்து விடுவது வழக்கம். எவ்வளவுக் கெவ்வளவு வில்லின் வலிவும், நாணின் உறுதியும் இழுத்து விடுபவன் வன்மையும் இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அம்பின் வேகமும் தைக்கும் வன்மையும் மிகும். அம்பு பட்டவுடன் இறப்பதற்காக அதன் நுனியில் விஷம் தோய்த்து வைத்தலும் வழக்கம். அம்பின் நுனி பிறை மதிபோலக் கவர்பட்டதாகவும் இருக்கும். இதற்குப் பிறை அம்பு என்று பெயர்.


**8. சக்கரம் :** இது விஷ்ணுவுக்குரிய சிறப்பான கருவி. இதன் அமைப்பு அனைவருக்கும் நன்கு தெரிந்ததே. அதில் இருவகை உண்டு. ஒன்று தேருருளை போன்றது. மற்றது வலயம் போன்றது. இது அழகுப் பொருளாக எத்தனையோ வடிவங்களிற் காணப் பெறுகிறது.

**9. கத்தி :** தலைப் பகுதி குண்டாகத் தடித்துள்ள நீளக் கழியிற் கோக்கப்பெற்றுள்ள கருவி. இதுவும் பகைவரை அடிக்கப் பயன்படுவது தலைப்பக்கம் ஒரு மண்டையோடு போலவும், கம்பி முழங்கால் எலும்பாகவும்கூட அமைந்திருப்பதுண்டு இதனை குத்துக் கத்தியாகிய "பிச்சுவா" என்பாரும் உளர்.

**10. கேடகம் :** இது கத்தி வெட்டைத் தடுப்பதற்காகப் பயன்படுவது. பலகையாலும் வலுவுள்ள காட்டெருமை, கடமா,நீர்யானை, காண்டாமிருகம் இவற்றின் தோலாலும் செய்யப் பெறும் சதுரம், நீள்சதுரம், வட்டம், முக்கோணம் முதலிய பல வடிவங்களிற் செய்யப்பெறும்.

**11. சம்மட்டி :** இது இரும்பாலான கனத்த தலைப் பகுதியை உடையது. இதன் நடுவில் துளையிடப் பெற்றிருக்கும். இதில் கை பிடிக்கும் சிறு கழியைக் கோர்த்திருப்பார்கள். இதுவும் உடையவன் கையை விட்டு அகலாதபடி எதிரியை அடித்துத் தாக்கப் பயன் படுத்தப்பெறும்.

**12. கதை :** குண்டாந் தடி. காலப்போக்கில் இதில் பல வகைகள் ஏற்பட்டன. பகைவர்களை அடித்து நொறுக்கப் பயன்படுவது. கையைவிட்டு அகலாதபடி காவலாக இருந்து உடையவனைப் பாதுகாப்பது.




**13. நாக பாசம் :** இதுவும் பாச வகைகளில் ஒன்று.

**14. சூலம் :** இது மூன்று நுனிகளை உடையது. சிவபெருமானுக்குச் சிறப்பாக உரியது. சுரை வரையிலும் எஃகு இரும்பால் செய்யபெற்றது. நீளமான மரக்கம்பிற் கோர்க்கப் பெற்றிருக்கும்.

**15. குந்தாலி :** இன்று வன்மையான நிலப் பாறைகளை உடைக்கப்பயன் பெறும். தலை கனத்துக் கூரிய நுனியோடு இருக்கும். இரும்பாலான கருவி இது. இதில் பல வகைகள் உள்ளன.

**16. மழு :** இன்று மரங்களை வெட்டப்பயன் பெறுவதாக எறி என்னும் பெயருடன் வழங்குகிறது. மிகக் கூர்மையானது. "வாய்ச்சி" என்னும் மரம் செதுக்கும் கருவியினின்றும் முற்றிலும் வேறுபட்டது. தீப்பிழம்பு என்பது உண்டு. சிவபெருமானுக்கு விருப்பமான கருவி.

**17. கொடி:** இது வெற்றிக்கு அறிகுறியானது துணியாலியன்றது. அடையாளம் எழுதப் பெற்றது. இதனையும் விநாயகப் பெருமான் தமது திருக்கையில் தாங்கியிருக்கின்றார்.

**18. தண்டம் :** நீளமான கைத்தடி. மரத்தாலானது.

**19. கமண்டலம் :** நீர் வைத்துள்ள கலம். ஒரு மரத்தின் காயால் இயன்றது. முனிவர்கள் அந்தணர்கள் தங்கள் நாட் கடனைக் கழிப்பதற்காது வைத்திருப்பார்கள். இதுவும் அக்ஷமாலையும் ஆயுதங்கள் அல்லவானாலும் திருவுருவ நிலையை அறிந்து கொள்ள உதவும் கருவிகள்.

**20. பரசு :** இது சற்றேறக்குறைய மழுபோன்ற கருவிதான். ஆனாலும் மழுவின் வாய் சதுரமாக இருக்கும். இதன் வாய் சற்று வளைந்து கூரியதாக இருக்கும்.

**21. கரும்பு வில் :** கரும்பாற் செய்யப்பெற்ற வில். இது மன்மதனுக்குரிய சிறப்பான கருவி. யோகியாக இருக்கும் மற்றைய தெய்வங்களும், காமேஸ்வரியாகிய காமாட்சியும் தாங்கி இருப்பர்.

**22. சங்கம் :** விஷ்ணுவுக்குரிய வெற்றியை அறிவிக்கும் கருவி. பகைவர்களை இதன் ஒலி கேட்டதுமே ஒடுங்கி அடங்கச் செய்யும் அச்சக் கருவியுமாம். இதிலும் பல வடிவங்கள் உள.

**23. புஷ்ப பாணம் :** தாமரை, அசோகு, மா, முல்லை, நீலம் என்ற ஐந்து பூக்களிலான பாணம். இதை மன்மதன் மக்களிடத்தில் காம நினைப்பூட்ட எய்வன். போக நிலையில் மற்ற தெய்வங்களும் தாங்குவதுண்டு.

**24. கோடரி :** மரம் பிளக்கப் பயன்படும் கருவிபோல பகைவரின் உடலைப் பிளக்கப் பயன்படுவது. இரும்பால் வாய் கூர்மையாகப் பின்பக்கம் கனமானதாக அமைந்துள்ளது.

**25. அக்ஷமாலை :** உருத்திராக்ஷ மாலை.

**26. சாமரம் :** இது கவரிமான் வால் மயிரால் ஆனது. ஓர் ஆயுதம் அன்று. ஆனாலும் விநாயகப் பெருமானுடைய திருவுருவ அடையாளங்களில் ஒன்றாகையால் ஆயுத வரிசையில் இது இடம் பெற்றிருக்கிறது.

**27. கட்டுவாங்கம் :** நீளமான கத்தி. போரில் படைகளை வெட்டப் பயன்படுவது. இதில் ஒருமுனையுடைது. இருமுனையுடையது என இருவகை உண்டு. குத்துக் கத்தியாகக் கூரிய நுனி உடையதும் உண்டு. பழங்கால மன்னர்கள் இடுப்பில் செருகியிருப்பது வழக்கம்.

**28. தீ அகல் :** ஒரு தீப்பிழம்பு. தீ அகலாகிய மழுவின் வடிவம். இப்படியேதான் இருக்கும்.

**29. வீணை :** இசைக் கருவி.

# இருமுறை இறை வணக்கம்

இரவில் நாம் நினைவிழந்த மனநிலையில் (உறக்கத்தில்) கிடப்போம். எதிர்பாராது திடீர் என்று வரும் ஆபத்துக்களிலிருந்து நாம் நம்மை அப்பொழுது காத்துக்கொள்ளமுடியாது. இந்த மனநிலையில் நம் உயிரே போகின்ற கொடியநிலை ஏற்பட்டாலும் ஏற்படக் கூடும். இந்தத் துன்பங்களிருந்து உணர்விழந்த நிலையிலும் நம்மைக் காப்பது அந்தப் பேரருளாம் இறைவன்தான். எனவேதான் வைகறையில் நாம் கண் விழித்தவுடன், முந்திய இரவு நம்மைக் காத்து அருளிய தெய்வத்திற்கு நன்றியைச் செலுத்துவது நமது தலையாய கடமை ஆகிறது. இன்று அரைக்கோப்பை டீ வாங்கித் தந்த நண்பனுக்கும், வெற்றிலை பாக்குத் தந்த தோழனுக்கும் "நன்றி" சொல்ல மட்டுமே இன்றைய சமுதாயப் பழக்க வழக்கங்கள் நமக்குப் பாடம் கற்றுத் தந்துள்ளன. நம் வாழ்வைக் காத்து உயிரமுதம் ஊட்டி வளர்க்கும் ஆண்டவனுக்கு "உடல்குழைய, என்பெலாம் நெக்குருக விழி நீர்கள் ஊற்றெனப் பெருக" - உயர்ந்த எண்ணங்களால், தகுந்த சொற்கள் மூலம் நாம் செலுத்தும் காலை வழிபாடு உயர்ந்தது.

கடமைகள் எல்லாம் முடிந்த மாலையில் மீண்டும் இறைவனை வணங்க வேண்டும். நாள் முழுவதும் நாம் செய்த செயல்களை அந்த நேரத்தில் நம் நினைவின் விளிம்பிற்குக் கொண்டு வந்து திரும்பிப் பார்ப்போம். அப்பொழுது வணங்குவோம். "பரம்பொருளே! நாள் முழுவதும் கடமைகளுக்கிடையே நாங்கள் அலைந்து திரிந்தபோது எங்களுடன் வந்து, தவறான வழிகளிலிருந்து எங்களைக் காத்து வழிகாட்டிய பெருந்தெய்வமே! உனக்கு நன்றி செலுத்துகிறோம்".

உ



# வரலாறு

卐 பரராஜசேகர மன்னனுக்கும்
ஆலயத்துக்கும் உள்ள தொடர்பு

卐 கணபதி வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்

# பரராஜசேகர மன்னனுக்கும் ஆலயத்துக்கும் உள்ள தொடர்பு

ஈழத் தமிழகத்தில் கி. பி. 12 ஆம் நூற்றாண்டு முதல் 17ஆம் நூற்றாண்டு வரை ஆரியச் சக்கரவர்த்திகள் என்று அழைக்கப்பட்ட தமிழ் அரசர்களின் அரசு ஒன்று நிலைத்திருந்தது. இவர்கள் தொடர்ச்சியாக ஒருவர் பின் ஒருவராகப் பரராசசேகரன், செகராசசேகரன் எனச் சிங்காசனப் பெயர்கள் பூண்டு அரசு செலுத்தி வந்தனர். யாழ்ப்பாண இராச்சியத்துக்குச் சிறப்பாகவுள்ள நிர்வாக முறை ஆரியச் சக்கரவர்த்திகளாலே ஏற்படுத்தப்பட்டதென வரலாற்றாசிரியர்கள் கூறுவர். மேலும் இந்த ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் விநாயகர் வழிபாடு மேன்மை பெற்று விளங்கியது. அத்துடன் யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகராக "சிங்கை நகர்" அக்காலத்தில் சிறப்புற்று விளங்கியதை "செகராசசேகர மாலை", "தட்சிண கைலாய புராணம்" என்னும் நூல்கள் எடுத்துக் கூறுகின்றன.

சிங்கை ஆரியச் சக்கரவர்த்திகள் மரபின் பதினொராவது தலைமுறையைச் சேர்ந்தவன் பரராசசேகரன் என்னும் மன்னன். இவன் தனக்குரிய சிங்கை ஆரியப் பட்டத்தை சிங்கை எனச் சுருக்கி தனது பெயரின் முன்நிறுத்தி சிங்கைப் பரராசசேகரன் என்று ஆக்கி அரசு புரிந்து வந்தான். இயற்கை அழகும் செல்வச் செழிப்பும்மிக்க நல்லூரைத் தலைநகராகக் கொண்டு இவன் யாழ்ப்பாண அரசை நீதி தவறாது ஆட்சிபுரிந்த காலம் பொற்காலமென வரலாற்றா சிரியர்கள் எடுத்து இயம்புவர். இம் மன்னன், சைவத்தையும் செந்தமிழையும் இரு கண்களாகப் போற்றி வளர்த்த பெருந்தகையாளன். நற்றமிழ் வல்ல நாவலரும் பாவலரும் போற்ற அரசாண்டவன். நீதியும் பராக்கிரமும் உடையவன். தமிழ்ச்சங்கம் நிறுவி அதன் வாயிலாக பல நூல்களை வெளிவரச் செய்த உபகார சீலன். இச்சங்கத்தில் இவனுடைய மைத்துனன் அரசகேசரி, "இரகுவம்சம்" என்னும் நூலை அரங்கேற்றினான். "பரராசசேகரன் உலாவும்' இக்காலத்தைச் சேர்ந்ததாகும். பரராசசேகர மன்னனின் ஆதரவிலே தமிழகத்தில் இருந்து வந்த வைத்திய அறிஞர்களும் இங்கு வாழ்ந்தவர்களுமாகிய வைத்திய அறிஞர்களும் அடங்கிய குழு ஒன்றினாலே "பரராசசேகரம்" என்னும் வைத்திய நூல் உருவாக்கப்பட்டு இவனது ஆட்சிக் காலத்திலே அரங்கேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆரியச் சக்கரவர்த்திகள் ஆட்சியில் விநாயகர் வழிபாடு சிறப்புற்று விளங்கியமையால், அக்காலத்தில் பல இடங்களிலும் அரச ஆதரவுடன் விநாயகர் ஆலயங்கள் நிறுவப்பட்டதற்குச் சான்றுகள் உள்ளன. உதாரணத்திற்காக,.கருணாகரப் பிள்ளையார் கோயில், பறாளை விநாயகர் ஆலயம், வெயிலுகந்த பிள்ளையார் கோயில், கைலாசபிள்ளையார் கோயில் என்பனவற்றைக் குறிப்பிடலாம். அந்த வகையில் இணுவை மாநகரிலும் பரராஜசேகர மன்னன் ஆட்சிக் காலத்தில் இந்தப் பிள்ளையார் கோயிலும் அவனது ஆதரவுடன் ஸ்தாபிக்கப்பட்டிருக்கலாம் என்று கருத இடமுண்டு.

"இணுவில் பரராசசேகரப் பிள்ளையாரும் யாழ்ப்பாண அரசரின் சிம்மாசனப் பெயர்களுள் ஒன்றாகிய "பரராசசேகரன்" பெயரைத் தாங்கி நிற்பது அவதானிக்கத் தக்கது. இணுவிலும் ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் ஏற்பட்ட வேளாளக் குடியேற்றத்துடன் தொடர்புடையதாகக் காணப்படுவதால் இவ்வாலயம் இவர்கள் ஆட்சியில் ஆரம்பக்



கட்டத்தில் அமைக்கப்பட்டிருந்திருக்கலாம்'' இவ்வாறு யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர், கலாநிதி சி. க. சிற்றம்பலம் அவர்கள் ''யாழ்ப்பாண இராச்சியம்'' என்னும் தமது நூலில் (பக்கம் 220) ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் ஆலயம் சம்பந்தமாகக் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

மேலும் இவ்வாலயத்தில் கர்ண பரம்பரையாகப் பாடப் பெற்றுவரும் பின்வரும் பாடல் பரராஜசேகர மன்னன் ஆரியச் சக்கரவர்த்திகள் மரபில் பதினொராம் தலைமுறையைச் சேர்ந்தவன் என்றும் அவனால் வழிபாடு செய்யப்பட்ட தலம் என்றும் எடுத்துக் கூறுகிறது.

*''மங்கலம் பொலிவால சிங்கபுர வலனிடையில் வைத கவி வீரராக*
*வன்னியாழ் பாடியே வாங்கி அரசாண்ட நன் வள நாடதற்கு வேந்தன் –*
*பொங்கு கங்காதரன் புவனேகவாகுவாம் பூசுரர்களோடு வந்த*
*புண்ணியன் பொன்னிநாடெண்ணுமதி பதியாய புங்கவர் வணங்கு திலகன்*

*சிங்கை ஆரியச் சக்கரவர்த்தி தன் மரபில் ஏகாதசச் சிரமுறையினான்*
*திங்கள் நிகர் கவிகையான் துங்கமிகு பரராச சேகரத் திகிரி வேந்தன்*
*பொங்கும் அருள் தங்கவே பூசித்தநாயகா புவிபுகழும் மடவாசலில்*
*புகர் முகக் கடவுள் நின் மிகு கருணை அடியனேன் புந்தியில் தங்க அருளே''*

எனவே, இவ்வாலயம் அரச பரம்பரையோடு தொடர்புபட்டதென்பதும், பரராஜசேகர மன்னனால் வழிபடப் பெற்று பாதுகாக்கப்பட்டதென்பதும் தெளிவாகின்றது. இதன் காரணமாகவே இவ்வாலயத்துக்கு அன்று தொட்டு ''பரராஜசேகரப் பிள்ளையார் கோயில்'' என வழங்கப்பட்டு வருகின்றது.

பரராஜசேகர மன்னன் மந்திரி பிரதானிகளுடன் பிள்ளையாரை வழிபடும் காட்சி இவ்வாலயத்தின் தம்ப மண்டபத்தில் கண்கவர் வர்ணங்கள் தீட்டப்பெற்ற அழகிய சிற்பவடிவில் அமைக்கப்பட்டிருப்பதை ஆலயத்திற்குச் செல்லும் அடியார்கள் காணத் தவறமாட்டார்கள். பேசாத சிற்பங்களைப் பேச வைக்கும் சிற்ப வல்லுனரின் அபாரத் திறமையை பாராட்டாமல் இருக்கமுடியாது. மேலும் இந்தக் காட்சி தத்ரூபமாக ஆலய உட்பிரகாரச் சுவரில் ஓவியமாக வரையப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. ''பஞ்ச வன்னத் தூது'' என்னும் நூலின் பதிப்பாசிரியர் ''தமிழவேள்'' இ. க. கந்தசுவாமி அவர்கள் தமது நூலின் 119ம் பக்கத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

''ஈழத்தமிழ் அரசருள் புகழ்பெற்ற பரராசசேகர மன்னன், திருக்கோயில் அமைத்து எழுந்தருளுவித்த விநாயகர் ஆதலின் இவ்விநாயகருக்கு ''பரராசசேகரர்'' என்னும் சிறப்புப் பெயர் வழங்குகிறது.''

பல்கலைப் புலவர் (அமரர்) க. சி. குலரத்தினம் அவர்கள் ''தமிழ் தந்த தாதாக்கள்'' ஏன்னும் தமது நூலில் (பக் 38) இணுவில் பிள்ளையார் கோவிலைப் பற்றிக் குறிப்பிடும் போது ''பரராசசேகரன் பெயரால் இணுவில் பிள்ளையார் கோயில் நின்று நிலவுகிறது. எனவே, இவன் நல்லூருக்கும் அப்பால் திருக்கோயில்கள் அமைத்து சைவ பரிபாலனம் செய்தான் என்பது வெளிப்படை'' என்று கூறியிருப்பது பரராஜசேகர மன்னனுக்கும் இவ்வாலயத்துக்கும் உள்ள தொடர்பை உறுதிப்படுத்துகிறது.

*மன்னன் பரராஜ சேகரன் மன்னு வித்துத்*
*துன்னும் அவன் பேருடனே தோற்றமடைந் – தின்னல்*
*எலாம் அகற்றும் பிள்ளையார் இன்பமுறு கோயில்*
*சுலாவி உயர்க சொலித்து.*

*–கி. வா. ஜகந்நாதன்*

குறிப்பு: இக்கட்டுரை 'சிவநெறிக் செம்மல்' வை. அநவரத விநாயகமூர்த்தி அவர்களால் எழுதி வெளியிடப்பெற்ற ''யாழ்ப்பாணம், இணுவில் அருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோயில்'' என்னும் நூலிலிருந்து மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது.



# கணபதி வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்

மு. நளினி – இரா. கலைக்கோவன்

தமிழர் வாழும் இடமெல்லாம் இன்று தழைத்துப் பெருகியிருக்கும் கணபதி வழிபாடு, தமிழ் நாட்டில் எந்தக் காலத்தில் தோன்றியதென்பது குறித்துப் பல ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. எனினும் அவற்றுள் எந்த ஆய்வும் திடமான முடிவுகளை முன்வைக்காமை பெருங்குறையே.

தமிழர் வரலாறு போதுமான சான்றுகளைக் கொண்டு தொடங்குவது சங்க காலத்திலிருந்துதான். கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. இரண்டாம் நூற்றாண்டு வரை செழித்திருந்த இச் சங்க காலத் தமிழர் வரலாற்றைத் தெளிவுற அறிய இலக்கியங்களும் கல்வெட்டுக்களும் அகழ்வாய்வுச் சான்றுகளும் நன்கு உதவுகின்றன. இக்காலகட்டத் தமிழர் சமய வரலாறு, பல்துறை அறிஞர்களால் தொகுக்கப் பெற்றுள்ளது. சேயோன்(முருகன்), மாயோன் (திருமால்), இந்திரன், வருணன், பழையோள் (கொற்றவை), முக்கண்ணன்(சிவபெருமான்), பலராமன் எனத் தமிழர் வழிபட்ட தெய்வங்களைச் சங்க இலக்கியங்கள் பல பாக்களால் அறிமுகப்படுத்துகின்றன. சங்க இலக்கியங்களுள் காலத்தால் பிற்பட்டதாகக் கருதப்படும் கலித்தொகை, பரிபாடல் ஆகிய இரண்டும் இறை சார்ந்த பலதொன்மங்களை விளக்குகின்றன. சங்க காலத்திற்குச் சற்று முற்பட்டதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள தொல்காப்பியமும் தமிழர் வழிபாட்டுச் சிந்தனைகளை முன்வைக்கிறது. இவ்விலக்கியங்களுள் ஒன்றுகூட மறை பொருளாகவேனும், பிள்ளையார் வழிபாட்டைப் பற்றி யாண்டும் குறிப்பிடாமை நினைவு கொள்ளத்தக்கது.

'நல்லவுந் தீயவும் அல்ல குவியினர்ப்புல்லிலை' எருக்கமாயினும் உடையவை கடவுள் பேணேம் என்னா என்னும் புறநானூற்றுப் பாடலடி (புறம் 106) கொண்டு அதன் பொருளையுணர்ந்தும் உணரார் போல் சிலர் சங்க காலத்தில் பிள்ளையார் வழிபாடிருந்ததாகக் கூறுவது பிழையாகும். 'நல்லதென்றும், தீயதென்றும் வகைப்படுத்த இயலாத எருக்கம்பூ தரினும் தெய்வங்கள் அவற்றை மறுப்பதில்லை' எனும் பொருள் அமைந்த இப்பாடல், தெய்வங்களின் சார்பற்ற தன்மையைச் சுட்டுகிறதே தவிர, பிள்ளையார் வழிபாட்டை அல்ல. எருக்கம்பூ, சிவபெருமானால் விரும்பிச் சூடிக் கொள்ளப்பட்ட பூவாக அப்பர்பெருமானால் சுட்டப்படுவது நோக்க, பின்னாளிலேயே இது பிள்ளையாருக்கு உகந்த பூவாக மாற்றப்பட்டமை தெளிவாகும். எவ்வித அடிப்படைச் சுட்டலும் இல்லாத இப்பாடலடி கொண்டு பிள்ளையார் வழிபாடு சங்க காலம் தொட்டே இருந்தது எனக் கூறுவார் கூற்று எவ்விதத்தாலும் உண்மையாகாமை கண்கூடு.

தமிழ் நாடு முழுவதுமாய் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள் இக்காலகட்டச் சான்றுகளைப் பலவாய்த் தந்திருந்தாலும், பிள்ளையார் வழிபாட்டைக் குறிக்கும் எத்தகு அடையாளங்களையும் இன்றுவரை தரவில்லை. தமிழ் நாட்டின் இயற்கை குகைத்தலங்களில் காணப்படும் இக்காலகட்டத் தமிழ்க் கல்வெட்டுகளும் இது குறித்து மௌனமாகவே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

சங்க காலத்தையடுத்தமைந்த மூன்று நூற்றாண்டுகளில் (கி. பி. 200 – கி. பி. 500) தமிழ் நாடு தமிழர் கையிலிருந்து மாறிப் பல்லவர்,

களப்பிரர் வயமாயிற்று. இக்காலகட்ட வரலாற்றையறிய பல்லவர்களின் பிராக்கிருத, வடமொழிச் செப்பேடுகளும் இலக்கியங்களும் உதவுகின்றன. பல்வேறு அறிவியல் பூர்வமான சான்றுகளின் அடிப்படையில் தமிழ்நாடு, இலங்கை, ஜப்பான் சார்ந்த அறிஞர் பெருமக்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள் முதலிய இலக்கியங்களை இக்காலகட்டம் சார்ந்தவை என அடையாளப் படுத்தியுள்ளனர். இவ்விலக்கி யங்களுள் தமிழ் சமய வரலாறு குறித்த அரிய பல தரவுகளை உள்ளடக்கி இருக்கும் சிலப்பதிகாரம் புகாரிலும், மதுரையிலும் இருந்த இறைக் கோயில்களை வகைப் படுத்தியும் வரிசைப்படுத்தியும் காட்டுகிறது.




பிறவா யாக்கைப் பெரியோன் (சிவபெருமான்), அறுமுகச் செவ்வேள் (முருகன்), வாலியோன் (பலராமன்), நெடியோன் (திருமால்), இந்திரன், கொற்றவை, கதிரவன் எனப் பல்வேறு முதன்மைத் தெய்வங்களைச் சுட்டும் சிலப்பதிகாரம், தருக்கோட்டம், வெள்யானைக் கோட்டம், வேற்கோட்டம், வச்சிரக் கோட்டம், என இறை சார்ந்தவற்றிக்கமைந்த கோயில்களையும் காட்டுகிறது. சிறுதெய்வ வணக்கம் பற்றியும் விரித்துரைக்கும் இவ்விலக்கியத்தில் பேரூர் சார்ந்தோர் சிற்றூர் சார்ந்தோ எவ்விடத்தும் பிள்ளையார் வழிபாடு பேசப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இக்காலகட்டத்தைச் சேர்ந்ததாக கருதப்படும் பூலாங் குறிச்சிக் கல்வெட்டு, கோயில்களைப் பற்றியும் இறைவழிபாடு பற்றியும் கூறினாலும் பிள்ளையார் பற்றிய குறிப்புக்களைக் கொண்டிருக்காமை கருதத்தக்கது.

பிள்ளையாரை முதன் முதலாக அறிமுகப்படுத்தும் இலக்கியங்கள் அப்பர், சம்பந்தர் திருமுறைகளே. இந்த ஆறு திருமுறைகளிலும் அப்பரும் சம்பந்தரும் பிள்ளையாரைப் பற்றி மிகக் குறைவான இடங்களிலேயே குறிப்புத் தருகின்றனர். இப்பெருமக்களின் காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கமென அறிஞர் கொள்வர். இக்குறிப்புகளால், பிள்ளையார் சிவபெருமானால் தோற்றுவிக்கப்பட்டவர் என்பதையும் கயாசுரனைப் போரில் வென்றவர் என்பதையும் அறியமுடிவதுடன், அவரது தோற்றம் பற்றிய வர்ணனைகளையும் ஓரளவிற்குப் பெறமுடிகிறது.

உமை பெண்யானையின் வடிவம் கொள்ள சிவபெருமான் ஆண் யானையின் வடிவம் கொண்டு இணைந்ததன் பயனாய்ப் பிறந்தவர் பிள்ளையார் என்பதை இரண்டு பதிகங்களால் விளக்குகிறார் சம்பந்தர். தம்மை வழிபடும் அடியவர் தம் இடர்களைத் தீர்ப்பதற்காக இறைவன் அருளிய கொடையே கணபதி என்று பிள்ளையாரின் பிறப்பிற்கு காரணம் காட்டும் சம்பந்தர் (சம்.1;123;5, 126;6), 'தந்த மதத்தவன் தாதை' (1;11 5;2), 'மருப்புறுவன் தாதை' (1;117;8), 'கரியின் மாமுகமுடைய கணபதி தாதை' (2;232;3) என்று சிவபெருமானைச் சிறப்புச் செய்யுமாறு பிள்ளையாரின் தோற்றம் காட்டுகிறார்.





நாவுக்கரசர், சம்பந்தரின் கூற்றை 'கைவேழ முகத்தவனைப் படைத்தார்' (6;53;4), 'விநாயகர் தோன்றக் கண்டேன்' (6;77;8), 'ஆனைமுகற்கு அப்பன்' (6;74;7), 'கணபதி என்னும் களிறு' (4;2;5) எனும் பல்வேறு தொடர்களால் உறுதிப்படுத்துகிறார். கயாசுரனைக் கொல்லச் சிவபெருமான் பிள்ளையாரைப் பயன்படுத்திக் கொண்ட தகவலைத் தரும் நாவுக்கரசர், அதற்காகவே பிள்ளையார் பிறப்பிக்கப்பட்டார் எனக் கருதுமாறு பாடல் அமைத்துள்ளார். (6;53;4).

முருகப் பெருமானைப் பற்றி நாற்பத்தேழு இடங்களில் விதந்தோதும் இவ்விரு சமயக் குரவரும், பிள்ளையாரைப் பற்றி மிகக்குறைவான அளவிலேயே குறிப்புகள் தந்திருப்பதை நோக்க இவர் தம் காலத்திற்குச் சற்று முன்னதாகவே பிள்ளையார் வழிபாடு தமிழ்நாட்டில் கால்கோள் கொண்டதாகக் கருதலாம்.

தமிழ் நாட்டில் இன்றைக்கும் காணப்படும் இறைகோயில்களுள் காலத்தால் பழமையானவை குடைவரைகளே. குன்றுகளைக் குடைந்தும், பாறைகளைச் செதுக்கியும் இத்தகு குடைவரைகள் அமைக்கப்பட்டன. வடதமிழ் நாட்டில் இத்திருப்பணியைத் தொடங்கியவர் பல்லவப் பேரரசரான முதலாம் மகேந்திரவர்மர். இவர் காலத்தனவாகக் கொள்ளத்தக்க குடைவரைகள் எவற்றிலும் பிள்ளையார் சிற்பம் இடம்பெறவில்லை. திருக்கழுக் குன்றத்தில் உள்ள ஒரு கல்மண்டபம் முதலாம் நரசிம்மவர்மரின் திருப்பணியாகக் கருதப்படுகிறது. இதிலும் பிள்ளையாரின் வடிவமில்லை. இராஜசிம்மரின் குடை வரைகளிலும் பிள்ளையாரின் சிற்பம் இறைவடிவமாகக் காட்டப்படவில்லை என்றாலும் மாமல்லபுரம் இராமாநுசர் குடைவரையின் கணவரியில் பிள்ளையார் இடம்பெற்றுள்ளார். இராஜசிம்மர் காலப்பணியாகக் கருதப்படும் மாமல்லப்புரம் தருமராஜர் ரதத்தின் கணவரியிலும் பிள்ளையார் எனக் கொள்ளத்தக்க வடிவங்கள் இடம்பெற்றுள்ளன. இராஜசிம்மரின் கற்றளிகளில் பிள்ளையார் கூடுகளிலும் கோட்டங்களிலும் இடம்பெறத் தொடங்குகிறார். சிராப்பள்ளியிலுள்ள கீழ்க் குடைவரை, சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பட்டூர் கயிலாச நாதர்கோயில், செங்கற்பட்டு மாவட்டம் வல்லத்திலுள்ள. கந்தசேனரின் குடைவரை ஆகியவற்றில் பிள்ளையார் கோட்டத் தெய்வமாகக் காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்காலகட்டத்தை கி. பி. எட்டாம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியாகக் கொள்ளலாம். இதனால் வடதமிழ் நாட்டு இறைக்கோயில்களில் பிள்ளையாரின் சிற்பங்கள் சம்பந்தர், அப்பர் காலத்திற்கு ஏறத்தாழ ஒரு நூற்றாண்டிற்குப் பிறகே இடம்பெறத் தொடங்கியமை தெளியப்படும்.

தென்தமிழ்நாட்டில் பாண்டியர், முத்தரையர் கைவண்ணமாகப் பிறந்த குடைவரைகள் பலவற்றில் பிள்ளையாரின் சிற்பம் காணப்படுகிறது. இவற்றுள் குறிப்பிடத்தக்கது பிள்ளையார் பட்டி. இங்குள்ள பிள்ளையார் இன்றைக்கு முதன்மைத் தெய்வமாக வழிபடப்பட்டாலும் உருவான காலத்தில் சிவன்கோயிலின் பக்கச் சுவரில் கோட்ட தெய்வமாக செதுக்கப்பட்டவரே ஆவார். இக்குடைவரையில் இடம்பெற்றுள்ள வட்டெழுத்துக் கல்வெட்டு, 'எக்காட்டூருக் கோன் பெருந்தசன்' எனும் பெயரைத் தருகிறது. இக்கல்வெட்டின் எழுத்தமைதி கொண்டு இதை ஆறாம் நூற்றாண்டென்பர் அறிஞர்கள். இக்கருத்து ஏற்புடையதாயின் பிள்ளையார்பட்டி குடைவரையின் காலமும் ஆறாம் நூற்றாண்டாகிவிடும். எனில், தமிழ்நாட்டின் காலத்தால் முற்பட்ட பிள்ளையார் சிற்பமாகப் பிள்ளையார் பட்டிக் குடைவரைப் பிள்ளையாரையே கொள்ள வேண்டிவரும். குடைவரையின் அமைப்பு, சிற்பங்களின் செதுக்கு நேர்த்தி கொண்டு இக்குடைவரையின் காலத்தை ஏழாம் நூற்றாண்டாகக் கொள்வாரும் உண்டு. இரண்டில் எதை

ஏற்பினும் இப்பிள்ளையாரே தமிழ்நாட்டின் காலத்தால் முற்பட்ட பிள்ளையார் என்பதில் ஐயமில்லை. திருமலைப்புரம், செவல்பட்டி, தேவர்மலை, அரிட்டாபட்டி, மலையக்கோயில், திருப்பரங்குன்றம், மலையடிப்பட்டி, குன்றக்குடி, கோகர்ணம் முதலிய பல பாண்டியர் முத்தரையர் குடைவரைகளின் பிள்ளையார் சிற்பம் இடம்பெற்றுள்ளமையை நோக்க, தமிழ்நாட்டில் பிள்ளையார் வழிபாடு காலூன்றிய இடமாகப் பாண்டிய மண்ணையே கொள்ளவேண்டி உள்ளது. கி. பி. ஆறு, ஏழாம் நூற்றாண்டுகளில் சிறாப்பள்ளிக்கு தெற்கே காலூன்றிப் பரவிய இப்பிள்ளையார் வழிபாடு எட்டாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் தான் வடதமிழ் நாட்டிற்குள் குடிபுகுந்தது. எட்டாம் நூற்றாண்டிற்குப் பிறகும் தமிழ்நாட்டுச் சமய வரலாற்றில் முருகப் பெருமானுக்கு கிடைத்த இடம் பிள்ளையாருக்குக் கிடைக்கவில்லை என்பதே உண்மை.

பல்லவர், பாண்டியர், முத்தரையர் குடைவரைகளில் கோட்டத் தெய்வமாக இடம்பெற்ற பிள்ளையார் தொடக்க காலப் பல்லவர் கற்றளிகளில் ஆங்காங்கே இடம்பெற்றாலும், தொடர்ந்த கற்றளிகளில்தான் உள்மண்டபத் தென்கோட்டத் தெய்வமாக நிலைபெற்றார். இந்நிலைபேறு சோழர் காலத்தில் உறுதியாக்கப்பட்டது.

சோழர் காலக் கற்றளிகளில் திருச்சுற்றில் சுற்றாலைக் கோயில்கள் உருவானபோது எண்பரிவாரத்துள் ஒன்றாகப் பிள்ளையாருக்கும் இடம் கிடைத்தது. திருச்சுற்றின் தென்மேற்கு மூலை பிள்ளையாருக்கு உகந்த இடமாக ஒதுக்கப்பட்டு அவருக்கென தனித்திருமுன் அமைக்கப்பட்டது. இத்தகு பிள்ளையார் திருமுன்களைச் சோழர் கற்றளிகளிலும் பின்னால் வந்த பிறமரபுப் பேரரசுக் காலக் கற்றளிகளிலும் இன்றும் காணலாம்.

கோட்ட தெய்வமாகவோ, சுற்றாலை தெய்வமாகவோ மட்டுமே அமைந்த பிள்ளையாருக்குத் தனிக்கோயில் அமைக்கும் பழக்கம் மிகப் பிற்பட்ட காலத்திலேயே ஏற்பட்டது. தமிழ் நாட்டு கோயில்களில் கிடைக்கும் பல்லாயிரக் கணக்கான கல்வெட்டுகளும் இதையே உறுதிசெய்கின்றன.

# கொழுக்கட்டை

**கொ**ழுக்கட்டை எனப்படும் மோதகம் கணபதிப் பெருமானுக்கு மிகவும் பிடிக்கும்.

யானைக்கு மிகவும் பிடித்தமான ஆகாரம் அரிசியும், வெல்லக்கட்டியும் தேங்காயுமேயாகும். இவைகளைக் கொண்டே மோதகம் தயாரிக்கப்படுகிறது.

கொழுக்கட்டையின் வெளியில் மாப்பண்டமும் அதனுள்ளே பூரணமும் உண்டு. பூரணமில்லாமல் மாப்பண்டம்,சுவைப்பதில்லை. அதுபோல பூரணப் பிரம்மத்தை அறியாத மனித வாழ்வில் சுகமில்லை, அர்த்தமில்லை. இந்தத் தத்துவத்தின் சின்னமாகத்தான் கொழுக்கட்டை விளங்குகிறது.

“எம்பெருமானே! வெளியே நான் காட்சியளித்தாலும் என்னுள்ளே பூரணமாக இருந்து என்னைப் புனிதப்படுத்துவது நீயன்றோ! என்னையே நான் ஆத்ம நிவேதனம் செய்கிறேன்” என்பதுவே மோதகத்தின் தத்துவ விளக்கமாகும்.



அறுபதாவது ஆண்டு நிறைவு விழாவின் போது
சென்னை கபாலீஸ்வரர் திருக்கோயில் வேதவாத்தியார்
பிரம்மஸ்ரீ Dr. A. G. ஸ்ரீநிவாச சாஸ்திரிகளுடன்




எங்கள் ஆலய பிரதம குருவும், அம்மாவும்

மணிமண்டபத் திருப்பணியை நிறைவேற்றிய குடும்பத்தவர்கள்



கருணாமூர்த்தி குடும்பம்
(இலண்டன்)



குகவரதன் குடும்பம்
(இலண்டன்)

உ



# ஈழநாட்டிலும் அயல் நாடுகளிலும் விநாயகர் வழிபாடு

- ஈழநாடும் விநாயகர் வழிபாடும்
- அயல் நாடுகளில் ஆனைமுகத்தோன் வழிபாடு
- **Ganesa in Southeast Asian Art**
- **Early Sculptures**



# ஈழநாடும் விநாயகர் வழிபாடும்

ஆறு திருமுருகன்


சிவபூமி எனத் திருமூலர் சுவாமிகளால் போற்றப்பட்ட ஈழநாட்டின் இருதயமாக விளங்குவது யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்தில் பலநூறு வருடப் பழமை வாய்ந்த வழிபாடாக விநாயகர் வழிபாடு நிலவி வருகின்றது. விநாயகருக்குத் தனிக்கோயிலும் ஏனைய தலங்களில் விநாயகருக்குப் பரிவாரக் கோயிலும், ஸ்தம்ப மண்டபத்தில் விநாயகரை வரவேற்புத் தெய்வமாக இருத்துகின்ற பாரம்பரியமும் யாழ்ப்பாணத்தின் தொன்மைப் பண்பாடாக விளங்கி வருகிறது. மேலும் எச்சுபகாரியங்களிலும் பசுவின் சாணியில், மஞ்சளில் பிள்ளையார் பிடித்து வைத்து கருத்தில் கொள்வதும், மார்கழி மாதத்தில் இல்லங்கள் தோறும் கோலமிட்டு விநாயகரை 31 நாட்கள் பிடித்துவைக்கும் வழக்கமும் யாழ்ப்பாண மக்களின் பாரம்பரிய விநாயகர் வழிபாட்டு அம்சமாக விளங்குவது குறிப்பிடத்தக்கது.

போர்த்துக்கேயர் இலங்கையை 1505ம் ஆண்டு கைப்பற்றுவதற்கு முன்பு சைவசமயமும் சிவாலய வழிபாடும் ஈழநாட்டில் மிகவும் எழுச்சி பெற்று விளங்கியமையை வரலாறு கூறுகிறது. அன்னியர் வருகைக்கு முன்பு ஈழத்தில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மன்னர்கள் கட்டிய பெரிய விநாயகர் கோயில்கள் இருந்தன என்பதற்கு இலக்கியங்கள், கல்வெட்டுகள், வாய்மொழி மரபுச் சான்றுகள் உள்ளன. சோழநாட்டு அரசிளங்குமரி மாருதப்புரவீகவல்லி குதிரை முகம் மாறும் பொருட்டு கீரிமலை கண்டகி தீர்த்தத்தில் நீராட வருகைதந்து தீராத நோய்மாறி நலம் பெற்றதற்காகப் பல பெருங்கோயில்கள் அவளது ஞாபகமாகக் கட்டப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் மட்டுமின்றி அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் கோயில், வறுத்தலைப் பிள்ளையார், கொல்லங்கலட்டிப் பிள்ளையார், பெருமாக் கடவைப் பிள்ளையார் போன்ற விநாயகர் தலங்கள் அரசிளங்குமாரி காலத்தில் எழுந்தவையெனவும் அவை பின் போர்த்துக்கேயரால் முற்றாக அழிக்கப்பட்டன எனவும் கூறப்படுகின்றது. 1109இல் கருணாகர மன்னன் இணுவில் உரும்பிராய் கிராம எல்லையில் கருணாகரப்பிள்ளையார் கோயிலைக் கட்டுவித்தான் என அங்குள்ள கல்வெட்டு சான்று கூறுகின்றது.

கி. பி. 1475ல் சிங்கைப் பரராஜசேகரன் யாழ்ப் பாணத்தை ஆண்டபோது நல்லூர் நகரத்தின் நான்கு புறங்களிலும் பெருங்கோயில்களைக் கட்டுவித்தான். கிழக்கு திசையில் அவன் கட்டுவித்த வெய்யிலுகந்த பிள்ளையார் கோயில் முன்காலத்தில் மிகப் பிரசித்தமாக விளங்கியுள்ளது.

சிங்கைப் பரராஜசேகரனின் மைத்துனனும், மந்திரியுமான அரசகேசரி, நல்லூர் ராசவீதியில் குதிரை வண்டியில் போகும் போது நீர் வேலியில் குதிரை திசைமாறி வேகமாக ஓர் குளத்தை நோக்கிச் சென்றதாகவும் அவ்விடத்தில் தனது நேர்த்தியாக அரசகேசரி மிகப் பெரிய விநாயகர் கோயிலைக் கட்டியதாகவும் வரலாற்று நூல்கள் கூறுகின்றன. இத் திருக்கோயில் இன்று நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயில் என அழைக்கப்படுகிறது.

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் என்று இன்று அழைக்கப்படும் விநாயகர் கோயிலைத் தமிழ்வேந்தன் பரராசசேகரன் கட்டிப்



பேணினான் என்றும், அன்னியர் வருகையால் அத்தலம் முற்றாக அழிந்து பின் அருகில் இருந்த தீர்த்தக்கேணியிலும், மடத்திலும் பிள்ளையாரை மக்கள் பூசித்து வந்ததால் மடத்துவாசல் பிள்ளையார் என இக்கோயில் அழைக்கப் பட்டு வந்ததாகவும் இத் திருக்கோயில் பற்றிய வரலாற்று நூல் குறிப்பிடுகின்றது. பரராஜசேகர மன்னனின் சகோதரன் செகராசசேகரனால், கட்டப்பட்ட கோயில் அன்னியரால் அழிக்கப்பட்டதாக கூறப்பட்டாலும் இன்றும் இணுவில் செகராசசேகரப் பிள்ளையார் கோயில் என்ற நாமத்துடன் ஒரு கோயிலுள்ளது.

ஈழத்துப் புராதன சிவாலயங்களிலும் ஏனைய முருகன் தலங்களிலும் விநாயக வழிபாடு சிறப்புற்று விளங்கியுள்ளது. கீரிமலைப் பகுதியில் கடற்கரை எல்லையில் நிலத்தின்கீழ் மிகப்பழைய விநாயகர் விக்கிரகம் கண்டு எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாண மாவட்டம்

### *யாழ்ப்பாணம் - செயலர் பிரிவு*

**வில்லூன்றி ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோயில்**

இராமபிரான் சிவபூசை செய்த இடம் எனவும் அவரது வில்பட்டு நன்னீர் ஊற்று தோன்றியதால் பெயர் ஏற்பட்டதாகவும் கூறப்படும் இவ்வூரில் நூறுவருடத்திற்கு மேற்பட்ட விநாயகர் விக்கிரகம் காணப்படுகிறது. கல்வெட்டுக்கள், சாசனங்கள் உள.

**ஞான செல்வ விநாயகர் கோயில்**
**கொய்யாத் தோட்டம் கண்டுக்குளி**

1760ல் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயம்

**கரப்பிரான் பிள்ளையார்கோயில்,**
**ஆனைக்கோட்டை**

நூற்றி ஐம்பது வருட வரலாறு கொண்ட கோயில்

**ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார்**
**கோயில், அத்தியடி**

இவ்வாலயத்தில் நூறுவருடங்களுக்கு முன் சிதம்பரத்திலிருந்து கொண்டு வரப்பட்ட நர்த்தன விநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபாடு நடைபெற்றது.

**வண்ணார்பண்ணை பன்றிக்கோட்டுப்**
**பிள்ளையார் கோயில்**

பழமை வாய்ந்த இவ்வாலயத்தில் சித்தி புத்தி சமேத விநாயகர் அமைந்திருப்பது சிறப்பு அம்சமாகும்.

### ● *நல்லூர் - செயலர் பிரிவு*

**கைலாயபிள்ளையார் கோயில், நல்லூர்**

நல்லூர் தமிழ்வேந்தர் காலத்தில் எழுந்த இவ்வாலயம் போர்த்துக்கேயரால் முற்றாக அழிக்கப்பட்டது. இவ்வாலயத்தில் வடக்குக் கருவறையில் சிவனும், நடுவே விநாயகரும் தென்திசை நோக்கி அம்மனும் இருப்பது குறிப்பிடத்தக்கது. போரில் அழிந்த இவ்வாலய விக்கிரகங்கள் மறைத்து வைத்துப் பாதுகாக்கப்பட்டு, மீண்டும் ஆலயம் எழுப்பப்பட்டு, பிரதிஷ்டை செய்யப்பட்டதாக வரலாறு கூறுகிறது. இவ்வாலயத்திற்கு அருகிலேயே நல்லை நகர் நாவலர் பெருமான் பிறந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. நாவலரது உறவினர்களே மீண்டும் இவ்வாலயத்தைக் கட்டினர். நாவலர் பெருமான் இவ்வாலயம் மீது ஊஞ்சல், பிரபந்தம் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது.

**அரியாலை ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்**

தொண்டை நாட்டைச் சேர்ந்த யாழ்பாடியின் காலத்தில் அவரது முதல் அமைச்சர் சேதிராயரின் வேண்டுகோளின் படி கச்சிக்கணேசப்பர் என்னும் அந்தணரால் பிள்ளையார் இவ்வாலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக ஆலய வரலாறு கூறுகின்றது. இவ்வாலயம் பற்றி யாழ்ப்பாணச் சரித்திர நூலில் குறிப்புகள் காணப்படுகின்றன.

**நல்லூர் பண்டாரிக்குளம் பிள்ளையார் கோயில்**

100 வருடப் பழைமைமிக்க கோயில். **திருநெல்வேலி கிழக்கு தலங்காவற் பிள்ளையார் கோயில். திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ விரகத்தி விநாயகர் ஆலயம்.**

**கோண்டாவில் ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் கோயில்**

1880இல் இவ் ஆலயம் மடத்தில் ஸ்தாபிக்கப்பட்டு இன்று எழுச்சி பெற்றுள்ளது. இவ் ஆலயத்தில் கந்தையா சுவாமிகள் (குடைச்சாமியார்) என்ற சித்தரின் சமாதிக் கோயிலும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**கோண்டாவில் ஸ்ரீசந்திரசேகரப்பிள்ளையார் கோயில்**

இவ்வாலயம் பற்றிய ஐதிகக் கதைகளில் செகராசசேகர மன்னனே இக்கோயிலைக் கட்டினான் எனச் சொல்லப்பட்டு வருகிறது.

**கோண்டாவில் நெட்டிலிப்பாய் விநாயகர் கோயில்**

இவ்வாலயம் இன்று கோபுரத்தோடு பெருங் கோயிலாக வளர்ச்சி பெற்றுள்ளது.



## ● *சண்டிலிப்பாய் செயலர் பிரிவு*

**மானிப்பாய் மருதடி விநாயகர் கோயில்**

மருதமர அடியில் விநாயகர் தானாகத் தோன்றியதாக ஐதிகம். எழுநூறு வருடமாக மருதமரம் உயிருடன் இருப்பதாக, அதன் தெய்வீகத் தன்மையை மக்கள் போற்றுகிறார்கள். ஆலய முன்றலில் மாட்டினை உணவுக்காக டச்சுக்காரர் வெட்டியபோது ஆலயக் கருவறை விநாயகர் மேற்கு திசை நோக்கித்திரும்பியதாக வாய்மொழி மரபாகப் பேசப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் புகழ்பூத்த விநாயகர் தலமாக இத்தலம் இன்று விளங்குகிறது.

கட்டுடை அரசடி விநாயகர் கோயில், வடசேகரப் பிள்ளையார் கோயில் பெரிய விளான் – பண்டத்தரிப்பு மாதகல் ஸ்ரீசித்தி விநாயகர் கோயில், மாசியப்பிட்டி குளக்கரைப் பிள்ளையார் கோயில், இளவாலை கூத்துமலைப் பிள்ளையார் கோயில், வடலியடைப்பு புதராளை சித்தி விநாயகர் கோயில், சங்கானை வடக்கு விநாயகர் கோயில் என்பன நூறு வருடம் பழைமை வாய்ந்த கோயில்களாகும்.

**கல்வளை ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில்**

முந்நூறு வருடப் பழைமைமிக்க ஆலயம். நவாலியூர் சோமசுந்தரப்புலவரால் பாடப்பட்டது.

## ● *உடுவில் - செயலர் பிரிவு*

**இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயில்**

தமிழ் வேந்தர் கால வரலாறு கொண்ட கோயில்

**இணுவில் செகராசசேகரப் பிள்ளையார் கோயில்**

தமிழ்வேந்தர் வரலாறு பேசப்படும் கோயில் கி.பி 1475ல் கட்டப்பெற்றதாகச் சொல்லப்படுகிறது.

**புன்னாலைக் கட்டுவன் ஆயக்கடவைச் சித்திவிநாயகர் கோயில்**

மிகவும் பழைமை வாய்ந்த இத்திருக்கோயில் மீது வித்துவான் கணேசையர் பாமாலை பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**இணுவில் கம்பனைப் பிள்ளையார் கோயில்**

இவ் ஆலயத்தை அரசோலைப் பிள்ளையார் எனவும் அழைப்பர். சித்தர்கள், யோகிகள் இவ்விடத்தில் முன்பு தவம் செய்ததாக ஐதிகம்.

**உடுவில் கற்பக விநாயகர் கோயில்**

இணுவில் உடுவில் எல்லையில் இவ்வாலயம் அமைந்துள்ளது. நூறுவருட வரலாறு இவ்வாலயத்திற்கு உண்டு.

**உடுவில் கற்பக்கோனை விநாயகர் கோயில்**

உடுவில் குளத்திற்கு அருகில் அமைந்த இவ் ஆலயம் நூறுவருட வரலாறு கொண்டதாகவுள்ளது.

**ஏழாலை ஆலங்கட்டை விக்னேஸ்வரர் கோயில்**

ஏழாலை கிராமத்திலுள்ள பழைமைமிக்க விநாயகர் ஆலயம்.

**குப்பிளான் கற்கரை கற்பக விநாயகர் கோயில்**
**ஈவினை கற்பகவிநாயகர் கோயில்**

நூறுவருடங்களுக்கு மேல் வரலாறு கொண்ட கோயில்.

**உடுவில் ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் கோயில்**

மானிப்பாய் உடுவில் வீதியில் அமைந்துள்ள இவ்வாலயம் மிகவும் தொன்மை வாய்ந்தது. மூலமூர்த்தி, பணிக்கர் காலத்தது என வரலாற்றாளர் குறிப்பிடுகின்றனர். இவ்வாலயம் அருகே 300 வருடகால திருக்கேணி காணப்படுகிறது.

**தாவடி வேதவிநாயகர் கோயில்**

*புராதன கோயில்கள்:*

கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார். குப்பிளான் சொக்கர்வளவு விநாயகர். கந்தரோடை ஆலடிப்பிள்ளையார். சங்குவேலி சிவஞானப் பிள்ளையார்.

## ● தெல்லிப்பழை - செயலர் பிரிவு

**அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையார் கோயில்**


மாருதப்புரவீகவல்லியால் கட்டப்பெற்றது. மிகவும் புராதன வரலாறுடைய கோயில்.

**அளவெட்டி அளகொல்லை ஸ்ரீ விநாயகர் கோயில்**

மாருதப்புரவீகவல்லியால் ஸ்தாபிக்கப்பட்டு, பின் அந்நியர் வருகையால் அழிந்து 1845ல் மீண்டும் கட்டப்பெற்ற கோயில்.

**இளவாலை ஆனைவிழுந்தான்**
**விக்னேஸ்வரர் கோயில்**

மாருதப்புரவீகவல்லி தான் அமைத்த விநாயகர் ஆலயங்களைத் தரிசிக்கச் செல்லும்போது அவருடைய யானை இந்த ஆலயத்தில் விழுந்து வணங்கிய தலமாகையால் இந்தப் பெயர் இவ்வாலயத்திற்கு ஏற்பட்டது. மூலமூர்த்தி சுயம்புலிங்கத்துடன் கூடிய விநாயகர்.



**கொல்லங்கலட்டி ஸ்ரீவீரகத்தி விநாயகர்**

மாருதப்புரவீகவல்லியால் கட்டப்பெற்ற திருத் தலங்களில் இதுவு மொன்று.

**அளவெட்டி பெருமாக்கடவை**
**ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்**

மாருதப்புரவீகவல்லியால் கட்டப்பெற்ற ஏழு திருத் தலங்களில் இதுவு மொன்று. பத்தாயிரம் சதுர அடி விஸ்தீரணமான தொன்மைமிக்க தாமரைக் குளம் இவ்வாலயம் அருகே காணப்படுகிறது. இவ்வாலயம் தொடர்பாக யாழ்ப்பாண வைபவமாலை என்ற ஆதிநூலில் சில தகவல்கள் காணப்படுகின்றன.

**காங்கேசன்துறை காயாத்துறை ஆனந்தப்**
**பிள்ளையார் கோயில்**

ஆதியில் எழுந்த கோயில்களில் ஒன்றாகக் கருதப்படும் இக்கோயில் பற்றிய வரலாறு தெட்சண கைலாய மான்மியம், யாழ்ப்பாண வைபவமாலையில் குறிப்பிட்டு இருப்பது சிறப்பம்சமாகும்.

**தெல்லிப்பளை நீலியம்பனை**
**பிள்ளையார் கோயில்**

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர் நீலி என்ற ஒரு வயதான அம்மையார் பனை மரத்தடியில் விநாயகரைப் பூசித்து வந்ததாக வரலாறு கூறுகிறது.

**தெல்லிப்பளை காசி விநாயகர் கோயில் (காசிப்பிள்ளையார்)**

காசியிலிருந்து மூல விக்கிரகம் கொண்டு வந்து பிரதிஷ்டை செய்யப்பட்ட கோயில்.

**கட்டுவன் சோழங்கராயர் விக்கின விநாயகர் கோயில்**

நூற்றைம்பது வருட கால வரலாற்றினைக் கொண்ட கோயில்.

**அளவெட்டி கணேஸ்வரம் குருக்கள் கிணற்றடி விநாயகர் கோயில்**

பல வருடங்களுக்கு முன்னர் சம்பந்தஞானி என்ற இளவரசர் சமாதி அடைந்த இடம். குருக்கள் ஒருவர் கிணறு ஒன்றைத் தோண்டியபோது அதில் தோன்றிய விநாயகரே வழிபாடு செய்யப்பட்டு வருகிறது.

**தெல்லிப்பளை பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் கோயில்**

நூறு வருடங்களுக்கு மேல் பழைமைமிக்க கோயில்.

**கீரிமலை தீர்த்தக்கரைப் பிள்ளையார்**

கீரிமலையில் தீர்த்தமாடும் அடியவர்கள் முதலில் வழிபாடு செய்யுங் கோயிலாக இவ்வாலயம் விளங்குகிறது.

**பலாலி வடக்கு கொல்லன் கலட்டிப் பிள்ளையார் கோயில்**

ஆதிவிநாயகர் கோயில்களிலொன்று.

**தையிட்டி அரசடி சித்திவிநாயகர் கோயில்**

500 வருடங்களுக்கு முன்னர் இரண்டாம் இராஜேந்திர சோழமன்னனின் மந்திரி வரராசசிங்கன் இந்தியாவில் இருந்து மூர்த்தம் கொண்டுவந்து இவ்வாலயம் உருவாக்கப்பட்டதாக இவ்வாலய வரலாறு கூறுகிறது.

**மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில்**

150 வருட வரலாறு கொண்ட கோயில்.

## ● *பருத்தித்துறை - செயலர் பிரிவு*

**குடத்தனை காளிவயல் விரகத்திப் பிள்ளையார் கோயில்**

பழைய வரலாறு மிக்க ஆலயம்.

**பருத்தித்துறை அம்பன் ஸ்ரீ விரகத்தி விநாயகர் கோயில்**

பழைய சிறிய ஆலயம்.

**வல்வெட்டித்துறை நெடியகாடு திருச் சிற்றம்பலப் பிள்ளையார் கோயில்**

1824 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது.

**பருத்தித்துறை அத்தியடிப் பிள்ளையார் கோவில்**


மிகவும் தொன்மைமிக்க தலம்.

**நூறு வருடப் பெருமை மிக்க பிற ஆலயங்கள்:**

| | | |
|---|---|---|
| துன்னாலை | – | நுணுவில் குளக்கோட்டு விநாயகர் கோயில் |
| வல்லிபுரக்குறிஞ்சி | – | குருக்கட்டுப் பிள்ளையார் கோயில் |
| புலோலி | – | ஆத்தியவத்தை ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயில் |
| தும்பளை | – | சணக்கிலாவத்தை ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில் |
| பொலிகண்டி | – | உப்புக்கிணற்றடி சித்தி விநாயகர் கோயில் |
| துன்னாலை | – | வல்லியானந்தப் பிள்ளையார் கோயில் |
| பருத்தித்துறை | – | கனகராவளவுப் பிள்ளையார் கோயில் |
| குடத்தனை | – | ஆயிலடிப்பிள்ளையார் கோயில் |
| தும்பளை பெரியவளவு | – | ஸ்ரீவரத விநாயகர் கோயில் |
| அல்வாய் வடக்கு | – | மாயக்கைப் பிள்ளையார் கோயில் |
| நெடியகாடு | – | பிள்ளையார் கோயில் |
| பருத்தித்துறை | – | ஸ்ரீ தெணிப்பிள்ளையார் கோயில் |
| வல்வெட்டித்துறை | – | கப்பலுடையவர் விநாயகர் கோயில் |
| தொண்டைமானாறு | – | தச்சன் கொல்லை பிள்ளையார் கோயில் |
| பருத்தித்துறை | – | கொட்டடிச் சித்தி விநாயகர் கோயில் |
| குடத்தனை | – | பிள்ளையார் கோயில் |
| பருத்தித்துறை | – | சின்னப்பிள்ளையார் கோயில் |
| மந்திகை வைத்தியசாலை | – | பிள்ளையார் கோயில் |

**தம்புருவளை தும்பளை சித்திவிநாயகர் கோயில்**

ஒல்லாந்தர் கால வரலாறு கொண்ட கோயிலாக விளங்குகிறது.



## ● கரவெட்டி - செயலர் பிரிவு

**அல்வாய் - தில்லையம்பலப் பிள்ளையார் கோயில்**

வட இலங்கையில் மிகவும் பிரசித்தி பெற்ற கோயில். எண்கோண வடிவில் (மாட்டுத்தொழுவம் போல்) அமைந்த இவ் ஆலயத்திற்குப் பல கர்ணபரம்பரைக் கதைகள் வாய்மொழி மரபாகப் பேசப்பட்டு வருகின்றன. மாடுகளுக்கு நோய் ஏற்படும் போது இத் தெய்வத்துக்கு பலவூர் அடியவரும் நேர்த்தி செய்வர். வேளாண்மை சிறக்க நேர்த்தி வைப்பர். தினமும் குடம் குடமாக பால் அபிஷேகம் நடைபெறும்.

**கப்புதூர் - வீரகத்திப் பிள்ளையார் கோயில்**

முந்நூறு வருடங்கள் பழைமையானதென்பது வரலாறு. கோவிற் புராணமுண்டு.

**மாலைசந்தி அல்வாய் - வரதராய விநாயகர் கோயில்**

200 வருட வரலாறு கொண்ட கோயில்.

**கரவெட்டி கிழக்கு - ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் கோயில்**

தோம்புக் காலத்திற்கு முந்திய கோயில். இதற்கான நாட்டுப்பாடல்கள் உள்ளன.

**கரவெட்டி வெல்லம் விநாயகர் கோயில்**

150 வருட வரலாறுமிக்க கோயில்.

**கரவெட்டி தச்சன்தோப்பு சிந்தாமணிப் பிள்ளையார் கோயில்**

1856இல் கொற்றர் பரமர் புண்ணியமடத்தில் உருவாகி இன்று பெருங்கோயிலாக விளங்குகிறது.

### நூறு வருடப் பழைமை மிக்கவை:

| | |
|---|---|
| அல்வாய் புதுக்குளம் | – கூரைப்பிள்ளையார் கோயில் |
| வல்லைவெளி | – பிள்ளையார் கோயில் |
| வதிரி | – மாணிக்கப்பிள்ளையார் கோயில் |
| அல்வாய் | – அரசடி விநாயகர் கோயில் |
| உடுப்பிட்டி | – இமையாணன் கும்பவாளி வீரகத்தி விநாயகர் |
| உடுப்பிட்டி | – சமரபாகுதேவன் குறிச்சி கற்பக விநாயகர் கோயில் |
| வதிரி | – அல்வாய் பூவர்க்கரைப் பிள்ளையார் கோயில் |
| கரணவாய் | – வெற்றிக்காட்டுப் பிள்ளையார் கோயில் |
| வல்வெட்டி | – மாடந்தை வீரகத்திப் பிள்ளையார் கோயில் |
| துன்னாலை | – வல்லியானந்தப் பிள்ளையார் கோயில் |
| வதிரி | – கனகரத்தினப் பிள்ளையார் கோயில் |
| அல்வாய் | – குமிழடி விநாயகர் கோயில் |
| உடுப்பிட்டி | – சித்திவிநாயகர் கோயில் |
| கரவெட்டி | – கிழவி தோட்டம் விநாயகர் கோயில் |
| கரணவாய் | – கலட்டிப் பிள்ளையார் கோயில் |

## ● கோப்பாய் - செயலர் பிரிவு

**நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோயில்**

அரசகேசரி மன்னனால் ஸ்தாபிக்கப்பட்ட வரலாற்றுக் கோயில்.

**உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில்**

கல்வெட்டுச் சாசனங்களைக் கொண்ட தமிழ் வேந்தர் காலக் கோயில்.

**கோப்பாய் வெள்ளெருகலை பிள்ளையார் கோயில்**

300 வருடங்களுக்கு மேற்பட்ட பழைமை வாய்ந்த தலமாகும்.

**தம்பாலை கொல்லன்கலட்டி - பொன்னம்பலவாணர் சித்திவிநாயகர் கோயில்**

பழைமை வாய்ந்த கோயில்.

**உரும்பிராய் ஒடையம்பதி ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில்**

1612ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட பெருங்கோயில்.

**அச்சுவேலி தோம்பூர் போதிராப்பிட்டிப் பிள்ளையார் கோயில்**

மிகவும் பழைமை வாய்ந்த ஆலயம்.

**கோப்பாய் வராம்பற்றை இலுப்பையடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயில்**

மிகவும் தொன்மை வாய்ந்த ஆலயம். வயல் சூழ்ந்த இடத்தில் அமைந்துள்ளது.

**வடகோவை ஸ்ரீ செல்வவிநாயகர் கோயில்**

1839ம் ஆண்டில் இவ்வாலயம் ஸ்தாபிக்கப்பட்டது.

## *சாவகச்சேரி - செயலர் பிரிவு*

**சப்பச்சி மாவடிப் பிள்ளையார் கோயில்**

200 வருடப் பழைமை வாய்ந்த ஆலயம். தலவிருட்சம் பெரிய மாமரம். அதன் சுற்றளவு 15 அடி.

**சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீ வேதனப் பிள்ளையார் கோயில்**

நூறு வருடங்களுக்கு முன் வேதாரணியப் பிள்ளையார் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

**கொடிகாமம் குளக்கட்டுப் பிள்ளையார் கோயில்**

180 வருடப் பழைமைமிக்க ஆலயம்.

**தாவளை கேசரப்பட்டி வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோயில்**

200 வருடப் பழைமை வாய்ந்த ஆலயம்.

**மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோயில்**

200 வருடப் பழைமை வாய்ந்த ஆலயம்.

**200 வருட பழைமை வாய்ந்த இப்பிரதேச ஆலயங்கள்:**

| | | |
|---|---|---|
| மட்டுவில் | – | செல்லப் பிள்ளையார் |
| சரசாலை | – | சிதம்பர விநாயகர் |
| புராணக்கேணி | – | ஸ்ரீவீரகத்தி விநாயகர் |
| மட்டுவில் | – | பனையடி வீரகத்திப் பிள்ளையார் |
| கும்பாவெளி | – | பிள்ளையார் கோயில் |
| மத்துவில் | – | தோட்டத்துப் பிள்ளையார் கோயில் |
| மிருசுவில் | – | குருக்கள் மாவடி ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோயில் |
| கல்வயல் | – | சித்தன் மாவடிப் பிள்ளையார் கோயில் |
| மறவன்புலோ | – | வள்ளக்குளம் வீரகத்திப் பிள்ளையார் கோயில் |
| கல்வயல் | – | புலுட்டையன் ஆயிலடிப் பிள்ளையார் கோயில். |
| கரம்பைக் குறிஞ்சி | – | கொம்புதட்டி ஸ்ரீ பிள்ளையார் கோயில். |
| வரணி | – | ஆரியர் கறுக்காய் – சித்திவிநாயகர் கோயில் |
| வரணி | – | கும்பிட்டான்புலம் – ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் கோயில். |
| மிருசுவில் | – | அரசடிப்பிள்ளையார் கோயில் |
| நுணாவில் | – | கொல்லங்கிராய் பிள்ளையார் கோயில் |
| நாவற்குழி | – | ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில் |
| பெருங்குளம் | – | ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் கோயில் |
| நுணாவில் | – | புலுட்டையன் பிள்ளையார் கோயில் |
| நுணாவில் | – | மருதடிப் பிள்ளையார் கோயில் |
| நுணாவில் | – | வீரகத்திப் பிள்ளையார் கோயில் |

## ● *வேலணை - செயலர் பிரிவு*

**நயினாதீவு செம்மணத்தம்புலம் வீரகத்தி விநாயகர் கோயில்**

வேதாரணியம் வீரட்டாணேஸ்வரர் ஆலயத்திற்கும் இவ்வாலயத்திற்கும் தொடர்புண்டு. 500 வருடப் பழைமை வாய்ந்தது.

**பெரியபுலம் வீரகத்தி விநாயகர் கோயில்**

600 வருடகாலப் பழைமைமிக்க ஆலயம்.

**புளியங்கூடல் பெரியபுலம் மகாகணபதிப் பிள்ளையார் கோயில்**

300 வருட வரலாறு கொண்ட கோயில்.

**புங்குடுதீவு பெருங்காடு சித்திவிநாயகர் கோயில்**

300 வருட வரலாறு கொண்ட கோயில்.

**100 வருடக் கோயில்கள் :**

இலந்தைக்காடு – வேலணை – ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்
மண்கும்பான் – வெள்ளைப்புற்றடி விநாயகர் கோயில்
மண்டைதீவு – திருவெண்காடு சித்தி விநாயகர் கோயில்
புங்குடுதீவு – ஆரியநாயகன்புலம் ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்

## ● ஊர்காவற்றுறை - செயலர் பிரிவு

**காரைநகர் மருதடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயில்**

1750ல் ஸ்தாபிக்கப்பட்டது. தலவிருட்சம் மருதமரம்.

**களபூமி கரப்பிட்டியங்கனை விக்கினேஸ்வரர் கோயில்**

150 வருடப் பழைமைமிக்க கோயில்.

**100 வருடக் கோயில்கள் :**

காரைநகர் துறைமுகம் – சித்திரகூட ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்.
நாரந்தனை இந்தன் – ஸ்ரீ முத்து விநாயகர் கோயில்
அனலைதீவு அரசன்புலம் –ஸ்ரீசங்கரநாதர் கணபதிப் பிள்ளையார் கோயில்

## ● நெடுந்தீவு - செயலர் பிரிவு

**நெடுந்தீவு நெழுவினி சித்தி விநாயகர் கோயில்**


500 வருடங்களுக்கு முற்பட்ட கோயில். கல்வெட்டுக்கள், சாசனப் பாடல்கள் உள்ளன. இராமேஸ்வரத்துடன் நெருங்கிய தொடர்புடைய கோயில். போர்த்துக் கீசர் காலத்தில் மூலமூர்த்தி மறைக்கப்பட்டு பின் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக வரலாறு கூறுகிறது.

**நெடுந்தீவு பெருக்கடி ஸ்ரீசித்தி விநாயகர் கோயில்**

500 வருட வரலாறு கொண்ட கோயில். நவாலியூர் சோமசுந்தரப் புலவரால் இயற்றப்பட்ட திருவூஞ்சற் பாடல்கள் நூல் வடிவிலுண்டு.

**மகாவலித்துறை நெடுந்தீவு வீரகத்திப் பிள்ளையார் கோயில்**

1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாறு கொண்டதென வரலாற்றுக் குறிப்புக்கள் கூறுகின்றன. சிற்றரசன் வீகாமன் கட்டுவித்த கோயில்.



## ● சங்கானை - செயலர் பிரிவு

**அராலி தெற்கு ஆகாயக்குளம் பிள்ளையார் கோயில்**

இது மிகப் பழைமை வாய்ந்த கோயில். ஆகாயன் என்ற அரசன் கட்டிய குளம் இவ்வாலயம் அருகே அமைந்துள்ளது.

**பறாளாய் ஈஸ்வர விநாயகர் கோயில் . சுழிபுரம்**

மிகப் பழைமை வாய்ந்த சரித்திரப் பிரசித்தி பெற்ற கோயில். 250 வருட சிற்பத்தேர் இவ்வாலயத்தில் நூதனப் பொருளாகவுண்டு. இவ்வாலயம் பற்றிய கர்ணபரம்பரைக் கதைகள் பல பேசப்படுகின்றன.

**துணவி அரசடி விநாயகர் கோயில்**

100 வருடப் பழைமை மிக்க கோயில்.

**வட்டு கற்பக விநாயகர் கோயில்**

பிராமணச்சி தோட்டப் பிள்ளையார் எனவும் இவ்வாலயத்தை அழைப்பர்.

**மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்**

மிகவும் பழைமை வாய்ந்த கோயில்.

**அராலி வடக்கு வட்டுக்கோட்டை ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயில்**

100 வருடத்துக்கு மேற்பட்ட வரலாறு கொண்ட கோயில்.

**100 வருடக் கோயில்கள் :**

சங்கானை – நொச்சியம்பதி விநாயகர் கோயில்.
அராலி – உதறான் ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் கோயில்.
சங்கானை – அத்தியடி விநாயகர் கோயில்.
பொன்னாலை – பிள்ளையார் கோயில்.

## ● *பூநகரி - செயலர் பிரிவு*

**பூநகரிப் பகுதியிலுள்ள பழைய விநாயகர் கோயில்கள் :**

செட்டியக் குறிஞ்சி – கொட்டில் பிள்ளையார் கோயில்
சோபாலப்பிட்டி – ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்
பொன்னாலைவெளி – ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்
கல்மடம் கற்பகப் பிள்ளையார் கோயில்
வெள்ளிப் பள்ளத்துப் பிள்ளையார் கோயில்

# கிளிநொச்சி மாவட்டம்

## ● *கிளிநொச்சி - செயலர் பிரிவு*

**இராமநாதபுரம் நந்தவனப் பிள்ளையார் கோயில்**

மிகப் பழைமை வாய்ந்த ஆலயம் என்பதற்கு அறிகுறியாகப் பழங்காலத்துக் கருங்கல் தூண்கள் இங்கு இருப்பதைக் காணலாம்.

**பரந்தன் 2ம் கட்டை ஊற்று விநாயகர்**

யோகர் சுவாமிகளால் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயம்

**உருத்திரபுரம் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் கோயில்**

90 வருட காலப் பழைமை மிக்க கோயில்.

## ● *முல்லைத்தீவு - செயலர் பிரிவு*

**முறிகண்டிப் பிள்ளையார் கோயில்**

யாழ்ப்பாணம் – கண்டி வீதியில் முறிகண்டி என்ற ஊரில் வீதிக்கு அருகில் உள்ள ஆலயமே முறிகண்டிப் பிள்ளையார் கோயிலாகும். பிரயாணிகள் தமது காவல் தெய்வமாகக் கருதி வழிபாடு செய்வார்கள். இன, மத, வேறுபாடு இன்றி இவ்வாலயத்தை அனைவரும் வழிபாடு செய்வர்.

**முள்ளியவளை ஸ்ரீ காட்டு விநாயகர் கோயில்**

பரராசசேகர வன்னியனால் பரிபாலிக்கப்பட்ட வரலாற்றையுடையது. ஆலயத்தைப் பற்றிய கர்ண பரம்பரைக் கதைகளும், நாட்டுப் பாடல்களும் உள்ளன.

**முல்லைத்தீவு ஊற்றங்கரை ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்**

பண்டார வன்னியன் காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. வசந்தன் கும்மி, திருவூஞ்சல், வெண்பா தனித்துவமாகவுண்டு.

**குமுளமுனை கொட்டுக்கிணற்றுப் பிள்ளையார் கோயில்**

சரித்திரச் சிறப்பு வாய்ந்த ஆதிக்கோயில்களில் ஒன்று.

**குமுளமுனை ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில்**

சுமார் 300 ஆண்டுகள் பழைமை வாய்ந்த ஆலயம். பண்டாரவன்னியனால் பூசிக்கப்பட்ட வரலாறு உண்டு.

**தண்டுவான் பிள்ளையார் கோயில்**

300 வருடப் பழைமை மிக்க ஆலயம்.

**கொக்குத்தொடுவாய் கோட்டக்கேணிப் பிள்ளையார் கோயில்**

**100 வருடக் கோயில்கள் :**

தண்ணீரூற்று – கணுக்கேணி ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில்
செம்மலை – மாணிக்க விநாயகர் கோயில்
கொக்கிளாய் – கருநாட்டுக்கேணி ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில்
நெடுங்கேணி – பழம்பாசிச்சந்தி பிள்ளையார் கோயில்.
கொக்கிளாய் – அரசடிப் பிள்ளையார் கோயில்
தண்டுவான் – புளியங்குளத்துப் பிள்ளையார் கோயில்

# வவுனியா மாவட்டம்

## ● *வவுனியா - செயலர் பிரிவு*

**பழைமைமிக்க விநாயகர் கோயில்கள் :**
**வவுனியா தெற்கு :**

ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் கோயில்
மூன்று முறிப்பு விநாயகர் கோயில்
மருதோடை பிள்ளையார் கோயில்
ஆச்சிகுளம் பிள்ளையார் கோயில்
தவசியாக்குளம் விநாயகர் கோயில்
கல்மடு – ஸ்ரீ விநாயகர் கோயில்
வெளிக்குளம் சித்திவிநாயகர் கோயில்
புதுக்குளம் சித்திவிநாயகர் கோயில்
நொச்சிமோட்டை கருங்காலியடிப் பிள்ளையார் கோயில்

**வவுனியா வடக்கு :**

மருதோடை – பிள்ளையார் கோயில்
மாமடு நெடுங்கேணி – விநாயகர் கோயில்
நெடுங்கேணி – நைனாமடு பிள்ளையார் கோயில்

புளியங்குளம் – குளக்கட்டுப் பிள்ளையார் கோயில்
கனகராயன் குளம் – கரப்புக்குத்திப் பிள்ளையார் கோயில்
சின்னப் பூவரசன் குளம் – அரசடிப் பிள்ளையார் கோயில்
பட்டிக்குடியிருப்பு – பிள்ளையார் கோயில்
பெரிய பூவரசங்குளம் – பிள்ளையார் கோயில்
சின்னப்பூவரசங்குளம் – மண்டலத்துப் பிள்ளையார் கோயில்
மதியமடு புளியங்குளம் – பிள்ளையார் கோயில்
கனகராயன் குளம் – கனகராயப் பிள்ளையார் கோயில்
கோவிற் புளியங்குளப் பிள்ளையார் கோயில்

## அனுராதபுர மாவட்டம்

**கெக்கிராவைப் பிள்ளையார் கோயில்**
100 வருடங்களுக்கு மேற்பட்ட ஆலயம்.

**மருதங்கடவைப் பிள்ளையார் கோயில்**
ஆதியில் எழுந்த கோயில்

## பொலனறுவை மாவட்டம்

**வெலிகந்தை . ஊத்துச்சேனை . வெள்ளிமலை ஸ்ரீ விநாயகர் கோயில்**
மன்னம்பிட்டி – பிள்ளையார் கோயில்.

## திருகோணமலை மாவட்டம்

**சாம்பல்தீவு . வடலியம்பதி . பிள்ளையார் கோயில்**
மிகவும் ஆதிவிக்கிரகம் அமைந்த கோயில்

**உப்புவெளி . சின்னத் தொடுவாய் . ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்**
250 வருடப் பழைமை வாய்ந்த கோயில்

**ஆலடி ஸ்ரீவிநாயகர் கோயில் (டொக்யாட் வீதி)**
மிகவும் பழைமை வாய்ந்த ஆலயம்.

**செல்வ விநாயகபுரம் . ஆலடி விக்னேஸ்வரர் கோயில்**
மக்களால் நீண்டகாலம் வழிபாடு செய்யப்பட்டு வரும் பிள்ளையார் கோயில்.

**திருகோணமலை . மலையாவெளி இராசமலை சிற்றம்பலப் பிள்ளையார் கோயில்**
காட்டுக்குள் காணப்பட்ட ஆதி விநாயகர் மீட்கப்பட்டு அமைக்கப்பட்ட கோயில்.

**திருகோணமலை . ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் கோயில்**
200 வருட காலப் பழைமை மிக்க ஆலயம்.

**கிண்ணியா . ஆலங்கேணி விநாயகர் கோயில்**
தம்பலகாமத்திலுள்ள ஆதி கோணநாயகர் ஆலயத்தோடு தொடர்புபட்ட கோயில்.

**சின்னக் கிண்ணியா . ஊற்றடிப் பிள்ளையார் கோயில்**
150 வருடப் பழைமையானது.

**ஈச்சந்தீவு ஸ்ரீ பிள்ளையார் கோயில்**
**உல்லாறு பிள்ளையார் கோயில்**
பிற்காலத்தில் இப்பகுதியில் எழுந்த விநாயகர் கோயில்களாகும்.

**குச்சைவெளி . ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்**
கோணேசர் கோயிலுடன் தொடர்புடைய புராதன ஆலயம்.

**திரியாலை தஞ்சை விநாயகர் கோயில்**
250 வருடம் பழைமை வாய்ந்த கோயில்.

### பழைமை மிக்க கோயில்கள் :

உறைக்கிணற்றடி விநாயகர் கோயில்
கும்புறுப்பிட்டி சித்தி விநாயகர் கோயில்
திரியாய் விரதவிக்னேஸ்வரர் கோயில்
நிலாவெளி இறக்கண்டி சிவஞான விநாயகர் கோயில்
குச்சவெளி இரணைக்கேணி சிந்தாமணிப் பிள்ளையார் கோயில்
நிலாவெளி புல்மோட்டை ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்
குச்சவெளி வீரன்சோலை விநாயகர் கோயில்
அலஸ்தோட்டம் – ஆனந்த விநாயகர் (புதிய கோயில்)

### ● *மூதூர் - செயலர் பிரிவு*

**சேனையூர் . ஸ்ரீ வருணகுல விநாயகர் கோயில்**
ஆலய வரலாற்றுக் குறிப்புக்கள் செப்பு வட்டபலத்தில் வரையப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| மூதூர் | - 3ம் வட்டாரம் - சித்தி விநாயகர் கோயில். |
| காந்திபுரம் | - கிளிவெட்டி ஸ்ரீபால விநாயகர் கோயில். |
| மூதூர் -7ம் வட்டாரம் | - சித்தி விநாயகர் கோயில். |
| கட்டைப்பறிச்சான் | - ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில். |
| பன்குளம் | - கிற்றுள் ஊத்துப் பிள்ளையார் கோயில். |

## மட்டக்களப்பு மாவட்டம்

### திருப்பழுகாமம் ஸ்ரீ மாவேற்குடாப் பிள்ளையார் கோயில்

போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்ட புராதன கோயில். பழங்குடி மக்கள் பராமரித்த கோயில் என வரலாறு கூறுகிறது.

● *வெல்லாவெளி - செயலர் பிரிவு*

**இப்பகுதியில் கடந்த நூற்றாண்டில் அமைந்த கோயில்கள் ;**

தாந்தாமலைப் பிள்ளையார் கோயில்

கொக்கட்டிச்சோலை – அரசடித்தீவு மண்டபத்துப் பிள்ளையார் கோயில்

முதலைக்குடா – குறிஞ்சிநகர்ப் பிள்ளையார் கோயில்

மண்டூர் நாகஞ்சோலை ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் கோயில்

ஆனைகட்டிய வெளி ஆனைப்பந்திப் பிள்ளையார் கோயில்

அம்பலாந்துறை – தீவுக்குடியிருப்பு சித்திவிநாயகர் கோயில்

படையாண்டவெளி பச்சையடிப் பிள்ளையார் கோயில்

கொக்கட்டிச்சோலை – ஸ்ரீ முத்துலிங்கப் பிள்ளையார் கோயில்

திக்கோடை அம்பாறைப் பிள்ளையார் கோயில்

பூச்சிக்காடு வேம்பையடிப் பிள்ளையார் கோயில்

சரவணையடி ஊற்று ஸ்ரீகற்பகப் பிள்ளையார் கோயில்

மகிழடித்தீவு ஸ்ரீசித்தி விநாயகர் கோயில்

ஆனைப்பந்திப் பிள்ளையார் கோயில்

வெல்லாவெளிப் பிள்ளையார் கோயில்

குருக்கள்மடம் பிள்ளையார் கோயில்

சின்னவத்தை பிள்ளையார் கோயில்

மண்டூர் காக்காச்சியட்டை கருணைமனைப் பிள்ளையார் கோயில்

வெல்லாவெளி அரசடிப் பிள்ளையார் கோயில்

கொக்கட்டிச்சோலை முனைக்காடு – ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்

கடுக்காமுனை கொக்கட்டிப் பிள்ளையார் கோயில்

வக்கியல்ல ஸ்ரீ ஆலையடிப் பிள்ளையார் கோயில்

பாலையடிவட்டைப் புளியடிப்பிள்ளையார் கோயில்

பட்டிப்பளை – மாவடிப் பிள்ளையார் கோயில்

குருளைமடு பிள்ளையார் கோயில்

அம்பிளாந்துறை ஸ்ரீ சித்திவிக்னேஸ்வரர் கோயில்

நவகிரிநகர் ஸ்ரீ விக்னேஸ்வரர் கோயில்

மாலையர்கட்டு ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்

முனைக்காடு – கொட்டாம்புலைப் பிள்ளையார் கோயில்

பெரியபோரத்தீவு ஸ்ரீ முத்துலிங்க விக்னேஸ்வரர் கோயில்

வம்மியடி – சங்குமக்கண்டிப் பிள்ளையார் கோயில்

சின்னவத்தை ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்

வக்கியல்ல ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்

முனைத்தீவு ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோயில்

முதலைக்குடா பாலையடிப் பிள்ளையார் கோயில்

வாழைச்சேனை ஸ்ரீ முத்துலிங்கப் பிள்ளையார் கோயில்

தம்பலவத்தை வீரையடிப் பிள்ளையார் கோயில்

பண்டாரியாவெளி – ஸ்ரீவம்மியடிப் பிள்ளையார் கோயில்

வக்கிஎல்ல கூழாவடிப் பிள்ளையார் கோயில்

தும்பங்கேணி சங்குமக்கண்டிப் பிள்ளையார் கோயில்

தும்பங்கேணி ஸ்ரீமாணிக்கப் பிள்ளையார் கோயில்

● *வவுணதீவு - செயலர் பிரிவு*

**பிரதான கோயில்கள்**

| | |
|---|---|
| செங்கலடி | – உன்னிச்சை ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில் |
| கன்னன்குடா | – சாளம்பைக்கேணி விநாயகர் கோயில் |
| வவுணதீவு | – பிள்ளையார் கோயில் |

மண்டலத்தடி – ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்
வவுணத்தீவு – பாலையடி ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்
பன்சேனை – பிள்ளையார் கோயில்
ஆயித்தியமலை – நரிப்புல்தோட்டம் மாணிக்கப் பிள்ளையார் கோயில்
கரவெட்டி – நாவற்காடு பிள்ளையார் கோயில்

## ● செங்கலடி - செயலர் பிரிவு

**பிரதான கோயில்கள்**

ஏறாவூர் – ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்
வந்தாறுமுலை – உப்போடை வயற்கரை விநாயகர் கோயில்
பெரியபுல்லுமலை – வெள்ளக்கல் விநாயகர் கோயில்
ஐயங்கேணி – சித்திவிநாயகர் கோவில்
பெரியபுல்லுமலை – ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்
ஆறுமுகத்தான் குடியிருப்பு மாவடிப் பிள்ளையார் கோயில்
சித்தாண்டிக்குடி அம்பலத்தடிப் பிள்ளையார் கோயில்
உன்னிச்சை – ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்
மயிலம்பாவெளி – ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்
வந்தாறுமூலை – மருங்கையடி விநாயகர் கோயில்
மகிழவெட்டுவான் – பிள்ளையார் கோயில்

## ● கோறளை - செயலர் பிரிவு

**பிரதான கோயில்கள்**

கதிரவெளி – ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோயில்
பால்ச்சேனை – மாணிக்கக்குளம் பிள்ளையார் கோயில்
கட்டுமுறிவு – கற்பக விநாயகர் கோயில்
கதிரைவெளி – முத்துலிங்கப் பிள்ளையார் கோயில்
இறாலோடை – பிள்ளையார் கோயில்
பால்ச்சேனை – ஸ்ரீசித்திவிநாயகர் கோயில்
காளான்கேணி – வட்டவான் பிள்ளையார் கோயில்
கற்பிட்டி – சித்திவிநாயகர் கோயில்
கோராவெளி – ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்
வாழைச்சேனை – ஸ்ரீ கைலாசப்பிள்ளையார் கோயில்
தங்காங்கேணி – விநாயகர் கோயில்
கிரான் – சித்தி விநாயகர் கோயில்
ஆனைச்சுட்ட பொத்தானை – ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோயில்
ஓட்டுமாவடி – ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்
ஆலகண்டிப்பிள்ளையார் கோயில்
வாழைச்சேனைப் பிள்ளையார் கோயில்
புலிபாய்ந்தகல் – சின்னவெளிப் பிள்ளையார் கோயில்

குடும்பிமலை – காங்கேஸ்வரப் பிள்ளையார் கோயில்
சாராவெளி – சித்திவிநாயகர் கோயில்
கல்குடா – மாணிக்கப்பிள்ளையார் கோயில்
சந்திவெளி – புதுப்பிள்ளையார் கோயில்
வில்கமம் – பிள்ளையார் கோயில்
கறுவாக்கேணி – விநாயகர் கோயில்

## ● மண்முனை வடக்கு -செயலர் பிரிவு

**மாமாங்கப் பிள்ளையார் கோயில் மாமாங்கேஸ்வரம்**

கிழக்கிலங்கையில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கமைந்த தலம் மாமாங்கேஸ்வரமாகும். மூலஸ்தானத்தில் சிவலிங்கம் உள்ளது. எனினும் விநாயகர் அங்கியுடனேயே சிவலிங்கம் காட்சியளிக்கின்றது. 1880ல் முதலாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது. புலவர்கள் பலர் இத்திருத்தலத்தின் மீது பாடியுள்ளனர்.

**ஆனைப்பந்திப் பிள்ளையார் கோயில்**

புலியன் என்ற வேடர்குலத் தலைவன் ஆட்சிபுரிந்த இடத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. மிகவும் பிரசித்தி பெற்ற புராதன ஆலயமாகும்.

**நாவற்குடா ஸ்ரீ கணேசர் கோயில்**

1770ல் ஸ்தாபிக்கப்பட்டது. பல வரலாறுகளைக் கொண்ட கோயில்.

**மண்முனைப் பிள்ளையார் கோயில்**

குளக்கோட்டன் கல்வெட்டில் இடம்பெற்றிருக்கும் ஆலயம்.

**பிரதான கோயில்கள்**

கல்லடி – சித்திவிநாயகர் கோயில்
சின்னஊறணி – மாவடிப் பிள்ளையார் கோயில்
புதுக்குடியிருப்பு – கள்ளமுனைப் பிள்ளையார் கோயில்
கிரான்குளம் – கணபதிப் பிள்ளையார் கோயில்
கோட்டன்முனை – ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோயில்
ஆரையம்பதி ஸ்ரீ திருநீலகண்டப் பிள்ளையார் கோயில்
புதுக்குடியிருப்பு – பிள்ளையார் கோயில்
புதுநகர் ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்

**களுவாஞ்சிக்குடி**

எருவில் ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்

களுதாவளைப் பிள்ளையார் கோயில். (300 வருடப் பழைமை வாய்ந்த இவ்வாலயம் மகிமை கூறும் "பட்டமம்" என்ற ஏடு உள்ளது.)

களுவாஞ்சிக்குடி ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோயில் பட்டிருப்பு ஸ்ரீ விநாயகர் கோயில்.

குருமண்வெளி ஆலையடிப் பிள்ளையார் கோயில், (கண்டி இராட்சியம் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் ஆட்சியில் இருந்தபோது அவன் கடலில் கண்டெடுத்துக் கொடுத்த விநாயகர் என ஆலய வரலாறு கூறப்படுகிறது).

களுவாஞ்சிக்குடி வம்மியடிப் பிள்ளையார் கோயில்
மகிளூர் பிள்ளையார் கோயில்

கோடைமேடு ஆலையடிப் பிள்ளையார் கோயில்
துறைநீலாவனை ஸ்ரீ தில்லையம்பலப் பிள்ளையார் கோயில்
செட்டிபாளையம் ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்
தேற்றத்தீவு – கொம்புச்சந்திப் பிள்ளையார் கோயில்
பெரியகல்லாறு – மடத்தடி விநாயகர் கோயில்
களுதாவளை – ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில்
எருவில் ஸ்ரீ புளியடிப் பிள்ளையார் கோயில்
ஒந்தாச்சிமடம் ஸ்ரீ அரசடி விநாயகர் கோயில்
துறைநீலாவணை சின்னப்பிள்ளையார் கோயில்
மாங்காடு காட்டுப் பிள்ளையார் கோயில்
மாவேற்குடா பிள்ளையார் கோயில்



# அம்பாறை மாவட்டம்

## ● *கல்முனை - செயலர் பிரிவு*

**பாண்டிருப்பு ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோயில்**

450 வருடங்களுக்கு முன்பாக கலிங்கதேசத்துச் சிற்றரசன் மன்னசிங்கன் இவ்வாலயத்தைப் பரிபாலித்து வந்ததோடு பல திருப்பணிகளைச் செய்து காணிகளையும் (நிந்தகம்) வழங்கியுள்ளான் என்பது வரலாறு. தாதன் கல்வெட்டில் இவ்வாலயம் பற்றிய செய்தியுண்டு.

**கல்முனை சேனைக்குடியிருப்பு ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்**

400 வருடங்களுக்கு முந்திய பழைமைமிக்க ஆலயம்
ஸ்ரீதரவைச் சித்திவிநாயகர் கோயில்
கல்முனை – கதிரவேற் பிள்ளையார் கோயில்
அம்பலத்தடிப் பிள்ளையார் கோயில்
கல்முனை மாமாங்கப் பிள்ளையார் கோயில்
துரவந்தியமேடு – பிள்ளையார் கோயில்
சேனைக் குடியிருப்பு – ஸ்ரீ முத்து விநாயகர் கோயில்

## ● *சம்மாந்துறை - செயலர் பிரிவு*

**வீரமுனை ஸ்ரீ சித்தியாத்திரைப் பிள்ளையார் கோயில்**

1537ம் ஆண்டில் மதுரைப்பட்டின சீர்பாக தேவியனால் இப்பிள்ளையார் கொண்டுவரப்பட்டு ஆலயம் அமைக்கப்பட்டதாக ஆலய வரலாறு கூறுகிறது. ஆலயம் பற்றிய கல்வெட்டு சாசனமுண்டு.


**நாவிதன்வெளி சித்தி விநாயகர் கோயில்**

திருவொற்றியூரில் இருந்து வந்து குடியேறியவர்களால் இவ்வாலயம் உருவாக்கப்பட்டது.

**வேம்படியடிப் பிள்ளையார் கோயில்**
**விளாவடிப் பிள்ளையார் கோயில்**

| | |
|---|---|
| சம்மாந்துறை | – சித்திவிநாயகர் கோயில் |
| சவளக்கடை | – ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் கோயில் |
| வீரமுனை | – பிள்ளையார் கோயில் |
| வளத்தாப்பட்டி | – மாணிக்கப்பிள்ளையார் கோயில் |

ஸ்ரீ கோரக்கர் விநாயகர் கோயில்



● *திருக்கோயில் பிரிவு*

அக்கரைப்பற்று அக்கிராசப் பிள்ளையார் கோயில்
தம்பிலுவில் செம்மண்புலை ஸ்ரீசத்திவிநாயகர் கோயில்
தம்பிலுவில் ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்
விநாயகபுரம் ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்

● *பொத்துவில் பிரிவு*

**பிரதான கோயில்கள்**

சங்கமான் சண்டிப் பிள்ளையார் கோயில்
பொத்துவில் சாளம்பைக்கலட்டிப் பிள்ளையார் கோயில்
குண்டுமடு ஆலடிப் பிள்ளையார் கோயில்
உசனை ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோயில்

## மொனறாகலை மாவட்டம்

பாலாறுவ ஸ்ரீகற்பக விநாயக கோயில்

**கதிர்காமம் கதிரமலை பிள்ளையார் மலை பிள்ளையார் கோயில்**

**செல்லக்கதிர்காமம், மாணிக்கப்பிள்ளையார்**

இருகோயில்களும் பிரசித்தமானவை. தினமும் ஆயிரக்கணக்கான அடியவர்கள் வழிபாடு செய்து வருகிறார்கள்.

## பதுளை மாவட்டம்

**பதுளை ஸ்ரீ மாணிக்க விநாயகர் கோயில்**

நூறுவருட பழைமைமிக்க விநாயகர் கோயில்

**ஹல்தும்முல்லை ஸ்ரீ ஆதிவிநாயகர் கோயில்**

நூறுவருடங்களுக்கு முற்பட்ட கோயில்.

## நுவரெலியா மாவட்டம்

அட்டன் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் கோயில்
கொட்டகலை ஸ்ரீ முத்து விநாயகர் கோயில்

## கண்டி மாவட்டம்

**கட்டுக்கலை ஸ்ரீ செல்ல விநாயகர் கோயில்**

மிகவும் பழைமைமிக்க ஆலயம். சித்தர்களின் சமாதி இவ்வாலயத்தில் உண்டு. கண்டி அரசர் காலத்துக் கோயில். புசல்லாவ ஸ்ரீ செல்வ விநாயகர் கோயில்
உளுகங்கை மடுல்கெல ஸ்ரீ கங்கை விநாயகர் கோயில்
பன்விலை ஸ்ரீ செல்வ விநாயகர் கோயில்
வத்துக்காமம் ஸ்ரீ கண்கண்ட விநாயகர் கோயில்

## மாத்தளை மாவட்டம்

மாத்தளை சுணங்காமம் பிள்ளையார் கோயில்.
இறத்தோட்டை செல்வ விநாயகர் கோயில்

## குருநாகல் மாவட்டம்

குருநாகல் ஸ்ரீ செல்வ விநாயகர் கோயில்
50 வருடம் பழைமை வாய்ந்த கோயில்

## இரத்தினபுரி மாவட்டம்

அமுல்பிற்றிபல மாணிக்கப் பிள்ளையார் கோயில்

## கொழும்பு மாவட்டம்

**மருதானை கப்பித்தாவத்தை ஸ்ரீ பாலசெல்வ விநாயகர் கோயில்**

இவ்வாலயம் 1702இல் ஸ்தாபிக்கப்பட்டது. புராதன ஆலயமாக வரலாறுகளில் கூறப்பட்டுள்ளது.



அறிவுப்பசி போக்கிய எங்கள் பிதாமகர்
ஸ்ரீமான் வை. கதிர்காம நாதன் உபாத்தியாயர்



இணுவைத் திருவூர் பெற்ற உலகம் போற்றும்
மகா வித்துவான் வீரமணி ஐயர்



இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையர்
கோவிலில் தவில் வாசித்து வரும் பரம்பரையைச்
சேர்ந்த திரு. எஸ். சிவகரன் அவர்கள்



இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலில்
பூசைக்கு வேண்டிய மலர்கள், மாலைகள் கொடுத்து
வரும் திரு. ச. பஞ்சாட்சரம் அவர்கள்.



'சந்நிதி' சிறப்பு மலர் வெளியீடு



'கம்பவாரிதி' இ. ஜெயராஜ் சொற்பொழிவாற்றுகிறார்



ஆறு திருமுருகன் சொற்பொழிவாற்றுகிறார்

**தெமட்டகொட விநாயகர் கோயில்**

நூறுவருடக் கோயில்

**பம்பலப்பிட்டி**

**ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோயில்**

சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில் ஆடிவேல் காவடி நகர்பவனிவந்து இவ்வாலயத்தில் கொலுவீற்றிருந்து அருள்பாலிப்பது வழக்கம். தினமும் ஆயிரக்கணக்கான அடியவர்கள் வழிபாடு செய்வர்.

**முகத்துவாரம் ஸ்ரீ சர்வாத்த**

**சித்தி விநாயகர் கோயில்**

இனமதவேறுபாடின்றி பலரும் இவ்வாலயத்தைக் காலங்காலமாக வழிபட்டு வருகின்றனர்.

**செட்டியார் தெரு ஸ்ரீமுத்து விநாயகர் கோயில்**

புராதன கோயில்

**கொட்டாஞ்சேனை**

**ஸ்ரீ தம்பையா சித்திர விநாயகர் கோயில்**

**நுகேகொட பிள்ளையார் கோயில்**

**பம்பலப்பிட்டி ஸ்ரீ கதிரேசன் கோயில்**

இங்கு மூலமூர்த்தி விநாயகர். இந்திய மக்களால் ஆரம்பிக்கப்பட்ட ஆலயம். தினமும் ஆயிரக்கணக்கான அடியவர்கள் வழிபாடு செய்வார்கள்.

**கொட்டாஞ்சேனை**

**வரதராஜப்பிள்ளையார் கோயில்**

அரசமர விருட்சத்திற்கு அருகில் ஆதிவிநாயகராக வீற்றிருந்து அருள் பாலிக்கிறார்.

**பேலியகொடை விநாயகர் ஆலயம்**

களனி ஆற்றங்கரை அருகே புராதன ஆலயமாக விளங்குகிறது.

## புத்தளம் மாவட்டம்

**புத்தளம் ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்**

200 வருடங்களுக்கு முற்பட்ட கோயில், கருங்கல்லில் செதுக்கப்பட்ட ஒரு பெரிய விளக்கு இவ்வாலயத்தில் உண்டு.

**செம்பட்டை ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்**

ஈழநாட்டில் அரச செயலகங்களில் பதிவு செய்யப்பட்ட ஆலயங்களில் மிகவும் பிரதான புராதன ஆலயங்கள் இங்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக பல புதிய விநாயகர் ஆலயங்கள் கடந்த 50 ஆண்டு களுக்குள் தோற்றம் பெற்றுள்ளன. சில தனிப்பட்டவர்களின் பராமரிப்பிலுள்ள ஆலயங்கள் பதிவு செய்யப்பட்டாலும் வரலாற்றுத் தகவல்கள் ஆவணங்களின்றியும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. தென் இலங்கையில் 1983ல் ஏற்பட்ட இனக்கலவரங்களின் பின் பல இந்துக் கோயில்கள் அழிவுற்று இன்று வரை பூசையற்று இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

### துணை நூல்கள்


ம.பொ. செல்வரத்தினம் எழுதிய பழம்பெருவிநாயக வழிபாடு.

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கும்பாபிஷேக மலர் – 1973.


உலக சைவ மாநாடு குறித்த சிறப்பு மலர்– 1978.

இந்து சமயத் திணைக்களம் – பிரதேச அபிவிருத்தி அமைச்சு வெளியிட்ட இலங்கைத் திருநாட்டின் இந்துக் கோயில்கள் –1984

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் சிறப்பு மலர்.

வியாபாரி மூலை இன்பச்சிட்டி சித்தி விநாயகர் ஆய்வு நூல்.

செ. இராசநாயகம் எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரம்.



# அயல் நாடுகளில் ஆனைமுகத்தோன் வழிபாடு

[ஆர். பி. வி. எஸ். மணியன்]

பிள்ளையாரின் பெருமை வெறும் ஆற்றங்கரை யோரத்திலும், அரசமரத்தடியிலும் மட்டும் அல்லாமல் அயல் நாடுகளிலும் பரவி மிகுந்திருக்கிறது.

இந்துக்கள் முழுமுதற் கடவுளாய் வழிபடும் கணபதி, நம் முன்னோர் சென்ற இடமெல்லாம் சென்றார். உலகம் முழுவதிலும் பரவிய ஹிந்து சமயக் கடவுளரில் கணபதிதான் முதலிடம் பெறுகிறார்.

தொன்மையான வரலாறு கொண்ட பாரதம் மிகப் பழங்காலத்தில் இருந்தே வெளிநாடுகளுடன் வணிகத்தொடர்பு கொண்டிருந்தது. கடல் கடந்தும் எல்லை கடந்தும் சென்ற நம் வணிகர்கள் தமது பயணமும் வியாபாரமும் இடையூறுகள் இன்றி வெற்றி பெற விக்னேஸ்வரரை உடன் கொண்டு சென்று வழிபட்டிருக்கிறார்கள். இவர்கள் மூலம் – பிற நாட்டவர்கள் மத்தியிலும் பிள்ளையார் வழிபாட்டில் கவர்ச்சி ஏற்பட்டு – அவர்களும் கணபதியை வழிபடத் தொடங்கியுள்ளனர்.

தமிழகத்தோடு வணிகத்தொடர்பு கொண்டிருந்த ரோமாபுரி மற்றும் கிரேக்க தேசங்களில் தமிழகத்திலிருந்தே பிள்ளையார் வழிபாடு பரவியிருக்க வேண்டும் என்பது வரலாற்றாளர் துணிபு.

இந்துக்களில் வைதீக சமயத்தவர்கள் மட்டுமின்றி, புத்தரைப் பின் பற்றிய பௌத்தர்களும், மகாவீரரைப் பின்பற்றிய சமணர்களும்கூட கணபதியை ஏற்று வழிபடத் தொடங்கியதால் விநாயகர் இந்துக்களின் பொதுப் பண்பாட்டுத் தெய்வமாக உயர்ந்து நின்று விட்டார் எனலாம். எனவே பௌத்தம் மற்ற நாடுகளுக்குப் பரவியபோது பௌத்தர்களோடும் பிள்ளையார் பவனி போயிருக்கிறார். வெளிநாடுசென்ற கணபதி தென்கிழக்கு ஆசியாவில் வைதீகக் கடவுள் ஆகவும், தூரகிழக்கு நாடுகளில் பௌத்தசமயக் கடவுள் ஆகவும் கருதி வழிபடப்பட்டார்.

காலமும் தூரமும் கடந்து வழிபடப்பட்ட ஹிந்துக்கடவுள் நமது விநாயகர்.

கணபதி குடியேறிய சில நாடுகளில் அவரது பெருமையென்ன என்பதை இங்கு காண்போம்.

## ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தான் இன்றைய பாரத எல்லைக்கு அப்பால் இருக்கலாம். ஆனால் ஹிந்து கலாசார பேரரசுக்குட்பட்ட பகுதிக்குள் தான் இத்தேசம் ஒரு காலத்தில் விளங்கியது.



ஆப்கானிஸ்தானில் சில வருடங்களுக்கு முன்னால் ஒரு விக்கிரகம் கார்டெஸ் (cardez) என்னும் இடத்தில் கண்டெடுக்கப்பட்டுப் பின்னர் அங்கிருந்து காபூலிற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்குள்ள ஹிந்துக்களால் பமீர் திரையரங்கு அருகில் உள்ள பீரதன் நாத் தர்காவில் வைத்து வழிபடப் படுகிறது.



அந்த விக்கிரகம் தரம் குறைந்த சலவைக் கல்லினால் செய்யப் பட்டுள்ளது. அது அறுபது செ. மீ. உயரமும், 35 செ. மீ. அகலமும் உள்ளது.

விக்ரஹகத்தின் அடியில் உள்ள பீடத்தில் ''இப்பெரிய அழகிய மகாவிநாயகர் ஷாஹீ அரசன் ஷாஹீ இ ங் க ள ன் என்பவனால் அவன் ஆட்சிபீடம் ஏறிய எட்டாம் ஆண்டில் மஹாஜேஷ்ட மாதத்தில், சுக்ல பக்ஷம், திரயோதசி திதி, விசாக நட்சத்திரம் கூடிய சுபயோக சுபதினத்தில் சிம்ஹ லக்னத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது'' என்று குறிக்கப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள அரசன் காஷ்மீரை ஆண்ட நரேந்திராதித்யனாக இருக்கலாமோ என்ற ஐயம் உள்ளது. ஏனெனில் நரேந்திராதித்யனும் இங்களன் என அழைக்கப் பட்டான். ஆனால் இதில் குறித்துள்ள இங்கள அரசனைப் பற்றித் திட்டவட்டமாக எதுவும் தெரியவில்லை.

இவ்விக்ரகத்தில் கணபதி நின்ற வண்ணத்தில் காட்சியளிக்கிறார். அவரது கரங்கள், கால்கள், மற்றும் மார்புத் தசைகள் திரண்டதாக கலைச்சாயலோடு உள்ளன. சாரநாத்தில் உள்ள குப்தர்கால சிற்பங்களைப் போன்று இச்சிலையின் தலையில் கிரீடமும், கழுத்தைச் சுற்றி காந்தி என்னும் ஆபரணமும் உள்ளன.

கணபதி நான்கு கரங்களுடனேயே செதுக்கப்பட்டுள்ளார். ஆனால் துரதிருஷ்டவசமாக எல்லாக் கரங்களும் உடைந்த நிலையில் காட்சியளிக்கின்றன. நாகம் ஒன்றைப் பூணூலாகத் தரித்துள்ளார்.

அவர் இடையில் கட்டியுள்ள ஆடையில் சிம்ஹமுகம், தாமரை மொட்டுக்கள் ஆகிய சித்திரங்கள் – மகதக் கலைச் சாயலை ஒத்திருக்கின்றன.

காபூலிற்கு வடக்கே பத்துமைல் தொலைவில் உள்ள சங்கர் தரா எனும் இடத்தில் ஒரு சலவைக்கல் விக்ரஹம் கண்டெடுக்கப் பட்டுள்ளது. இவ்விடத்தில் சூரியன் மற்றும் சிவபெருமானின் விக்ரஹங்களும் கூடக் கண்டு எடுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கு கணபதி நின்ற கோலத்திலேயே காட்சி தருகிறார். மற்றப்படி எங்கும் காணப்படுவது போல் இவ்விநாயகர் பானை வயிற்றோடு கூடக் காட்சியளிக்கவில்லை. இவரும் நாக யக்ஞோப வீதத்தைத் தரித்துள்ளார். நாகத்தின் தலையே பூணூலில் உள்ள பிரம்ம முடிச்சாக உள்ளது.


இவருக்கும் நான்கு கரங்கள் உள்ளன. ஆனால் இடது மேல் கரம் உடைந்துள்ளது. கீழிரண்டு கரங்களும் கணங்கள் இருவர் தலையில் வைத்த நிலையில் காணப்படுகின்றன. இந்தக் கணங்கள் கிரேக்க மிடுக்குடன் சுருண்ட முடியுடன் தோற்ற மளிக்கின்றனர். இச்சிற்பம் காந்தாரக் கலையம்சத்தையும் தன்னகத்தே தாங்கியுள்ளது. தும்பிக்கை இடது புஜத்திற்கு மேல் நிலையில் தங்கி நிற்கிறது. வலது தந்தம் உடையாமலும் இடது தந்தம் உடைந்த நிலையிலும் ஏகதந்தராகக் காட்சியளிக்கிறார். இச்சிற்பம் நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று துணிந்து மதிப்பிடலாம். இன்றும் கூட இவ்விக்ரஹம் காபூலிலுள்ள ஹிந்துக்களால் கடற்கரை பஜாரில் (நரசிங் த்வாரா) வைத்து வழிபடப்படுகிறது.

இந்து சமயம் தழைத்து ஓங்கி நிலை பெற்றுள்ள நம்நாட்டில் கூட இத்தகைய புராதன கணேச விக்ரஹங்கள் இன்று காணப்பெறவில்லை. ஆனால் ஹிந்து சமயம் நிலைபெறாத ஆப்கானிஸ்தானில் இச்சிற்பங்கள் காணக் கிடைக்கின்றன.

ஆப்கானிஸ்தானம் இன்றைக்கு இஸ்லாமிய சமயத்தைத் தழுவிய தனித்த ஒரு நாடாக விளங்கலாம். ஆனால் ஒரு காலத்தில் அங்கு சைவமும், வைணமும், புத்த சமயமும் சிறப்புடன் விளங்கின என்பதை யாராலும் மறுக்க முடியாது.

## நேபாளம்

நேபாளத்தில் கணபதி வழிபாடு துவங்கிய காலத்தை வரையறுத்துச் சொல்ல இயலாது. ஆயினும் அசோகனின் மகள் சாருமதி என்பவள் நேபாளத்தில் கணபதிக்காகக் கோயில் ஒன்று கட்டினாள் என்ற ஐதீகமொன்று நிலவுகிறது. இதை மெய்ப்பிக்கும் வரலாற்றுச் சான்று எதுவும் இன்று இல்லை. நேபாளத்தில் எட்டாம் நூற்றாண்டில் தொடங்கிய கணபதி வழிபாடு பத்தாம் நூற்றாண்டில் பிரபலமடைந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது.



கிடைத்துள்ளது. இதில் வழக்கத்திற்கு மாறாக விநாயகர் மூஷிகத்தின் மீது அமர்ந்திருக்கிறார்.

மூனிச்சில் உள்ள வால்டெர் குண்டே அருங்காட்சியகத்தில் (Museum for Volter Kunde) உள்ள விநாயகர் சிலையில் ஒரு காலின் அடியில் மூஷிகமும் இன்னொரு காலின் அடியில் சிங்கமும் உள்ளன.

இங்கு விநாயகர் இந்துக்களாலும், பௌத்தர்களாலும் வழிபடப்படுகிறார்.

பௌத்தர்கள் கணபதியை "சித்தி தாதா" எனப் போற்றி வழிபடுகின்றனர். "கணபதி ஹிருதயம்" என்ற ஸ்தோத்திரமானது பகவான் புத்தரால் ஆனந்தர் என்பவருக்கு ராஜக்ருஹத்தில் உபதேசிக்கப்பட்டது என நேபாள புராணக் கதையொன்று கூறுகிறது. ஏராளமான கணபதி உருவங்கள் நேபாளத்தில் கிடைத்துள்ளன. இவற்றுள் காத்மாண்டுவில் கிடைத்துள்ள இரண்டு உருவங்கள் குறிப்பிடத்தக்கன.

இவ்விரு உருவங்களிலும் கணபதி இருகால்களின் அடியிலும் இரண்டு எலிகளை மிதித்துக் கொண்டு இருப்பது போல செதுக்கப்பட்டுள்ளார்.

ஒரு உருவத்தில் விநாயகருக்கு நான்கு கரங்களும், மற்றொன்றில் பதினாறு கரங்களும் உள்ளன. சிவபெருமானுடைய சின்னங்கள் சிலவும் கணபதியின் உருவச் சிற்பங்களில் சேர்க்கப் பட்டிருப்பது எல்லை கடந்த கணபதியின் விசேஷ அம்சமாகும்.

ஹேரம்ப கணபதியின் வடிவம் – நேபாளத்தில் பிரசித்தி பெற்றதாக உள்ளது. இந்த வடிவில் அவரது வாகனமாகச் சிங்கம் உள்ளது. ஐந்து தலைகள், பத்துக் கரங்கள் மற்றும் மடியில் சித்திதேவி.

1695 ஆம் ஆண்டைச் சேர்ந்த ஹேரம்ப விநாயகர் சிலை ஒன்று பட்காவ்ன் (Bhatgaon) என்ற இடத்தில்

நேபாளத்தில் கணேசருக்கு எனச் சில தனி ஆலயங்கள் உள்ளன. அவற்றில் ஸிம்பி–தண்டு (Zimpi - Tandu) என்ற இடத்தில் உள்ள கோவில் பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. சித்தி விநாயகர் ஆலயம் ஒன்று சங்கு (Shanku) வில் இருக்கிறது. தன்கோட்டிற்கு (Thankot) வடக்கேயுள்ள விநாயகர் ஆலயத்தில் ஸ்ப்த – மாதர்கள் சிலைகள் உள்ளன. பாரதத்திலும் கணேசருடன் ஸப்த மாதர்களைச் சேர்த்துப் பார்க்கும் பழக்கம் உள்ளது.

அறுவடை விழாக்களில் கணபதி பிரதான இடத்தை வகிக்கிறார். நம்நாட்டிலும் கூட கொங்கணப் பகுதியில் கணபதி அறுவடை விழாக்களிலும் பிரதான தெய்வமாகக் கொண்டாடப்படுகிறார்.

## திபெத்தில்

நேபாளம் போன்று திபெத்தில் கணபதி அத்துணை பிரபலம் அடையவில்லை. மஹாயான புத்த சமயத்தின் பரவலே இதற்குக் காரணமாயிருந் திருக்கலாம். பேய் பிசாசுகளினின்றும் மக்களை ரக்ஷிக்கும் கடவுளாகக் கணபதியை திபெத்தின் மேற்குப் பகுதி வாழ் மக்கள் வழிபட்டனர்.

இதனால் கணபதி திபெத்தில் உள்ள ஆலயங்களிலும் பிரதான வாயிலின் மேற்புறத்தில் காணப்படுகிறார்.

இந்து ஆலயங்களில் நம் நாட்டில் கூட எட்டாம் நூற்றாண்டு முதல் கணபதி பிரதான வாயிலின் அருகே வீற்றிருக்கச் செய்யப்பட்டுள்ளார்.

கணபதியைப் பெண் உருவத்தில் வழிபடுவது மிக அபூர்வம். நம் நாட்டில் மத்திய பிரதேசத்திலுள்ள பேராகாட்டில் (Bheraghat) "அறுபத்து நான்கு யோகினி" ஆலயத்தில் "கணேசனி" என்ற பெயரில் கணபதி பெண்ணுருவத்தில் வழிபடப்படுகிறார். திபெத்திலும் கூட கணபதி பெண் உருவத்தில் வழிபடப்பட்டுள்ளார்.

திபெத்திய பௌத்தர்கள் மஹாகாலன் கிருஷ்ண மஞ்சுஸ்ரீ போன்ற பௌத்த தெய்வங்களின் காலடியில் ஆண், பெண் கணேச உருவங்கள் மிதிபட்டுக் கிடப்பதாகவும் சித்தரித்து இருந்தனர்.

கோடானில் (Khotan) கணேசர் பிரசித்தி பெற்றிருந்தார். எண்டெரேயில் (Endere) ஸ்தூபி ஒன்றினை ஆழ்ந்து ஆராயும் போது ஸ்டெய்ன் (Stain) என்பவர் பல வெண்கலப் படிமங்களையும் – வண்ணம் பூசப்பட்ட மரத்தால் ஆன விநாயகர் சிலைகளையும் கண்டெடுத்தார். (Bezaklik) பெசாக்ளிக் என்னும் இடத்தில் உள்ள குகைக் கோயில்களில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்களில் கணேசர் இடம்பெற்றுள்ளார்.

இங்குள்ள சில விநாயகர் உருவங்களில் ஆனை முக்தோனின் முகத் தோற்றம் – யானை முகமாக இல்லாமல் சற்று மாறுபட்டு – காட்டுப் பன்றியின் முகத் தோற்றம் போலச் சித்தரிக்கப் பட்டுள்ளது. சிவன் – கார்த்திகேயன் ஆகியோருடன் சேர்ந்து சித்தரிக்கப் பட்டுள்ளதால் – இது கணேசர் சிலைதான் என்பதில் சந்தேகம் இல்லை. ஒருக்கால் "பிள்ளையார் செதுக்கப் போய் – பன்றியாய் முடிந்த கதையாக" இருக்கலாம்.

கோடானிலிருந்து 75 மைல் தூரத்தில் காக்லிக் என்னும் இடத்தில் – இரண்டு விநாயகர் உருவங்கள் வரையப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்று சோனி விநாயகராக உள்ளது. மூன்று கரங்கள் உள்ளன. இவர் மேலே உத்தரீயமும் கீழே அந்தரீயமும் உடுத்துள்ளார்.

இன்னொரு உருவம் கணேசர் உட்கார்ந்து இருப்பதுபோலக் காட்டப்பட்டுள்ளது. தலையின் பின்புறம் பிரபை வளையம் உள்ளது. தலையில் கிரீடமும் உடலில் ஆபரணங்களும் அணிந்திருக்கிறார். வலம்புரி விநாயகராக இவர் தோற்றமளிக்கிறார். அவர் பார்வை அவரது இடது புறம் நின்று கொண்டிருக்கும் பெண்ணொருத்தியை நோக்கியதாக உள்ளது. நான்கு கரங்களுடன் நீல நிற அந்தரீயம் அணிந்தவராக இவர் சித்தரிக்கப்பட்டுள்ளார்.

### பர்மாவில்

பர்மா இன்று பெரும்பான்மையான பௌத்த நாடு. இங்கு 11ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் பௌத்தம் நுழைந்திருக்க வேண்டும். அதற்கும் பல நூற்றாண்டுகள் முன்பே வைதிக சமயம் இங்கு கோலோச்சி இருந்திருக்கிறது. ஒரு காலத்தில் வைதிக சமயத்தைப் பின்பற்றியவர்கள் இங்கு வாழ்ந்தார்கள். நமது புராணங்களில் ப்ரும்மதேசம் என்று குறிக்கப்படும் பகுதி இதுவேதான். கீழை பர்மாவில் ஏராளமான பிள்ளையார் சிலைகள் கிடைத்துள்ளன.



சிறியதும் பெரியதுமாக உள்ள இச்சிலைகளில் பெரும் பாலானவை பாரதத்தின் மற்றப் பகுதிகளிலிருந்து வியாபார நிமித்தமாக – பர்மா வந்த வர்த்தகர்கள் தங்களுடன் கொண்டு வந்தவையே ஆகும். இன்றும் பர்மா வணிகப் பெருமக்களிடையே தான் கணபதி பிரதான தெய்வமாகக் கருதப்படுகிறார்.

ரங்கூன் மியூஸியத்தில் இரண்டு அற்புதமான கணேச விக்ரஹங்கள் உள்ளன. இரண்டுமே அளவில் சிறியவை. ஒரு சிலை விநாயகரை பத்மாஸனத்தில் வீற்றிருப்பவராகச் சித்தரிக்கிறது. இவருக்கு ஆறு கரங்கள். கரங்களில் எவற்றை ஏந்தியிருக்கிறார் என்பது தெளிவாக இல்லை.

பாகனில் உள்ள ஷ்வேசண்டா பகோடா வளாகத்தில் பிரமீடுகள் போன்ற பௌத்த விஹாரங்களின் – மூலைகளில் துவாரபாலக தேவதைகளில் கணேசரும் இடம் பெற்றிருக்கிறார் என்பதை பேராசிரியர் என். ஆர். ரே அவர்கள் "Brahmanical Gods in Burma" என்ற நூலில் விளக்கியுள்ளார்.

## சீனாவில்

மிகப்பழங்காலத்திலேயே கணேசர் மத்திய ஆசியா வழியாகச் சீனாவைச் சென்று அடைந்திருக்கிறார். குகை குடைவரைகளில் செதுக்கப் பட்டுள்ள கணேச சிற்பங்கள் துன் ஹுவாங் (Tun- Huang) என்ற இடத்தில் கிடைத்துள்ளன. அதேபோன்று குங் – சியான் (Kung - Hsein) என்ற இடத்தில் குகைக் கோவிலிலும் கணேச சிற்பம் உள்ளது. முதல் குகையில் பல ஹிந்து தெய்வங்களோடு கணேசரும் செதுக்கப்பட்டுள்ளார். இது 6–ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம். பத்மாஸனத்தில் வீற்றிருப்பது போலக் கணேசர் காட்சியளிக்கிறார். இரு கரங்களில் ஒன்றில் சிந்தாமணியும், மற்றொன்றில் தாமரை மலரும் தாங்கிக் காட்சி தருகிறார். 'யானைகளின் அரசன்' என்று அவரை வர்ணித்திருக்கிறார்கள்.

சீனாவிலும் ஜப்பானிலும் கணேசர் இரு தோற்றங்களில் காட்சி தருகிறார். ஒரே உருவமாக உள்ள விநாயகர். இரு உருவங்களாக உள்ள காங்கிடென் (Kangi-ten) என்ற சிற்பங்கள். உட்கார்ந்த நிலையில் உள்ள கணேசர் சிற்பங்களே அதிகம் கிடைத்துள்ளன. இவர் ஒரு கரத்தில் பரசும் ஒரு கரத்தில் கந்த மூலமும் தாங்கியுள்ளார். வாமாசாரத்தைப் பின்பற்றியவர்கள் மட்டுமே (Kangi - ten) காங்கிடென் என்று இரு உருவங்கள் இணைந்த கணேசரை இரகசியமாக வழிபட்டு வந்திருக்கின்றனர். 1017–ல் சென் ஸுங் (Chen Tsung) என்ற பேரரசர் இத்தகைய வழிபாட்டைத் தடை செய்திருந்ததே இதற்குக் காரணமாகும்.

நம் நாட்டிலிருந்து குறிப்பாகத் தென் பாரதத்திலிருந்து போதோய் ரிஷி என்பவர் சீனாவுக்குச் சென்றாராம். இவர் பெயர் போதாயன ரிஷியோ என்று தோன்றுகிறது. இவர் பல நூல்களை அந்நாட்டு மொழியில் மொழி பெயர்த்திருக்கிறார்.

அவற்றில் ஷிஜீசோரா என்ற நூலில், இரட்டை உருவ விநாயகர் செய்யும் முறை வர்ணிக்கப்பட்டுள்ளது. ஸம்ஸ்கிருதத்திலிருந்து இந்நூல் சீன மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

## ஜப்பானில்


9ம் நூற்றாண்டு வரை ஜப்பானில் கணேச வழிபாடு இருந்ததற்கான சான்றுகள் இல்லை. கோல்ஸோ தயிஷி (Kolso Daishi) என்ற பௌத்த துறவி மூலம் கணேச வழிபாடு சீனாவிலிருந்து ஜப்பானில் நுழைந்தது. விநாயகர் வடிவில் பல ஊர்களில் கணேசர் வழிபடப்பட்டார். சில ஊர்களில் விநாயகருக்கு என ஆலயங்கள் இருந்தன. சாதாரணமாக கணேசர் புன்முறுவல் பூத்த முகத்துடன் நின்ற கோலத்தில் இரண்டு, நான்கு அல்லது ஆறுகரங்களுடன் காட்சி தருகிறார். இவர் ஷோதேன் ஷி மந்தரா என்று அழைக்கப்படுகிறார். காகுஸென் – சோ (Kaku zen cho) வடிவில் அவர் மூன்று தலைகளுடன் காணப்படுகிறார். அவரது ஒவ்வொரு முகத்திலும் மூன்று கண்கள் உள்ளன. மலைமீது அமர்ந்த தோற்றத்தில் அவர் "கஜேந்திரன்" என்று அழைக்கப்பட்டு வழிபடப் படுகிறார். வாமயோகத்தின் ஆடிப்படையில் – அவர் காங்கிடென் வடிவிலும் ரகசியமாக வழிபடப்பட்டிருக்கிறார்.



12–ம் நூற்றாண்டில் ஷின்காகு என்பவரால் எழுதப்பட்ட பென்ஸோன்ஸக்கி என்ற நூலில் விநாயகரின் உருவ இலக்கணங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. தரணி ஷுக்யோ, ஷிஜ்ஜுஹோக்யோகி ஆகிய நூல்களில் வாமயோக பத்ததியில் காணப்படும் இரு உருவ விநாயகர் பற்றிக் குறிப்புகள் உள்ளன.

பௌத்த தாந்தரிக மார்க்கத்தவர்கள் இரட்டை உருவப் பிள்ளையாரில் – ஆண் உருவை மஹா – வைரோசனரின் தோற்றம் என்றும், பெண் உருவை அவலோகிதேஸ்வரரின் உருவம் என்றும் கருதுகின்றனர்.

விநாயகரைச் சரிவர வணங்காவிடில் அவர் பல துன்பங்களைத் தருவார் என்று ஜப்பானியர் திடமாக நம்புகின்றனர். வெவ்வேறு விநாயக மந்திரங்களுக்கு வெவ்வேறு – தொல்லைகளை நீக்கும் – சக்தி உண்டு என்றும் அவர்கள் நம்புகிறார்கள்.



ஜப்பானிய மன்னர்களின் அரண்மனையில் தொடர்ந்து விநாயக வழிபாடு முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஏராளமான மக்கள் இன்றுங் கூட தமக்குப் பல நன்மைகளை வேண்டி பிள்ளையாரை வழிபடுகின்றனர்.

விநாயகர் திசைகளைக் காவல் செய்யும் தெய்வமாகவும் வழிபடப்படுகிறார்.

## மங்கோலியாவில்

புத்தமதம் மங்கோலியாவில் நுழையும் போதே கணேசரும் நுழைந்திருக்கிறார். சிவபெருமானின் அம்சமாக மஹாகாலன் என்ற தெய்வத்தை மங்கோலியர்கள் வழிபட்டு வந்தனர். எனவே கணேச வழிபாடும் அங்கு கூடவே இடம்பெற்று விட்டது. நார்த்தானில் கண்டெடுக்கப்பட்டுள்ள 500 தெய்வங்களில் 'நிருத்ய கணபதி' வடிவம் உள்ளது. மூஷிக வாகனத்தில் விநாயகர் நின்று நடனமாடுகிறார். மூஞ்சூரின் வாயில் சிந்தாமணி உள்ளது. நான்கு கரங்களில் ஒன்றில் பரசு, மற்றொன்றில் கந்தமூலம், இன்னொன்றில் கொழுக்கட்டை, நான்காவதில் திரிசூலம் ஏந்தியுள்ளார்.

மங்கோலியாவில் வழங்கும் புராணக் கதையின்படி மங்கோலிய நாட்டின் முதல் மன்னனான பாக்ஸ்ஃபு பைஸின் (Hphags pais) தந்தை விநாயகரின் பக்தராம். விநாயகர் அவரை தும்பிக்கையால் தூக்கி மேரு பர்வதத்தின் சிகரத்தில் வைத்து அங்கிருந்து மங்கோலிய தேசத்தைக் காட்டி "உன் மகன் இந்நாட்டினை அரசாள்வான்" என்று கூறியதாகவும் அதன்படியே நடந்ததாகவும் கூறப்படுகிறது.

## இலங்கையில்

1934 – 35ல் நடந்த அகழ்வாராய்ச்சியில் மிஹிந்தலே அருகில் கந்தக செட்டிங்க ஸ்தூபி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இந்த ஸ்தூபியில் செதுக்கப் பட்டுள்ள கணங்களில் – யானைத் தலையுடன் குள்ளமான தோற்றத்தில் விநாயகர் காட்சி தருகிறார்.

ஆந்திரப் பிரதேசம் அமராவதியில் உள்ள சிற்பங்களில் இது போன்ற கணங்கள் செதுக்கப் பட்டுள்ளன. பௌத்த சமயக் கதைகளில் கணங்களில் ஒருவராகக் கணேசர் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறார். இது வைதிக புராணக் கதைகள் – பௌத்தத்தில் ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவே.

பொலன்னறுவை என்னும் இடத்தில் உள்ள சிவன் கோவிலில் விநாயகர் சிலை இடம் பெற்றுள்ளது. இடது கரத்தில் மோதகத்துடன் இவர் காட்சி தருகிறார்.

கதிர்காமத்தில் உள்ள முருகன் ஆலயத்தில் விநாயகருக்குத் தனிச் சன்னதியே உள்ளது.

## தாய்லாந்து

மிகப் பழங்காலம் முதலே சயாம் என்று பிரசித்திபெற்ற தாய்லாந்து பாரதத்துடன் கலாசார உறவு கொண்டிருந்தது. முதல் நூற்றாண்டிலேயே சயாமிய சிற்பக் கலையில் அமராவதி சிற்பக் கலையின் சாயல் இருந்ததற்கான ஆதாரங்கள் உள. தாய்லாந்தின் தென்பகுதிதான் பாரதத்துடன் முதலில் தொடர்பு கொண்டிருந்திருக்க வேண்டும். பாரத நாட்டின் வணிகர் கீழை பர்மாவிலிருந்து கிழக்கு முகமாக – தாய்லாந்திற்குள் நுழைவது எளிதாக இருந்தது. 8–ம் நூற்றாண்டின் மோன் ஓவியங்களில் பர்மிய ஹிந்துக்களின் கலை நுட்பத் தாக்கம் முதலிலேயே – ஏற்பட்டது போலும்.

மோன்கள் பக்தியுணர்வு மிக்க இந்துக்களாக இருந்தனர். பிற்காலத்தில் தாய்லாந்தவர்கள் – பௌத்தர்களாக மாறிய பின்னரும் – அவர்களிடையே விநாயகர் பிரபல தெய்வமாக விளங்குகிறார்.

அயூதியன் காலத்து விநாயகச் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை. அயூத்யாவின் முற்கால கலைப் படைப்புகள் – பாரதத்தின் தாக்கத்தை வெகுவாக வெளிப்படுத்துகின்றன.


பாங்காக்கில் உள்ள இந்து ஆலயத்தில் கணேசரின் வெண்கலச் சிலை ஒன்றுள்ளது. கால்கள் ஒன்றின்மீது ஒன்றாக இருக்கும்படி இவ்விநாயகர் காட்சியளிக்கிறார். அவருக்கு நாக யக்ஞோப வீதம் உள்ளது. வலதுகையில் ஒடிந்த கொம்பும் – இடது கரத்தில் ஏடும் கொண்டு இவ்விநாயகர் தோற்றம் அளிப்பதைப் பார்க்கும்போது – வியாசருக்காக கணபதி மஹாபாரதம் எழுதிய புராணச் செய்தி சயாமியருக்குத் தெரிந்திருக்கிறது என்பதற்கான சான்றாகும்.

## கம்போடியாவில்

கம்போடியாவில் மஹாபாரதம் 6–ம் நூற்றாண்டிலேயே பிரபல்யம் அடைந்து விட்டது. கணபதி ஞானத்தின் அதிதேவதை என்பதை இது சொல்லாமல் சொல்லிக் காட்டுகிறது.

காம்போஜம் என்று நம்மவரால் சிறப்பித்து அழைக்கப்பட்ட கம்போடியா பாரதத்துடன் பன்னெடுங் காலமாகவே பண்பாட்டுத் தொடர்பு கொண்டிருந்தது.

பர்மா மற்றும் சயாம் போன்றே இங்கும் ஏராளமான கணேச விக்ரஹங்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன.



ஆங்கோர் பரே (Angkor Borei) கல்வெட்டுகள் மூலம் ஹிந்து ஆலயத்திற்கு பல தாஸர்களை நியமித்திருந்த தகவல் தெரிகிறது. இந்த ஆலயங்களில் வழிபடப்பட்ட மூர்த்தங்களில் கணேசரும் ஒன்று.

889–ல் யசோவர்மன் என்ற மன்னன் யசோதாச்ரமம் என்ற ஒரு ஆஸ்ரமத்தை நிறுவி, சந்தன மலை என்ற இடத்தில் கணபதிக்குக் கோவில் எடுத்துள்ளான். அங்குள்ள கல்வெட்டு ஒன்றில் ஸமஸ்கிருத மொழியிலும் வாசகங்கள் உள்ளன. "சந்தானாத்ரி கணேசாய சாஸனம் வ்யாதாத் இதம்" என்ற வார்த்தைகள் உள்ளன.

பிரசாத் பாக் (Prasat bak) என்ற இடத்தில் விநாயகருக்கு எனத் தனிக் கோவில் இருந்தது.

பங்க் மேக்ளேவில் உள்ள சிற்பங்களில் (Bung Meglea) கணேசரும் காணப்படுகிறார். குக் ட்ராபியாங் குல் (Kuk Trapeang Kul) என்னும் ஆலயத்தின் அருகாமையில் பல கணேச விக்ரஹங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கம்போடியா மக்கள் கணேசரை பிரா கெணேஸ் (Prah Kenas) என்ற பெயரில் வழிபட்டனர். இந்த கணேசர் பானை வயிற்றோனாகச் சித்தரிக்கப்படவில்லை. இரண்டு கைகளுடன் சம்மணமிட்ட கோலத்தில் அவர் காட்சி தருகிறார். தும்பிக்கை நேராக வந்து கீழ்முனையில் சுருண்டு காணப்படுகிறது. மோர்களின் முந்தைய காலத்திய சிற்பங்களில் கணேசர் தலையில் கிரீடம் ஏதும் இல்லை.

பின்னாளில் கணேசர் தலையில் கரண்ட மகுடம் சூட்டப்பட்டு உள்ளது. இடுப்புவரை ஆடையேதும் இல்லாமல் பாம்பை பூணூலாக அணிந்திருக்கிறார் பிள்ளையார்.

கம்போடியாவில் ஸ்பெக் த்மார் கெண்டர் (Speak Thmar Kendal) எனும் இடத்தில் உள்ள ஒரு தனியார் சிற்பக் கூடத்தில் அபூர்வமான முறையில் கணேசர் தோற்றமளிக்கிறார். இந்த கணேசருக்கு நான்கு தலைகள் – ஆனால் இரண்டே இரண்டு கைகள் தான். நான்கு தலைகளுடன் கூடிய பிள்ளையார் விக்ரஹங்கள் வெகு அபூர்வமானவை. இதுபோன்ற நான்கு தலைகளுடன் கூடிய கணேச விக்ரஹங்கள் ராஜஸ்தானில் உள்ள கடியாலா (Ghatiala) என்ற இடத்தில் தூணில் செதுக்கப்பட்டுள்ளன.

## சம்பாவில்

தற்போது தெற்கு மற்றும் மத்திய அன்னாம் நாட்டின் பகுதிகளைத்தான் ஒரு காலத்தில் சம்பா என்று அழைத்தனர். ப்யூனானுக்கும் – கம்போடியாவிற்கும்

கிழக்கே இந்நாடு அமைந்திருந்தது. சம்பா – பெயரில் மட்டுமல்ல – அந்நாட்டின் அனைத்து அம்சங்களுமே – பாரத நாட்டுப் பண்பாட்டுச் சாயல் மிக்கதாக இருந்தது என்பதில் ஐயமில்லை.

அங்கு கண்டு எடுக்கப்பட்டுள்ள கல்வெட்டு களிலிருந்து கணேசருக்கு எனத் தனித்தனி ஆலயங்கள் இருந்தன என்பது தெளிவாகிறது. போ – நகரில் (Po - Nagar) அப்படிப்பட்ட ஆலயங்கள் பல உள்ளன.

ஏழாம் நூற்றாண்டிலிருந்தே கணேசர் பிரபல்யமான கடவுளாகத் திகழ்ந்திருக்கிறார். மை சோன் (Mi - Son) என்ற இடத்தில் உள்ள சிவாலயத்தில் அருமையான கணேசருடைய சிற்பம் ஒன்று கிட்டியுள்ளது. இச்சிற்பம் – எட்டாம் நூற்றாண்டி னுடையது. மேர் சிற்பங்களோடு ஒப்பிடும்போது இந்த கணேசர் குண்டாகக் காட்சியளிக்கிறார். இதே மை– ஸோனில் உட்கார்ந்த தோற்றத்தில் மற்றொரு கணேசர் காட்சியளிக்கிறார். சைகோன் பொருட் காட்சியில் காணப்படும் கணேசர் ஒரு அற்புதமான விக்ரஹமாகும். ஆனால் இது சிதைந்த நிலையில் காணப்படுகிறது. கணேசர் இரு கரங்களுடன் உட்கார்ந்த நிலையில் இருக்கிறார். இக்கணேசர் மூன்று கண்களுடன் காணப்படுகிறார். அவரது தலைக்குப் பின்புறம் பிரபை வளையம் ஒன்று உள்ளது. இது போன்ற சிற்பம் – தென்கிழக்கு ஆசியாவிலேயே இது ஒன்றுதான் என்று பாய்ஸெலியர் (Boisselier) என்ற வரலாற்றாளர் குறிக்கிறார்.

## ஜாவா மற்றும் பாலியில்

இராமாயணத்தில் யவ–த்வீபம் என்று வர்ணிக்கப்பட்டுள்ள பூமிதான் இன்று ஜாவா என அழைக்கப்படுகிறது. முதல் நூற்றாண்டிற்கும் முன்னரே நம்நாட்டுடன் நெருங்கிய தொடர்பு ஜாவாவிற்கு இருந்திருக்க வேண்டும். சைவ சமயம் இந்நாட்டில் பிரபல்யமாக பரவியிருந்தது. இந்தோனேஷிய தீவுக் கூட்டத்தில் ஜாவா முக்கிய பகுதி. இங்கு வைதீக கடவுளர்களின் சிலைகள் பெரும் எண்ணிக்கையில் கிடைத்துள்ளன. கணேசருக்கு எனத் தனி ஆலயங்கள் ஜாவாவில் இல்லை. ஆனால் சிவாலயங்கள் அனைத்திலுமே கணேசருக்குச் சன்னதிகள் உள்ளன.

மேற்கு ஜாவாவில் மிகப் பழமையான கணேசரின் கல் சிலை ஒன்று கண்டெடுக் கப்பட்டுள்ளது. இச்சிலை கரடு முரடானதாகவும் – முழுமை பெறாததாகவும் உள்ளது.

இன்னொரு சிலை வெண்கலத்தினாலான கணேச விக்ரஹம் – ஜாவாவில் கண்டெடுத்தது தற்போது பிரிட்டிஷ் மியூசியத்தில் உள்ளது.

டியாங் பீடபூமியில் கண்டெடுக்கப்பட்ட கணேசரின் கற்சிலை ஒன்று ஜாவாவில் பழமையான கணேச விக்ரஹம் என்று கருதப்படுகிறது. ஒரு கரத்தில் அக்ஷரமாலையும், ஒரு கரத்தில் பரசும் ஏந்தி, வலது கரத்தினால் ஒடிந்த கொம்பைப் பற்றிய வண்ணம் உட்கார்ந்த நிலையில் அவர் காட்சி தருகிறார். தலையில் கிரீடம் இல்லை. வழக்கம் போல நாகத்தையே யக்ஞோபவீதமாக அணிந்துள்ளார்.

சண்டி பேனானில் (Chandi Banon) இருந்த ஒரு நுண்மையான கற்சிலை தற்போது ஜாகர்த்தா அருங்காட்சியகத்தில் வைக்கப் பட்டுள்ளது. போரோபுதூருக்கு அருகே சண்டி பேனானில் இருந்த சிவாலயத்தின் தடயங்கள் கூட ஏதும் இல்லாத அளவுக்கு அனைத்தும் அழிந்துவிட்டன.

கபால மாலைகள் அணிந்த கணேச சிற்பங்கள் ஜாவாவில் மட்டுமே காணக்கிடைப்பவை. சிவபெருமான் கபால மாலையணிந்தவன் என்கிற காரணத்தினால் – சிவனின் பிள்ளையான கணேசரையும் அக்கோலத்தில் ஜாவா மக்கள் காண்கின்றனர். சிங்கஸோரி அரசின் காலத்திய கணேச சிற்பங்கள் கபால மாலை அணிந்தவையாக செதுக்கப்பட்டுள்ளன. பீடத்தின் அடியிலும் மண்டை ஓடுகள் பல இருப்பது போன்று பாராவில் கிடைத்துள்ள கணேச சிலை காணப்படுகிறது.

சண்டி சிங்கஸோரி எனும் இடத்தில், நின்ற கோலத்தில் உள்ள கணேசர் கபால அணிகலன்கள் அணிந்துள்ளார். காலனின் பாதுகாப்போடு காணப்படும் கணேசருடைய சிலைகளும் ஜாவாவில் உண்டு.

## போர்னியோ

(Kotei) கோடே எனும் இடத்தில் உள்ள கல்வெட்டு மூலம் இந்துச் சடங்குகள் பற்றிய விவரம் கிடைக்கிறது. இங்கு கிடைத்துள்ள கணேசர் விக்ரஹம் பழமையானதாகக் கருதப்படுகிறது. மஹாகன் ஆற்றின் கரையில் இருந்த கோவில் ஒன்றில் இச்சிலை இருந்திருக்க வேண்டும். பின் ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு குகை ஒன்றினைச் சென்று அடைந்திருக்கிறது. முறம் போன்ற காதுகளுடன் நேரான தும்பிக்கையுடன் – கணேசர் காட்சியளிக்கும் விக்ரஹங்கள் போர்னியோவில் ஏராளமாகக் கிடைத்துள்ளன.

# அமெரிக்க மண்ணில் ஆனைமுகன் ஆலயம்

அமெரிக்கா என்ற உடனேயே நம்மவர்களுக்கு – மாட மாளிகைகள், விண்ணை முட்டும் வண்ணக் கட்டிடங்கள், வாயுவேகத்தில் விரைந்தோடும் அதிநவீன கார்கள், ரப்பரைக் கொண்டு செய்யப்பட்ட வழவழச்சாலைகள், அப்பழுக்கற்ற சுத்தமான, சுகாதாரமான குபேர பூமி – பூலோக ஸ்வர்க்கம் என்றெல்லாம்தான் நினைவு வரும்.

அமெரிக்க மண் – அண்மைக் காலமாக ஆன்மீக பூமியாகவும் – இந்து மண்ணாகவும் மாறிவரும் உண்மை பலருக்கும் தெரியவில்லை. அமெரிக்கா போகிற நம்மவர்கள் இங்கே எப்படி – திருப்பதிக்கும், திருச் செந்தூருக்கும், மதுரைக்கும், பழனிக்கும் போகிறோமோ அதேபோன்று – அமெரிக்காவிலும் தீர்த்தாடனம் செய்யப் பல திருக்கோயில்கள் உள்ளன.

அங்குள்ள திருக்கோயில்களுக்குப் பிள்ளையார் சுழியிட்டதே – நியூயார்க் நகரில் – ஒரு கோடிக்கும் அதிகமான செலவில் – கம்பீரமாகக் காட்சியளிக்கும் – கணநாதன் திருக்கோவில்தான்.


இங்கிருந்து செல்லும் பெரும்பாலோர் அமெரிக்காவில் முதலில் கால் ஊன்றும் இடம் நியூயார்க் நகரமாகத்தான் இருக்கும். பன்னாட்டு மக்களால் சூழப்பட்ட பரபரப்பான நகரம்.

இந்நகரில் ஃபிளஷ்ஷிங் (Flussing) என்னுமிடத்தில் மஹா கணபதியின் ஆலயம் எழும்பியுள்ளது.

காஞ்சி பரமாச்சார்யாரின் ஆசியோடு – வழிகாட்டுதலோடு – எழில் குலுங்கத் தமிழக ஆலயப் பாங்கின் வடிவெடுத்துச் சதா சர்வகாலமும் வேதபாராயண ஒலியோடு சென்று தரிசிப்போரை– மெய்சிலிர்க்க வைத்துக் கொண்டிருக்கிறது மஹாகணபதி ஆலயம்.

இரவு ஒன்பது மணி வரை ஆலயம் திறந்திருக்கிறது. எந்த வேளையிலும் இக்கோவிலில் கூட்டத்திற்கு குறைவில்லை.

அமெரிக்காவின் அதிமுக்கிய நகரில் அண்ணன் மஹாகணபதிக்கு ஆலயம் என்றால் – அதன் தலைநகரம் வாஷிங்டனில் அவன் அருமைத் தம்பி முருகனுக்கு ஆலயம் அங்கும் கணபதி வீற்றிருக்கிறான்.



ஸான்பிரான்ஸிஸ்கோவில் உள்ள பழனி ஸ்வாமி கோவிலில் பிள்ளையாருக்கும் சன்னதி உண்டு. இங்கு அமெரிக்கர்களே பூஜாரிகளாக உள்ளனர். சாதாக தீக்ஷ கந்தர் என்று ஹிந்துத் திருநாமம் தாங்கியுள்ள அமெரிக்கரே இந்தக் கோயிலின் தலைமைப் பூஜாரி.

அமெரிக்கப் பெண்கள் புடவை கட்டி, பொட்டிட்டு, தினமும் இக்கோயிலை வலம் வந்து தரிசனம் செய்கின்றனர்.

லிவர்மோரில் உள்ள சிவாவிஷ்ணு கோவிலில் விநாயகப் பெருமானுக்கு சன்னதி உண்டு.

கிழக்கு லண்டனில் உள்ள முருகப் பெருமான் ஆலயத்திலும் ஒரு விநாயகர் சன்னதி உள்ளது. இங்ஙனம் காலமும் தூரமும் கடந்து விநாயகர் ஞாலமுழுதும் செங்கோல் ஓச்சி வந்துள்ளார் – வருகிறார் – வருவார்– என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. கணபதியின் புகழ் உலகெங்கும் உள்ளவரை இந்துவின் புகழும் நிலைத்திருக்கும் என்பதில் சந்தேகம் உண்டோ?

*நன்றி :– விநாயகர் வழிபாடு*



# Ganesa in Southeast Asian Art

***T K Sabapathy***

As a topic this is complex; as a field of study it is relatively undeveloped. For this occasion I propose setting down general observations on the representation of Ganesa in Southeast Asian art. The account is not, however, a survey of such depictions; neither is it aimed at studying particular images in detail. These are interesting and worthwhile projects for future researchers. The observations set down here serve to highlight aspects that strike me as salient and thought provoking in representations of the elephant-headed deity in this region. [1]

Ganesa is widely and variously depicted in visual form in Southeast Asia. It is clear that makers of such images were very familiar with conventions that give shape to the deity and determine its symbolic dimensions. Consequently, those who approach representations of the elephant-headed god from artistic perspectives or traditions of India will encounter degrees of familiarity in Southeast Asian images. They will also encounter very different aspects and roles for Ganesa from those prevailing in India. This is not surprising as traditions change and evolve in particular historical circumstances.

Archaeological evidence testifies to the presence of Ganesa throughout Southeast Asia. Inscriptions (especially from Cambodia) tell us that images of Ganesa were made and installed in temples dedicated to the deity. In a famous encounter with a Ganesa image emplaced in the west niche of the main shrine of Candi Prambanan in central Java in Indonesia, dated to about the ninth century, the archaeologist N J Krom was so moved by the encounter that he made an expansive claim for the popularity of the deity. He says: "In the west Ganesh sits on a throne. The god is shown in his usual guise, in which he can be met a thousand times elsewhere in Java." [2] There is little difficulty in identifying it as the deity, although for those of us who are not familiar with Southeast Asian art we may well be astonished by its scale, symbolic magnitude and visual grandeur. Let us look at it closely.

The image is four-armed; his left front hand holds a small food dish in which is also placed the end of its trunk, while the right front hand bears his broken tusk. In his rear left hand is found an axe and the rear right holds aloft a bracelet of beads. He is seated on a lotus throne with his eyes partially opened.

It is an imposing representation, realized fully in sculptural form. When we look at the image we gain appreciation of

the visual order in its design as well as its symbolic potency. That is to say, the proportion of the various parts has been measured, articulated in terms of mass and volume, and then related to one another so that we see the form of the deity clearly. There is interest in detail; note for instance the manner in which the trunk is turned to reveal its underside. This gives vitality and verve to the form of the trunk, which marks the most active passage in the entire representation. The pace and rhythm of movements are deliberate, interconnected; they ascend gradually, corresponding with the direction of our gaze from the deity's feet to his head. We see the composition unfolding sequentially and are able to absorb the magnitude of its presence.

This image of Ganesa instills calm and a deep sense of collectedness. We are comforted in its presence and quietly moved.

Ganesa is not alone in Candi Prambanan; he is part of a scheme. There are two other images, each placed in its own niche on the exterior of the main shrine. A standing image of Agastya is in the niche facing south while in the northern chamber stands Durga. An image of Siva is in the room at the heart of the principal sanctuary; he is the presiding deity for the entire Prambanan temple complex. Such an arrangement, in which Siva marks the symbolic centre while Ganesa, Agastya and Durga establish the cardinal directions, is repeated in a number of temples in Indonesia. It is not clear how and why this arrangement or scheme is significant and preferred. What we can say is that there is a relationship between Ganesa, Siva and the other deities.



In saying this we are not disclosing anything that is startling; on the contrary we are underlining the obvious, the known and the anticipated. Yet by installing Ganesa as the sole image in a niche, the designers of this temple also underline the deity's relative autonomy. The formal and symbolic dimensions of this representation consolidate the image with autonomous status; it is imbued with the aura of an icon. This is conveyed by Krom's description; it is also the outcome of the manner in which the image is conceived and presented.

It is important to grasp these features and consider their implications. In doing so we gain some appreciation of the distinctiveness of Ganesa in Southeast Asian art and its separateness from representations in other regions.

Surviving images demonstrate that the material and symbolic constitutions for representing Ganesa is greatly varied. However, we are not able to ascertain how they were worshipped; in other words, we are not able to envisage their placement in sacred spaces and their role in ritual practices. We can, nevertheless, appraise the images artistically and speculate on their symbolic significance.



Let us consider scale. There are colossal-sized representations of Ganesa that are unique to Southeast Asia, as they do not appear elsewhere. Such compositions display the supreme capacity of sculptors in this region to realize figures in three-dimensional forms that are monumental in scope and imbued with symbolic content. The proportion and commanding presence of these images that are carved out of stone indicates that they had been commissioned in order to be worshipped as single, iconic presentations. One of the largest images is from Cambodia; it measures 2.3 metres in height and was the central deity in its own temple.

There are other sculptural representations along this scale. For instance, in the basement of the National Museum in Bangkok is displayed the fragmentary remains of a colossal image of Ganesa. Fragmentary because it consists of pieces of broken stone, assembled to produce an unmistakable form of the elephant-headed deity. The pieces have been put together sensitively and sensibly; that is to say, there is not an enforced attempt to recreate the original that often leads to artificiality and lifelessness. On the contrary, the fragments are nudged close to one another; they collectively approximate to the form of Ganesa. This is sufficient and the approach is effective. It generates compelling psychological and spiritual associations. Even as it is an assembly of fragments, while standing in its vicinity and gazing at it intently, one is conscious of a powerful, potent presence that appears to be taking shape in actual time and space. It is as if Ganesa is assuming concrete form through our desire to behold him.

Approaching the topic of scale from the opposite end we encounter the deity depicted along modest registers and from humble materials. An image of Ganesa modeled from clay is preserved in the Bujang Valley Museum in the state of Kedah in Malaysia, dated anywhere between the eighth and fifteenth centuries. Although it is damaged, enough of the features and form survive to securely identify it as the elephant- headed deity. The scale is modest and the material is unremarkable; yet the form has been developed with considerable force and decisively. We also encounter Ganesa depicted as drawn images on surfaces of pots. In such instances we cannot be sure of the function of these representations. However, in locating the deity on utensils, it appears as accessible, literally within the embrace or grasp of one's hands and in the utilitarian domain.


Let me briefly deal with the symbolic aspects of Ganesa. Earlier I drew attention to a duality that prevails in schemes that connect the deity to other deities. It arises from Ganesa's autonomy within patterns of relationship. He is shown as related to Siva but separately, as in Candi Prambanan. Even though he is positioned as connected with Siva he is related not necessarily as a son. This is surprising, especially when the topic is compared with the status and evocations of Ganesa in India, where is very being is defined in relationship to Siva and as a son. The difference is indeed profound. So much so, a scholar on the art of the region remarks that the "role of Ganesh as son and brother within the family of Shiva, Parvathi and Skanda, is not emphasized in the art of Southeast Asia".[3]

Does this imply that Ganesa in Southeast Asian art is so completely the other and that it's appearance is based on radically different value systems? This is not so. The image from Prambanan is familiar enough. Indeed, numerous representations show the deity with features that are conventional and universal. The range of attributes carried in the hands is also familiar, although attributes and other elements or motifs symbolizing indigenous belief systems appear in representations as well.

Ganesa appears predominantly in his role as protector and guardian; he is immensely popular in these respects and is enlisted to fulfill an unending variety of roles. In these capacities the elephant-headed deity can be seen as divesting itself of its iconic stature and assuming active roles in spheres governed by the effects of causes and effects. For instance, at the gateway of a temple in Bali an elephant-headed figure is positioned at the outer pillar. It raises its right arm, holding aloft a handled whisk of some kind in its hand, in a threatening gesture. It projects a terrifying demeanour, warding off potential threats and misdeeds. Here Ganesa is represented in a heightened dramatic form and as an animated guardian of a sacred space.

In Southeast Asia Ganesa appears in eclectic contexts. That is to say, although he is generally represented within the customs or practices of Hinduism this is not an exclusive definition. He is also used in Buddhist Tantricism and in some instances in Theravada Buddhism. At times he is also depicted in human form. All these point to multiple appropriations of the elephant-headed deity spurred by aspirations of communities in particular places and times.

The representation of Ganesa is not confined to artistic traditions of the past. Contemporary



artists in Southeast Asia have shown the elephant-headed deity in a number of formal and symbolic contexts. These vary from expressions of contemplative modes and aspirations on the one hand to depictions that are active and in the narrative mode on the other. 'Ganesa-The Glorious Dance' is the title of a painting by Parvathi Nayar she is a contemporary artist in Singapore. The movements generated by Ganesa's dance in this composition transform the surrounding space into a kinetic field that is unceasingly reconfiguring. Matter and form appear as forming and reforming endlessly. it is a compelling image in which Ganesa is pictured as a symbol of continuous regeneration.

## Notes

1. For a preliminary yet informative account of Ganesa in Southeast Asian art see Brown L, 'Images of Ganesh from Southeast Asia', in 'Ganesh the benevolent', edited by Pratapaditya Pal, Marg Publications, Mumbai, 1995, pp 95-115.

2. Krom, N J, 'The Prambanan Statues' in 'In Praise of Prambanan', edited by Roy E Jordon, KITLV Press, Leiden, 1996, p. 147.

3. Brown, Ibid, p.104.



# Early Sculptures

*M Nalini and R Kalaikkovan*

Most of the ancient icons of Ganapathy are seen in the cave temples of Tamilnadu excavated by the Pallavas, Pandyas and the Muttaraiyas. Pallava cave temples are distributed mainly in Chengalpattu and Kanchipuram districts and a few of them are seen in the other districts of northern Tamilnadu. Among them the lower rock cut cave temple at Thiruchirappalli is the only place where the icon of Ganapathy is raised to the level of a worshipful deity.

If one could recognise the elephant faced Gana in the bhuta mala of the Ramanuja madapa at Mamallapuram as Ganapathy, then it becomes the earliest icon of Ganapathy in the Pallava art zone. Similar elephant faced Ganas met with in the bhuta mala of the Dharmaraja Ratha at Mamallapuram have vinas in their hands. Both Dharmaraja Ratha and Ramanuja mandapa believed to be the creations of Rajasimma Pallava might be dated to the beginning of the eighth century.

A change of position and placement occurs in the structural temples of Rajasimma. The kudus of the kapota and the alpa nasikas of the hara structures of the shore temples exhibit Ganapathy as an exclusive icon. Similar sculptures are seen in the kudus of the kapota of Mukunthanayanar temple and the newly found cylindrical shrine at Mamallapuram, all belonging to the period of Rajasimmma. A shift of Ganapathy from insignificant places of the temple to the niches which are considered to be the prominent places in the main vimana of any temple complex, occurred during the later reign of Rajasimma. An excellent example is in the Rajasimmesvaram at Kanchipuram.

This most beautiful and excellently carved icon of Ganapathy is made to sit like a child with his backhands carrying ankusa and nilotpala flower. The right front hand is in kataka and the left front hand is on the thigh close to the knee. Decorative makuta adores his head. Yajnopavita is in upavita fashion. Armlets, bangles and udarabandha are seen in the appropriate places. Among the tusks, the left is broken. His trunk is curved to the left. The sparkling eyes and the natural fold of the ears add beauty to the icon. A plate full of eatables is placed before him. A pair of gandharvas pay obeisance to the Lord with flowers in their hands and a big umbrella is unfurled above his head. None of the icons of Ganapathy in the Pandaya and Muttaraiya belt has this privilege.



The lower rock cut temple at Thiruchirappalli may be dated to the later years of Rajasimma or to the early years of Nandivarma Pallava II. It is one of the largest cave temples of Tamilnadu and has Ganapathy as a niche deity in an upright position. Admiring gandharvas are seen in the upper corners and a pair of ganas. One on each side is seen in the lower part of the niche. His left tusk is broken and the trunk is turned to the left. Head is adorned with karanda makuta. The front hands are affectionately touching the heads of the ganas. The backhands are in kataka holding the broken tusk in the right and pasa in the left. Yajnopavita is in upavita fashion. Charappali, anklets and bracelets adorn him. Among the icons of Ganapathy found in the Pandaya and Muttaraiya region, only the image at Parankunram has adoring gandharavs, which of course is a later addition.



The niche on the exterior of Vasantesvaram, a cave temple excavated in the hill at Vallam, a remote village situated on the Chengalpattu Mamallapuram road, has one of the most beautiful icons of Ganapathy made by the Pallva sculptors probably in the early part of the eighth century. Ganapathy though seated in lalitasana, is seen leaning towards his left, resting his left front hand on a stone pillow kept by his side. His right front hand is placed on the thigh. His rear hands are in kataka, the right holding the broken left tusk. He is adorned with a karanda makuta, armlets, bracelets and a Yajnopavita in nivata fashion. This is one among the two early icons of Ganapathy wearing Yajnopavita in nivata fashion.

The icons of Virattanesvaram at Thiruthani and Jalanathisvaram at Thakkolam are in lalitasana and belong to the fag end of the Pallava rule in Tamilnadu. The icon at Virattanam has his trunk curved to the left with a modaka at its tip. The right front hand resting on the knee holds another modaka. The left front hand rests on the left knee. The backhands carry the broken right tusk and pasa. He is wearing karanda makuta and udarabandha. His Yajnopavita is in upavita fashion. The one at Thakkolam is seated on a padmasana with his trunk turned to the left with a modaka. Among the front hands the right holds a modaka and the left rests on the thigh. The rear hands carry books and sugarcane. He is adorned with karanda makuta, udarabandha, kanthika, armlets and bracelets. His Yajnopavita is in upavita fashion.

Ganapathy who is rarely seen in the Pallava temples, was a much-celebrated icon in the contemporary Pandya and Muttaraiya cave temples. The earliest icon of Ganapathy in Tamilnadu belongs to the cave temple at Pillaiyarpatti. The vatteluttu inscriptions engraved on a plaster in this cave temple is dated to the sixth century by epigraphists. Ganapathy, carved, here as a bas-relief sculpture in a niche, is seated with folded legs and has only two hands, the right with a broken modaka and the left placed on his belly. He is adorned with an insignificant makuta, udarabandha, armlets and bracelets. The left tusk is broken and the trunk is curved to the right. The absence of Yajnopavita is significant.


Two more icons of Ganapathy with two hands are available in the Pandya region. The icon in the first cave temple at Kunrakkudi is in ardhapadmasena. His trunk is curved to the right. The right hand has a modaka and the left is placed on his thigh. He is adorned with a garland made up of large size rudrakshas, which is an unusual feature, not seen anywhere else.

The icon at Chevalpatti is seated like a child, resembling the sculpture in Rajasimmesvaram at Kanchipuram. He has a broken tusk in his left hand. The right hand holds either a fruit or a modaka. His trunk with a modaka is curved to the right. He is beautified with an ornamented udarapandha and pearl bracelets. The yajnopavita of both the icons is in upavita fashion.

Since there is no foundation inscriptions either at Kunrakkudi or Chevalpatti cave temples, the date of these excavations is decided on architectural grounds as seventh century A. D. The cave temple seen at Kokarnam, Thevarmalai, Thirukkolakkudi, Thirumalaippuram, Arittapatti, Kunnattur, Thirupparankunram and Malaiyakkoyil also have ancient sculptures of Ganapathy and these temples may be dated either to the seventh or eighth century A.D.

The icon of Ganapathy at Kokarnam, is seated with folded legs. His trunk is curved to the left. His right front hand is damaged. The left front hand is holding the dress at the hip. The rear hands carry flowers and sugarcane. He is beautified with a small makuta, udarabandha, armlets and bangles.

Holding a modaka in the right front hand and the broken tusk in the left front hand, Malaimurthi Vinayaga of Thirukkolakkudi is seated with folded legs in chammana. His rear hands hold both sugarcane and a bamboo stick. He is adorned with the usual karanda makuta, Yajnopavita, charappali and bangles. Before him



are seen jackfruit, mango and plantain all made in stone.

The cave temple at Thirumalaipuram in Thirunelveli district has Ganapathy in one of its niches. Seated in lalitasana, his backhands carry the pasa and the broken left tusk. His right front hand holds a modaka and his left front hand is at the belly, holding the udarabandha. A modaka is seen in the trunk, which is curved towards left. As usual he has a karanda makuta, anklets and bracelets.

There are three cave temples at kunnattur, a hamlet of Varichchiyur, which lies on the Madurai Sivagangai road. The first cave has a damaged icon of Ganapathy whose right front hand is in abhaya and the left front hand rests on the hip. Ganapathy at the third cave is in ardha padmasana. He is adorned with udarabandha, yajnopavita, rudraksha mala, Karanda makuta, armlets and bracelets. His trunk with a modaka is curved to the right. Among the front hands the right holds a modaka and the left is placed at the belly. His rear hands hold a bamboo stick and sugarcane. His right tusk is broken.

The heavy stucco coating and the adding up of later stucco figures make it difficult to assess the age of the Ganapathy at Parankunram in Madurai. The Ganapathy here is seated over a lotus in padmasana. His rear hands together hold a sugarcane. His front right hand carries a Modaka wherea the front left hand is kept on the thigh. The trunk is curved to the left. Apart from the usual ornamentation, He is adorned with some rare haras, which may be of later addition.

Cave temples excavated probably during the fag end of the eighth century or in the beginning of the ninth century in the Pandya and Muttaraiya region also have sculptures of Ganapathy either in the cave itself or on the nearby rock. Among these, Ganapathy Kunrandarkoyil deserves special mention. Seated with folded legs, he is holding a modaka in the right front hand. The left front hand is placed on his thigh. The trunk, which is curved towards the right, has a modaka at the bend. The rear hands carry the broken left tusk and a plantain. He wears a tall karanda makuta, udarabandha, armlets and bracelets. His yajnopavita is in an unusual fashion not met with in any of the ancient icons found elsewhere in Tamilnadu. It crosses his chest from right to left.

Ganapathy at Malayadippatti cave temple is seen along with the Saptamathrikas. Seated in Lalitasana, he is holding a modaka in his right front hand. The left front hand is placed on his thigh. Among the rear hands, the right has nothing whereas the left is holding some sugarcane. He is adorned with the usual ornaments and His right tusk is broken.

The damaged sculpture of Ganapathy at Muvaraivenran cave temple is adorned with a Karanda makuta, udarabandha, Yajnopavita, armlets and bracelets and is seated with folded legs. Among the left hands, the front rests on the thigh and the back holds a broken tusk. The right front hand is damaged and the object in the right rear hand is unidentifiable.

The cave temple at Mahibalanpatti may be dated to the early part of the ninth century. Ganapathy seen in a separate rock, adjacent to the cave temple is popularly called Dharma Ganapathy. Seated with folded legs, his back-hands carry a bamboo stick and sugarcane. His right front hand is broken whereas the left front hand is on his thigh. His curved trunk holds a modaka on his right. He is beautified with a small makuta, kanthika, armlets, bracelets, udarabandha and yajnopavita. His left tusk is broken.

The Pandya cave at Kudumianmalai has a sculpture of Ganapathy on the back wall of its mandapa. It may be dated to the pre-Chola period with certainty. Seated in lalitasana, his left front hand is resting on the thigh and the right front hand holds a modaka. His rear hands carry the broken right tusk and a flower. He is wearing a vastra Yajnopaita, Decorated udarabandha, small karanda makuta, armlets and bracelets. His trunk is curved to the right and holds a modaka.

Ganapathy carved on the west wall of the mandapa of the cave temple at Malayakkoyil is partly damaged. His trunk is curved to the right. Seated with crossed legs, His right front hand holds a modaka. The left front hand carries the broken right tusk. The rear hands carry either a modaka or a mango and a flower. There is no yajnopavita and udarabandha. He is adorned with a small makuta, charappali and ornaments on the hands.

A critical study of these twenty two ancient sculptures of Ganapathy found in the rock cut caves, monoliths and the early structural temples of the Pallavas, Pandyas and the Muttaraiyas, clearly shows the birth place of Ganapathy cult as southern Tamilnadu. It was from here the cult migrated to the northern belt. The earliest

forms of Ganapathy seen at Pillaiyarpatti. Kunrakkudi and Chevalpatti have only two hands, which increases to four in the other icons.

Among the twenty-two ancient sculptures of Ganapathy taken for detailed study, fourteen have modakas in their right hand or the right front hand. In three, the hand is damaged. The object carried by Ganapathy at Chevelpatti is not clear. It may be a modaka or a fruit. The right front hand of Ganapathy at the lower rock cut cave at Thiruchirappalli is affectionately touching the head



of the gana who is standing near by. The right front hand of Ganapathy at Rajasimmesvaram is in kataka whereas Ganapathy at Vallam rests his hand on his thigh. Among these twenty-two sculptures, only Ganapathy at Kunnattur has his right front hand in abhaya.

In most of the icons, the left hand or the left front hand is either on the thigh or near the belly. Ganapathy at Thirukkolakkudi, Malayakkoyil and Arittapatti have a broken tusk in this hand. At Vallam the left hand rests on the stone pillow. At Kokarnam it is in kataka whereas in Rajasimmesvaram, the hand is on the knee. Ganapathy at the lower rock cut cave is touching the head of a gana who is standing to his left.


The right backhand carries a tusk in four places, bamboo stick in three places and sugarcane in two. Three icons have either a flower or pasa or a book. The object carried by this hand at Malayakkoyil, Arittappatti and Muvaraivenran is not identifiable. The one at Malayakkoyil may be a fruit or a modaka. The icon at Vallam keeps this hand in kataka. This hand carries nothing at Kunnattur and Malaiyadipatti. Only at Rajasimesvaram, the right rear hand carries ankusa, an object that is almost mandatory in the later icons.

The left backhand of six icons carries sugarcane, four have a broken tusk and two have pasa in this hand. Fruit, flower bud, nilotpala and sugarcane are the other objects carried by five icons. The one at Kunnattur's first cave has nothing in this hand whereas the object in this hand at Arittapatti is not identifiable.

Nine sculptures of Ganapathy are seated with folded legs in simple chammana. Two are seated like young children. Two are in ardhpadmasana. Six are in lalitasana and one is seen in padmasana. Ganapathy at the lower rock cut cave is the only ancient icon seen in standing posture in the whole of Tamilnadu. Due to severe damage, the asana of the icon at Kunnattur's first cave is not identifiable.

The direction of the curve of the trunk is right in thirteen sculptures. But for the icons at kunrakkudi, Kunrandarkoyil and Malayakkoyil, the rest hold modaka in their trunks. Modaka is held by the curved portion of the trunk at Kunrandarkoyil. In seven icons the trunk is

curved to the left. But for the icons at Parankunram and Chirappalli the rest have modaka in their trunk. The direction of the curve is beyond recognition at Muvaraivenran and Kunnattur first cave due to damage. Eighteen of the twenty-two have karanda makuta and the remaining four have small makuta. Among the karanda makutas, the tallest is worn by the Chevalpatti icon. The ornamented one belongs to Rajasimmesvaram.



The yajnopavita is worn in upavita fashion in fifteen icons. At Thirukkolakku di and Vallam it is in nivita fashion. The icons at Malayakoyil and Pillaiyarpatti have no yajnopavita. Due to the severe damage the presence of yajnopavita is not identifiable at Kunnattur first cave and Thevarmalai. Ganapathy at Kunrandarkoyil is wearing it from right to left, the most unusual fashion unseen in Tamilnadu.

Udarabandha, an ornamental belt or band that differentiates the thorax from the abdomen is present in seventeen icons. It is absent at Kokarnam, Malayakkoyil, Vallam and Chirappalli and unidentifiable at Kunnattur first cave. All the twenty-four sculptures have armlets and bangles. In some, bracelets studded with pearls replace the bangles. Only a few have haras around their neck. The rudraksha mala of the kunrakkudi icon deserves special mention. Among the three haras of the Parankunram Ganapathy, one is made out of rudraksha. Charappali was the choice of hara at Malayakkoyil, Jalanathisvaram, Thirukkolakkudi and Chirappalli. Kanthika, a hara made out of rudraksha of smaller size is worn by the sculptures at Jalanathisvaram and Mahibalanpatti.

Among these twenty-two icons, eight face the north, seven the east, four the west and three face the south. This multi directional view got changed during the Chola period and only the east and the south were preferred. According to one of the legends, it is said that Ganapathy had pulled out one of his tusks to write down Mahabaratha as dictated by Vyasa. In proof of this story, all the ancient sculptures of Ganapathy either do not have a tusk or have a broken one.

Ganapathy at Rajasimmesvaram is the only ancient icon, which is provided with a plate full of edibles, an umbrella and the admiring gandharvas. Fruit is placed before the icon at Thirukkolakkudi and a modaka before the Ganapathy at Chevalpatti. The icon at Chirappalli has a pair of gandharvas above and a pair of ganas on the sides, below. The decorative paraphernalia around the sculpture at Thirupparankunram do not belong to the date of the sculpture and hence not taken into account.

This critical study of all the available ancient sculptures of Ganapathy in Tamilnadu provides a detailed table of the chronological modification that occurred in the appearance, ornamentation, position and placement. A similar study of the Chola icons may help us understand the period and principles involved in canonizing the Ganapathy cult in strict and rigid formulae.

## ***Reference***


1. Varalaru, Research Journal, Volumes 1-10,
   Dr. M Rajamanikkanar
   Centre for Historical Research,
   Thiruchirappalli - 620 017
2. Dr. M Nalini, Dr. R Kalaikkovan, 'Kokarnam', 'Arittapatti', 'Athyanthakamam', 'Rajasimmesvaram', 'Malayakkoyil Kudai-varaikal', 'Kudumianmalai Kudaivaraiyum Kalvettugalum', 'Kunrandarkoyil Kudaivaraiyum Kalvettugalum', 'Aparajitha Pallavar Koyilgal', unpublished Seminar Articles.
3. Amudasurabhi, Deepavali Malar, 1994 and 2002.

உ



# பாமாலை



உ
கணபதி துணை

*திருச்சிற்றம்பலம்*



## அகத்திய முனிவர் அருளிச் செய்த

# பிள்ளையார் கதை

### காப்பு

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரு மானை முகத்தோனைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

### கதை

பொன்னிறங் கடுக்கும் புனறரு குடுமித்
தென்மலை யிருந்த சீர்சான் முனிவரன்
கந்த மும்மதக் கடவுடன் கதையினைச்
செந்தமிழ் வகையாற் றெளிவுறச் செப்பினன்
மந்திர கிரியில் வடபாலாங்கோர்
இந்து தவழ் சோலை யிராசமா நகரியில்
அந்தண னொருவனு மாயிழை யொருத்தியுஞ்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவுளா லயமுங் கடிமலர்ப் பொய்கையுந்
தடமணிப் பள்ளியுந் தாம்பல சமைத்துப்
புதல்வரைப் பெறுவரம் புக்கெமக் கருளென
மதர்விழி பாகனை வணங்கிநின் றேத்த
மற்றவர் புரிந்திடு மாதவங் கண்டு
சிற்றிடை யுமையாள் சிவனடி வணங்கிப்
பொற் சிலை வளைத்துப் புரமெரிப் படுத்த
பரனே யன்பர் பழவினை யறுக்கும்
அரனே மறையவர்க் கருள்புரிந் திடுகென
நச்சுவேல் விழியாய் நங்குடிப் புதல்வர்
இச்சகத் திவர்தமக் கில்லை யென்றலும்
அம்பிகை மனந்தளர்ந் தருவினை யறுக்குந்

தம்பிரான் திருச் சரணம் வணங்கி
நம்பிநோற் றுலைந்தார் நாயேன் பொருட்டால்
எம்பிரா னேயிவர்க் கின்னருள் புரிகென
மறுத்துமை யுரைத்த மாற்றம் பொறாமற்
கறுத்த வுளத்தொடு கௌரியை நோக்கிப்
பேதாய் நீபோய்ப் பிறவென மொழியக்
காதார் விழியாள் கையற வெய்தி
உருக்குநின் னைந்தெழுத் தோதா தொழியாக்
கருக்குழி வீழக் கடவதோ வென்று
திருத்தாள் வணங்கிச் சிற்றடி யேன்பிழை
அருத்தா நீபொறுத் தருளென மொழியத்
தேங்கமழ் சடையோன் சிறிதே முறுவல்செய்
தாங்குறு துணையா யணுகுவம் யாமென
மீதார் செல்வத்து விண்ணோர் பயந்த
மாதாங் கொல்லென மாத ராகி
ஆர்கலி ஞால மழகுடன் றழைப்பச்
சீர்மலி குழலி திருவயி னுதித்துப்
பாவை சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற வியல்பின ளாகி
ஐயாண் டளவுமை யாடி வளர்ந்தபின்
எய்தா மகிழ்வுபெற் றீன்ற வியல்பினர்
மானிட மறையோற்கு வதுவை சூட்ட
வாணுத றன்னை மகிழ்வுடன் கேட்கப்
பிறப்பிறப் பில்லாப் பெரியோற் கல்ல
தறத்தகு வதுவைக் கணுகலன் யானென
மற்றவன் றன்னை மணமுற வெய்துதல்
பொற்றொடி மடந்தைநிற் கரிதெனப் புகல
அருந்தவ முயற்சியா லணுகுவன் யானெனத்
திருந்து நல்லறஞ்சீர் பெற வமைத்து
மணிமதுக் கமல மலர்த்தடங் குறுகி
அணிமலர்க் குழலி யருந்தவம் புரிய
அரிவைத னருந்தவ மறிகுவன் யானென
இருவரு மறியா விமையவர் பெருமான்
மான் மழு வேந்தும் வண்ணம தொழித்து
மானிட யோகி மறையவ னாகிக்

குடைதண் டுடன்கிழக் கோலங் கொண்டு
மடமயி றவம்புரி வாவியிற் குறுகித்
தண்ணறுங் கூந்தற் றையலை நோக்கிப்
பண்ணுந் தவமென் பயன்வேண்டி யென்னக்
கொன்றையஞ் சடையனைக் கூடவென் றுரைக்க
நன்றென நகைத்து நான்மறை யாளன்
உடுப்பது கோவண மடுப்பது சுடலை
எடுப்பது மழுமா னேறுவ தெருது
பாம்பு மெலும்பும் பலகலன் மாலையுஞ்
சாம்பரு மணிந்து தலையோ டேந்திப்
பிச்சைகொண் டுழலும் பிஞ்ஞுகன் றன்னை
நச்சிநீ செய்தவ நகைதரு நாமுனைக்
கடிமணம் புரியக் கருதிவந் தனம்பசுந்
தொடியணி மடந்தைநிற் கிதுவோ துணிவெனப்
பூங்கொடி யருந்தவம் பூசுரன் விலக்க
ஆங்கவ ணாணமுற் றயன்மனை புகுதச்
சேடியர் வந்து செழுமலர்க் குழலியை
வாடுத லொழிகென வணங்கிநின் றேத்திச்
சிந்தர வாணுதற் றெரிவைய ரவர்தாந்
தந்தைதா யிருந்த தடமனை குறுகி
வாவிக் கரையில் வந்தொரு மறையவன்
பாவைதன் செய்கையைப் பாற்றினா னென்றலுந்
தாடொழு தடிகளைத் தருதிரிவ் விடையெனத்
தோடலர் கமலத் தொடைமறை முனிவனை
மாடக யாழ்மொழி மங்கையர் கூடி
நீடிய புகழோய் நீயெழுந் தருள்கென
மைம்மலர்க் குழலி வந்தெமை யழைக்கின்
அம்மனை புகுவனென் றந்தணன் கூறப்
பொற்றொடி நீபோய்ப் பொய்கையி னின்ற
நற்றவ முனியை நடத்திக் கொணர்கெனச்
சிற்றிடை மடந்தை சீறின ளாகி
மற்றம் மாதர் மதிமுக நோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலனுக் கல்லதென்
பொற்பமர் கொங்கை பொருந்துத லரிதென
மணமிடா தொழியினு மாதவ முனியை

இணையடி தொழுதிட லுலகிய லாமெனத்
தந்தையுந் தாயுந் தாழ்ந்துநின் றுரைப்பச்
சிந்தை கரைந்து சீறுத லொழிந்து
தாய்சொன் மறுத்தல் பாவமென் றஞ்சி
நாயகி யதற்கு நன்றென விசைந்தே
ஆயிழை மடந்தை அவனெதிர் சென்று
சேயிதழ்த் தாமரைச் சீறடி பணிந்து
மற்றவன் றன்னை மனையிற் கொணர்ந்த பின்
பொற்பமர் பலகையிற் பொலிவுற விருத்தி
வண்ணப் பரிபுர மலரடி யவற்கங்
கெண்ணெய்க் காப்புடன் இயைந்தன சாத்தி
மஞ்சன மாட்டி மணித்துகில் புனைந்து
விஞ்சிய தவிசின் மேற்பட விருத்தி
ஆடகப் பெருங்கலத் தறுசுவை யடிசில்
சூடகக் கையார் துலங்கப் படைக்க
அந்தண னமுதுசெய் தருளிய பின்னர்ச்
சந்தனங் குங்குமஞ் சாந்தொடு பனிநீர்
இந்தன நுதலார் இயல்புடன் கொணர்ந்து
செந்துவர் மேனியிற் றிகழச் சாத்திச்
செவ்வந்தி செண்பகஞ் செங்கழு நீரொடு
திவ்விய பிறவுந் திருமுடி சாத்தித்
தக்கோ லத்தொடு சாதிக் காயுங்
கர்ப்பூ ரத்தொடு கலந்தவெள் ளடைகாய்
ஒள்ளிய பலவு முவந்துடன் வைத்து
வள்ளிநுண் ணிடையார் வணங்கி நின்றபின்
ஆங்கவ ரருத்திகண் டகமிக மகிழ்ந்து
பூங்கொடிக் கினியருள் புரிகுவன் யானெனக்
கற்றைச் சடையுங் கங்கையும் மதியமும்
நெற்றியி னயனமும் நீல கண்டமுங்
கரமிரு நான்குங் கன்றுமான் மழுவும்
உரககங் கணமு மொப்பிடற் கரிய
பவள மேனியிற் பாங்குற வணிந்த
தவளவெண் ணீறுந் தயங்குமுந் நூலுங்
கோவண விடையிற் கொடுஞ்சின வேங்கையின்
பூவண மான புலித்தோ லுடையும்

ஏழை யடியா ரெழுபிறப் பறுக்குந்
தாளிடைச் சிலம்புஞ் சதுர்மறைச் சிலம்பும்
மாலயன் றேடியுங் காணா வடிவும்
பாலினன் மொழிக்குப் பரிந்து காட்டலுந்
தாமக் குழலி தனைப்பயந் தவர்கள்
ஏமுற் றார்களி னெழுமடி மகிழ்ந்து
பாவையைப் பெற்றுப் பயன்பெற் றோமெனக்
காவண மிட்டுக் காலுறப் புனைந்து
பஞ்சினும் பட்டினும் பழுதற விதானித்து
மஞ்சுசூழ் கூட மதில்வாயி லெங்கணுந்
தோரண நாட்டித் துகிற்கொடி யெடுத்துப்
பூரணப் பொற்குடம் பொலிவுற வைத்துக்
கரும்புங் கமுகுங் கதலியும் நிரைத்துக்
குரும்பையந் தனத்தியைக் கோலஞ் செய்து
சங்கர னெங்கள் தார்குழல் தனக்கு
மங்கல நாணிடு மணநா ளின்றெனத்
தங்குவான் முரசு சாற்றென வள்ளுவன்
மங்கல முரசு மறுகுதோற் றுதலும்
மாலயன் முதலிய வானவ ரெல்லாம்
ஆலமர் கடவுள் அணிமணங் காண்பான்
விரும்பிவந் தீண்டி விமலனை யெதிர்ந்தே
அரும்பவிழ் தாமரை அடிவணங் கியபின்
வலம்புரி முதலா மன்னுவாத் தியங்கள்
புலம்பு கடலென வடங்கா தார்ப்பக்
கொங்கலர் தாமரைக் கொடியிடை தனக்கங்
கங்கு ரார்ப்பன வருந்தொழின் முடித்தபின்
வார்சடை யானையும் மடமயி றனையும்
ஓர்தனி யாதனத் துவந்துட னிருத்தி
விதிமுறை சடங்கு விரிஞ்சன் பேணப்
புதியமங் கலநாண் பூட்டி யருமறை
ஆகம நூல்வழி யாகுதி வேட்டபின்
கோகன கக்கொடி கொழுநன் முதலோர்
குரவார் கூந்தற் கொடியிடை தன்னுடன்
அரவார் கண்டனுக் கறுகுபா லேந்த
அரிவையு மிறைவனும் ஆகுதி வலம்வந்

துரிய மணவறை யுட்புகுந் தருளி
அரம்பையர் வாழ்த்த அமளியிற் றுயில்கொண்
டுரம்பயில் கதிரோ னுதயஞ் செய்தபின்
விண்ணோர்க் கெல்லாம் விடைகொடுத் தருளிப்
பண்ணேர் மொழிமடப் பாவையை நோக்கி
ஓதநீர் வேலிசூழ் உஞ்சையம் பதிபுகப்
போதுக வென்று போகிய அந்நாள்
இளமதி யணிசடை யெந்தைதன் னருளால்
வளமுடன் வழியின் மலைச்சா ரலிலோர்
களிறும் பிடியுங் கலந்தது காணா
ஒளிர்மதிச் சடையோன் உமைமுகம் நோக்கி
ஓர்வழி யன்றிமற் றோர்திசை தன்னைப்
பாரா தேவா பனிமொழி யாயென
வாரார் முலையாள் மற்றுமுண் டோவென
மெல்லிய லுமையவள் விரும்பினள் பார்த்தே
அல்லிசேர் குழலா ளரன்முகம் பாரா
இவ்வகை யாக வேண்டு மீங்கென
அவ்வகை யரனு மதற்குடன் பட்டு
மதகரி உரித்தோன் மதகளி றாகவும்
மதர்விழி யுமைபிடி வடிவமாகவுங்
கூடிய கலவியிற் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெடுநிலை போற்றத்
தங்குவெண் ணீறுந் தருமமுந் தழைப்பத்
திங்கள் மும்மழை யெங்கணும் பெருக
முண்டக மலர்போன் முழுதுஞ் சிவந்த
தண்டையுஞ் சதங்கையு மலம்பு தாளிணையுங்
குண்டவண் டியுந்தண்டரள மா லையு
மண்டொளி தழைத்த புண்டர நுதலு
முடிவுகண் டறியா முப்பரி நூலுஞ்
சுடர்விடுங் கனகத் தோளொரு நான்குஞ்
சோதிவண் டரளத் தொடைபுனை கழுத்தும்
பூதலம் புரக்கும் பொற்கரி முகமும்
தவளக் கிம்புரி தருமருப் பிரண்டும்
பவளத் தொளிவாய்ப் பைந்துவ ரிதழும்
இமையா முக்கணும் இருதழை செவியும்

அமையா நிலவுமிழ் அவிர்சடை முடியும்
அந்தி வண்ணமும் அங்குச பாசமும்
உந்திச் சுழிமேல் உதரபந் தனமுடன்
ஐங்கரக் கரிமுகன் வந்தவ தரித்தலும்
பொங்கர வணிந்தோன் புதல்வனை நோக்கி
வானோர் மண்ணோர் வந்து வழிபட
ஆனோர் வல்வினை யாசற வகற்றித்
தண்டுள வோனயன் சதமகன் முதலோர்க்கு
இன்றுமுதல் இறையாய் இருத்தியென் றருளித்
தெய்வநா யகியாந் திருந்திழை உமையுடன்
மைவளர் சோலை மாநக ரம்புகுந்து
அமையாக் கூட்டத் தனேக ங்காலம்
இமையா முக்கண் இறையிருந் தருளினன்
அந்நாள் தன்னில் அசுரர்வந் தடைந்து
பொன்னா டரசுசெய் புரந்தன் முதல
இமையவர் தங்கட் கிடரே செய்ய
இமையவர் தலைவனு மிலேகரு மாலும்
மதுமல ரயனோடு வந்தெம் பிரான்றன்
பதிதனி லணுகிப் பரிந்துநின் றேத்தித்
தம்பி ரானைத் தாளினை வணங்கி
எம்பி ரானே யெங்குறை முடியெனச்
சுடர்விடு மணிமுடிச் சூரனை வெல்லக்
கடல்பரு கயில்வேல் கைத்தலத் தேந்தும்
புதல்வனைப் பயந்து தருகுவம் யாமென
அமரர் கோனுக் கரன்விடை கொடுத்துச்
சமர வேல்விழித் தையலுந் தானுங்
கூடிய கலவியிற் கூடா தாடலும்
நேடிய வானோர் நேர்ந்துடன் கூடிப்
பாவகன் றன்னைப் பரிவுடன் அழைத்துக்
காவளர் சாரற் கயிலையிற் சென்று
சூரன் வன்மையுஞ் சுரர்படு மிடுக்கணும்
ஊரர வணிந்தோற் குணர்த்திடு நீயெனக்
காமனை யெரித்த கடவுளென் றஞ்சலும்
எமநாட் டரசன் இயல்புடன் நவில்வான்
அஞ்சா தேநீ யவன்முன் செல்ல

நஞ்சார் கண்டன் நயன மூன்றினுள்
நெற்றியி னயன நீயா மாதலிற்
குற்றம்வந் தடாதுநீ கூறுதி சென்றென
வானவன் மொழிய மற்றவன் றானும்
ஈனமின் றாமென விருதய மொருப்பட்டு
எமையா ளிறைவன் உமையா ளுடனே
அமையா வின்பத் தமர்ந்தினி திருந்த
பள்ளி மண்டபம் பாவகன் குறுகத்
தெள்ளுதேன் மொழியாள் திகைத்து நாணுறப்
பாவகன் வரவு பரமனு மறிந்துதன்
மூவிரு நுதல்விழி முளரியி னுதித்த
அறுமுகப் பொருளை யவன்கையி லளித்தலும்
வறியவன் பெற்ற வான்பொருள் போலச்
சோதிநீண் முடிச் சுடரோன் கொணர்ந்து
வாத ராசன் வலக்கையிற் கொடுப்பப்
போர்புனை வாயுவும் பொறுக்கவொண் ணாமற்
தார்புனற் கங்கைதன் கையிற் கொடுப்பத்
தரும்புனற் கங்கையுந் தாங்க வொண்ணாமற்
பொரும்புனற்சரவணப் பொய்கையி லிடுதலுஞ்
சரவணக் கமலந் தனினிலை யுற்றுக்
குரவணி மூவிரு குருமணி மகுடமுந்
தோளிரண் டாறுந் துலங்கு குண்டலமுந்
தாளிரண் டுடனே தாமரை வதனமும்
மலையுந் தானவர் வாழ்வினைத் தொலைத்திடுஞ்
சிலையும் வேலுஞ் செஞ்சர முங்கொண்டு
அறுமுகக் கடவுள்வந் தவதரித் திடுதலுங்
கறைமிடற் றிறையொடு கௌரிசென் றெடுத்துத்
தம்பதி யடைந்த சதமகன் முதலிய
உம்பர்சீர் அருளென உயர்விடை வழங்க
வாரந் திகழுஞ் சீர்புனை வெற்புஞ்
சூரன் மார்புந் துளைபடத் துளைத்தே
அமரர் கோவுக் கமருல களித்துக்
குமர வேளுங் குவலயம் விளங்கிட
அமரா வதியில் அமர்ந்தினி திருந்தபின்
சமர வேலுடைத் தாரகன் றன்னைக்

கண்டுள மயங்கிக் கடவுளர் மகளிர்
விண்டனர் போன்று மெலிவது கண்டே
அண்டெரல் லாம்வந் தடைவுடன் கூடி
மாதொரு பாகன் மலரடி வணங்கித்
தாதணி கொன்றைச் சடைமுடிக் குன்றே
பிறவா தவனே பேரருட் கடலே
இறவா தவனே யிமையவர்க் கரசே
மருவளர் கடம்பன் மாநகர் புகாமல்
அருளல் வேண்டும் அமலவென் றிறைஞ்சி
இமையோர் சொல்ல இறைவனும் வெகுண்டு
குன்றெறி சுடர்வேற் குமரனை முனியக்
காவல்கொண் டோர்வினைக் கட்டறுத் தருளுஞ்
சேவலங் கொடியோன் தேசம் போகத்
திருந்திழை யுமையா ளருந்துய ரெய்தி
வருந்திட அவள்தனை வானவன் நோக்கி
மங்கை நீதான் வருந்துத லொழிகெனச்
சக்கர பாணியைச் சான்றா விருத்தி
அக்கணி மார்பனும் ஆயிழை யுமையும்
மிக்கநற் சூது விருப்புட னாட
மன்றலர் கூந்தல் வென்றுமன மகிழ்ந்து
கன்றினால் விளவெறி கண்ணனை நோக்கிச்
சூதினில் வென்றா ராரென மொழிய
ஆதிவென் றாயிழை தோற்றா யென்று
தாதிமி ரளகத் தையலை நோக்கி
நீதி யில்லா நெறியவ னுரைக்க
மலைமகள் வெகுண்டு மற்றவன் றன்னை
நிலமிசைக் குருட்டுப் பாம்பாய் நீபோய்
வாரண முகத்து மதலைமுன் னிருந்த
வேரணி யாலிற் கீழ்க்கிடந் திடுகென
நாரணன் றானு நாகமாய்க் கிடந்தபின்
சீரணி கரிமுகத் திருமுகக் கடவுள்
கரும்புங் கிழங்குங் கதலியும் வருக்கையும்
விரும்புமாங் கனியும் வேண்டுவ வளித்து
வழிபடு மடியார் வல்வினை தீர்த்தே
எழிறிக ழாலின் கீழினி திருந்த

கம்பமா முகக் கடவுடன் பெருமையை
அம்புவி யோருக்கு அறிவிப்போமென
உம்ப ருலகத் தோரெழு கன்னியர்
தம்பநூ லேணியிற் றாரணி குறுகிக்
கரிமுகக் கடவுளைக் கைதொழு தேத்திப்
பொரியவ லடைகாய் பொற்புற வைத்துக்
கார்த்திகைக் கார்த்திகை கழித்த பின்னாள்
ஆர்த்த கலிங்கத் தணியிழை வாங்கித்
திருவைத் தோய்ந்த திகழ்மணிப் புயத்தில்
இருபத் தோரிழை இன்புறக் கட்டி
வேதத் தாதியும் பூமியி லெழுத்தும்
ஆதி நாயகற் காகிய வெழுத்தொடு
மூன்றெழுத் தாலே மொழிந்த மந்திரந்
தேன்றிகழ் குழலியர் சிந்தையு ளடக்கிப்
பொருவரு மலரடிப் பூசனை புரிந்தே
இருபது நாளு மிக்கதை கேட்டு
மற்றைநா டன்னின் மதிமுக மலர்விழிக்
கற்றை வார்குழற் கன்னிய ரெல்லாம்
வாரண முகத்தவன் வாழ்பெருங் கோயில்
சீருடன் விளங்கத் திருவிளக் கிட்டுக்
கோமயங் கொண்டு குறைவற மெழுகி
ஏமுறு கரும்பும் எழிலுடைக் கதலியுந்
தாளுடைக் கமுகுந் தழைபடு மஞ்சளுஞ்
சேறுடைச் செந்நெல்லுந் திசைதொறு நிரைத்தே
கோசிகங் கோடிகங் கொடிவிதா னித்து
நீடிய நூல்வளை நிறைகுடந் திருத்தி
ஐங்கரன் றிருவுரு அமைத்துள் அன்பொடு
தெங்கிள நீருஞ் சீர்பழுக் காயும்
விரிந்த பாளையும் மேதகு நீர்பூச்
சொரிந்த கேதகை தொல்கனி யுடனே
பொருந்திய கவரி புனைமணி மாலை
தெரிந்தவை யெல்லாந் திருந்தத் தூக்கி
மலைமகள் மதலையை மஞ்சன மாட்டிப்
பலநிறப் பட்டும் பழுதறப் புனைந்து
சிந்துர நுதலிற் செறிந்தபொற் பட்டமும்

இந்திர தனுவென இலங்குமணி யாரமும்
மகரப் பகுவாய் வாகு வலயமும்
நிகரற வொளிவிடு நித்தில மாலை
திகழ்மணி முடியொடு சிலம்புசெஞ் சதங்கை
புகரறு பூண்கள் பொலிவுறப் பூட்டிச்
சந்தனங் குங்குமஞ் சாந்தொடு பனிநீர்
இந்தன நுதலார் இயல்புடன் கொணர்ந்து
செந்துவர் மேனியிற் றிகழ்தரச் சாத்திச்
செருந்தி செண்பகஞ் செங்கழு நீரொடு
குருந்து மல்லிகை கோங்குகுன் றாத்தி
தாதகி பாதிரி தாதுமந் தாரம்
மாதவி கடம்பு மகிழ்சிறு ஞாழல்
நெய்த றயில நீலந் தாடிமங்
கொய்திடு குல்லை கொன்றை பைங்குரவு
நரந்தை யலரி நந்தியா வர்த்தங்
கரந்தை கமலங் கமழிரு வேலி
செவ்வந்தி பிச்சி சிறுசண் பகமலர்
மவ்வல் செவ்வல்லி மயிலை யிருவாட்சி
தும்பை யறுகு துழாயிரும் பூளை
வம்பலர் பட்டிகை மத்தமோ டெருக்குக்
காந்தள் கூதாளங் காக்கண மடம்பு
மாந்தளி ருடனே வளர்பஞ்ச வில்வம்
பூந்தொடை களபம் புழுகுகத் தூரி
ஏந்திள முலையா ரிசையச் சாத்திக்
கதிர்நெற் பொரியுங் கண்டசர்க் கரையும்
முதிர்நெற் கட்டியும் முரித்ததிண் கரும்புந்
தேங்காய் செவ்விள நீர்பல கிழங்கு
மாங்கனி வருக்கை வாழைப் பழமும்
எட்பொரி யிருவி யிருதினை மாவும்
அப்பமும் அவலும் ஆலங் காயும்
வெள்ளிலை யடைக்காய் விரவுகர்ப் பூரமோடு
ஒள்ளிய பலவு முவந்துடன் வைத்துப்
பல்லிய மார்க்கப் பழுதறு திருவிளக்கு
எல்லியும் பகலென இருளற விளங்கக்
கற்பகக் கடவுள் களிப்புறச் செய்து

மிக்க புகழை விருப்புட னாங்கவர்
கேட்பது கண்டு கேளா திருந்த
பாப்புரு வாகிய பழமறை யாளன்
யாப்புறு கொங்கையீர் யானுநோற் பேனெனக்
காப்பிடு வித்துக் கனிவகை பலவும்
ஆங்கவன் றனக்கு வேண்டுவ கொடுத்துப்
பாங்குடன் இக்கதை பரிவுடன் கேட்டபின்
தெய்வ மங்கையர் சிந்தித் தவைபெற
வையநா யகியால் வாளர வானவன்
பண்டையின் வண்ணம் பார்மிசை யெய்தி
அண்டர் நாயகன் அரிவையோ டிருந்த
உஞ்சைமா நகர்புகுந் துமையடி வணங்க
வெஞ்சின மிகுத்து விமலனை நோக்கி
யானிடுஞ் சாபநீக் கினன்மறை யோனென
மானன கண்ணி மனைக்கத வடைக்க
இறையவ னிதற்குக் காரண மேதென
மறையவ னுரைப்பான் மற்றுமுன் மதலை
தந்தருள் புரிந்த தவப்பய னீதெனச்
சிந்தையுண் மகிழ்ந்து தேவர் தேவனும்
பூங்கொடி யடைத்த பொற்றா ணீங்க
யாங்கதை கேட்போ மெனநினைந் தருளிச்
சக்கர பாணி தான்கதை சொல்ல
அக்கணி மார்ப னன்புடன் கேட்ப
மாதுமை யடைத்த வன்றா ணீங்க
மாதுமை தன்னை யரனகை செய்ய
நானே வரநீ நகைபுரிந் ததுவென்று
தேனார் சடையாய் தெளியச் செப்பெனப்
பொன்மலை முலையாய் புகலக் கோளாய்
உன்மகன் நோன்பின் உறுதியை யறிந்து
சிந்தையுண் மகிழ்ந்து சிரித்தேன் யானென
அந்தமில் லானை ஆயிழை வணங்கித்
தேங்கமழ் கடம்பன் தேவர்சே னாபதி
ஈங்கு வரும்படி யானுநோற் பேனென
இறையவன் கதைசொல ஏந்திழை கேட்டபின்
குறமட மகளைக் குலமணம் புணர்ந்து

சரவண சம்பவன் றான்வந் தெய்தி
அரவணி அமலன் அடியிறைஞ் சியபின்
பரிவுடன் இக்கதை பார்தலந் தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்கிர மார்க்கன்
தன்பெரு மனையுந் தானுமிக் கதையை
அன்புடன் கேட்டே அரசு பெற்றபின்
மற்றவ னகரின் மடந்தையர் தம்முள்
எற்பிறை நுதலாள் இலக்கண சுந்தரி
கழைபொரு தோட்கையிற் கட்டிய விழையை
விழைவில ளாகி விதிவழி களைந்து
வற்றிய கொவ்வையின் மாடே போடக்
கற்றையஞ் சடைமுடிக் கரிமுக னருளால்
ஆங்கது தளிரும் அடைவுடன் பூவும்
நீங்கறப் பொலிந்து நிற்பது கண்டு
வேப்பஞ் சேரியிற் போய்ச்சிறை யிருந்த
பூப்பயி லுங்குழற் பொற்றொடி யொருத்தி
கொவ்வை யடகது கொய்வாள் குறுகிச்
செவ்விய வரசன் றேவிமுன் போட்ட
இழையதிற் கிடப்பக் கண்டவ ளெடுத்துக்
குழையோ டிகல்விழிக் கோதைமுன் காட்ட
கரிமுகக் கடவுளைக் கைதொழு தேத்தி
இருவினை தீர இந்நோன்பு நோலென
அப்பமோ டடைகாய் அந்நாட் கொண்டு
புட்பமுன் வைத்து உவந்து நோற்றபின்
பண்டையி னிரட்டி பதமவட் கருளக்
கொண்டுபோ யரசன் கோயில்வைத் தனனே
விக்கிர மார்க்கன் விழிதுயி லளவில்
உக்கிர மான உடைமணி கட்டித்
தண்டையுஞ் சதங்கையுந் தாளினின் றொலிப்பக்
கொண்டல் போல்வரும் குஞ்சரக் கடவுள்
கலைக்குல வரசன் கனவில் எய்தி
அலக்க ணெய்து மரசர்க ளரியே
இலக்கண சுந்தரி இம்மனை இருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடப் புறத்தெனத்
துண்ணென விழித்துத் துணைவியை நோக்கி

அண்ண லுரைத்திடு மளவை தன்னில்
ஆனை குதிரை யவைபல மடிந்து
மாநகர் கேடுறும் வகையது கண்டே
அணியிழை யாளை அயன்மனை யகற்ற
வணிகன் றன்மனை புகுந்தவ ளிருப்ப
மணியும் முத்தும் வன்கல் லாய்விட
அயன்மனை யவனும் அகற்றிய பின்னர்
மயிலியன் மேனி மடந்தையுண் மறுகிக்
குயவன் றன்மனை புகுந்தவ ளிருப்பக்
குயக்கல முடைந்து கொள்ளை போக
அயற்கடை யவனும் அகற்றிய பின்னர்க்
குயிற்பெடை நிகர்மொழிக் கோதையுமேங்கித்
தூசுக ளார்க்குந் தொழிலோன் மனைபுகத்
தூசுக ளெல்லாந் துணிந்துவே றாய்விட
ஆசறை யவனும் அகற்றிய பின்னர்க்
காசறை யளகக் காரிகை புலம்பி
மாலைக் காரன் மனையிடை புகுந்தபின்
மாலை பாம்பாம் வகையது கண்டே
அயன்மனை யவனும் அகற்றிய பின்னர்ப்
புயலின் வார்ந்த பூங்குழல் வாடி
உழவன் றன்மனை புகுந்தவ ணிருப்ப
வளர்பயி ரழிந்துபல் வளமுங் குன்றவும்
புரிகுழ றனைப்புறம் போவென் றகற்ற
அவ்வை தன்மனை புகுந்தவ ளிருப்ப
அவ்வை சென்ற அகங்க டோறும்
வைதனர் எறிந்தனர் மடியத் தள்ளினர்
கைகொடு குத்தினர் கள்ளியென் றியம்பினர்
அவ்வகை சால அறிவு தளர்ந்து
வவ்விய துயரொடு மனையிடை புகுந்த
கன்னியால் வந்த காரண மிஃதென
மின்னின் நுண்ணிடை மெல்லிநல் லாளே
சாணாக மெடுத்து வாவெனப் புகலச்
சாணா கத்தைத் தையல்சென் றெடுக்கச்
சாணாகம் புழுவாய்த் தண்ணீர் வற்றிப்
பேணிய வெல்லாம் பெரும்புழு வாக

மானார் விழியாள் வருந்தக் கண்டு
தானே சென்று சாணாக மெடுத்துக்
கோல மாகக் கொழுந்தரை மெழுகிப்
பாலின் மென்மொழிப் பாவையை நோக்கிப்
புத்தக மெடுத்து வாவெனப் புகலப்
புத்தகம் பாம்பாய்ப் புரிந்துநின் றாடக்
கொவ்வை யிதழ்வாய்க் கொடிவிழுந் தேங்க
அவ்வைதா னவளை யஞ்சலென் றழைத்துப்
புத்தக மெடுத்துப் பொருந்தப் பார்த்து
முத்தமி ழறிந்த மூதறி வாட்டி
தவநெறி பிழைத்த தையலே நீதான்
சிவன்மகன் நோன்பு தெளிவுறப் புரிகெனப்
பொரியவ லடைகாய் முதற்பல பொருள்களுந்
தெரிவுறப் படைத்துச் சீர்வழி பாட்டுடன்
செவ்விய கரத்திற் றிருந்திழை யாத்தே
அவ்வைமூ வேழ்தினம் அருங்கதை சொல்ல
மவ்வலங் குழலாள் மனமகிழ் கூர்தரச்
செவ்வியோ டக்கதை தெளிவுறக் கேட்டபின்
பொற்புறு விநாயகர் பொலிதிரு வருளால்
விக்கிர மார்க்கன் வேட்டையிற் சென்று
தண்ணீர் வேட்டுத் தன்கிளை விடுப்ப
உண்ணீர்க் கரக முவப்பமொண் டுடனே
பண்ணேர் மொழியாள் பரிந்துடன் கொடுப்பச்
சேனையுந் தானுந் தேக்கிட வுண்டே
யானை குதிரை யவைகளு மருந்திப்
பின்னுந் தொலையாப் பெருமையைக் கண்டு
கன்னிகை யிடத்திற் கடிதி னடைந்துநீ
யாரென வினாவ விளமயிற் சாயலாள்
பேருரை யாதுநாண் பெருகநின் றிடலும்
மின்னே ரிடையன நடைமெல் லியலைத்
தன்மனை யாளெனத் தரணிப னறிந்தே
ஒண்டே ரேற்றி யுளமகிழ் வதனுடன்
கொண்டூர் புகுந்த கொற்ற வேந்தன்
தலைநம் பிராட்டித் தலைமைபெற் றுயர
நிலையருள் புரிந்த நிமலா போற்றி
கற்பவர் தலைவ போற்றி கருதுவோர் கண்ணே போற்றி
நற்பத மவர்க்கு நல்கு நாயகக் களிறே போற்றி
பொற்கர மைந்தாய் போற்றி புகர்முகக் குன்றே போற்றி
அற்பமாய் மகத்தாய் நின்ற ஆகுவா கனனே போற்றி
அன்று நீ டவனித் தேரை அச்சறுத் தமரர் போற்ற

நன்றருள் புரிந்த வேத நாயகக் களிறே போற்றி
பண்டுதான் மேரு வெற்பிற் பாரத மெழுதி வைத்த
வண்டமிழ் முதல்வா விண்ணோர் வணங்குமா முகவா போற்றி
ஈண்டுமாங் கனியை வேண்டி இறைவனை வலஞ்செய் தங்கன்
நீண்டகை முதல்வா என்று நினைப்பவர் தலைவா போற்றி
ஏத்துவார் முதல்வா போற்றி இறையவன் புதல்வா போற்றி
சீர்த்தநல் லுமையா ளீன்ற செல்வனாஞ் சிறுவ போற்றி
அன்பொடு பரவிநாளும் அடிதொழு வார்கட் கெல்லாம்
துன்பம் வராமல் இன்பே தோன்றநின் றருள்வாய் போற்றி
கண்ணே போற்றி கருத்தே போற்றி
எண்ணுறுந் தாரக வெழுத்தே போற்றி
ஆறணி சடையோன் அருளே போற்றி
நீறணி மேனி நிருமல போற்றி
கரமைந் துடைய களிறே போற்றி
பரமன் றருநற் பாலா போற்றி
செய்யதாள் போற்றி போற்றி திரிபுரஞ் செற்றோன் பெற்ற
ஐய, என் வினைகள் தீர்த்தே அஞ்சலென் றருளுவாயே,

## நூற்பயன்

கல்லா தவர்நோற்பிற் கற்பவைநன் றாகவுறும்
இல்லா தவர்நோற்கின் இன்மைபோம் - பொல்லாத
பாவம்போம் மிக்க பழவினைநோய் தானும்போம்
வேகமலம் போமே மிக

வெள்ளை யெருதேறும் விரிசடையோ னீன்றளித்த
பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை - உள்ளபடி
கற்றவரும் நோற்றவருங் காதலுடன் கேட்டவரும்
பெற்றிடுவார் கற்பகத்தின் பேறு

பொற்பனைக்கை முக்கட் புகர்முகத்து நீண்மௌலிக்
கற்பகத்தின் நோன்பைக் கருத்துடனே - சொற்றபடி
நோற்றோர் மிகவாழ்வர் நோலா திருந்துகதை
கேட்போர்க்கும் வாராது கேடு

★ ★ ★ ★ ★


அகத்திய முனிவர் அருளிச் செய்த பிள்ளையார் கதை முற்றிற்று.



# விநாயகர் அகவல்

சீதக்களபச் செந்தாமரைப்பூம்
பாதச்சிலம்பு பலவிசைபாடப்
பொன்னரைஞாணும் பூந்துகிலாடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழகெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிருபுயமும்
மூன்று கண்ணும் மும்மதச்சுவடும்
இரண்டு வியும் இலங்குபொன் முடியுந்
திரண்ட முப்புரி நூல் திகழொளி மார்பும்
சொற்பதங்கடந்த துரியமெய்ஞ்ஞான
அற்புதம்நின்ற கற்பகக்களிறே
முப்பழம்நுகரும் மூஷிகவாகன
இப்பொழுதென்னை யாட்கொளவேண்டித்
தாயாயெனக்குத் தானெழுந்தருளி
மாயாப்பிறவி மயக்கமறுத்துத்
திருந்தியமுதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற்புகுந்து
குருவடிவாகிக் குவலயந் தன்னில்
திருவடிவைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக்கருளிக்
கோடாயுதத் தாற் கொடுவினைகளைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன்செவியில்
தெவிட்டாதஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன்றன்னை யடக்குமுபாயம்
இன்புறுகருணை இனிதெனக்கருளிக்
கருவிகளொடுங்கக் கருத்தினையறிவித்து
இருவினைதன்னை அறுத்திருள்கடிந்து
தலமொருநான்குந் தந்தெனக்கருளி
மலமொருமூன்றின் மயக்கமறுத்தே
ஒன்பதுவாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக்கதவை அடைப்பதுங்காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங்கலையின் எழுத்தறிவித்து
கடையிற் சுழிமுனைக் கபால முங்காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டியதூணின்
நான்றெழுபாம்பின் நாவிலுணர்த்திக்
குண்டலியதனிற் கூடிய வசபை
விண்டெழுமந்திரம் வெளிப்படவுரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழுகனலைக்
காலாலெழுப்புங் கருத்தறிவித்தே
அமுதநிலையும் ஆதித்தனியக்கமுங்
குமுதசகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டுநிலையம்
உடற்சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முகசூக்கமும்
எண்முகமாக இனிதெனக்கருளிப்
புரியட்ட காயம் புலப்படவெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப்படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்திமுத்தி இனிதெனக்கருளி
என்னையறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக்களைந்து
வாக்கும்மனமும் இல்லா மனோலயந்
தேக்கியே என்றன் சிந்தைதெளிவித்து
இருள்வெளியிரண்டுக் கொன்றிடமென்ன
அருடருமானந்தத் தழுத்தியென் செவியில்
எல்லையில்லா ஆனந்தமளித்து
அல்லல் களைந்தே அருள்வழிகாட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவங்காட்டிச்
சித்தத்தினுள்ளே சிவலிங்கங்காட்டி
அணுவுக்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய்க்
கணுமுற்றிநின்ற கரும்புள்ளேகாட்டி
வேடமும் நீறும் விளங்கநிறுத்திக்
கூடுமெய்த்தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருடன்னை
நெஞ்சக்கருத்தி னிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனையாண்ட
வித்தக விநாயக விரைகழல்சரணே

(ஔவையார் அருளிச் செய்தது)



# விநாயகர் கவசம்

ஆதியில் இக் கவசத்தைக் காசிப முனிவர் முற்கல முனிவருக்கு அருளிச் செய்ய. அவர் மாண்டவிய முனிவருக்கு அநுக்கிரகிக்க. அவர் மாரீசி முனிவருக்கு உபதேசித்தருள. அவர் பல முனிவர்களுக்குத் திருவாய் மலர்ந்தருளிச் செய்தன ரென்றறிக.

நித்திய கருமங்களை முடித்துப் பரிசுத்தமாகிய ஓரிடத்தில் இருந்து கொண்டு ஒன்றுபட்ட மனத்துடனே விநாயகரைத் தியானித்து இதைச் செபிக்க வேண்டும். இக் கவசத்தை நாடோறும் முறையாக ஓதி வருவோர்க்குப் பிணி, வறுமை, மனக்கவலை முதலியன நீங்கும். நன்மக்கட் பேறு, நல்லோர் நட்பு, எண்ணியது எய்துதல் முதலிய நன்மைகள் எல்லாம் உண்டாகும்.

வளர்சி கையைப் பராபரமாய் வயங்குவிநா
 யகர்காக்க வாய்ந்த சென்னி
யளவுபடா வதிகசவுந் தரதேக
 மகோற்கடர்தா மமர்ந்து காக்க
விளரறநெற் றியையென்றும் விளங்கியகா
 சிபர்காக்கப் புருவந் தம்மைத்
தளர்வின்மகோ தரர்காக்க தடவிழிகள்
 பாலசந் திரனார் காக்க

கவின் வளரு மதரங்கச முகர்காக்க
 தாலங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுகங் கிரிசைசுதர் காக்கநனி
 வாக்கைவிநா யகர்தாங் காக்க
அவிர்நகைதுன் முகர்காக்க வள்ளெழிற்செஞ்
 செவிபாச பாணி காக்க
தவிர்தலுறா திளங்கொடி போல் வளர்மணிநா
 சியைச்சிந்தி தார்த்தர் காக்க

# விநாயகரின் 32 தோற்றங்கள் – VARIED FORMS OF VINAYAGAR

## பால கணபதி
## Bala Ganapathy



வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு, மோதகம்
இவற்றை வைத்துக் கொண்டிருப்பவரும்,
பால சூரியனைப் போன்ற சரீர காந்தியை
உடையவருமான பால கணபதி.

## தருண கணபதி
## Tharuna Ganapathy



கைகளில் பாசம், அங்குசம், அபூபம், விளாம்பழம்,
நாவல்பழம், தன்னுடைய ஒரு தந்தம், நெற்கதிர்,
கரும்பு வைத்துக் கொண்டிருப்பவர்
தருண கணபதி.

## பக்தி கணபதி
## Bakthi Ganapathy



தேங்காய், மாம்பழம், வாழைப்பழம்,
பாயசத்துடன் சரத்கால சந்திரனின்
வெண்ணிற சரீரத்தையுடைய
பக்தி கணபதி

## வீர கணபதி
## Veera Ganapathy



வேதாளம், சக்தி ஆயுதம், அம்பு, வில், சக்ராயுதம்,
கத்தி, கட்வாங்கம், முத்கரம் கதை, அங்குசம்,
நாகம், பாசம், சூலம், குந்தம், மழு, த்வஜம் தரித்திருக்கும்
வீர கணபதி.

## சக்தி கணபதி
## Sakthi Ganapathy



சந்தியா காலத்தைப் போல சிவந்த நிறமுடையவராக
இருப்பவரும், பாசம், அங்குசம் இவற்றை வைத்துக்
கொண்டிருப்பவருமான பயத்தைப் போக்கும்
சக்தி கணபதி.

## த்விஜ கணபதி
## Thvija Ganapathy



புத்தகம், ஜபமாலை, தண்டம், கமண்டலம் உடையவரும்,
கங்கணம் முதலான ஆபரணங்களைக் கைகளில்
அணிந்திருப்பவரும், சந்திரனின் வெண்ணிறமுடைய
வருமான நான்முக த்விஜ கணபதி.

## சித்தி கணபதி
## Sithi Ganapathy



மாம்பழம், பூங்கொத்து, கரும்புத்துண்டு, எள்ளுருண்டை,
பரசு இவற்றைத் துதிக்கையுட்பட ஐந்து கரங்களில்
தரித்தவரும், பொன் கலந்த பசுமை
நிறமுடையவருமான சித்தி கணபதி.

## உச்சிஷ்ட கணபதி
## Uchishta Ganapathy



இவரை "விஜய கணபதி" என்று
ஸ்ரீ தத்துவ நிதி கூறுகிறது.
இவருக்கு மற்றொரு தோற்றமும் உண்டு.

## ஷிப்ர கணபதி
## Shipra Ganapathy




தந்தம், கற்பக விருட்சத்தின் கிளை, பாசம், ரத்னகலசம்,
அங்குசம் இவற்றைத் தரித்துக் கொண்டிருப்பவர்.
அழகான சிவந்த சரீர காந்தியையுடைய ஷிப்ர கணபதி.

## விக்ன கணபதி
## Vigna Ganapathy



சங்கு, கரும்பு, வில், புஷ்ப பாணம், கோடரி,
பாசம், சக்கரம், தனது தந்தம், பூங்கொத்து போல
சுருட்டிய மாலை ஆகியவற்றுடன் பொன்மேனி ரூபமாக
விளங்கும் விக்ன கணபதி.

## ஹேரம்ப கணபதி
## Aeramba Ganapathy



அபய வரத முத்திரைகளுடன் பாசம், தந்தம், ஜபமாலை,
அங்குசம், கோடரி, முத்கரம், மோதகம், பழம்
இவற்றைத் தரித்துக் கொண்டு சிம்ம வாகனத்தில்
ஐம் முகங்களுடனிருப்பவர் ஹேரம்ப கணபதி.

## லக்ஷ்மி கணபதி
## Lakshmi Ganapathy




மிகவும் பிரகாசிக்கின்ற ஜோதியாகிய அமிருதப் பிரவாகத்தையுடையவரும்,
நீலோத்பலத்தைக் கையில் கொண்டவரும், இரு தேவிகளை
இருபக்கத்திலும் கொண்டவரும், வரதஹஸ்தத்தோடு
இருப்பவரும் லக்ஷ்மி கணபதி.

## துர்கா கணபதி
## Durga Ganapathy




எட்டுக்கை, அங்குசம், பாணம், அட்சமாலை,
தந்தம், பாசம், வில், கொடி, நாவற்பழம்
ஆகியவற்றைக் கொண்டவர்.
பொன்னிற மேனியர்.

## சங்கடஹர கணபதி
## Sankatahara Ganapathy



இளஞ்சூரியனின் நிறத்தோடு,
இடது தொடையில்
அம்மையை உடையவர்.
நீலநிற மேலாடை அணிந்தவர்.

## மகா கணபதி
## Maha Ganapathy



மாதுளை கதை, கரும்பு வில், சக்கரம், தாமரை, பாசம்,
நீலோத்பலம், நெற்கதிர், தந்தம், ரத்னகலசம் இவற்றை ஏந்தியவர்.
செங்கதிர் நிறத்தவர். முக்கண்ணர். பிறை முடியர்.

## விஜய கணபதி
## Vijaya Ganapathy



பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம்
இவற்றைத் தரித்தவர்.
பெருச்சாளி வாகனத்தில் ஏறியிருப்பவர். செந்நிறமானவர்.

## நிருத்த கணபதி
## Nirutha Ganapathy



பாசம், அங்குசம், அதிரசம், கோடரி ஆகியவற்றை
ஏந்திய, கற்பக விருட்சத்தினடியில் இருக்கும்
நர்த்தன கணபதி.
வேறு தியானத்தில் ஆயுதங்கள் மாறியும் இருக்கும்.

## ஊர்த்துவ கணபதி
## Oorthuva Ganapathy



செங்கழுநீர்ப்பூ, நெற்கதிர், தாமரைப்பூ,
கரும்பு வில், அம்பு, தந்தம் இவற்றைக்
கரங்களில் கொண்டவரும், தங்க நிறம்
கொண்டவருமான ஊர்த்துவ கணபதி.

## ஏகாட்சர கணபதி
## Yegatchara Ganapathy



செந்நிறமானவர், செம்பட்டாடையர், செம்மலர் மாலையர்,
பிறை முடியர், முக்கண்ணர், குறுந்தாளர், குறுங்கையர்,
மாதுளை பாசம், அங்குசம், வரதம் இவற்றைத் தாங்கியவர்.

## வர கணபதி
## Vara Ganapathy



செவ்வண்ணர், யானைமுகத்தவர், முக்கண்ணர்,
பிறை முடியர், பாசம், அங்குசம் தரித்தவர்,
தேன் நிறைந்த கபால பாத்திரத்தை ஏந்தியவர்.

## திரயாஷ்ர கணபதி
## Threyashra Ganapathy



பொன்னிறமானவர். நான்கு கரத்தவர்.
பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம்
இவற்றைத் தாங்கியவர்.
துதிக்கை நுனியில் மோதகம் உடையவர்.

## க்ஷிப்ரபிரசாத கணபதி
## Kshipraprasade Ganapathy



பாசம், அங்குசம், கற்பகக் கொடியின்
கலைதரும் மாதுளம்பழம், துதிக்கையில்
தாமரை மொட்டு இவற்றைத் தரித்தவர்.
பேழை வயிற்றை உடையவர்.

## ஹரித்திரா கணபதி
## Harithira Ganapathy



மஞ்சள் நிறமானவர். நான்கு கரத்தவர்.
அவற்றில் பாசம், அங்குசம், தந்தம்,
மோதகம் தரித்திருப்பவர்.
பக்தர்களுக்கு அபயமளிப்பவர்.

## ஏகதந்த கணபதி
## Yegandantha Ganapathy



பேழை வயிற்றுடன் நீல மேனியர்.
கோடரி, அட்சமாலை, லட்டு,
தந்தம் இவற்றை உடையவர்.

## சிருஷ்டி கணபதி
## Shrishti Ganapathy




பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைக்
கரங்களில் ஏந்தியவர்.
பெருச்சாளி வாகனத்தையுடையவர்.
சிவந்த திருமேனியர்.

## உத்தண்ட கணபதி
## Uthanda Ganapathy



நீலம், தாமரை, மாதுளம்பழம், கதை, தந்தம்,
கரும்பு வில், ரத்னகலசம், பாசம், நெற்கதிர், மாலை
இவற்றையேந்திய பத்துக் கைகளை உடையவர்.
சிவந்த மேனியையுடைவர்.

## ரணமோசன கணபதி
## Renamosana Ganapathy



பாசம், அங்குசம், தந்தம், நாவற்பழம்
இவற்றைத் தரித்தவர்.
வெண்பளிங்கு நிற மேனியர். செந்நிறப் பட்டாடையுடுத்தியவர்.

## துண்டி கணபதி
## Dundi Ganapathy



அட்சமாலை, கோடரி, ரத்ன கலசம்,
தந்தம் இவற்றை ஏந்தியவர்.

## துவிமுக கணபதி
## Thuvimuga Ganapathy



தந்தம், பாசம், அங்குசம், ரத்னபாத்திரம்
இவற்றைக் கையில் ஏந்தியவர். மயில் நீல மேனியர்.
செம்பட்டாடையும், ரத்தின கிரீடமும் அணிந்தவர்.

## மும்முக கணபதி
## Mummuga Ganapathy



வலது கைகளில் கூரிய அங்குசம், அட்சமாலை, வரதம்
இவற்றை உடையவர். இடது கைகளில் பாசம்,
அமுத கலசம், அபயம் இவற்றை உடையவர்.

## சிங்க கணபதி
## Singa Ganapathy



வீணை, கற்பகக்கொடி, சிங்கம், வரதம்
இவற்றை வலது கைகளில் தாங்கியவர்.
தாமரை, ரத்ன கலசம், பூங்கொத்து, அபயம்
இவையமைந்த இடது கைகளையுடையவர். வெண்ணிற மேனியர்.

## யோக கணபதி
## Yoga Ganapathy



யோக நிலையில், யோக பட்டம் தரித்து,
இளஞ்சூரியனது நிறமொடு ஒளிர்ந்து,
பாசம், அட்சமாலை, யோக தண்டம், கரும்பு
இவற்றை ஏந்தி இருப்பவர்.

காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி
காக்க களங் கணேசர் காக்க
வாமமுறு மிருதோளும் வயங்குகந்த
பூர்வசர்தா மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலைவிக் கினவினா
சர்காக்க விதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்கவகட்
டினைத்துலங்கே ரம்பர் காக்க

பக்கமிரண் டையுந்தரா தரர்காக்க
பிருட்டத்தைப் பாவ நீக்கும்
விக்கின ரர்காக்க விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாங் காக்க
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்கசக னத்தை யல்லல்
உக்ககண பன்காக்க வூருவைமங்
களமூர்த்தி யுவந்து காக்க


தாழ் முழந்தாண் மகாபுத்தி காக்கவிரு
பதமேக தந்தர் காக்க
வாழ்கரங்கிப் பிரப்பிரசா தனர்காக்க
முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச்செய் யாசாபூ ரகர்காக்க
விரல் பதுமவத்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள்விநா யகர்காக்க
கிழக்கினிற்புத் தீசர் காக்க.

அக்கினியிற் சித்தீசர் காக்கவுமா
புத்திரர்தென் னாசை காக்க
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க
விக்கினவர்த் தனமேற் கென்னுந்
திக்கதனிற் காக்கவா யுவிற்கசகன்
னன்காக்க திகழு தீசி
தக்கநிதி பன்காக்க வடகிழக்கி
லீசநந் தனரே காக்க.

ஏகதந்தர் பகன்முழுதுங் காக்கவிர
வினுஞ்சந்தி யிரண்டன் மாட்டும்
ஓகையின்விக் கினகிருது காக்கவிராக்
கதர்பூத முறுவே தாள
மோகினிபே யிவையாதி யுயிர்த்திறத்தால்
வருந்துயரு முடி விலாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபுபா
சாங்குசர்தாம் விரைந்து காக்க,

மதிஞானந் தவந்தான மானமொளி
புகழ் குலம்வண் சரீர முற்றும்
பதிவான தனந்தானி யங்கிருக
மனைவிமைந்தர் பயினட் பாதிக்
கதியாவுங் கலந்துசர்வா யுதர்காக்க
காமர்பவுத் திரர்முன் னான
விதியாருஞ் சுற்றமெலா மயூரேச
ரெஞ்ஞான்றும் விரும்பிக் காக்க

வென்றிசீ விதங்கபிலர் காக்ககரி
யாதியெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனைமுக் காலமுமோ
திடினும்பா லிடையூ றொன்றும்
ஒன்றுறா முனிவரர்கா ளறிமின்கள்
யாரொருவ ரோதி னாலு
மன்றவாங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேக மாகி மன்னும்.





# விநாயகர் புராணம்

எடுக்கு மாக்கதை யின்றமிழ்ச் செய்யுளாய்
நடக்கு மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை யைந்துடைத் தாழ் செவி நீண்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்துளி ருத்துவாம் *-பெரிய புராணம்*

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம் *-கந்த புராணம்*

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாடத்துப் பிள்ளையைப் பேணுவாம் *-விருத்தாசல புராணம்*

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞான மதம் ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
யானைமுக னைப்பரவி யஞ்சலி செய் கிற்பாம்
*-சேக்கிழார் நாயனார் புராணம்*

உச்சியின் மகுட மின்ன வொளிர்தர நுதலி னோடை
வச்சிர மருப்பி னொற்றை மணிகொள்கிம் புரிவ யங்க
மெய்ச்செவிக் கவரி தூங்க வேழமா முகங்கொண் டுற்ற
கச்சியின் விகடசக்ரக் கணபதிக் கன்பு செய்வோம் *-கந்த புராணம்*

மலரவனுந் திருமாலுங் காணாமை மதிமயங்கப்
புலிமுனியும் பதஞ்சலியுங் கண்டு தொழப் புரிசடையார்
குலவு நடந் தருந்தில்லைக் குட திசைக் கோ புரவாயில்
நிலவியகற் பகக்கன்றின் நிரைமலர்த்தா ளிணை போற்றி

*-சேக்கிழார் நாயனார் புராணம்*

தன்னோங்கு மலரடியுந் தளிரோங்கு சாகைகளும்
மின்னோங்கு முகக் கொம்பும் விரவிய கண் மலர்களுமாய்
மன்னோங்க நடமாடு மன்றோங்கு மதிற்குடபாற்
பொன்னோங்கன் முன்னோங்கும்பொற்பமர் கற் பகம் போற்றி

*-கோயிற் புராணம்*

மண்ணுலக கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுற
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவோம் *-கந்த புராணம்*

சக்தியாய்ச் சிவ மாகித் தனிப்பர
முக்தி யான முதலைத் துதி செயச்
சுத்தியாகிய சொற்பொருள் நல்குவ
சித்தி யானை தன் செய்ய பொற் பாதமே *திருவிளையாடற் புராணம்*

உள்ளமெனுங் கூடத்தி லூக்க மெனுந்
தறி நிறுவி யுறுதி யாகத்
தள்ளரிய வன்பென்னுந் தொடர்பூட்டி
யிடை படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணை யென்னும்
வெள்ள மதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்து வரு வினைகள் தீர்ப்பாம்

*-திருவிளையாடற் புராணம்*

# பஞ்சமுக விநாயகரே ஆடீரூஞ்சல்

மூதறிஞர், வை.அ.கதிர்காமநாதன்

சீர்பூத்த பேரொளியா யுயிர்க்குயிரா யகண்டிதமாய்
சிறந்தோங்கும் ஞானவடிவாம் நின்மல மூர்த்தியே
பேர்பூத்த குணங்குறிக ளிகந்தபழ மறைக்கொழுந்தே
பெருமைசான்ற மன்னனாம் பரராச சேகரன்
பார்பூத்த புகழானமைந்த பெருங்கோயில் குடிகொண்ட
பஞ்சமுக விநாயகரே நின்னூஞ்சல் பாடக்
கார்பூத்த இணுவைநகர் களிப்புறக் கருணைசெயுங்
கணபதிதன் னிருசரணம் கருத்துள் வைப்பாம்.

அஞ்செழுத்தா லங்கர நியாசம் ஆற்றி
ஆன்மார்த்த பூஜைசெயும் அந்தணர்தமக்கு
அஞ்செழுத்தின் வடிவாய் அமலமாய் அயன்மால்
அறியவொண்ணாப் பரிபூரண வடிவம் காட்டி
அஞ்செழுத்தின் முன்னின்ற ஓங்காரப் பொருளே
அஞ்ஞான விருளோட்டு மற்புத மூர்த்தியே
பஞ்சின் மெல்லடிப் பாவையர்சூ ழிணுவை
பஞ்சமுக விநாயகரே ஆடீரூஞ்சல்

பஞ்சப் பிர்மமாம் வடிவே யென்கோ
பாவாணர்க் கருள்புரியும் வடிவே யென்கோ
தஞ்சமடைந் தார்க்குத் தயாநிதியே யென்கோ
தத்வா தீதமாம் பொருளே யென்கோ
வஞ்சமிலார் நெஞ்சின் வாழ்வே யென்கோ
வானாடர்க்கு மரிய தெய்வமேயா தென்கோ
பஞ்சவில்வக் காடுசெறி யிணுவை மேவும்
பஞ்சமுக விநாயகரே ஆடீரூஞ்சல்.

சந்திரசே கரனாகும் இறைவனே தானாகிச்
சகலசரா சரங்களும் தன்னகத் தொடுங்கப்
பந்தம தகற்றுமிப் படிவமுங் காட்டிப்
பாருளார் போற்றப் பரிந்தருள் புரியும்
சிந்தனைக்கு மெட்டாச் சிவானந்த மூர்த்தியே
சிறியேமை யாண்டருள் செய்யுந் தெய்வமே
கந்தமலர்ப் பொழில்சூ ழிணுவை மேவும்
கல்யாண மூர்த்தியே ஆடீரூஞ்சல்

ஐந்தான நின்திருமுகத் தழகை யிம்பரோ
டும்பரும் வந்து நாளும் பருக
நந்தாவருள் கொழிக்கும் நாயகனே நல்லிணுவை
நகருளார் செய்த நற்றவப் பயனே
சிந்தாகுலந் தீர்த்து நல்வாழ் வளிக்கும்
செந்தாமரைச் சீறடி சேப்ப வுந்திப்
பைந்தா துகுக்குஞ் சோலைசூ ழிணுவைப்
பஞ்சமுக விநாயகரே யாடீ ரூஞ்சல்

வேதமாய் வேதப்பொருளாய் வேதநாயகனு மாகி
விதீந்திராதி தேவர்க்கு நாதனு மாகி
ஆதியாய் ஆதிமத்யாந்த விஹீன னாகி
ஆதுலர்க் கன்னைதந்தையாய் நின்றமெய்ப்
போதமாய் அட்டமூர்த்தியுந் தானே யாகிப்
போதுடன் சென்று போற்றுவார் தங்கள்
பாதக மனைத்தும் போக்கியெழுந் தருளும்
பஞ்சமுக விநாயகரே யாடீ ரூஞ்சல்

பாரோங்கு வேதங்கள் கால்க ளாகப்
பரவரிய வாகமங்கள் விட்ட மாக
ஏரோங்கு பலகலைகள் வடங்க ளாக
எண்ணுமுப நிடதங்கள் பலகை யாக
சீரோங்கு பிரணவமே நற்பீட மாகச்
சிறந்தநல் மந்திரமே வடிவ மாகப்
பேரோங்கு நல்லறிஞர் போற்று மிணுவைப்
பஞ்சமுக விநாயகரே யாடீ ரூஞ்சல்

கருதரிய திருமுகங்க ளோரைந்து மாடக்
காதார்குண் டலமாடக் கவினார்மேனி யாடப்
பெருவயிறாடப் பிறைசேர் முடியு மாடப்
பூதகணங்க ளாடப் புண்ணியர்தா மாட
சுரும்ப ரிசைபாடச் சூழ்கொன்றைத் தாராட
சுரிகுழலார் தாமாடச் சிறாரு மாட
அரும்பவிழ் சோலைசூ ழணியாரிணுவை யமர்
அஞ்சுமுக விநாயகரே யாடீ ரூஞ்சல்

பஞ்சானனந் திரிதரும் வெஞ்சார லிருந்து
பல்லாண்டு தவங்கிடந்த பொதியில் முநியும்
விஞ்சிய வொளிகாலு மிவ்வியன்பே ருருவை
விம்மிதனாய் வியந்து நிற்பவது கண்டு
அஞ்சாதே யென்ற பய மளித்த ஐயனே
அமரரும் நாடோணா அற்புதக் குன்றமே
மஞ்சுலாம் புரிசைசூ ழிணுவை மேவும்
மன்னுபுகழ் விநாயகரே யாடீ ரூஞ்சல்

பஞ்சாங்கமுட னட்டாங்க வழிபாடு செயும்
பல்லோர் தமக்குப் பரிந்தருள் பாலித்து
பஞ்சாங்கந் தவறாது தங்கடன் புரிவார்
பண்ணுட னோதுதேவாரம் பல வொலிக்கப்
பஞ்சாங்கமுட னடியார் பலருஞ் சூழப்
பவனிவருந் திருக்கோல வுலாக் கண்ணுறும்
பஞ்சின் மெல்லடிப் பாவையர்சூ ழிணுவைப்
பஞ்சமுக விநாயகரே யாடீ ரூஞ்சல்

வேண்டுவார் வேண்டுவதே யீவா னென்னும்
வியன்றிருநா வுக்கரசின் வாக்கும் பொய்யோ
ஈண்டுவா வென்றழைத்துன் திருவடி நீழல்
இருத்துங் கருணைதா னென்பா லிலையோ
கூண்டுவாழ் கிளிபோ லலமந்து கிடந்தேற்குத்
தந்தையுந் தாயு மாகுந்தற் பரனே
நீண்டுவா னுலகளக்கும் பொழில்சூ ழிணுவை
நிமலனே யெனையாளு மமரர் கோவே

## வாழி

மாண்புறுசித்தாந்த சைவநெறிவாழி
மன்னுசிவா கமமும் மறையவரும் வாழி
காண்டொறு மாலயங்கள் கவினுற வாழி
கண்டிகையும் நீறும் நனிசிறந்து வாழி
ஆண்டகையர் அறம்பல புரிந்து வாழி
அணியிழையார் இல்லற தர்மமும் வாழி
சேண்பொலி திருக்கோ புரங்கள் வாழி
செந்தமிழன்ன பஞ்சமுகேச வாழி வாழி

# இணுவில்
# ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் மீது பாடப் பெற்ற அருட் பாடல்கள்

*குறிப்பு:* "யாழ்ப்பாணம், இணுவில் அருள்மிகு ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோயில்" என்னும் நூலிலிருந்து இந்த அருட்பாடல்கள் தொகுக்கப் பெற்றுள்ளன.

வரலாற்றுச் சிறப்பும் தொன்மையும் வாய்ந்த இணுவில் என்னும் அணிபெறு நகரில் கோயில் கொண்டு எழுந்தருளி அடியார்களுக்கு அருள் பாலித்து வரும் ஸ்ரீ பரராஜ சேகரப்பிள்ளையார் மீது அறிஞர்கள், பக்தர்கள், புலவர் பெருமக்கள் ஆகியோர் காலத்துக்குக்காலம் பல்வேறு வகையான அருட்பாடல்களைப் பாடிப் போற்றித் துதித்து வந்துள்ளார்கள் என்பதை அறியக்கூடியதாக உள்ளது. இப்பாடல்கள், ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையாரின் பெருமைகள், மூர்த்தி, தல, தீர்த்த விசேடங்கள் என்பனவற்றை எடுத்து இயம்புகின்றன. தமிழ் மணம் கமழும் இந்த இனிய அருட்பாடல்களைப் பாராயணம் பண்ணும் போது நமது உள்ளத்தில் விக்கினங்களைப் போக்கும் விநாயகப் பெருமானின் சிந்தனைகள் நிறைந்து மன அமைதியையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் மீது பாடப்பெற்ற தனிப்பாடல்களும் பிரபந்தங்களும் பலவாகும். அவையாவன:

1. இணுவை ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் திருவூஞ்சல்
2. இணுவை ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் கோயில்
   ஸ்ரீ பஞ்சமுக விநாயகர் திருவூஞ்சல்
3. இணுவை ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் ஊஞ்சல்
4. இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் பிரபந்தங்கள்
5. இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் திரு அந்தாதிக் கீர்த்தனைகள்
6. யாழ்ப்பாணம் இணுவையூர் ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் தோத்திரப் பாமாலை
7. ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் போற்றிப் பத்து

## 1. "இணுவை, ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் திருவூஞ்சல்"

தணிகைப் புராண உரையாசிரியர் மஹா வித்துவான் பொ. அம்பிகைபாக உபாத்தியாயர் அவர்களின் சிரேஷ்ட குமாரன் ஸ்ரீமான். அ. பொன்னம்பலபிள்ளை அவர்களால் 1890ஆம் ஆண்டில் இத் திருவூஞ்சல் இயற்றப்பட்டு அன்று தொடக்கம் விநாயகப் பெருமான் சந்நிதியில் பாடப்பெற்று வருகின்றது. இந்த நூலின் இரண்டாவது பதிப்பு 1962 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 1ஆந் திகதியன்று வெளிவந்தது. கவிநயமும், இன்னோசையும் நிறைந்த திருவூஞ்சல் பாடல்களிலிருந்து இரண்டு பாடல்களைத் தருகின்றோம்.

சீர் பூத்த ஈழவள நாட்டி னோர்சார்
திகழ்கின்ற யாழ்ப்பாணத் திணுவை தன்னில்
நார் பூத்த நல்லடியார் நாணாளுந் துதி செய்ய
நாலுந் துதிக்கை நற்குஞ்சரந் தன்னைப்
பார் பூத்த பரராச சேகரனாம் பார்த்திபன்
பரிவுடன் தாபித் தேத்து மொப்பிலாக்
கார் பூத்த கணபதியே நின்னூசல் பாடக்
கருணை மழை பொழிந் தெந்நாளுங் காப்பதாமே.

★ ★ ★

மின்னு நவரத்ன மணி மகுட மசைந்தாட
மிகு நாத விந்து வடிவான துதிக்கை யாடத்
துன்னு செவிகள் கால் தனை யிரு மருங்கும் வீசத்
தளர் நடை பயின்று தந்தியு மசைந்தாட
மன்னு கண நாதர் முனிவர் மகிழ்ந்தே யாட
மாமறையோர் பலரும் சாமகீதம் பாட
இன்னுயிர்க் கிறையே இன்பவாரிதியே
இபமுகத் தெந்தாய் ஆடீ ரூஞ்சல்

★ ★ ★

## 2. இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் கோயில் ஸ்ரீ பஞ்சமுக விநாயகர் திருவூஞ்சல்

இயற்றமிழ் ஆசிரியர் திரு.அ.க வைத்தியலிங்கம்பிள்ளை அவர்களின் சிரேஷ்ட புத்திரன் மூதறிஞர், சைவப்பிரசாரகர் திரு. வை. கதிர்காமநாதன் அவர்களால் இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் கோயில் ஸ்ரீ பஞ்சமுக விநாயகர் மீது பாடப் பெற்ற திருவூஞ்சல் பாக்கள் நூல் வடிவில் 26.05.1981 இல் வெளியிடப்பட்டது. பக்தி ரசம் ததும்பும் இந்தப் பாடல்களில் இருந்து அடியார்கள் படித்து இன்புற இரண்டு பாடல்களைக் கீழே தருகிறோம்.

### பஞ்சமுக விநாயகரே ஆடீரூஞ்சல்

1. சந்திரசே கரனாகும் இறைவனே தானாகிச்
சகலசரா சரங்களும் தன்னகத் தொடுங்கப்
பந்தம தகற்றுமிப் படிவமுங் காட்டிப்
பாருளார் போற்றப் பரிந்தருள் புரியும்
சிந்தனைக்கு மெட்டாச் சிவானந்த மூர்த்தியே
சிறியேமை யாண்டருள் செய்யுந் தெய்வமே
கந்தமலர்ப் பொழில் சூ ழிணுவை மேவும்
கல்யாண மூர்த்தியே ஆடீ ரூஞ்சல்

2. பாரோங்கு வேதங்கள் கால்க ளாகப்
பரவரிய வாகமங்கள் விட்டமாக
ஏரோங்கு பல கலைகள் வடங்களாக
எண்ணுமுப நிடதங்கள் பலகை யாக
சீரோங்கு பிரணவமே நற் பீடமாகச்
சிறந்தநல் மந்திரமே வடிவமாகப்
பேரோங்கு நல்லறிஞர் போற்று மிணுவைப்
பஞ்சமுக விநாயகரே யாடீ ரூஞ்சல்

## 3. "இணுவை, ஸ்ரீ பரராச சேகரப் பிள்ளையார் ஊஞ்சல்"

சங்கீத வித்துவான் இணுவில் பிரம்ம ஸ்ரீ மா. த. நடராஜ ஐயரவர்களின் புத்திரரும் "திரு மயிலைக் குறவஞ்சி" நூலாசிரியருமான ஸ்ரீ ந. வீரமணி ஐயர் எம். ஏ. அவர்களால் இயற்றப் பெற்று இணுவில் ஸ்ரீ பரராச சேகரப் பிள்ளையார் கோவில் தொண்டர்களால் மேற்படி நூல் இலவச வெளியீடாக 1962ஆம் ஆண்டு வெளியிடப்பெற்றது. பக்தி ரசமும் தத்துவக் கருத்துக்களும் நிறைந்த ஊஞ்சல் பாக்களிலிருந்து இரண்டு பாடல்கள் கீழே தருகின்றோம்:

1. சீரோங்கு செழுமலர்த்தண் சோலை வாசம்
சிறங்தோங்கச் சுரும்பினங்கள் இசையும் பாடப்
பாரோங்கு முகில் சொரிந்து முழவு கொட்டப்
பச்சை மயில் தோகை விரித் தழகா யாட
ஏரோங்கு கழனிகளில் இனிய செல்வம்
ஏழிலோங்கத் திருவளரும் நனி நாடான
ஊரோங்கு நல்லிணுவைப் பிள்ளை யாருக்(கு)
ஊசலிசை பாடிக்கழல் ஏத்துவோமே

★ ★ ★

2. செஞ்சடையின் முடியாடச் செழும்ப சும்பொன்
செவிக் குழைகள் சேர்ந்தாட மருப்பு மாட
கஞ்சமலர்த் தும்பிமுகக் கரமு மாட
கருணை பொழி முறுவலுடன் சிரமு மாட
அஞ்சலென அருள் அபய வரத மாட
அங்குசபா சமு மாடத் தொந்தி ஆட
தஞ்சமெனு மடியருடன் தானும் ஆடும்
தண்ணிணுவை ஐங்கரனே ஆடீ ரூஞ்சல்

★ ★ ★

## 4. இணுவில் ஸ்ரீ பரராச சேகரப் பிள்ளையார் பிரபந்தங்கள்

மகா வித்துவான் பொன். அம்பிகைபாக உபாத்தியாயர் பேரனும் காலம் சென்ற இயற்றமிழ் பேராசிரியர் ஸ்ரீ மான் அ. க. வைத்தியலிங்கம்பிள்ளை அவர்கள் புத்திரனுமாகிய சைவப்பிரசாரகர், பௌராணிகர், இளைப்பாறிய அதிபர் ஸ்ரீ வை. அ. கதிர்காமநாதன் அவர்களால் இயற்றப்பெற்று இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் தேவஸ்தானத்தால் 26. 05. 89 இல் வெளியிடப்பட்டது.

1. இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் திருவிரட்டை மணிமாலை
2. இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் மும்மணிக் கோவை
3. இணுவைப் பதிகம்
4. இணுவில் ஸ்ரீ நடராஜர் திருவூஞ்சல் ஆகிய நான்கு நூல்கள் இந்தப் பனுவலில் அடங்கியுள்ளன.

சொற்சுவை, பொருட்சுவை பொதிந்து பக்தி ரசம் ததும்பும் பிரபந்தப் பாக்களிலிருந்து (ஒவ்வொரு நூலில் இருந்தும் ) இரண்டு பாடல்கள் கீழே தருகிறோம்.

### (1) இணுவில் ஸ்ரீபரராச சேகரப் பிள்ளையார் திருவிரட்டை மணிமாலை

சீர் பெற்ற வாழ்வும் சிறந்த நற் சிந்தனையும்
ஏர் பெற்ற வுள்ளமும் எமக்களிப்பாய் - கார் பெற்ற
கண்டத்துக் காபாலிதன் காதலனே கணபதியே யெங்
கண்ணினுங் கருத்தினுங் கலந்து.

★ ★ ★

ஏனென்று கேட்பாரின்றி ஏங்கியழும் ஏழைக்குத்
தானென்று வந்தருளுந் தயாநிதியைத் - தேனென்று
நல்லிணுவை வாழும் நலமிக்க மானுடரே
நல்லாய்த் தொழுமின் நயந்து

### (2) இணுவில் ஸ்ரீ பரராச சேகரப் பிள்ளையார் மும்மணிக் கோவை

திருவுளம் யாதென் றறியாது திகைக்கின்றேன்
பெருமறைக்கு மெட்டாப் பெரியோனே - கருவுற்று
ஊழான் வருந்து முணர்விலாச் சிறியேனைத்
தாழாது காத்தல் தலை

★ ★ ★

தலையாய பேரன்புன் னடிக்கே தந்தேன் தயாநிதியே
நிலையாய திருவடி ஞானமுந் தந்து நீணிலத்தே
புலையாய வுடலைப் போற்றிப் பாவியேன் புலன் வழிச் சென்
றலையாத நிலையு மடியேற் கருளி யாளுவையே

★ ★ ★

## 3. இணுவைப் பதிகம்

பன்னிரண்டு கையுடைய பாலன் றன்னைப்
பாவாணர்க் கருள் புரியும் பகவன் றன்னை
மின்னிரண்டு மருங்குறவே மிளிர்வான் றன்னை
மீமிசை ஞாயிற்றின் மேனியான் றன்னைத்
தன்னிரண்டு பாதமலர் தந்தான் றன்னைத்
தத்துவத்தின் முடிவிடமாய்த் திகழ்வான் றன்னை
என்னிரண்டு கண்ணாகி இலங்குவான் றன்னை
எழிலாரு மிணுவையிற் கண்டேத்து கேனெ

★ ★ ★

எண்ணாதி யெழுத்தெலாங் கலந்தான் றன்னை
எப்பொருளுங் கடந்த இறைவன் றன்னை
பெண்ணாகி யாணாய்ப் பிறங்கினான் றன்னை
பேரொளிப் பிழம்பாகி நின்றான் றன்னை
விண்ணாதி பூத மெலாம் விரிந்தான் றன்னை
வீர வேல்கொடு தாரகற் செற்றான் றன்னை
கண்ணாகிக் கண்ணுள் மணியாகினான் றன்னை
கார் தவழு மிணுவையிற் கண் டேத்து கேனே

★ ★ ★

## 4. இணுவில் ஸ்ரீ நடராஜர் திருவூஞ்சல்

சீரோங்கு வேதங்கள் கால்க ளாக
சிறந்தநல் லாகமங்கள் விட்டமாக
பாரோங்கு பலகலைகள் வடங்களாக
பன்னுமுப நிடதங்கள் பலகையாக
பேரோங்கு மந்திரங்கள் விதானமாகப்
பேசரிய பிரணவமே நற் பீடமாக
நீரோங்கு நல்லிணுவை நாளும் ஓங்க
நின்மல நடராஜ ஆடீ ரூஞ்சல்

★ ★ ★

எங்கள் தவப் பயனாய சிவக் கொழுந்தே
எவ்வுலகுங் கடந்தோங்கும் எழிலார் கோவே
நங்கள் துயரகற்ற நண்ணிய நாயகமே
நால்வேதப் பொருளாய நடனசிகா மணியே
மங்களமாம் வடிவமே தவத்தோர் வாழ்வே
மாயோற்கருள் கோவே மந்திர வடிவே
திங்கடவழ் மாடமலி யிணுவை மேவும்
தில்லைநட ராஜனே யாடீ ரூஞ்சல்

★ ★ ★

## 5. இணுவில், ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் திரு அந்தாதிக் கீர்த்தனைகள்

இயலிசைவாரிதி, கவிமாமணி, அருட்கலைவாரிதி, ஸாஹித்ய சிரோன்மணி, இணுவில் பிரம்ம ஸ்ரீ மா. த. ந. வீரமணி ஐயர் எம். ஏ. அவர்களால் ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் மீது பாடப்பெற்ற திரு அந்தாதிக் கீர்த்தனைகள், வரலாற்றுப் பெருமை மிக்க ஆலயமாகிய இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் கோயிலில் 1997ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற மஹா கும்பாபிஷேகத்தின் போது வெளியிடப்பட்டது. இந்த நூலில் இருபத்தொரு கீர்த்தனைகள் இடம் பெற்றுள்ளன. எதுகை மோனையோடு பக்தி ரசம் ததும்பும் வண்ணம் இந்தக் கீர்த்தனைகள் இயற்றப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. கவிமாமணியின் கற்பனை வளமும் சங்கீத ஞானமும் பாராட்டத்தக்கவை. கவி பாடும் ஆற்றலில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாமல் திகழும் இயலிசை வாரிதியின் திருவந்தாதிக் கீர்த்தனைகளில் இருந்து இரண்டு பாடல்களைத் தருகின்றோம்.

### கொஞ்சு தமிழ் இணுவையில் கோயில் கொண்டவன்

ராகம் : ரஞ்ஜனி — தாளம் : ஆதி

**பல்லவி**

நெஞ்சினில் குஞ்சரனை இருத்து - மனமே
அஞ்சு கரத்தனை அனுதினமும் நீ துதித்து

**அனுபல்லவி**

கொஞ்சு தமிழ் இணுவையில்
கோயில் கொண்ட விநாயகன்
அஞ்சலென அருள்வான்
அவனை நீ அவனியில்

**சரணம்**

பக்தியாய்ப் பஞ்ச முகன்
பாதம் பணிந்திடுவாய்
நித்தியம்பூ வெடுத்தவன்
நீழலில் சூட்டிடுவாய்
சத்தியம் காத்திடுவாய்
சந்ததம் ஏத்திடுவாய்
அத்திமுகத்தவன்
அருளைப் புரிந்திடுவான்.

## சித்தியெல்லாம் தருவான்

ராகம் : ஸிந்து பைரவி    தாளம் : ஆதி

**பல்லவி**

நாடும் அடியவரின்
நலிவெலாம் தீர்த்திடுவான்
ஏடும் ஏர்துலங்கிடும்
எழில் இணுவைக் கணேசன்

***அனுபல்லவி***

பாடும் அடியவரைப்
பாலிக்க வந்திடுவான்
ஆடும் நடனக் கணேசன்
ஆறுதல் அருளுவான்

***சரணம்***

பக்தியோடு துதித்தால்
பரராஜசேகரனும்
சித்தியெல்லாம் தருவான்
சிறந்த அருள் கொடுப்பான்
அத்தி முகத்தவன்
அபயமும் தந்திடுவான்
நித்தியம் அவன்கமல
நீழல் பணிந்திடுவாய்.

## 6. யாழ்ப்பாணம் . இணுவையூர்
## ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் தோத்திரப் பாமாலை

இப் பாமாலை, அளவையூர் – சஞ்சீவியால் இயற்றப் பெற்று 6ஆம் திருவிழா உபயகாரரினால் வெளியிடப்பட்டது. பக்தி ரசம் ததும்பும் இந்தப் பாமாலையிலிருந்து இரண்டு பாடல்களைக் கீழே தருகிறோம்.

பூரணனே பிரணவத்தின் பொலிவே போற்றி
பொற்கைலை நாதனருள் புதல்வா போற்றி
சீரணியு மண்டமெலாம் திகழ்வாய் போற்றி
சிற்றம் பலத்தாடும் சிறுவா போற்றி
ஆரணமும் பாரதமும் அருள்வாய் போற்றி
அங்குச பாசங்கொண்ட அரசே போற்றி
பாரணி செய் திருமலிந்த இணுவை யூர்வாழ்
பரராச சேகர கணேசா போற்றி.

எண்ணுவார்க் குறுதுணையா யிருப்பாய் போற்றி
எண்ணாதார்க் கிடையூறு தருவாய் போற்றி
பண்ணுமாய்ப் பாவுமாய்ப் பயில்வாய் போற்றி
பரப் பிரம்ம மூர்த்தியே பதியே போற்றி
விண்ணுளார் காண்பரிய விமலா போற்றி
விடையீசன் தேரறுத்த விநோதா போற்றி
பண்ணிசையிற் பயிர்வாழும் இணுவை யூர் வாழ்
பரராச சேகர கணேசா போற்றி.

## 7. ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் போற்றிப் பத்து

இணுவையம்பதியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் மீது பக்திரசம் ததும்பும் போற்றிப் பத்து என்னும் பாமாலையை இயற்றி எம்பெருமான் சந்நிதியில் அரங்கேற்றியவர் திருநெல்வேலியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசும் புலவருமான உயர்திரு. ச. தங்கமாமயிலோன் அவர்கள். பத்துப் பாடல்கள் கொண்ட இப்பாமாலை இன்னும் நூல்வடிவில் வெளிவராதிருந்த போதிலும் சொற்சுவை, பொருட்சுவை, பொதிந்து பாராயணம் பண்ணுவோரைப் பக்தியில் ஈடுபாடு கொள்ளச் செய்யும் தன்மை வாய்ந்தவை என்ற நோக்கில் பத்துப்பாக்களையும் முழுமையாகத் தருகிறோம்.

### ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் போற்றிப் பத்து

(ச. தங்கமாமயிலோன்)

ஓங்கார மாகியுள்ளத் தொளிர்ந்திடர் களைவாய் போற்றி
ஓதுமா மறைகணான்கும் ஒருங்குநின் றுணர்வாய் போற்றி
ஆங்காரந் தீர்த்துலகை ஆண்டருள் புரிவாய் போற்றி
ஆரார்க்கும் அளப்பரிய ஆனைமா முகத்தாய் போற்றி
நீங்காத பேரின்பாய் நிறைந்துநின் றருள்வாய் போற்றி
நீர்வளிவான் தீயாகி நின்றெங்கும் பரந்தாய் போற்றி
பாங்காக வலபையொடும் பழம்பதி இணுவை மேவும்
பரராஜ சேகரப் பிள்ளையாரே போற்றி போற்றி.

சொற்பதங்கள் கடந்தவுயர் சோதிவான் வெளிப்பாய் போற்றி
சோராதெம் முள்ளத்துற்ற சோர்வெலாந் தீர்ப்பாய் போற்றி
பொற்பனைக்கை மும்மதத்துப் பொலிவேழ முகத்தாய் போற்றி
போதாந்த மெய்காட்டிப் பூத்தருள் புரிவாய் போற்றி
கொற்றவர்கள் நற்றவர்கள் குலவுமின்பப் பதத்தாய் போற்றி
கொடுநோய்கள் பிணிகளவை கோலோச்சி அழிப்பாய் போற்றி
பற்பலரும் பணிந்து போற்றும் பழம்பதி இணுவை மேவும்
பரராஜ சேகரப் பிள்ளையாரே போற்றி போற்றி. 2

அங்கிங் கெனாதபடி எங்குமாய் இருப்பாய் போற்றி
அஞ்சிடே லெதற்குமென்றே அடியவர்க் கருள்வாய் போற்றி
சங்கத்தமிழ் மூன்றுந்தந்து சற்குருவும் ஆவாய் போற்றி
சராசரங்கள் யாவுங்காத்துத் தண்ணளி தருவாய் போற்றி
திங்கள்வளர் சிவன்மகனாய்த் திருவுருக் கொண்டாய் போற்றி
திண்ணிய நெஞ்சக்கல்லைத் தினமுருக வைப்பாய் போற்றி
பங்கயன் திருமால்போற்றும் பழம்பதி இணுவை மேவும்
பரராஜ சேகரப் பிள்ளையாரே போற்றி போற்றி. 3

ஓயாதே பாரதத்தை ஓங்கலில் வரைந்தாய் போற்றி
ஒப்புயர்வென வொன்றில்லா ஓதுமா மறையாய் போற்றி
தீயாகி நீர்நிலனாய்த் திகழுவான் வெளிப்பாய் போற்றி
தெங்கிளநீர் தேனொடுபால் தினம்படைக்க அருள்வாய் போற்றி
தாயாகித் தந்தையாய்த் தாங்கியெமைக் காப்பாய் போற்றி
தஞ்சமென உலகந்தாங்கித் தவப்பயிர் வளர்ப்பாய் போற்றி
பாயாநதி பாயவோட்டும் பழம்பதி இணுவை மேவும்
பரராஜ சேகரப் பிள்ளையாரே போற்றி போற்றி. 4

ஆத்திசூடி யமர்ந்ததேவன் அருகிருந் தருள்வாய் போற்றி
அறுகொடு மலர்கள்மாலை அணிந்தருள் புரிவாய் போற்றி
ஏத்துவான் மறைகண்மேவும் எழிற்றிரு வடிவாய் போற்றி
எண்ணெழுத் திகழாச்சிந்தை யெழில்நலம் இசைப்பாய் போற்றி
பூத்துளத் தவலம்போக்கிப் புன்னகை செய்வாய் போற்றி
பொருதானைப் பொருதுமாய்த்த புகழானை முகத்தாய் போற்றி
பார்த்திபம் பொலிவினோங்கப் பழம்பதி இணுவை மேவும்
பரராஜ சேகரப் பிள்ளையாரே போற்றி போற்றி. 5

சித்திபுத்தி சேர்ந்திருக்குந் திகழானை முகத்தாய் போற்றி
சிவசிவ சொல்வார்சிந்தைத் திருவினி லிருப்பாய் போற்றி
தத்துவா தீதனாகித் தண்ணளிதருவாய் போற்றி
தருமமாய் அர்த்தங்காமஞ் சாருவீ டளிப்பாய் போற்றி
மத்துவன் மைந்தனாகி மரபெலாம் வகுப்பாய் போற்றி
மருவளர் ஒற்றைக்கொம்பால் மாக்கதை வரைந்தாய் போற்றி
பத்தரை மாற்றுத்தங்கப் பழம்பதி இணுவை மேவும்
பரராஜ சேகரப் பிள்ளையாரே போற்றி போற்றி. 6

வந்தித்து வாழ்த்தும் நெஞ்சில் வலபையொடும் அமர்வாய் போற்றி
வற்றாத பேரின்பாய் மலர்ந்தருள் புரிவாய் போற்றி
சிந்தித்துச் செயலதாற்றுஞ் சிவசிந்தை யுறைவாய் போற்றி
செம்மையறஞ் சார்ந்துநித்தஞ் செகமெலாங் காப்பாய் போற்றி
அந்தரத் தெழுந்துவிண்மேல் அமர்ந்தவைங் கரத்தாய் போற்றி
அரியயன் தேவர்மூவர் அடிபணி அறத்தாய் போற்றி
பந்திக்கும் வினைகடீர்க்கும் பழம்பதி இணுவை மேவும்
பரராஜ சேகரப் பிள்ளையாரே போற்றி போற்றி. 7

திண்ணியதீ வினையின் வேர் தினமிருந் தறுப்பாய் போற்றி
தீர்த்தமொடு திருநீறாய்த் தேசமொளிர் திருவாய் போற்றி
எண்ணிய எண்ணம்யாவும் இனிதுற முடிப்பாய் போற்றி
ஏழிசையாய் இசைப்பயனாய் எழில்பெற இருப்பாய் போற்றி
தண்ணியநீர் நிழலாய்த் தளிர்த்துநின் றருள்வாய் போற்றி
தந்தைதாய் வலங்கள்வந்தே தருங்கனி பெற்றாய் போற்றி
பண்ணியல் நிறைந்தநீர்மைப் பழம்பதி இணுவை மேவும்
பரராஜ சேகரப் பிள்ளையாரே போற்றி போற்றி. 8

வெற்றியுந் திருவுஞ்சீரும் மேவிநின் றருள்வாய் போற்றி
வெளிவெளி யாகிநின்று வெம்பகை வெல்வாய் போற்றி
மற்றிலாப் பற்றாய்நின்று மாண்புகள் ஈவாய் போற்றி
மாதவர்கள் போற்றுமுயர் மாசறுமா மணியாய் போற்றி
அற்றிடு மாறுதேரின் அச்சதைப் பொடித்தாய் போற்றி
ஆகுவா கனத்தமர்ந்து அனுதினம் அருள்வாய் போற்றி
பற்றிய பற்றைவீட்டும் பழம்பதி இணுவை மேவும்
பரராஜ சேகரப் பிள்ளையாரே போற்றி போற்றி. 9

சிந்தைசொல் செயல்கள்மூன்றுஞ் செவ்விதா யிசைப்பாய் போற்றி
சிவனருள் முருகன்வள்ளி சேர்ந்திடச் செய்தாய் போற்றி
மந்திரம் பதங்கள்வன்னம் மறைமுறை தெரிப்பாய் போற்றி
மதிவளர் சஷ்டிமார் கழிப்பெருங் கதையாய் போற்றி
விந்தைகள் மிகுந்தவேழ முகமைந்து கரத்தாய் போற்றி
விக்கினங்கள் தீர்த்தருளி வேண்டுவரந் தருவாய் போற்றி
பந்தமாய் வீடுமாகும் பழம்பதி இணுவை மேவும்
பரராஜ சேகரப் பிள்ளையாரே போற்றி போற்றி. 10

# இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார்

# புகழ்மாலை

"மங்கலம் பொலிவால சிங்கபுர வலனிடையில் வைத" கவி வீரராக
வன்னி யாழ் பாடியே வாங்கி அர சாண்டநன் வளநாட தற்குவேந்தன்
பொங்குகங் காதரன் புவனேக வாகுவாம் பூசுரர்க ளோடுவந்த
புண்ணியன் பொன்னிநா டெண்ணுமதி பதியாய புங்கவர் வணங்கு திலகன்.
சிங்கைஆ ரியச்சக் கரவர்த்தி தன்மரபில் ஏகாதசச் சிரமுறையினான்
திங்கள்நிகர் கவிகையான் துங்கமிகு பரராச சேகரத் திகிரிவேந்தன்
பொங்கும் அருள் தங்கவே பூசித்த நாயகா புவிபுகழும் மடவாசலில்
புகர்முகக் கடவுள் நின் மிகுகருணை அடியனேன் புந்தியில் தங்க அருளே.

சகலதன தானியம் சகலசம் பத்துநற் சந்தோஷ மும்சுரபியும்
சத்துருசங் காரமும் புத்திரர் இலாபமும் சர்வவசீ கரவிடயமும்
புகலரிய வித்தையும் சித்தியும் புத்தியும் பொற்புறு சரீரசுகமும்
போதநிறை ஆயுளும் கல்வியும் செல்வமும் எப்பொழுது மேதந்து அருளுவாய்
பகலவர் அநந்தகோடி எனஇலகு திருமேனி பளபளென் றொளியை வீசப்
பைம்பொன் அங்கதம் மத்த கடசமும் வெயிலெழப் பாரஅரை ஞாண் அசையவே
அகிலமுறு கயிலைவரை கனகப் பெருங்கோயில் அழகுகோ புரவாசலில்
அணிசெஞ் சதங்கைஒலி கலகலென நடனமிடும் ஐங்கரப் பிள்ளையாரே

*[இணுவை மகா வித்துவான்]* **பொன். அம்பிகைபாக**
**உபாத்தியாயர் அவர்கள் பாடியருளியது**

---

அன்னை தந்தை
இருவருமே உலகமென்று
அன்புடனே சுற்றிவந்து
கனியும் பெற்றாய்
மன்னுயிர்கள் கற்றுணர்ந்து
வாழ வென்றே
மலர்க்கையால் பாரதத்தை
எழுதிவைத்தாய் தன்
பின்னவனாம் குமரனுக்குப்
பெண்ணைச் சேர்க்க
பெருங்கரியாய் உருவெடுத்துச்
சென்று சேர்த்தாய்
சின்னவனாம் நம்பியின்மேல்
கருணை செய்தே
சீரான கல்விதந்து
அருளும் தந்தாய்

நின்னடியைப் போற்றி
ஔவை பூசைசெய்ய
நீள்துதிக்கையால் அவளைக்
கயிலை சேர்த்தாய்
மன்னன் பரராசசேகரனும்
பணிந்து வேண்ட
மாண்புறவே இணுவையிலே
கோயில் கொண்டாய்
பொன்பொருளும் கல்வி
செல்வம் புகழும்தந்து
பூதலத்தில் ஏற்றமிகு
வாழ்வும் தந்தாய்
முன்னவனே உனை என்றும்
போற்றி வாழ்வோம் - எம்மை
மூஷிகத்தில் ஏறிவந்து
இரட்சிப்பாயே.

வை. ஸ்ரீஸ்கந்த வரோதயன்

# ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருஅந்தாதிக் கீர்த்தனைகள்

## *இணையில்லா அருட்கோலம்*

**இராகம் : *த்வஜாவந்தி*** **தாளம் : *ஆதி***

**பல்லவி**

கணேசன் புகழ் பாடுவாய் - மனமே
இணுவைப் பரராஜ சேகரக் கணபதி

**அநுபல்லவி**

இணையில்லா அருட்கோலம்
இனித்திடக் கொண்டவன்
மணமலர் ஆத்தி சூடும்
மாதங்கன் மதங்கமுகன்

**சரணம்**

பஞ்சமுகத்தானைப் பணிந்திடுவாய் மனமே
குஞ்சரக் கணபதி குதூகலம் தருபவன்
தஞ்சமென்றே கணேசன் தாளைப்பிடித்திடுவாய்
அஞ்சலென அருளி அனைத்தும் தருவான் செம்மல்.

## *எம்முகம் பார்த்தருள்வான் ஏரம்பன்*

**இராகம் : *கரஹரப்பிரிய*** **தாளம் : *ஆதி***

**பல்லவி**

செம்முகம் ஐந்துள்ளான் சேவடி பணிவாய்
எம்முகம் பார்த்தருள்வான்
ஏரம்பன் விநாயகன்

**அனுபல்லவி**

நம்பவப் பிணி களைவான்
நாயகன் கணபதி
நம்பித்தொழுதிடுவாய்
தும்பிமுகன் அருள்வான்

**சரணம்**

நல்இணுவை நகரினிலே
நாதனும் கோயில் கொண்டான்
பல்லியம் இயம்பிடவே
பரராஜ விநாயகனும்
வல்லபவனி வருவான்
வரங்களும் தந்திடுவான்
வல்லபை மணாளன்சிவ
வாரணனைப் பணிவாய்நெஞ்சே

## *புரியான இணுவையின் அரிமாயன் மருகன்*

**இராகம் : *மதுவந்தி*** **தாளம் : *ஆதி***

**பல்லவி**

புரியான இணுவையின்
அரிமாயன் மருமகன்
பரராஜ சேகரப்
பிள்ளையார் அருள்சொரிவான்

**அனுபல்லவி**

வரிமாமலர்ப் பதமே
கதியென்றடியார் தொழக்
கரியானைக் கணபதி
கருணைபொழிகிறான்

**சரணம்**

கோபுர மணி ஒலிக்கும்
கலசம் விண்ணை அளாவும்
நூபுரச் சதங்கைஒலி
நுண்கலைகள் வாழ வைக்கும்
தேவுக்கள் தொழுதேத்தும்
தெய்வக் கணபதியும்
ஆவலாய் பக்தருக்கே
அருளை அள்ளித்தருவான்

## *அள்ளி அருள்தரும் ஆனைமுகன்*

**இராகம் : *பௌஹரி*** **தாளம் : *ஆதி***

**பல்லவி**

அள்ளிஅருள்தரும் ஆனைமுகன் - இணுவை
தெள்ளுதமிழ்ப் பர ராஜவிநாயகன்

**அனுபல்லவி**

உள்ளமெனும் அரங்கில்
உவந்து நடனம் செய்வான்
வள்ளல் அருள் நிறைந்த
வாரணன் பூரணன்

**சரணம்**

கதிநீயே பரராஜக்
கணபதி என்றடைந்தால்
மதிசூடும் அரன்மைந்தன்
மாதங்கன் வந்தருள்வான்
பதியான இணுவையூர்ப்
பரராஜ சேகரன்
அதிஆனந்தம் தந்தே
ஆட்கொள்வான் ஐங்கரன்

## *மங்களம் அருள்வான்*

இராகம் : *பாகேஸ்ரீ* தாளம் : *ஆதி*

**பல்லவி**

ஐங்கரனின் செங்கமலப்
பரம் துணையே - இணுவை
பொங்குபதிப் பரராஜ
சேகரப் பஞ்சமுகன்

**அனுபல்லவி**

மங்களம் அருளுவான்
மாதங்கன் விநாயகன்
எங்கும் இன்பமே சூழ
எழிலருள் தான் பொழிவான்

**சரணம்**

வானுயர் கோபுரம்
வாழ்வின் உறுதி தரும்
தேனும் தெவிட்டும் ஞானத்
திருவருள் புரிகுவன்
மானும் மழுவு மேந்தும்
மஹாதேவனின் மைந்தன்
ஊனும் உயிருருக
உளமாரத்துதித்திடுவாய்

## *கருணைக்கு ஒரு தெய்வம் கணபதி*

இராகம் : *ஹம்ஸாநந்தி* தாளம் : *ஆதி*

**பல்லவி**

துதித்திடுவார்க் கென்றும்
தும்பிமுகன் துணைபுரிவான்
பதி இணுவை வளர்
பரராஜ சேகரன்

**அனுபல்லவி**

விதித்தவினையகற்றி
வேழமுகன் காத்திடுவான்
உதித்த கோடிப் பாணு
ஒளிமிகும் முகமுடையான்

**சரணம்**

கருணைக்கு ஒரு தெய்வம்
கணபதியே என்றும்
திருவருள் தந்து வாழ்வில்
தீனரைக் காத்திடுவான்
பெருமான் பரராஜ
சேகரன் பதம் பணிவாய்
திருவடியருள் தருவான்
துதிக்கையன் பதம் நாடு

## சித்தியெல்லாம் தருவான்

இராகம் : *ஸிந்துபைரவி* தாளம் : *ஆதி*

**பல்லவி**

நாடும் அடியவரின்
நலிவெலாம் தீர்த்திடுவான்
ஏடும் ஏர் துலங்கிடும்
எழில் இணுவைக் கணேசன்

**அனுபல்லவி**

பாடும் அடியவரைப்
பாலிக்க வந்திடுவான்
ஆடும் நடனக்கணேசன்
ஆறுதல் அருளுவான்

**சரணம்**

பக்தியோடு துதித்தால்
பரராஜ சேகரனும்
சித்தியெல்லாம் தருவான்
சிறந்த அருள் கொடுப்பான்
அத்தி முகத்தவன்
அபயமும் தந்திடுவான்
நித்தியம் அவன் கமல
நிழல் பணிந்திடுவாய்

## மணியொலித்திடும் கோவில் மஞ்சளாவிடும் கோபுரம்

இராகம் : *ஷண்முகப்பிரிய* தாளம் : *ஆதி*

**பல்லவி**

பணிந்திடுவார்க்கருள்
பாலித்திடுவான் - எங்கள்
அணிநகர் இணுவையின்
ஆனைமுகத்தவன்

**அனுபல்லவி**

மணியொலித்திடும் கோயில்
மஞ்சளாவிடும் கோபுரம்
இறையவன் எங்கள் பர
ராஜசேகரன் என்றும்

**சரணம்**

மங்கள வாழ்வருள்வான்
மாதங்கன் பஞ்சமுகன்
ஐங்கரன் கணபதி
சங்கரனின் மைந்தன்
திங்களணி சடையான்
தினகரக் கோடிரூபன்
எங்கள் பரராஜ
சேகரவி நாயகன்

## அநாதரக்ஷகன்

இராகம் : *தோடி* தாளம் : *ஆதி*

**பல்லவி**

விநாயகனை என்றும்
உள்ளம் போற்றும் - அவன்
அநாதரக்ஷ கனன்றோ!
அருள் தரும் கணபதி

**அனுபல்லவி**

கனவிலும் நனவிலும்
கணபதியின் நினைவே
மனோலயத்துடன் பக்தி
மனமாரப் பெருகவே

**சரணம்**

பரராஜ சேகரக் கணபதி காத்தருள்வான்
சுரமேவு பதம்பாடிச் சுந்தரக்கழல் பணிவோம்
புரமான இணுவையில் புனிதக் கோயில் கொண்டான்
வரமான மங்களமும் வாரியருள் சொரிவான்

## திருவருளை இறைஞ்சும் துதிக்கையன்

இராகம் : *கல்யாணவசந்தம்* தாளம் : *ஆதி*

**பல்லவி**

சொரிவான் அருள் மழை
பரராஜ சேகரன்
அரிஅயன் போற்றிடும்
ஆனைமுகத்தவன்

**அனுபல்லவி**

விரிவான ஓங்காரன்
வேழமுகத்தவன்
புரியான இணுவையின்
புண்ணியன் பூரணன்

**சரணம்**

திருவருளை இறைஞ்சும்
துதிக்கையன் மாதங்கன்
ஒருவருமில்லை என்றால்
ஓடிவந்தே காப்பவன்
பெருவயிற்றின் அழகன்
பெருச்சாளி வாஹனன்
குருவடிவானவன்
குஞ்சரன் பக்தருக்கு

## *அத்துவிதங்கடந்த ஆனைமுகன்*

**இராகம் : *கல்யாணி*** **தாளம் : *ஆதி***

**பல்லவி**

பக்தருக் கிரங்கிடும் பரராஜக் கணபதி
நித்தம் எமைக் காத்து
நீழல் தருபவன்

**அனுபல்லவி**

அத்துவிதங்கடந்த
ஆனைமுகத்தவன்
இத்தரணியில் இணுவை
இருந்தருள் புரிபவன்

**சரணம்**

கதி எவரும் இல்லைக்
கணபதி துணை என்றால்
அதிவிரைவாக வந்தே
அருள்தருவான் ஐயன்
மதி முடி தரித்தவன்
மாதங்கக் கணபதி
நதி சூடும் அரன் மைந்தன்
நாயகன் ஏரம்பன்

## *பாரதம் எழுதிய வாரணன்*

**இராகம் : *தேஷ்*** **தாளம் : *ஆதி***

**பல்லவி**

ஏரம்பனைப் பணிமனமே - ஆத்தி
ஆரம் சூடும் ஐயன்
ஆனைமுகன் கஜானனன்

**அனுபல்லவி**

கோரக்கஜ சூரனைக்
கொன்ற வீர கணபதி
பாரதம் எழுதிய
வாரணன் பூரணன்

**சரணம்**

கோல இணுவைப் பதி
கோயில்கொண்ட ஐங்கரன்
சீலப் பரராஜ
சேகரப் பிள்ளையார்
வேலவன் சோதரன்
வேண்டும் வரந்தருவான்
காலைப் பிடித்தவர்க்குக்
கதியென அருளுவான்

## ஆதாரம் நீதானையா ஆனைமுகத்தவனே

இராகம் : *ப்ருந்தாவனஸாரங்கா* — தாளம் : *ஆதி*

**பல்லவி**

அருள்நிறைகஜமுகனே - ஆதரி
பொருள்புரிந்துன்னருளைப்
போற்றித் தமிழிற் பாட

**அனுபல்லவி**

இருள்வினை அகற்றிடும்
ஏரம்பனே பரனே
ஒருவரும் இல்லை ஐயா
உன் பதமே கதி

**சரணம்**

பாதாரம் நிதம் பணிந்து
பனிமலர்ப் பூச்சூட்டி
நீதான் கதியெனவே
நித்தமும் தொழுது நின்றேன்
ஆதாரம் நீதானையா
ஆனைமுகா இணுவை
வேதாகமம் போற்றும்
பரராஜசேகரனே.

## பரக்ருபாநிதி பரராஜசேகரன்

இராகம் : *காம்போதி* — தாளம் : *ஆதி*

**பல்லவி**

பரராஜசேகர விநாயகனே - அபயம்
புரமான இணுவையில்
வரமீய்ந்தருள் தரும்

**அனுபல்லவி**

கரமானதும்பிக்கை
காட்டிடும் நம்பிக்கை
அரனாரும் அரிஅயனும்
ஆனந்தமாகப் போற்றும்

**சரணம்**

சரணமலர்களையே
தஞ்சமென்றே அடைந்தோம்
சிரமிசைக் கைகூப்பிச்
சேவித்தோம் ஐங்கரனே
தரணியில் நீ கதியே!
தந்திமுகத்தவனே
பரமக்ருபாநிதியே
பரராஜசேகரனே

உ

ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் துணை

# இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கீர்த்தனைகள்

இராகம்: *அமிர்தவர்ஷினி* தாளம் : *ஆதி*

**பல்லவி**

ஓங்காரப்பிரணவ விநாயகனே - சரணம்
பாங்காமிணுவைப் பரராஜ சேகரா ஆருள்

**அனுபல்லவி**

பூங்காவனப் பதியாம் புனித இணுவையிலே
வான்கோபுரக் கோயில்
வளர்ந்தமர் ஐங்கரனே

**சரணம்**

சரணமடைந்தவரின்
சஞ்சலம் தீர்த்து வைப்பாய்
வரமருளி எங்கள்
வாழ்வைச் சிறக்கச் செய்வாய்
கரமதில் பாசாங்குச
கலவுவை ஏந்திடுவாய்
அரவணைத்தே எம்மை
ஆதரித்தருளுவாய்

இராகம் : *ஹம்சத்வனி* தாளம் : *ஆதி*

**பல்லவி**

அருளுவான் ஆனைமுகத்தையன் - என்றும்
திருதிகழ் இணுவையில் தும்பிக்கையன் மெய்யன்

**அனுபல்லவி**

பரராஜசேகரப் பிள்ளையார் பாதமே
இரவோடு பகலும் என்றும் துதி மனமே

**சரணம்**

மங்கள வாழ்வு மாதங்கன் தருவான்
எங்களுக்கெல்லாம் இன்பமே அருளுவான்
பொங்கும் சதுர்த்தியிலே பூரணன் வருவான்
மங்கள ரூபன் மகிழ்ந்தே எமக்கெல்லாம் (அருளு)

இராகம் : *சுரபி* தாளம் : *ஆதி*

**பல்லவி**

எல்லாம் வல்லவன் ஏரம்பன் - அவன்
நல்ல பரராஜசேகர விநாயகன்

**அனுபல்லவி**

நல்லாசிகள் தருவான் நலிவெலாம் தீர்த்திடுவான்
பொல்லா வினைகளெலாம் போக்கி எமைக் காப்பான்

**சரணம்**

வல்லபை கணபதி வளமெல்லாம் தருவான்
வாழ்வில் இடர்கள்தீர்த்தே வாரணன் அருளுவான்
மெல்லிய பூம்பாதம் மேதினியில் துதிப்பாய்
மேவும் இணுவையிலே கோயில் கொண்ட கணபதி
(எல்லாம்)

இராகம் : *காமாஸ்* தாளம் : *ஆதி*

**பல்லவி**

கணபதி துணை அருள்வான் - என்றும்
இணைமலரடியருள் இகத்தினில் தருவான்

**அனுபல்லவி**

மணமலந்து சோலை மருவும் இணுவையிலே
குணபதி கோபுரக் கோயில் கொண்ட பரராஜ

**சரணம்**

பரராஜ சேகரக் கணேசன் - என்றும்
பரிந்தருள் தரும் ஆத்ம நேயன்
ஸ்வரராக கீத நாத வேதன் - வாரணன்
சுபமங்களம் அருளும் பூரணன்

இராகம் : *ஆபேரி* தாளம் : *ஆதி*

**பல்லவி**

பூரணத்தைக் கையிலேந்தி புனித அபயங் காட்டி
வாரணன் பரராஜ சேகரன் அருள் பொழிவான்

**அனுபல்லவி**

நாரணனின் நல்மருகன் நல்லதெல்லாம் தருவன்
ஆரந்தமிழ் மாலைசூட்டி ஆனை முகனைப் பணிவோம்

**சரணம்**

கொம்பொடித்துப் பாரதத்தைக் கிரி தனில் வரைந்தவன்
கிம்புரியணிந்த ஐயன் கொஞ்சியே கூத்தாடியவன்
அம்புவியில் கஜமுகனை அழித்த ஜெயகணேசன்
எம்பலமறுக்கும் அண்ணல் ஏரம்பன் சிவகணேசன்

இராகம் : *த்வஜாவந்தி* தாளம் : *ஆதி*

**பல்லவி**

கணேசன் புகழ் பாடுவாய் - மனமே
இணுவைப் பரராஜ சேகரக் கணபதி

**அனுபல்லவி**

இணையில்லா அருட்கோலம் இனித்திடக் கொண்டவன்
மணமலர் ஆத்தி சூடும் மாதங்கன் மதங்கமுகன்

**சரணம்**

பஞ்சமுகத்தானைப் பணிந்திடுவாய் மனமே
குஞ்சரக் கணபதி குதூகலம் தருபவன்
தஞ்சமென்றே கணேசன் தாளைப் பிடித்திடுவாய்
அஞ்சல் என அருளிஅனைத்தும் தருவான் செம்மல்

இராகம் : *கரஹரப்ரியா* தாளம் : *ஆதி*

**பல்லவி**

செம்முகம் ஐந்துளான் சேவடி பணிவாய்
எம்முகம் பார்த்தருள்வான் எரம்பன் விநாயகன்

**அனு பல்லவி**

நம்பவப் பிணி களைவான் நாயகன் கணபதி
நம்பித் தொழுதிடுவாய் தும்பிமுகன் அருள்வான்

**சரணம்**

நல்இணுவை நகரினிலே நாதனும் கோயில் கொண்டான்
பல்லியம் இயம்பிடவே பரராஜ விநாயகனும்
வல்லபவனி வருவான் வரங்களும் தந்திடுவான்
வல்லபை மணாளன் சிவ வாரணனைப் பணிவாய் நெஞ்சே

இராகம்: ரஞ்ஜனி தாளம் : *ஆதி*

பல்லவி

நெஞ்சினில் குஞ்சரனை இருத்தி - மனமே
ஐந்து கரத்தானை அனுதினம் நீதுதித்து

**அனுபல்லவி**

கொஞ்சுதமிழ் இணுவையில் கோயில் கொண்ட விநாயகன்
அஞ்சலென அருள்வான் அவனைநீ அவனியில்

**சரணம்**

பக்தியாய்ப் பஞ்சமுகன் பாதம் பணிந்திடுவாய்
நித்தியம்பூ வெடுத்தவன் நீழலின் சூட்டிடுவாய்
சத்தியம் காத்திடுவாய் சந்ததம் ஏத்திடுவாய்
அத்திமுகத்தவன் அருளைப் புரிந்திடுவான்

இராகம் : *பௌஹரி* தாளம் : *ஆதி*

**பல்லவி**

அள்ளி அருள் தரும் ஆனைமுகன் - இணுவை
தெள்ளு தமிழ்ப் பர ராஜவிநாயகன்

**அனுபல்லவி**

உள்ளமெனும் அரங்கில் உவந்து நடனம் செய்வான்
வள்ளல் அருள் நிறைந்த வாரணன் பூரணன்

**சரணம்**

கதிநீயே பரராஜக் கணபதி என்றடைந்தால்
மதிசூடும் அரன்மைந்தன் மாதங்கன் வந்தருள்வான்
பதியான இணுவை யூர்ப் பரராஜசேகரன்
அதி ஆனந்தம் தந்தே ஆட்கொள்வான் ஐங்கரன்

## எல்லா நலனும் பெற

கற்பகமே தேனுவே காமரு சிந்தாமணியே
அற்பகமார் ஐங்கையுடை ஆரமுதே - சிற்பமுறு
தந்தா வளமுகத்துத் தற்பரனே சாலவும்
உவந்தாள நாயேன்முன் வா.

*— உ. வே. சா.*

## வளங்கள் அனைத்தும் பெற

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைப் போக்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

*— விருத்தாசல புராணம்*

## அன்பொடு தினமுந்தன் அடியினை பணிந்தென்று ஆனந்தம் காண்பேனோ.....?

அன்போடு தினமுந்தன் அடியிணை பணிந்தென்று
ஆனந்தம் காண்பேனோ.......?
உன் திருக்கோயிலை வலம் வந்து தொழுதிடும்
திருநாள் வாராதோ.....?
(-அன்பொடு.)

கற்பூரதீபம், கைகளிலேந்தும்
காட்சியும் காணேனோ....?
காவடி கொண்டுந்தன், சேவடி நாடும்
கூட்டமும் பாரேனோ.......?
தேர் வடம் பிடிக்கும், சிவனடியாரொடு
சேர்ந்திட மாட்டேனோ.......?
தீர்த்தமு முண்டு தினமுன்னைக் கண்டு
களித்திட மாட்டேனோ.....?
(-அன்பொடு.)

பூக்களைப் பறித்து மாலைகள் தொடுத்து
சூட்டி மகிழ்வேனோ......?
பாக்களைப் பாடிப், பரவசமாய் என்றுன்
பதமலர் பணிவேனோ......?
உன் மனம் எந்தன் விழிநீர் கண்டும்
உருகிடலாகாதோ.......?
என்னுயிர் போகு முன் நின்னருள் தந்தே
அழைத்திடலா காதோ
(-அன்போடு.)

### சீரும் செல்வமும் பெற

செல்வம் அருள்க தேவா போற்றி
நல்லன எமக்கருள் நாயக போற்றி
ஆக்கமும் ஊக்கமும் அருள்வாய் போற்றி
காக்க எங்களை உன்கழிலிணை போற்றியே!

*– விநாயகர் போற்றி*

## தென்னிணுவைப் பதியமர்ந்து.......

தென்னிணுவைப் பதியமர்ந்து
திக்கு எட்டும் அருள் புரியும்
பன்னிருகை வேலன் அண்ணனே - ஸ்ரீ
பரராஜசேகரப் பிள்ளையாரே! -(தென்னிணுவைப்)

நாயகனே விநாயகனே!
"இணுவை விநாயகனே!"

அம்பிகை பாலனே அரிமாயன் மருமகனே!
தும்பிக்கை நாதனே நம்பிக்கை கொண்டோமையா!

உன்னையே நினைந்துருகி
உள்ளமே நலியுதையா!
கண் பார்க்க வேண்டுமையா
கணபதியே சரணம் ஐயா!
(-நாயகனே! விநாயகனே)

வாராயோ......கண்
பாராயோ......திருவருள்
தாராயோ......
கணநாயகா......கணநாயகா!
கணநாயகா!

## மணியோசை கேட்குதம்மா

மணியோசை கேட்குதம்மா.......கோயில்
மணியோசை கேட்குதம்மா.......
பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோயில்
மணியோசை கேட்குதம்மா. -(மணியோசை......)

வைகறைப் பொழுதும் விடியுதம்மா- கோயில்
வாசலும் வாவென்று அழைக்குதம்மா.
ஐயனவன் திருக்கோல எழில் நினைந்தே - மனம்
ஆனந்தக் கூத்து ஆடுதம்மா-மனம் -(மணியோசை.....)

உள்ளத் தாமரை மலருதம்மா...... அப்பன்
ஓங்கார ரூபனையே துதிக்குதம்மா.
வள்ளலின் மாமலர்ப் பதம் பணிந்தே - அவனை
வாழ்த்தி வணங்கி அருள் பெறவே...... -(மணியோசை.......)

# ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார்
# பாமாலை

பார் போற்றும் பரராஜசேகரன் பக்தி தனைப்
பறைசாற்றும் கோயிலிலே
சீர் மேவு கலையம்ச சிற்பங்கள் கதை சொல்லும்
சிறப்புறு கோபுர அழகிலே
ஊர் வாழும் அடியவர்கள் உலகில் பரந்து வந்தளித்த
உபயங்கள் பல நடுவிலே
பேர் இணுவைப் பதியமர்ந்து புதுமை பல செய்யும்
எங்கள் பிள்ளையாரே! எங்கள் பிள்ளையாரே!

உண்ணாமல் இருப்பேன் நான் உறங்காமல் இருப்பேன் நான் - உன்னை
எண்ணாமல் இருப்பேனோ.... என் இணுவை விநாயகனே! (உண்ணாமல் ...........)

எல்லை கடந்து வந்தும் ... என் எண்ணம் கலையவில்லை.........
தொல்லைகள் வந்த போதும் உன்னைத் துதி பாட மறக்கவில்லை....
(உண்ணாமல் ...........)

தண்ணார் செந்தமிழ் மணக்கும்..... தனித்துயர்ந்து கலை கொழிக்கும்
பண்பாளர் பாட்டிசைக்கும் பாவலர்கள் வாழ் இணுவை -
மண்ணாளும் மூத்தவனே! மங்கலத்து நாயகனே!
அண்ணா! அழகன் முருகன் அண்ணா! அருட் கனியே! (உண்ணாமல் ...........)

பன்னிரு நாள் விழாவெடுத்து பக்தர்குழாம் குதூகலிக்க...
பன்னீர் மழையினிலே.... பக்குவமாய் நனைபவனே!
வண்ணமிகு தேரேறி... வலம் வந்து நலம் செய்யும்
விண்ணோர் குறை தீர்த்த வித்தகனே! விநாயகனே! (உண்ணாமல் ......)

எங்கள் குல விடிவிளக்கே! எழில் மணியே கணபதியே!
பொங்கும் பெரு வயிற்றோனே! பொற்புடைய இரத்தினமே!
சங்கடத்தைச் சங்கரித்துச் சந்ததமும் எமைக் காக்கத்
தங்கிடுவாய் எங்குலத்தில் தவ ஒளியே! தயாநிதியே! (உண்ணாமல் ...........)

ஆக்கம்
இணுவை சுசீலா

# மங்களம்

**இராகம் :** *சுருட்டி* **தாளம் :** *ஆதி*

**பல்லவி**




பரராஜசேகரக் கணபதிக்கு மங்களம்
புரமான இணுவைக்கும்
அடியார்க்கும் மங்களம்

**அனுபல்லவி**


நடராஜன் சிவகாமிக்கும்
நாரணன் மஹாலக்ஷ்மிக்கும்
வடிவேலன் கந்தனுக்கும்
வள்ளிகுஞ்சரியருக்கும்


**சரணம்**


பஞ்சமுக விநாயகர்க்கும்
பைரவப் பெருமானுக்கும்
கஞ்சமஹாலக்ஷ ‘மிக்கும்
காளிங்க நர்த்தனர்க்கும்
அஞ்சலருள் லிங்கேஸ்வரர்
அருள்தக்ஷ ‘ணாமூர்த்திக்கும்
மிஞ்சுநவக்ரஹம் நால்வர்
மிளிர் சண்டேஸ்வரருக்கும்

# நன்றி









DESIGNED & PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13, SRI LANKA. TEL: +94 011 2330195/ 2478133.